# நூறு மின்னல்கள்

நான்காவது ஈழப்போரில் கிழக்கில் நிகழ்ந்த
உண்மைச் சம்பவங்களைத் தழுவிய கதை

பாகம் 1



மாயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு மின்னல்கள்

நான்காவது ஈழப்போரில் கிழக்கில் நிகழ்ந்த
உண்மைச் சம்பவங்களைத் தழுவிய கதை

நாவல்

## பாகம் 1

## மாயன்

யாவரும்
பப்ளிஷர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The views and opinions expressed in this book are the author's own. The facts contained herein were reported to be true as on the date of publication by the author to the publishers of the book, and the publishers are not in any way liable for their accuracy or veracity.


- நூறு மின்னல்கள் • நாவல் • பாகம் – 1 • மாயன் ©
- முதல் பதிப்பு : ஜனவரி 2023
- Nūr̲u min̲n̲alkaḷ • Novel • Part - 1 • Mayan ©
- First Edition : January 2023
- Pages : 228 • Price : ₹ 290/-
- ISBN : 978-93-92876-26-4

Released by :

M/s. Yaavarum Publishers
24, Shop no - B, S.G.P Naidu Complex,
Dhandeeswaram Bus Stop
Opp: Bharathiar Park
Velachery Main Road
Velachery, Chennai - 600 042

90424 61472 / 98416 43380
editor@yaavarum.com
Url : www.yaavarum.com; www.be4books.com

Designed by : Y Creations

அட்டைப்படம் - பிரவாகினி @ Thara Prabu



All rights, including professional, amateur, motion pictures, recitation, public reading, broadcasting and the rights of translation into foreign languages are strictly reserved. No part of this book may be reproduced in whole or in part or utilized in any form or by any means electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system now known or hereafter invented, without the prior written permission of the author/publisher.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசக்கனவுடன் சாவடைந்தவர்களுக்கும்
உயிர் வாழ்பவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

வெற்றி...

அதனை அடைவதற்கு யாரையும் பலியிடத்தயாராக அவர்கள் அந்தத் தெருவின் இரண்டு பக்கங்களிலும் நிலையெடுத்திருந்தார்கள்.

போக்குவரவுக்கு தடை செய்யப்பட்டிருந்தது அந்த தெரு. நடமாடும் மனிதர்களின் கால்களால் பண்படுத்தப்படும் தனது வாழ்வை இழந்து தனித்திருந்தது அது. பயணிக்கும் மனிதர்களின் குரல்கள் வீசி விட்டுச்செல்லும் ஒலிகளில் இருந்து உலகின் வாழ்வை இதுவரை தெரிந்து வைத்திருந்த அந்த தெருவுக்கு இப்போது எதுவுமே தெரிவதில்லை. உலகை அறியாததால் எழுந்த தாளமுடியாத ஏக்கம் அந்த தெருவின் கரைகளைச் சிதைத்திருந்தன. குன்றுகளையும் குழிகளையும் தனக்கான தண்டனையாய் அந்த தெரு ஏற்றுக்கொண்டிருந்தது. தனிமையைத் தாளமுடியாமல் பனிநீரைக் கண்ணீராய் இருபக்கமும் வடிய விட்டிருந்தது.

தனிமையில் அழும் தெருவைக் கவனிக்க அந்த இராணுவ வீரர்களுக்கு அக்கறையே இல்லை. பனிக்குளிரிலிருந்து உடலைத் தகிக்கச்செய்ய அவர்கள் சிகரெட்டுக்களை பற்ற வைக்க நேரம் பார்த்தபடி இருந்தார்கள்.

லான்ஸ் கோப்ரல் பண்டா சினங்கொண்டான்.

“ஒரு சிகரெட் பத்த முடியுதா இந்த இரவில, என்ன வாழ்க்கயடா இது. அந்த நாய் மக்கள் எண்ட கையில கிடைச்சாங்களெண்டா” வசனத்தை முடிக்காமலே தன் ரைபிளின் இழுவிசையை இழுத்தான் பண்டா...

அருகே தூங்கி வழிந்து கொண்டிருந்த ருவானுக்குத் தூக்கி வாரிப்போட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை ஒரு மம்மல்தான்... ருவான் அதிகாலைக்காவல் பணியை என்றைக்கும் விரும்பியதில்லை. ஏனென்றால் இருளும் காலையும் தம்மை சரியாகப் பிரித்துக்கொள்ளும் நேரம் மம்மலானது.. அந்த அதிகாலை மம்மல் ஒரு மோனத்தவத்தை மனிதரிடையே விதைக்கும். கண்ணுக்கு எல்லாம் தெரிவது போலத் தான் இருக்கும்.. ஆனால் எதுவுமே துலக்கமாகத் தெரியாது. விழிகளிரண்டும் விழித்திருக்கும். ஆனால் உடல் தூங்கிக் கொண்டிருக்கும். பதுங்குகுழிக்குள் இருந்தபடி வெறிச்சோடிப்போன தெருவைப் பார்த்துக் கொண்டிருப்பது அதீத சலிப்பைத்தரும் தொழில். பகலிலேயே சலிப்பைத் தருவதென்றால் அதிகாலையில்.. அப்பப்பா... சலிப்பு உச்சமடையும் போது ரைபிளை 'கோக்' பண்ணி யாரையாவது சுட்டு விடலாம் போல இருக்கும்.

அதுவும் இந்த அதிகாலைப் பொழுதில் ஆடை க(லை) ளைந்து அருகில் கிடக்கும் பெண்ணின் அங்கங்கள் சூடேற்ற அவளை அணைத்துக்கொண்டு நித்திரை கொள்ளும் சுகத்தை அனுபவித்திருந்தவர்களுக்கு சென்றி நிற்பது நரகமே. அச்சுகம் மாதக்கணக்கில் கிடைக்காமல் ஏக்கத்துடன் வாழ வைத்திருக்கும் இந்த இராணுவ வாழ்வு கடந்து போகும் ஒவ்வொரு அதிகாலையையும் பைத்தியமாக்கும். மனசும் புத்தியும் தம்முள் போராடி மனிதனை மிருகமாக்கிக் கொல்லும்.... அவ்வாறானதொரு காலையில் அந்த காவல் பங்கருக்குள் அயர்ந்து கிடந்த ருவானுக்கு சக காவல்கார நண்பனின் றைபிள் சுடுவதற்குத் தயாராக்கப்படும் 'கோக்' சத்தம் தூக்கிவாரிப்போட்டது.

எதிரிகள் யாரும் பங்கருக்கு அருகில் வந்து விட்டார்களோ? என்ற அளவிடமுடியா அச்சத்தை அந்த 'கோக்' சத்தம் அவனுக்குத் தந்தது. அதிகாலை, மம்மல், பனி, காதருகில் கேட்ட ரைபிளின் இழுவிசைச் சத்தம், பயம் எல்லாம் சேர்ந்து ருவானுக்கு மூத்திரத்தை முட்டச் செய்தது. மெதுவாகத் திரும்பி பண்டாவைப் பார்த்தான். அவனோ இடது கையை நீட்டி அக் கைவிரல்களில் சிகரெட்டைப் பிடித்துக் கொண்டு வலது கையில் தாங்கிய ரைபிளின் சுடுகுழலை சிகரெட்டின் தலையை குறி வைத்துப்பார்த்தபடி இருப்பது தெளிவாகத் தெரிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடத்தயாராக இருந்த பண்டாவின் ரி-எண்பத்தியொன்று ரக ரைபிளின் பாதுகாப்பு விசை போடப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்தான். போடப்பட்டிருந்தது.

"அப்பாடா... சேவ்டி கட்ச் போட்டுத்தான் இருக்கிறான். ஒரு பிரச்சனையும் இல்ல..."

அந்த பங்கருக்குள் அவர்கள் தம்மிடையே இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை என்று முறைபோட்டு முழித்திருந்து சென்றி பார்ப்பார்கள். சென்றி என்பது விழித்திருந்து செய்யும் காவல் கடமை. அன்று அதிகாலை இரண்டு மணி தொடக்கம் நாலு மணி வரைக்கும் தான் பண்டா சென்றி பார்க்க வேண்டும். என்றாலும் தன்னை எழுப்ப விருப்பமில்லாமல் நாலு மணி தாண்டியும் பண்டா காவலிருந்திருக்கிறான் என்பதை ருவான் மணிக்கூட்டைத் திருப்பிப் பார்த்து கணித்துக்கொண்டான்.

இப்போதுதான் பண்டா சொன்ன வசனம் முழுவதுமாக ருவானுக்கு விளங்கியது. அதிகாலையில் ஒரு சிகரெட் என்பது அவர்களைப் பொறுத்த வரையில் ஒரு அமுதபானம் தான்...

"ஓம் சேர்... ஒரு சிகரெட் பிடிக்கேலாட்டி என்ன மண்ணாங்கட்டிக்கு இந்த வாழ்வு! ஆனா சிகரெட் கொழுத்தினமெண்டா உசிரு போயிரும்"

ருவான் சொன்ன அந்த உசிரு போயிரும் என்ற வார்த்தைக்கு நிறைய அர்த்தங்கள் இருந்தன...

இரண்டு வாரங்களுக்கு முன் இதே போன்றதொரு அதிகாலை வேளையில் அந்தப் பதுங்குகுழிக்குள் பாதுகாப்பு கடமையில் பியாலும் குமாரவும் காவல் இருந்தார்கள். அவர்களையும் இதே போலவே குளிரும் அதனால் எழுந்த தாபமும் அத் தாபம் சொல்லித்தந்த சுகநித்திரையும் ஒரு சேர வாட்டிக்கொண்டிருந்தது.

"சிகரெட் ஏதும் கிடக்காடா?"

பெருமிதம் முகத்தில் பொங்க காற்சட்டைப் பைக்குள் இருந்த சிகரெட் பெட்டியை பியால் கையில் எடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ரெண்டு கிடக்கு”

“பிறகென்ன... இண்டையான் நாள சமாளிச்சுப் போடலாம். நாளைக்கு சிகரட் நான் கொண்டாறன் சரியா?” குமார நாளைய வாழ்வில் மிக்க நம்பிக்கை கொண்டிருந்தான். விதியோ நெருப்புக்குச்சியின் வழியே நகர்ந்தது.

“மச்சான்.. ஒரேயொரு குச்சிதான் இருக்கு.. பக்கத்தில வாடா, ரெண்டு சிகரெட்டையும் ஒண்டா பத்த வைப்பம். குச்சி அணைஞ்சால் வேல முடிஞ்சுது. நான் அடுத்த பங்கர்வரைக்கும் போய்த்தான் குச்சி கொண்டு வரோணும்” என்றவாறே பியாலின் பதிலுக்கு காத்திராமல் உதடுகளுக்கு நடுவே சிகரெட்டைப் பொருத்தி நெருப்புப்பெட்டியின் கரையினில் தேய்த்து குச்சியினைப் பற்ற வைக்கத் தயாரானான் குமார.

அடுத்த பங்கர் நூறு மீற்றருக்கு அப்பால் இருந்தது. அந்த நேரத்தில் மற்றைய பங்கருக்கு நெருப்புக்குச்சிக்காக போவது என்பது நரகம் தான்.

இலகு இயந்திர ரைபிளின் மீது நாடியை கொழுவிக் கொண்டு கிடந்த பியால் படுசோம்பலாக தலையை நிமிர்த்தினான். அதற்குப் பிறகு அவன் செய்தவற்றைப் பார்த்த குமாரவுக்கு விறைத்துக் கிடந்த நாயொன்று எழும்பி உடலைச் சிலிர்த்துச் சூடாக்கிக்கொள்ளச் செய்யும் செயல்கள் எல்லாம் கண்ணெதிரே வந்து போனது. வாய்விட்டுச் சிரித்தால் வாயில் பொருத்தியிருந்த சிகரெட் கீழே விழுந்து விடும். அதற்கு அவன் தயாரில்லை. எனவே நமுட்டுச்சிரிப்பே போதுமாயிருந்தது.

பியாலின் நெற்றியைத் தன் நெற்றியுடன் முட்டி வைத்துக்கொண்டு அந்த இறுதி நெருப்புக்குச்சியை பற்ற வைத்தான் குமார.

ஸ்ரீலங்காவின் கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி கொஞ்சமும் குலையாத விறைப்புடன் தன் முன் அமர்ந்திருந்த இரண்டாம், மூன்றாம் தரநிலை அதிகாரிகளின் முகங்களை நோட்டம் விட்டார். அம் முகங்களில் இருந்து அவரால் எவற்றையும் வாசித்து அறிய முடியவில்லை. “ஆகவே ஒருத்தரும் தவறான சிந்தனையில் இல்லை”. நல்ல திருப்தி அவருக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எங்களுக்குக் கிடைச்சிருக்கிற புலனாய்வுத் தகவல்களின் படி திருகோணமலையிண்ட புலித்தளபதி பதுமன வன்னிக்கு எடுத்தாச்சு. மாவட்ட புலிக்கட்டமைப்பு குழம்பிக்கிடக்கு. அவங்கள் எப்பிடியாவது தங்களுக்கு சாதகமான இடத்தில சண்டய ஆரம்பிக்கிறதுக்குள்ள ஏதாவது சாட்ட வச்சு நாங்கள் சண்டைய ஆரம்பிக்கோணும்.. சண்டைய திருகோணமலையில் இருந்துதான் ஆரம்பிக்கப்போறம். புலனாய்வுத்தகவல் தெளிவாச்சொல்லுது. கந்தளாயில இருந்துதான் பெரும் எடுப்பில நாங்கள் இறங்குவம். மட்டக்களப்பு றோட்ட நாங்கள் ஊடுறுக்க நேவி சம்பூர்ல இறங்கும். இதுதான் திட்டம்”. அவர் சொல்லி முடியும் வரை உலகம் ஒலி இழந்திருந்தது. மூச்சுக்காற்று கூட அடங்கியிருந்தது.

அந்த திட்டம் செயற்படத் தொடங்கியது. சரியாக உருமறைப்பில்லாத புதிய பங்கர்கள் மிக வேகமாக கந்தளாயில் இருந்து சேருவிலைச் சந்தியை நோக்கிப் போகும் பெருந்தெருவில் முன்நகர்த்தப்பட்டன.

அந்த அதிகாலை வேளையில் முன்னகர்த்தப்பட்ட பங்கரொன்றில் இருந்து வெளிச்சம் வருவதை புலிகளின் குறிசூட்டுப்போராளியின் உதவியாளன் தனது கையடக்க தொலைநோக்கியின் ஊடாக தெளிவாகப்பார்த்தான். “மச்சான் பட்சி ஒண்டு தெரியுது” குறிசூட்டுப்போராளி தனது இடது கண்ணை மூடி வலது கண்ணை குறிசூட்டுத் துப்பாக்கியின் தொலைநோக்கியில் பொருத்தினான். நெருப்பின் வெளிச்சம் அவனுக்கு கலங்கலாகத் தெரிந்தது. இடது கை விரல்களால் தொலைநோக்கியின் முனையைச் சுழற்றி நெருப்பின் வெளிச்சத்தைத் துல்லியமாக்கினான். நெருப்பின் வெளிச்சம் சிறிதாக இருவரின் முகங்கள் அவனது கண்களுக்குள் பிரகாசித்தது.

கந்தளாய்-சேருவில பிரதான வீதியின் இருமருங்கிலும் இராணுவ பங்கர்கள் புதிதாக முளைத்து முன்னோக்கி நகர்த்தப்படுவதை புலிகளின் முன்னரங்க நிலைப்போராளிகள் அவதானித்தனர். அத்தகவலைத் தமது தளபதிகளுக்கு தெரிவித்திருந்தனர். உடனடியாகவே சில வேவுப் போராளிகளும் சினைப்பர்வீரர்களும் இராணுவ மற்றும் புலிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரங்குகளுக்கிடையிலான யுத்த சூனியவலயத்திற்குள் தகவல்களைத் திரட்டவென இறக்கப்பட்டிருந்தனர். யுத்த சூனியவலயம் என்பது போரிடும் இரண்டு தரப்புக்களின் முன்னரங்க காவல் நிலைகளுக்கு இடையில் உள்ள சனசந்தடியற்ற நிலப்பிரதேசம் ஆகும். அச் சூனியவலயத்திற்குள் களமிறக்கப்பட்ட குறிசூட்டுப்போராளி தன் வோக்கிடோக்கியை இயக்கினான்.

"சிலுவை ஒன்று... சிலுவை ஒன்று இது எலி மூன்று... அழைப்புக்கு வாருங்கள்"

மீண்டும் ஒருமுறை வானலைகளில் அந்த கரகரப்புக் குரல் 'சிலுவை ஒன்றை' அழைத்தோய்ந்தது.

"எலி மூன்று. இது சிலுவை ஒன்று.... சொல்லு"

"ரெண்டு விட்டில் பறக்குது... சாப்பிடவா?" ஒரு கண நேர அமைதியின் பின் சிலுவை ஒன்று கட்டளையைப் பிறப்பித்தது.

"செய்"

சினைப்பர்போராளியின் உதட்டிலும் நமுட்டுச்சிரிப்பு தோன்றி மறைந்தது. காற்றின் திசையையும் ஈரப்பதனையும் அண்ணளவாக அவதானித்து குறிசூட்டுத்துப்பாக்கியில் தாக்கு தூரத்தை சரிப்படுத்திய பின் எலி மூன்று என்ற சங்கேதப்பெயரை கொண்ட அவன் தொலைநோக்கி வழியாக தனது இலக்கை குறி வைத்தான்.

பியாலின் தோளில் குமார கையைப் போட்டு இன்னும் நெருக்கமாக அணைத்துக்கொண்டு ஒரே குச்சியின் நெருப்புக்கந்தில் சிகரெட்டுக்களைப் பற்ற வைக்க முயல்வது தெளிவாகத் தெரிந்தது.

துரோணனின் கேள்விகள் அம்பெய்யத்தயராயிருந்த அருச்சுனனுக்கு கேட்டன...

"மரம் தெரிகிறதா அர்ச்சுனா?... "இல்லை குருவே..."

"கிளைகள்?" "இல்லை..." "கிளையின் இலைகள்?" "இல்லை குருவே...." "சரி...கிளியாவது தெரிகின்றதா?" "இல்லை, இல்லவேயில்லை...."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கழுத்து?...." "ஆம் குருவே கழுத்து மட்டுமே தெரிகின்றது..." "சரி அம்பை விடு அர்ச்சுனா ..."

காற்று கிழிந்த சத்தம் காதுகளை வந்தடைந்தது. அதற்கு முன்பே ரவையொன்று குமாரவின் காதுக்கு மேலாக மண்டையோட்டை துளைத்து பியாலின் பின் மண்டைக்குள் புகுந்து மூளையைச் சிதைத்து அந்தக் காட்டில் எங்கோ காணாமற் போனது. அவர்கள் செத்து வீழ்ந்தார்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

சந்தோசபுரத்தின் பிரதான வீதிக்கு ஒரு நிறம் இருக்கின்றது. அது நிரந்தரமான மண்ணிறம். அந்தப் பிரதான வீதிதான் மூதூரில் இருந்து பிரிந்து பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு, கடற்கரைச்சேனை, வீரமாநகர், நீனாக்கேணி, நல்லூர் ஆகிய கிராமங்களை தாண்டி கடற்கரையை அண்டிப்பயணித்து இலங்கைத்துறை முகத்துவாரம் ஊடாக வெருகலை சென்றடையும். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது அந்தப் பிரதான வீதி. வெறுமனே வளைவுகளையும், சுளிவுகளையும், குன்றுகளையும், குழிகளையும் மட்டும் தன்னகத்தே கொண்டதல்ல. வீரவரலாற்றின் சுவடுகளையும், இடம்பெயர்ந்த துயரையும், அந்த மண்ணில் வாழ்ந்த மனிதர்களின் உடலங்கள் முழுமையாகக் கிடைத்தால் தூக்கிச்சென்று புதைத்த அல்லது சிதைந்து போனவர்களை கூட்டி அள்ளிப் புதைத்த கதைகளையும் தன்னகத்தே கொண்டிருந்த மண் வீதி. மரணம் அந்த தெருவழியே திரியும் என்பதால்தானோ என்னவோ பயணிக்கும் எல்லோரும் மண்ணிற மனிதர்களாய் ஆகிப்போனார்கள்.

திருகோணமலையில் இருந்து புறப்பட்டு மட்டக்களப்பைச் சென்றடையும் பெருந்தெரு ஏ-15 என்ற பெயரைக்கொண்டது. திருகோணமலையில் இருந்து புறப்பட்டால் கொழும்பு வீதியால் பயணித்து நான்காம் கட்டைச்சந்தியால் இடப்புறம் திரும்பி சீனன்குடாவிலுள்ள விமானத்தள படையகம், கிண்ணியா ஊடாக மூதூர்சந்தியை அடைந்து வலதுபக்கம் திரும்பிச்சென்று சேருவிலை சந்தியைத் தாண்டி வெருகல் பிரதேசத்தை அடைந்து வெருகலம்பதி முருகன் கோவிலைத் தாண்டினால் வரும் பாலம் மகாவலிகங்கை நீரை வெருகல் பிரதேசமெங்கும் வழங்கி எஞ்சிய நீரைக் கடலுக்குள் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும். அந்தப்பாலம் தான் திருகோணமலை மாவட்டத்தின் எல்லை. பாலத்தை தாண்டிப் பயணிக்க மட்டக்களப்பின் கதிரவெளி, வாகரை, பணிச்சங்கேணி, மான்கேணி, காயன்கேணி கிராமங்களை தாண்டிப்போக நாவலடிச் சந்தி. அச்சந்தியில் வலப்புறம் திரும்பிப் போனால் மட்டக்களப்பு கொழும்பு வீதி முட்டுப்படும். அந்தச் சந்திப்பில் இருந்து இடதுபக்கம் திரும்பினால் ஓட்டமாவடி, வாழைச்சேனை, கிரான், செங்கலடி, ஏறாவூர் கிராமங்களை தாண்டி மட்டக்களப்பை சென்றடையும் ஏ-15 பிரதான வீதி.

மூதூரில் இருந்து ஒரு அலங்கோலமானதும் தலைகீழானதுமான 'ப' வடிவத்தை வரைந்து அதன் இடது அந்தத்தில் மூதூரையும் வலது அந்தத்தில் மாவடிச்சேனையையும் இணைத்தால் ஏ-15 இற்கு சமாந்தரமானதொரு பாதை தெரியும். அதுதான் சந்தோசபுர பாதை.

அந்த இரண்டு அந்தங்களுக்கும் இடைப்பட்ட கிராமங்கள் உட்பட மாவடிச்சேனையில் இருந்து பனிச்சங்கேணி பாலம் வரையும் விடுதலைப்புலிகளின் நேரடி கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள். புலிகளின் கட்டுப்பாடற்ற ஏ-15 இன் இரண்டு புறங்களிலும் உள்ள ஏனைய கிராமங்களில் பகற்பொழுதுகளில் இராணுவ பிரசன்னம் பெரும்பாலுமிருந்தாலும் இரவில் புலிகளே நடமாடித்திரிவர்.

முஸ்லிம் மற்றும் சிங்கள கிராமங்களை தவிர்த்து தமிழ் கிராமங்கள் எல்லாமே புலிகளுக்கு ஆதரவானவை. அக்கிராமங்கள் இராணுவக்கட்டுப்பாட்டில் இருந்தாலும் கூட மக்கள் புலிகளையே ஆதரித்தனர். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் கிராமங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் சில பொருட்களைக் கொண்டு செல்ல முடியாத பொருளாதாரத் தடையும் இருந்தது. அவ்வாறு தடைசெய்யப்பட்ட பொருட்களை புலிகள் பெற்றுக்கொள்ள பல வழிகளைப் பயன்படுத்துவர். அந்தவகையில் மூதூரில் வியாபாரம் செய்யும் முஸ்லிம்கள் சிலர் புலிகளுடன் தொடர்புடையவர்களாக இருந்தனர். முஸ்லிம் வியாபாரிகள் பொருட்களை கட்டுமரங்களில் ஏற்றி இராணுவத்தின் கண்களுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணைத்தூவிவிட்டு கட்டபறிச்சான் ஆறு தாண்டி கொண்டு சென்று வினியோகிப்பர். அவர்கள் கேட்கும் விலையினைப் புலிகள் பேரம் பேசாது கொடுத்துவிடுவர். அதேவேளை இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் கிராமங்களில் இருந்தும் தங்களுக்கு தேவையான பொருட்களை புலிகள் கடத்தி வருவர். இவ்வாறு கடத்தும் போது இராணுவத்துடன் 'எக்குத் தப்பாக' சந்தித்தால் பொருட்களை விட்டுவிட்டு புலிகள் தற்காப்புச் சண்டையிட்டவாறு தப்பியோடுவர். பொருட்களை கைப்பற்றும் இராணுவம் அந்த இடத்திற்கு அருகில் உள்ள தமிழ்க்கிராமத்திற்கு அன்று நல்ல பூசையை நடாத்தும். அக் கிராமத்தில் கடை வைத்திருப்பவர்களுக்கு விசேட கவனிப்பும் இருக்கும்.

சந்தோசபுரத்தின் பிரதான வீதியின் ஒரு புறத்தில் இருந்து கரன் மறுபுறத்திற்கு நடந்தான். அருவி வெட்டப்பட்ட நெற்கதிர்க்கட்டுக்கள் பலவற்றை ஒன்றுசேர்த்து அவன் தனது தலையில் வைத்தபடி நடந்துகொண்டிருந்தான். அச் செம்மண் வீதியைக் கடந்து தலையில் அடுக்கியிருக்கும் நெற்கதிர் கட்டுகளை சூடடிக்கும் திட்டில் சேர்ப்பிக்க வேண்டும். அன்று காலையில் இருந்தே கரன் அந்த வேலையைத் தான் செய்து கொண்டிருந்தான். வேகமாக வீதியைக் கடக்க முயற்சித்தாலும் நெற்கதிர்கள் அவனது பாதையை மறைத்தன. அவனது நடையில் மெல்லிய தள்ளாட்டம் இருந்தது. அவன் உயர்தரம் படிக்கும்போது வீட்டின் வருமானத்தைச் சுரண்டி படிப்பிற்காகச் செலவழிப்பது அவனை கடுமையாக வருத்தியது. ஆனாலும் புவனம் மிக உறுதியாக இருந்தாள்.

"நீ படிச்சு முடி.. உன்ர கொப்பரின்ர ஆசை அதுதான். அத நான் நிறைவேற்றோணும். அதுக்கு நீ படிச்சே ஆகோணும்"

அவனால் தாயின் பிடிவாதத்தை வெல்ல எப்போதுமே முடிவதில்லை. எனினும் உயர்தரப் பரீட்சைகள் முடிந்த பிறகு அவனும் உழைப்பாளியானான்.

நெற்கதிர்களை ஒன்றாக்கி கட்டுகளாக கட்டிக்கொண்டிருந்த சிவலைக்கு கரனின் மேல் ஓர் அலாதிப்பிரியம். சிவலை புவனத்தின் அயல்வீட்டுக்காரி என்பதுடன் அவளது நண்பியும் கூட. கரன் கட்டுகளைத் தலையில் தூக்கிக்கொண்டு மறுபக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனவுடன் கரனைப் பற்றிய கதையை தன்னுடன் வேலை செய்துகொண்டிருந்த செல்வம், பெரியண்ணா, சாமித்தம்பியோடு விலாவாரியாக பகிருவாள்.

"இவன ரிங்கோ டவுனுக்கு அனுப்பி படிக்கவைச்சவள் புவனம்"

உண்மைதான், கரன் திருகோணமலை நகரத்திற்கு உயர்தரப் படிப்பினை தொடரவே போனான். புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிகளுக்குச் செல்லும் வாலிபப் பருவத்தினர் புலிகளிடம் 'பாஸ்' எனப்படும் பயண அனுமதியைப் பெற்றே செல்ல வேண்டும். சேனையூர் மத்திய கல்லூரிக்கு முன்புறமாக இருந்த புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் புவனம் கரனுக்கான பயண அனுமதியைப் பெறுவதற்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்தாள்.

"ரெண்டு நாளால வாங்கோ" விண்ணப்பத்தை பெற்றுக்கொண்ட போராளி அதனை ஆராய்ந்த பின் சொன்னான்.

"தருவியல் தானே!"

"உரிய இடங்களுக்குப் போய் ஓமெண்டு வந்தா தருவம் அம்மா"

புவனம் அவனை ஏக்கத்துடன் பார்த்தாள். அவனின் முகம் வெற்றாக சஞ்சலமின்றி அவளை ஏறிட்டது.

"நல்ல ட்ரெயினிங் ... இந்த மூஞ்சில ஒரு மண்ணையும் கண்டுபிடிக்கேலா" மனதில் எழுந்த உணர்வு புவனத்தை சலிப்படையச்செய்தது. அமைதியாகத்திரும்பி தெருவை நோக்கி நடந்து போனாள்.

அவள் தனக்கு முதுகைக் காட்டியவுடன் அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவனுடைய இதழ்களில் மெல்லிய முறுவலிப்பு.

"என்னத் திட்டிக் கொண்டு போகுது உந்த மனிசி"

கரனின் படிவத்தின் வலது மேல்மூலையில் சிவப்பு மையினால் ஒரு புள்ளடியை இட்டு தன்னுடைய பொறுப்பாளருக்கு அனுப்பினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய இரவு வான்மீயின் கைகளில் அந்தப் படிவம் இருந்தது.

வான்மீ விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவன். இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் புலனாய்வு நடவடிக்கைகளுக்கென உருவாக்கப்பட்ட படையணியின் ஒரு இளநிலை பொறுப்பாளன். பயண அனுமதி பெற்று இராணுவப்பிரதேசங்களுக்குள் செல்பவர்களை புலனாய்வு நடவடிக்கைக்கு பயன்படுத்துவது தொடர்பாக முடிவு எடுக்கும் பொறுப்பைக் கொண்டவன். அரசியல்துறை பிரிவால் சிவப்பு மை அடையாளமிடப்படும் பயண அனுமதிப்படிவங்கள் வான்மீயின் கைகளையே வந்தடையும்.

"அட... கரன்ட விண்ணப்பமே!" தனக்குள் முணுமுணுத்துக்கொண்ட வான்மீயின் உதடுகளில் மெல்லிய சிரிப்பொன்று முளைத்தது.

கரனைச் சிறு வயதிலிருந்தே வான்மீக்குத் தெரியும். எனவே கரனைப் பயன்படுத்துவது என்ற முடிவுடன் கரனின் பயண அனுமதிப்படிவத்தில் கரனைப்பயணஞ்செய்ய அனுமதிக்குமாறு தனது குறிப்பை இட்டான்.

அன்று புவனம் 'பாஸ்' பெற செல்லவேண்டிய தினம். அதிகாலையில் அவள் வீரபத்திரர் கோயிலுக்கு ஒரு மாலை கட்டிக்கொண்டு போனாள். மாலையை ஐயரிடம் கொடுத்து சாத்தச் செய்தாள். கண்களை மூடி கண்ணீர் விட்டாள். அந்தக் கண்களின் உள்ளே விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட அரசியல் போராளியின் முகம் வந்து போனது.

"வீரபத்திரா... காட்டிப் போட்டாய்.... நீ எனக்கு காட்டிப்போட்டாய்.. அனுமதி கிடைக்கும்.. நீ காட்டிப்போட்டாய்" என்று கூவியபடி தன்னை மறந்து சிரித்தபடியே அழுதாள். சற்று நேரத்தில் எழுந்தாள். அரசியல்துறை அலுவலகம் நோக்கி அவள் நடந்தாள். பார்ப்பவர்களுக்கு அவள் ஓடிப் போவது போலவே இருந்தது.

"வாங்கோ அம்மா... விடியவே வந்திட்டியல்.. மகனுக்கு நேற்றே அனுமதி வந்திட்டு... கொஞ்சம் இருங்கோ எழுதித்தாறன்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனம் கதிரையில் தடாரென இருந்தாள். கண்களை மூடிக்கொள்ள வீரபத்திரன் வந்து போனார்.

"இந்தாங்கோ" மஞ்சள் நிற காகிதத்தில் அனுமதியை அவன் நீட்டினான். கோவில் பிரசாதத்தை பெறுவது போல் புவனம் இரண்டு கைகளாலும் அந்த அனுமதிப்பத்திரத்தை வாங்கிக் கொண்டாள். போகத் தயாரான போதுதான் அவளுக்கு பொறி தட்டியது.

"தம்பீட பேர் என்னப்பு?"

அவன் வேறொருவருக்கு பச்சை நிற காகிதத்தில் இருந்த அனுமதிப்பத்திரத்தை வழங்கியவாறே புவனத்தை நோக்கி முறுவலித்தான்.

"ஏனம்மா என்ர பெயர்... மாலை போடப் போறியலோ" என்றவாறு எழுந்து உள்ளே போனான். 'வீரபத்திரனுக்கு மாலை கட்டிப்போட்டது இவனுக்கு எப்பிடி தெரிஞ்சுது' அவள் ஒரு கணம் ஸ்தம்பித்தாள். புவனத்திற்கு அவனின் பெயர் வீரபத்திரன் என்றே தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

கட்டபறிச்சான் சந்தியில் இருந்த எல்லைக் காவலரணுக்கு மறுநாட்காலையில் வந்து சேர்ந்தான் கரன். அன்று புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தை தாண்டிச்செல்லும் பலர் அங்கு ஏற்கனவே வந்திருந்தார்கள். நாளாந்தம் வியாபாரம் செய்பவர்கள், வைத்தியசாலைக்குச் செல்பவர்கள், அரச அலுவலர்கள் போன்ற பலர் அங்கு வரிசை கட்டியிருந்தனர்.

அந்த எல்லைக் காவலரணைத் தாண்டினால் உள்ள சூனியப் பிரதேசம் இராணுவத்தின் ஜிபிஎஸ் முகாமின் முன்னணி காவலரங்கு வரை நீண்டிருந்தது. கட்டபறிச்சானை நோக்கி மோட்டார் குண்டுகளை ஏவக்கூடிய திறன்கொண்ட இராணுவ முகாம் அது. எந்த இடத்தில் மோட்டார் குண்டுகளை விழுத்த வேண்டும் என்பதை அறிவதற்கு அந்த இராணுவ முகாமில் பயன்படுத்தப்படும் பூகோள நிலையறி கருவியை ஆங்கிலத்தில் ஜிபிஎஸ் என சுருக்கமாக குறிப்பிடுவர். அந்தப்பெயரே அந்த முகாமின் அடைமொழியாகிப்போய் 'ஜிபிஎஸ் முகாம்' எனப் பிரபலமாகியிருந்தது.

சூனியப்பிரதேசத்தினுள் புலிகளினதும் இராணுவத்தினதும் முன்னணிக் கண்காணிப்பாளர்கள் பதுங்கிக் கிடப்பது வழமை. அவர்களிற் சிலர் குறிசூட்டாளர்களாகவும் இருப்பர்.

நேரம் காலை எட்டு மணியை நெருங்கிக்கொண்டிருக்க எல்லைக்காவலரண் பொறுப்பாளர் அங்கு வந்து சேர்ந்தார். அதுவரை சோம்பிப்போய் விடியாதிருந்த அந்த எல்லைக் காவலிடம் மிகச்சுறுசுறுப்பாக மாறியது. குழம்பிக்கிடந்த வரிசைகள் தானாகவே நேர்த்தியானது.

அன்றைய தொடர்பாடற் சங்கேத சொற்களை சரி பார்த்துக்கொண்டார் பொறுப்பாளர். அன்று முன்னணிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காணிப்பிற்கு கோகிலன் பொறுப்பேற்றிருப்பதை அந்தச் சங்கேதச் சொற்பட்டியல் தெரிவித்தது.

மகாவலி கங்கையை திருகோணமலைக்கு திருப்பிவிட்டு அங்குள்ள வயல்களுக்கு நீரைப்பாய்ச்சிய பின் அதனைக் கடலிற் கலக்க வைக்கும் அபிவிருத்தித்திட்டம் செயற்படுத்தப்பட்டபோது மகாவலி கங்கை திருகோணமலை மண்ணில் பாய்ந்தது. ஆனால் அதைவிட வேகமாகவும் அதிகமாகவும் சிங்கள குடியேற்றங்கள் திருகோணமலைக்குள் பாய்ந்தன. கங்கையில் வரும் நீர் திருகோணமலையின் அல்லைக் குளத்தின் ஊடாக வயல்களுக்கு வழங்கப்பட்டது. அவ்வாறு வயல்களுக்கு பாய்ந்த நீரில் எஞ்சி வடியும் தண்ணீரைக் கடலில் கலக்கும் வகையில் இயற்கையான பெருவாய்க்கால் ஒன்று கட்டபறிச்சானை மூதூர் பெருநிலப்பரப்பில் இருந்து பிரித்தது. கடல் பெருக்கெடுக்கும் காலங்களில் இந்த வாய்க்காலின் ஊடாக கடல்நீர் உள்ளே நுழையும். அதனால் அந்த வாய்க்காலின் நீர் உவர்ப்பு நிறைந்து இறால் வளரக்கூடிய நல்ல வாய்ப்பைக் கொண்டிருந்தது. அதோடு அந்த வாய்க்காலில் முதலைகள் நிறைந்திருந்தன.

இந்தப் பெருவாய்க்காலினால் பிரிக்கப்பட்டுள்ள மூதூரின் கிழக்குப் பிரதேசத்தை மூதூர் பெருநிலப்பரப்புடன் இணைக்கும் பாலமே கட்டபறிச்சான் பாலம். இதனூடாகவே போக்குவரவு நிகழும்.

இயற்கையான பாதுகாப்பாக அமைந்த அந்த வாய்க்காலின் ஒரு கரையான கட்டபறிச்சான் பக்கமாக கோகிலன் தன்னுடைய அணியுடன் நிலையெடுத்திருந்தான்.

பல பத்தடிகள் வளர்ந்து கிளைகளை பரப்பி பகலையும் இருளாக்கும் கண்டல் மற்றும் வெல்கண்ணா மரங்கள், அதற்கு அடுத்ததாக சற்று உயரம் குறைவாக வளரும் கீரிகண்டல் மரங்கள், ஆற்றின் அருகே இலைகளிலும் தண்டுகளிலும் தட்டுத்தட்டாக முட்களைக் கொண்ட முள்ளிப்புதர்கள் இணைந்த இயற்கை அரண் அவர்களின் முன்னணிக்காவலுக்கு உருமறைப்பையும் பாதுகாப்பையும் வழங்கியிருந்தன. கோகிலனுடைய கறுப்பு கசியோ மணிக்கூடு நேரம் எட்டு இருபது எனத் துல்லியப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வித்தியாசம் ஒண்டும் இல்லையண்ண” அந்த பதுங்கித்தாக்கும் அணியின் தொலைநோக்காளர்கள் இருவரும் கோகிலனுக்கு உறுதிப்படுத்தினர்.

கோகிலனுக்கு எப்போதுமே தானும் திருப்திப்பட வேண்டும். தன்னுடைய குறிசூட்டுத் துப்பாக்கியை தோளில் போட்டுவிட்டு தொலைநோக்கியூடே எதிர்ப்பிரதேசத்தை மேலும் துல்லியமாக ஆராய்ந்தான். பிரதேசம் சுத்தமாக இருந்தது. என்றாலும் ஏதோ ஒன்று அவனது கவனத்தை ஈர்த்தது. அது எதிரியின் பகுதியில் முள்ளிச் செடிகளின் மீது விழுந்து கிடந்த ஒரு மாமரக்கிளையின் சிறுகொப்பு. தொலைநோக்கியை இன்னும் கூர்மையாக்கினான் கோகிலன். அந்த மாமரக்கிளையின் அடிப்பாகம் முறிக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

“கவர்...” அமிழ்ந்த சத்தத்தில் தனது அணிக்கு கட்டளையிட்டான். மரங்களுக்குள் அந்த மூவரும் தம்மை மறைத்தபடி நிலையெடுத்துக்கொண்டனர். கடந்த நாட்களில் இராணுவத்தின் பதுங்கித் தாக்கும் அணி எங்கோ ஒரு புதிய உருமறைப்பைச் செய்திருக்கிறான். முள்ளிச்செடிகளின் மீது முறிக்கப்பட்ட மரக்கொப்பு விழுந்திருக்கிறது என்றால் எங்கோ உயரத்தில் அவன் இருக்கிறான்.

கோகிலன் தான் மறைந்திருக்கும் இடம் முழுவதுமாக தன்னை உருமறைப்புச் செய்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு தொலைநோக்கி ஊடாகக் கண்களை அங்கிருந்த மரங்களின் மீது அலைய விட்டான். அருகில் எங்கும் எதிரியின் உருமறைப்பு தெரிவதாயில்லை. தொலைநோக்கியைச் சற்று இடதுபுறமாக திருப்பினான். அங்கு அம்மன்நகர் கிராமத்தினை அண்டிய பிரதேசத்தில் வளர்ந்திருந்த ஒரு மாமரத்தில் மரக்கிளைகளைச் செருகி உருவாக்கப்பட்டிருந்த அசாதாரணமான மறைப்பொன்று அவன் கண்ணுக்குத் தெரிந்தது.

அந்த மறைப்பைச் செய்யும் போது கீழே விழுந்த மரக்கிளையொன்றைக் காற்று இங்கு கொண்டு வந்து விழுத்தியிருந்தது.

‘ஓகோ... அங்கயா இருக்கிறியள்.. கொஞ்ச நாளைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கயே இருங்கோ வாறன் நான்...' கோகிலனின் மனதில் அதற்கான திட்டமொன்று தெளிவாக விரிந்தது. எதிரி பொறிக்காக சற்று தொலைவில் காத்துக் கிடப்பதால் பாலத்தின் ஊடாக இன்றைய போக்குவரவுக்கு பிரச்சனைகள் இல்லை.

"ஓமடா பிரதேசம் கிளியர், பொறுப்புக்குச் சொல்லு... ஆக்கள விடச் சொல்லி"

எல்லைக்காவல் பொறுப்பாளரின் தொடர்பாடற்கருவியில் அவரது சங்கேத எண் அதிர்ந்தது.

"264 ... 264 இது 11 ஓவர்"

"11 இது 264 ஓவர்"

"சத்தம் வடிவாக் கேக்குதா" "கேக்குது"

"எங்களுக்கும் தெளிவாக் கிடக்கு... அவுட்"

அது சங்கேதச்சொல்லின் ஊடாகக் கிடைக்கும் அனுமதி. மக்களை போக்குவரவிற்கு அனுமதிக்கும் படி எல்லைக்காவல் பொறுப்பாளருக்கு அச்சங்கேத வார்த்தைகள் தெரிவித்தன.

வீதியின் இரண்டு புறமும் போராளிகள் பிரசன்னமாகினர். இரண்டு போராளிகள் நிரந்தர பயண அனுமதிகளை கையேற்றுக்கொண்டு நாளாந்த வியாபாரிகளையும் அரச உத்தியோகத்தர்களையும் போக்குவரவிற்கு அனுமதித்தனர்.

ஏனைய இரு போராளிகளும் ஒரு முறை மட்டும் பயணிக்கும் அனுமதியைப் பெற்றவர்களைப் பரிசோதித்து விடுவித்துக் கொண்டிருந்தனர். கரனுடைய நேரம் வந்தது.

"தம்பி நீங்கள் பொறுப்பாளரிட்டப் போங்கோ"

தன்னுடைய அனுமதிப்பத்திரத்தின் நிறம் மஞ்சளாக இருந்த போதே கரனுக்கு ஏதோபோல் இருந்தது. மெதுவாக பொறுப்பாளர் இருக்கும் இடத்திற்கு அவன் வந்தான். அந்த அனுமதிப்பத்திரத்தை வாங்கிய பொறுப்பாளர் அவனைச் சற்று அமரச் சொன்னார். காவலரணை விட்டு வெளியேறி காற்றாடினார்.

"நான் யோசிச்சன், உந்த பொடிய விட மாட்டாங்கள் எண்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் தடையரணைத் தாண்டிய சைக்கிள் வியாபாரிகள் இருவர் தம்மிடையே குசுகுசுத்தனர்.

"ஓமண்ணை... மறிச்சுப் போட்டாங்கள் பாத்தியலே.. பெடியன் உவங்களத் தாண்டி வந்த மாதிரித்தான்"

கட்டபறிச்சான் பாலம் தாண்டியவுடன் வியாபாரிகள் இருவரும் சைக்கிளை விட்டு இறங்கினர். மடித்துக்கட்டிய சாரத்தை அவிழ்த்து விட்டனர். பயபக்தியுடன் இராணுவக் காவலரண் நோக்கி சைக்கிளை உருட்டிக்கொண்டு நடந்தனர்.

அவர்களின் கண்களின் முன்னே ஜிபிஎஸ் முகாம் தனது தோற்றத்தை மறைத்து அகோரக் கண்கொண்டு பார்ப்பது போலவும் இரண்டு காவலரண்களுக்கும் நடுவால் வெளிவரும் 'தார்' வீதி அரக்கனின் கரு நாக்காகவும் தெரிந்தது.

"எவன் சுட்டாலும் சாவுதான் இந்த சூனியப் பிரதேசத்துக்குள்ள"

"ஆண்டவா ஒவ்வொரு நாளும் இந்தச் சாவுக் கயித்தக் கடந்துபோய் தொழில் செய்தாத்தானே சாப்பிட முடியுது"

காற்றிலும் கடவுள் இருப்பதாய் நம்பி அவர்களிருவரும் தம் மனக்குறைகளை வாய்விட்டுப் புலம்பினர்.

கட்டபறிச்சான் பாலத்திலிருந்து செல்லும் பிரதான வீதியில் அமைந்திருந்த ஜிபிஎஸ் முகாம் தனது பாதுகாப்பு கருதி பிரதான வீதியை மக்கள் பாவனைக்காக மூடியிருந்தது. ஸ்ரீலங்காவின் வடக்குக்கிழக்கு பிரதேசங்களில் பிரதான வீதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் பல இவ்வாறு பிரதான வீதிகளை மூடி வயல் வெளிகளின் ஊடாகவும், ஊர் மனைகளின் ஊடாகவும் போக்குவரவை திருப்பி விட்டிருந்தன. அவ்வாறு திருப்பிவிடப்படும்போது பெரும் துன்பகரமான பாதையாக அவை மாறியிருந்தன. அப்பாதைகளில் போக்குவரவில் ஈடுபடும் தமிழ் மக்கள் படும்பாடு காரணமாக புலிகளின் மீது மக்களின் கோபம் திரும்பிவிடும் என்பது இராணுவத்தின் நினைப்பு. ஆனால் நடந்ததோ வேறு.

ஜிபிஎஸ் முகாமின் முதலாவது காவல்நிலையில் இராணுவ புலனாய்வாளன் அலி அவர்களிருவரையும் எதிர்கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுபதிக்கும், தாயாதிக்கும் பதறல் எடுத்தது. எத்தனை தடவை இராணுவ தடையரண்களைக் கடந்து போனாலும் இந்தப் பதறலை அவர்களால் இல்லாமற் செய்யவே முடிவதில்லை.

"பசுபதியண்ணை சுகமா இருக்கியலோ... உங்கால என்ன புதினம்?"

பசுபதி சைக்கிளை தன் இடுப்பில் சரித்துக் கொண்டார்.

தடையரண்களைத் தாண்டிப் பயணிப்பவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் என்ன நடக்கின்றது என்ற உண்மைகளை இராணுவம் கேட்டால் சொல்வது அவர்களின் உயிருக்குப் பாதுகாப்பானது. ஆனால் சொல்லும் போது பொதுவான தகவல்களை மட்டும் சொல்வது இனத்துரோகம் ஆகாது என்பதை அவர்கள் கற்றுக் கொண்டிருந்தனர்.

"ஓ.. ஏதோ வாழ்றம்... ஒரு பொடியன மறிச்சு வச்சிருக்கிறாங்கள்...விடுவாங்களோ தெரியா"

அலி உசாரானான். அவர்களை நெருங்கினான்.

புலிகளின் தடை அரண் பொறுப்பாளர் தன் மணிக்கூட்டில் நேரத்தைச் சரி பார்த்தான்.

"இப்ப தகவல் இராணுவத்துக்கு போயிருக்கும்"

தடையரணுக்குள் யோசித்தபடி இருக்கும் கரனை நோக்கி நடந்தான்.

"தம்பி உம்மை விடேலா". கரனுக்குப் பொறுப்பாளர் கூறியது விளங்கவில்லை "என்னண்ண"

"உம்ம விடேலா... நீர் வீட்ட திரும்பிபோம்"

புவனம் ஒன்றும் லேசுப்பட்ட தாயல்ல. அவளுக்குத் 'பெடியலிண்ட' விளையாட்டு தெரியும். கரனை தயார்படுத்தியே அனுப்பியிருந்தாள். புலிகளின் காவலரணைத் தாண்டும் வழிகளையும், இராணுவக் காவலரணைத் தாண்டும் வழிகளையும் தனித்தனியாக அவனுக்குக் கற்பித்திருந்தாள்.

கரன் தன் அஸ்திரங்களை அடுத்தடுத்து பொறுப்பாளரை நோக்கி ஏவினான். அவை அந்தப் பொறுப்பாளரைத் தாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்த்தியதாகவே அவன் நினைத்தான். பசுபதியும் தயாதியும் போய் ஒரு மணித்தியாலம் சென்றிருந்தது.

"சரி.. சரி.. படிக்கப்போறபடியா விடுறன்.. ஆமிக்காரன் கேட்டால் இஞ்ச நடந்த எதையும் சொல்லக் கூடாது. சரியோ... போய்ட்டு வாரும்"

அம்மாவைக் கட்டியணைக்க வேண்டும் போல இருந்தது கரனுக்கு... 'மனிசி லேசுப்பட்ட ஆளில்ல'

கரன் பவ்வியமாக நடந்து போவதை பொறுப்பாளன் ஒரு நமுட்டுச் சிரிப்புடன் பார்த்தபடி இருந்தான். பாலம் தாண்டிய கரன் மெல்ல மெல்ல மறைந்து போனான்.

தனது தொடர்பாடற் கருவியில் வான்மீயை அழைத்தான் தடையரண் பொறுப்பாளர். எல்லையைத் தாண்டி கரன் சென்றுவிட்டதை வான்மீக்கு தெரியப்படுத்தினான்.

மஞ்சள் நிற அனுமதிப்பத்திரத்தின் பணி தற்போதைக்கு முடிந்தது.

அலியின் கண்களுக்கு கரன் பாலத்தைத் தாண்டி நடந்து வருவது தெளிவாகத் தெரிந்தது. வியாபாரிகள் சொன்ன அடையாளங்கள் அனைத்தும் கரனுக்கு பொருந்தியிருந்தன. அலி முகாமின் முன்னணி காவல் அரங்கிலிருந்து வெளியே வந்து மக்கள் பயணத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்த வீதியில் நடந்தான்.

கட்டபறிச்சான் பாலத்திலிருந்து வரும் மக்கள் ஜிபிஎஸ் முகாமின் வலது புறமாகத் திரும்பி பாலநகர் ஊடாக நஜீம் கடைச்சந்தி வரை சென்று மீண்டும் இடது புறமாகத் திரும்பி ஹக்கீனின் இறைச்சிக்கடை அருகே அல்ஹிதாயா பாடசாலைக்கு முன்புறமாக மூதூர் நகரத்தில் பிரதான தெருவை அடைவர்.

குறித்த அந்த போக்குவரவுப்பாதையானது 'மரணத்தெரு' என தமிழர்களிடையே பிரபலமாகியிருந்தது. அத் தெருவின் ஊடான பயணம் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட யூத மக்களின் நடைப்பயணமான 'மரணப்பேரணி' க்கு சற்றும் குறைவானதல்ல. இராணுவ புலனாய்வாளகளாக இயங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களும், சட்டத்திற்குப் புறம்பான கொலைகளையும், கடத்தல்களையும் செய்வதற்காக அரச ஆதரவுடன் உருவாக்கப்பட்டிருந்த ஒட்டுக்குழுவினரும் இந்த பயணப்பிரதேசத்தையே தமது நடவடிக்கைகளுக்கு உகந்த இடமாக அடையாளப்படுத்தியிருந்தனர். அங்கிருந்து கடத்தப்படும் தமிழ் மக்கள் அருகிலுள்ள வதைக் களமொன்றில் கொல்லப்பட்டு புதைக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

கரன் அந்த மரணத்தெருவின் வழியே மக்களோடு மக்களாக நடந்து கொண்டிருந்தான். நஜீம்கடைச்சந்தியை அண்மித்த போது அந்த நட்புக்குரல் அவன் நடையை நிறுத்தியது.

"தம்பி டேய் இஞ்ச வா" அது அலியின் குரல்.

கரன் ஒரு கணம் வீரபத்திரனை நினைத்துக் கொண்டான்.

தாய் புவனம் சொல்லித் தந்தவை அனைத்தும் அவனுக்குள் தலைகீழாய் புரண்டது.

"ஓம் சேர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

கொட்டியாரக்குடாவிலிருந்து வீசும் கடற்காற்று மெல்லிய குளிரை விரவிக் கொண்டே செல்லும். அவ்வாறு வீசும் காற்றை கரன் எப்போதும் காதலிப்பான். காற்று அவனைத் தொடும் போதெல்லாம் அவன் ஒரு காதலியை நினைத்துக் கொள்வான். சில்மிசங்கள் செய்யும் காதலியாகவே காற்று அவனுக்குப்படும்.

காற்றை எதிர்த்து நேராகச்செல்லும் போது முகத்தை முத்தமிட காற்று முயலும். முத்தத்தை தவிர்க்க பக்கவாட்டாகத்திரும்பினால் காற்றின் விரல்கள் பிடரிக்குள் புகுந்து மெல்ல வருடும். அதேவேளை சேட்டுப் பொத்தான்களின் ஊடாகப் புகுந்து உடலை தழுவும். சேட்டை செய்யும். முதுகை காட்டினால் மூர்க்கத்தனமாகத்தள்ளும். கோவம் கொள்ளும். கோவம் கொண்டால் தன் அம்மாவைப் போல் காற்றும் பரிநாசம் செய்யும் என்பது அவனுக்குத் தெரியும்.

காற்றை அனுபவித்தபடி கரன் மூதூர் இறங்குதுறையில் மக்களோடு மக்களாக படகுக்காக காத்திருந்தான்.

'சே... என்ன சிந்தனையடா இது.. காற்று சுகமாயிருந்தா அது காதலி! அதே காற்று மூர்க்கங்கொண்டா அது அம்மா... பெடியளிண்ட யோசனையெண்டா' அவன் தன்னையறியாமலே சிரித்தான். அம்மாவை நினைக்க அவனுக்குள் சொல்ல முடியாத உணர்வுகள் எல்லாம் மனதுள் முகிழ்த்தன.

'புவனம் கெட்டிக்காரி... அவா சொல்லித் தந்த விசயங்களெல்லாம் அலியை வெண்டுகொண்டு வர எவ்வளவு உதவியாப் போச்சு...முகத்த அப்பாவியா வச்சிரு, கேள்வி கேட்ட உடனே பயந்தமாதிரி நடி, அப்பிடி நடிக்கேக்க கேள்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன எண்டத வடிவா கிரகிச்சு பதிலச்சொல்.. பொய் சொல்ல வெளிக்கிடாத.'

புவனத்தின் இந்த ஆலோசனைகள் எல்லாம் சரியாக இருந்தது. அலி கேட்ட கேள்விகள் யாவற்றுக்கும் கரன் நின்று நிதானித்து பதிலளித்தான். அந்த நிதானம் அலியைக் கோபமடையச் செய்தது. கரனே எதிர்பார்க்காத நேரம் அலி கரனின் வயிற்றில் ஓங்கிக் குத்தினான்.

"அம்மோவ்..." என்று கதறிய கரன் வயிற்றைப் பிடித்தபடி வளைந்து அப்படியே வீதியில் விழுந்தான். அவன் விழுந்ததைப் பார்த்த அலியின் முகத்தில் திருப்தி படர்ந்தது. சரியாகப் பயிற்சி பெற்ற எவரும் தனது வயிற்றை நோக்கி வரும் குத்திலிருந்து தப்புவதற்காக தம்மையறியாமலே விலக முயற்சிப்பர். அது தான் அவர்களுக்கு பயிற்சி கற்றுத்தந்திருக்கும் பாடமாக இருக்கும். அத்துடன் ஒரு குத்துக்கே அவர்கள் சரிந்து விழக்கூடியவர்களும் அல்லர். கரன் வயிற்றைப் பிடித்து குனிந்து கத்தி அப்படியே விழுந்து மயக்கமானது அலிக்கு நம்பிக்கையை விதைத்தது. "இவன் ட்ரெயினிங் எடுத்தவனில்ல"

அந்த வழியால் பயணம் செய்து கொண்டிருந்த தமிழர்கள் கரனுக்கு நடப்பதைப் பார்த்தும் பார்க்காமல் போய்க் கொண்டிருந்தனர். தமிழர்கள் அரச படைகளால் தாக்கப்படும் போது உதவப் போகின்றவர்களும் உதைபடுவார்கள் அல்லது அவர்களும் கைது செய்யப்பட்டு வதை செய்யப்படுவது இலங்கை எங்கும் எழுதப்படாத விதி.

அடிபட்டு விழுந்து துடித்த போது "யா... அல்லாஹ்" என்ற கேவலுடன் ஒரு வயதான பெண்மணி தலையில் முக்காட்டுடன் தனக்கு அருகில் ஓடி வந்தது கரனுக்கு நினைவில் இருந்தது. பின்னர் அவனின் முகம் சில்லிட்ட போதே அவனுக்கு நினைவு திரும்பியது. அருகில் அலி இல்லை. அவன் திரும்பிப் பார்க்காமலே அந்த வயதான முஸ்லிம் பெண்ணைத் தூற்றியபடியே நடந்து போவது தெரிந்தது. மேல் பொக்கற்றில் இருந்த நூறு ரூபா பணம் காணாமல் போயிருந்தது.

'வீரபத்திரனுக்கு நேந்து இந்த நூறு ரூவாய உன்ர மேல் பொக்கட்டுக்க வைக்கிறன். அவன் உன்னைக் கொண்டு போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையில சேப்பான்' என்ற புவனத்தின் குரல் கரனின் காதுகளில் கேட்டது.

"அம்மா.....!" என்று கரன் அந்த வீதியில் கிடந்தவாறே அழுதான். அந்த முஸ்லிம் பெண்ணுக்கு அவன் தன்னையே அம்மா என்று அழைத்து அழுவதாகப்பட்டது. அவள் கரனின் தலையை வாஞ்சையுடன் தடவினாள்.

இனம் எதுவாக இருந்தாலும் 'அம்மாக்கள்' எங்கும் ஒரே மாதிரியானவர்களே.

ஆயிஷா உம்மாவின் உதவியுடன் கரன் அன்று படகுத்துறைக்கு வரக் கூடியதாக இருந்தது.

திருகோணமலைக்கு பயணிக்க காத்திருக்கும் மக்களில் ஒருவனாக கரனும் வரிசையில் நின்றான். அவனுக்கு முன்பாக சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க இருவர் தமக்குள் ஏதோ பேசி சிரித்துக்கொண்டிருந்தனர். கரனை அவர்களிருவரும் சட்டை செய்யவேயில்லை.

'பெருசுகளின்ட திமிரப்பாரன்' அவன் மனதிற்குள் கறுவிக்கொண்டான்.

அவனுக்குப் பின்பாக நடுவயதுப்பெண்கள் இருவர் நிற்பது தெரிந்தது. அவர்கள் இருவரும் இவனைப் பார்ப்பதும் தம்முள் குசுகுசுப்பதுமாக இருந்தனர்.

அலியிடம் வாங்கிய அடி சம்பந்தமாகவே அவர்கள் கதைப்பது தெரிந்தது. இந்தப் பெண்களை விட அந்தப் பெரிசுகள் தேவலாம் போல இருந்தது கரனுக்கு.

என்றாலும் அந்தப் பெண்கள் இருவரினதும் கண்களுக்குள் வாஞ்சை பரவிக்கிடப்பதை கரன் புரிந்துகொண்டான். அது அந்தப் பெண்கள் தங்களின் இயலாமைக்கு மன்னிப்பைக் கேட்பது போலப்பட்டது கரனுக்கு.

அவனுக்குள் எழுந்த மனஉணர்வு விகாரமடையத் தொடங்கியது. "வீரபத்திரா அலி சாகோணும்" என்று அவன் கறுவத்தொடங்கினான். அவனுடைய கைகள் உடுப்புகள் வைத்திருந்த தோல் பையின் பட்டியை இறுக்கத்தொடங்கின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“போலிம எண்ட” (வரிசையா வாங்கோ) என்ற சிங்கள காவல்துறையினனின் குரல் கேட்டதும் ஒரு அசண்டையீனத்துடன் மக்கள் எல்லோரும் வரிசையில் இணைந்தனர்.

அந்தக் காவல்துறையினன் ஒரு சிடுமூஞ்சிக்காரன். சீமெந்தினால் கட்டப்பட்டிருந்த குறுகிய இரு அறைகளை நோக்கி ஆண்களையும் பெண்களையும் பிரித்து அனுப்புவது அவன் வேலையாக இருந்தது.

யேசு சிலுவையில் அறையப்பட்டதைப் போல் கைகள் இரண்டையும் உயர்த்தியபடி கரன் அந்த அறைக்குள் நின்றான். உடலைப் பரிசீலிக்க வந்தவன் ஒரு கலைநயங்கொண்ட காவல்துறையினன் போலும். உதட்டு முத்தத்திற்காக தன் துணையின் பிடரியினுள் இரண்டு கை விரல்களையும் விரித்தபடி உள்ளே செலுத்துவதை போல அவன் கரனின் பிடரிக்குள் கைவிரல்களை செலுத்தினான். தலைமயிரை ஆராய்ந்த பின் தோள் மூட்டுக்களை தடவி கமக்கட்டுக்குள் சென்று இடுப்புவரை இருபுறமும் தனியாகப் பயணித்த அவனது கைகள் இரண்டும் கால்களைத் தடவும்போது ஒன்றாகி இடது காலை கணுக்கால் வரை தடவி, வலது காலின் கணுக்காலுக்குத் தாவி மேல் நோக்கிப் பயணிக்கும் போது அவன் நிமிர்ந்து கரனின் கண்களை நேரடியாகப் பார்த்தான். அக்கணத்தில் அவனின் வலது கை கரனின் ஆண்குறியை அழுத்திப் பரிசீலித்தது.

அசாதாரணமாக எதுவோ இருப்பது அவனுக்குத் தட்டுப்பட்டது. கரன் நாக்கை கடித்துக் கொண்டான்.

“மொக்கத மே” (என்ன இது).. “சல்லி மாத்தயா” (காசு ஐயா)

ஆண்குறியுடன் சேர்த்து மேலும் அழுத்திய அவன் “காசு... காசு... மம பலன்டோனே (நான் பார்க்கவேணும்).. காட்டு... காட்டு...” என்று கத்தினான். எதைப்பார்க்க ஆசைப்படுகின்றான் அவன் என்பது கரனுக்குப் புரியாதிருந்தது.

நீளக்காற்சட்டையின் பொத்தானைக் கழற்றி இணைப்பியை கீழே இறக்கி உள்ளாடைக்குள் கையை விட்டு ஐந்து நூறு ரூபாய் தாள்கள் நான்காக மடித்து சொப்பிங் பையினால் சுற்றப்பட்டிருந்த அப் பொதியை எடுத்து அவனின் கையில் வைத்தான் கரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆ... ஹரி ஹரி (சரி சரி).... பரிசமிங் யண்ட மல்லி(கவனமாப் போங்கோ தம்பி)” என்று அனுப்பி வைத்தான் அவன்.

அந்த அறையை விட்டு வெளியேறி அங்கிருந்த நீட்டு மேசையில் தன் பயணப்பையை கவிட்டுக் கொட்டினான். மேசையின் மறுபக்கம் நின்ற காவல்துறையினன் ஒவ்வொரு உடையாக உதறிப் போட்டான். அவற்றை பொறுக்கியடுக்கிக்கொண்டு கரன் பயணப்படகை நோக்கி வேகமாக நடந்தான். நீளக்காற்சட்டையின் இடதுபொக்கற்றினுள் இருந்த நூறு ரூபாய் நோட்டுகள் இரண்டும் பாதுகாப்பாக இருந்தன.

இலங்கை போக்குவரவு சபையின் பெரிய படகு அது. நூறு பயணிகள் பயணிக்கக் கூடியது. நடத்துனரிடம் ஐம்பது ரூபாவைக் கொடுத்து பயணச்சீட்டைப் பெற்றுக்கொண்டு படகின் நடுப்பகுதியில் இருந்த இருக்கைகளில் ஒன்றில் இருந்த போதுதான் ஒரு ஆசுவாசமூச்சு அவனிடமிருந்து வந்தது. கட்டபறிச்சானை பிரியும் வலி மெதுவாக அவனை வாட்ட தொடங்கியது. இராணுவ முன்னரங்கை தாண்டியவுடன் உள்ளாடைக்குள் ஆண்குறிக்கு முன்பக்கமாக வைத்திருந்த அந்தக்காசை மேல்பொக்கற்றுக்குள் எடுத்து வைக்கும்படி புவனம் சொன்னதை அவன் மறந்ததை நினைத்து திடீரென வாய் விட்டு சிரித்தான்.

‘காட்டு காட்டு’ என்று அந்த காவல்துறையினன் பட்டபாடு கரனுக்கு கிலேசமூட்டியது.

மூதூருக்கும் திருகோணமலை நகரத்திற்கும் இடையிலான தொடர்பு கடலூடாகவே நடைபெற்று வந்தது. மூதூர் இறங்குதுறையிலிருந்து பெருங்கடல் பிரதேசமான கொட்டியாரக்குடாவை ஊடறுத்து வரும் போக்குவரவுப் படகு இலங்கை கடற்படையின் கட்டளைப்பணியகம் அமைந்துள்ள கடலெல்லைக்குள் செல்லாமல் ‘பழைய துப்பாக்கிமுனை’ யினை அண்டிய பகுதியால் சென்று சோபர் தீவுக்கும் பெருநிலப்பரப்பிற்கும் இடையாலே பயணித்து திரும்பவும் வலதுபுறம் திரும்பி உட்துறைமுகக்கடலுக்குள் நுழையும். அங்கிருந்து நேராக துறைமுக காவல்துறை மற்றும் சுங்கச்சாவடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்த படகுத்தரிப்பிடத்திற்கு பயணித்து தனது பயணத்தை நிறைவு செய்யும்.

கரன் படகின் கீழ்த்தட்டில் இருந்தான். அந்த படகின் இயந்திரம் டுப்.. டுப்.. டுப்... என்ற சத்தத்துடன் இயங்கிக் கொண்டே இருந்தது. படகு கடுமையாக அசைந்தால் அதில் ஏறுபவர்கள் மிகச் சிரமப்படவேண்டியிருக்கும். ஆனால் அன்று கரையில் மோதும் அலைகளால் அந்த இயந்திர படகை பெரிதாக அசைக்க முடியவில்லை. திருகோணமலைக்கு பல்வேறு தொழில்களின் நிமித்தம் செல்லும் மக்கள் படகுக்குள் வந்துகொண்டே இருந்தார்கள். மெல்ல மெல்ல இருக்கைகள் யாவும் நிரம்பத்தொடங்கின. ஒரு சிலர் படகின் மேல் தளத்தில் குந்தியிருக்கச்சென்றனர். அவர்கள் கடற் பயணத்தில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள் போல என கரன் எண்ணிக்கொண்டான்.

படகின் எந்திர சத்தத்தை விட இப்பொழுது மக்கள் தங்களுக்குள்ளேயே கதைத்துக் கொள்ளும் சத்தம் மிகப்பெரிதாக ஒலிக்கத் துவங்கியது.

"இண்டைக்கே வந்திடுவீரோ?"

"ஓம் இண்டைக்கே திரும்ப வேணும். போட்டத போட்டபடி விட்டுட்டு வந்தனான்"

"அடியே ராசாத்தி நீ ஏன் அங்க போய் இருக்கிறாய்"

"இங்கதான் கதிர கிடைச்சது.. கொஞ்சம் காத்தும் வருது போல கிடக்கு"

தமிழர்கள் தங்களை மறந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அதில் ஒரு திருப்தியைக் காணமுடிந்தது. அன்றைய 'மரணப்பயணத்தில்' தாங்கள் உயிருடன் மீண்டு வந்தது அவர்களுக்கு அந்த நிம்மதியைத் தந்தது.

குழந்தை ஒன்று வீரிட்டுக் கத்தியது. குழந்தையின் வீரிடல் பதற்றமொன்றை அப் படகினுள் பரப்பியது. தாய் தன் குழந்தையின் வாயை அடைக்க தன் மேலாடையை விலக்கி மார்பகத்தை அந்த குழந்தையின் வாய்க்குள் வாஞ்சையுடன் திணித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் குரல்கள் அந்தப் படகின் விளிம்புகளில் தெறிக்கத் தொடங்கின. அங்கு கேட்ட ஒவ்வொரு குரலும் கரனின் சிந்தையை அங்குமிங்கும் பிடித்து அலைக்கழித்தது. மனிதர்கள்.. மனிதர்கள்... மனிதர்கள்.... அவர்களின் குரல்கள்.. குரல்கள்... குரல்கள்... ஒவ்வொரு குரலும் மனித வாழ்வின் மீதான நம்பிக்கையை அப்படகினுள் நிரப்பிக்கொண்டிருந்தன.

படகின் டுப் டுப் ஒலி கர்ணகடூரமாக ஒலித்து வேகம் எடுக்க தொடங்கியது. அந்த கணத்தில் மனிதர்கள் தங்களுடைய குரலை நிறுத்திவிட்டார்கள். கடற்பயணப் பயம் உருவாக்கிய மெல்லிய அச்சமொன்று அங்கு பரவியது. டுப்..டுப் ஒலி மட்டுமே அந்த உலகை ஆட்கொண்டிருந்தது. படகு ஆழ்கடலுக்குள் பயணிப்பதை அதிகரித்த அதன் ஆட்டம் வெளிப்படுத்தியது.

"சொப்பிங் பாக்.. சொப்பிங் பாக்" என்று ஒரு குரல் அலறியது. ஒரு பயணியின் குமட்டல் வாந்தியாக வெளிவரும் சத்தம் கேட்டது.

கடற்பயணங்களில் இருக்கும் மிகப்பெரிய இடர்பாடு இதுதான். புதிதாக படகுப்பயணம் செய்பவர்கள் படகு போடும் ஆட்டத்திற்கு வாந்தி எடுக்க தொடங்கிவிடுவார்கள். அது தொடர்கதையாகிவிடும். ஒருவர் வாந்தியெடுக்கத் தொடங்கினால் அவரைப் பார்த்து, ஓங்காளித்து சிலர் தாங்களும் வாந்தியெடுக்கத் தொடக்கிவிடுவார்கள். ஓங்காளிப்புக்களின் ஒலியைக் கேட்டு வாந்தியெடுக்காமல் இருப்பது புதியவர்களுக்கு சாத்தியப்படுவதில்லை. சிலர் காறித்துப்பி கொண்டிருப்பார்கள். காறினாலும் படகினுள் துப்பமுடிவதில்லை. அதனால் படகின் மேல் தளத்துக்குச் சென்று அங்கிருந்து கடலுக்குள் துப்புவார்கள்.

இந்த கலவரத்தை பார்த்த கரனுக்கும் வயிறு லேசாக குமட்ட தொடங்கியது. அவனுக்கு அந்த சூழலை விட்டு நகர்ந்தால் நிம்மதியாக இருக்கும் போல் இருந்தது. கப்பலின் மேற்தளத்திற்கு செல்ல எழுந்தான். ஆனால் இருந்த இடத்திலிருந்து எழும்பிய வேகத்தில் கப்பலின் ஆட்டம் அவனை அருகில் இருந்தவரின் மடியில் விழுத்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மன்னிச்சுக்கொள்ளுங்கோ... என்னால நிக்க முடியல” அவன் தட்டுத்தடுமாறி எழும்பிக்கொண்டே அவரிடம் பேச்சைத் தொடங்கினான்.

“ஹூம்... தெரியுது.... தம்பிக்கு புதுப்பயணம் போல... அதான் விருட்டென எழும்பி கீழ விழுறியல்”

“உண்மையா புதுப்பயணம்தான். வயிறு ஒரு மாதிரி குமட்டுது. நான் மேல்தளத்துக்கு போப்போறன்” படகில் கரைச் சட்டங்களில் பூட்டப்பட்டிருந்த கம்பியினைப் பிடித்தவாறு மெதுவாக நகர்ந்து சென்று மேலே ஏற கடலின் குளிர்காற்று அவன் முகத்தைத் தொட்டது.

“அப்பாடா என்ன காத்து...” மூச்சை நன்றாக இழுக்க நுரைப்பை முழுவதும் கடற்காற்று நிரம்பியது. வயிற்றின் குமட்டல் சற்று அடங்கியது. மேல் தளத்திற்கு வந்தான் கரன்.

அந்த மேற்றளத்தில் ஏற்கனவே அவன் சந்தித்த இரண்டு வயதானவர்களும் சுருட்டை புகைத்தபடி கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவருடன் மேலும் பலரும் அங்கு காற்று வாங்கியபடி படகை ஆதுரமாக பற்றிக்கொண்டு இருந்தார்கள். கரன் தங்களை நெருங்கி வருவதைக் கண்ட இரண்டு வயதானவர்களில் ஒருவர் வாயிலிருந்த சுருட்டை சற்றே விலக்கினார்.

“தம்பிக்கு உள்ளுக்கு குமட்டுது போல.. சத்தி வாற மாதிரி இருக்கோ?” அவர் தன்னுடன் பேசுகின்றார் என்பதை நம்பிக்கை இல்லாமல் பார்த்த கரன் அடுத்தவரின் பதிலைக் காது கொடுத்து கேட்டான்.

“அடி வாங்கேக்க வராத வாந்தி இப்ப கப்பல் ஆட்டத்தில் வருது போல கிடக்கு” என்ற அவரின் ஹாஸ்ய பேச்சு அவனையும் சிரிக்க வைத்தது.

“அப்ப நான் அடிவாங்கினதப் பாத்துக் கொண்டுதான் இருந்திருக்கிறியல் என்ன?”

“ஓம் பாத்துக்கொண்டுதான் இருந்தனாங்கள்” அவரின் வாயிலிருந்து சுருட்டுப்புகையுடன் பெருமூச்சும் கலந்து வெளியாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தம்பிக்கு என்ன பெயர்”

“கரன்”

“இஞ்ச வந்து இதில இரு” எனத்தனக்கு அருகில் இருந்த இடத்தை காட்டினார் பெரியவர். அந்த இரு பெரியவர்களுக்கும் இடையில் அவன் போய் அமர்ந்தான்.

தனது மேல்பொக்கட்டுக்குள் இருந்த ‘சொப்பிங்பாக்கால்’ சுற்றிய பொட்டலத்தை மிகப் பௌவியமாக எடுத்தார். அவரது பவ்வியம் கரனை அதிசயிக்கச் செய்து அவனையறியாமலே அவனது வாயைத் திறந்து ‘ஆ’ வென அவரது செய்கைளைப் பாரக்கச் செய்தது. அவரோ தன்னைச் சுற்றியிருக்கும் உலகத்தை மறந்தவராக தனது கவனம் முழுவதையும் அந்தப் பொட்டலத்திலேயே வைத்திருந்தார். சொப்பிங்பாக்கால் மெதுவாக வெளியே எடுத்து பொட்டலத்தை ஒரு கையில் வைத்துக்கொண்டு மறுகையால் அந்த சொப்பிங்பையைத் தனது குண்டிக்கு கீழே தள்ளி கடல் காற்றில் அது பறந்து விடாதபடி அழுத்திக் கொண்டார். பின்னர் இடது கையின் நான்கு விரல்களால் பொட்டலத்தை அழுத்திப் பிடித்தபடி மேலால் சுற்றியிருந்த காகிதத்தை ஒரு புறமாக விரித்தார். உள்ளே வெற்றிலையிருப்பது கரனுக்கு தெளிவாகத் தெரிந்தது.

வாழ்வின் ஒவ்வொரு கணங்களையும் அந்த கிழவர் பற்றிப்பிடித்திருப்பதாய் அவனுக்குப் பட்டது.

“அட இதுதானா?”

அப்போதுதான் தனது வாய் ‘ஓ’ வென்று அதனைப் பார்த்துக் கொண்டிருந்தது அவனுக்குத் தெரிந்தது. ‘அடச்சே’ மனம் அவனை கேலிசெய்வதைப் பொருட்படுத்தமுடியாமல் தன்னைத்தானே சமாதானம் செய்ய விழைந்தான். “நானும் என்னவோ ஏதோ எண்டு நினைச்சன்... வெத்திலையையே இவ்வளவு கவனமா வச்சிருக்கிறியல்”

பெரியவர் வாய்விட்டு சிரித்தார். சிரிப்பின் அர்த்தம் வேறாக இருந்தது. கரனுக்கு அது புரியவில்லை.

“இந்த வெத்திலதான் இப்ப உனக்கு மருந்தடா தம்பி... இந்தா இந்த விளாறை வாயில வச்சு சப்பு... வயித்துக் குமட்டல் அடங்கும்”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மறுபேச்சுப்பேசாமல் வாயில் அந்த வெற்றிலை விளாறை அதக்கிக் கொண்டான். முதல் எச்சிலை விழுங்கும்போது எழுந்த சுவை பொறுத்துக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஏதோ ஒரு அசூசை அவனை வாட்டியது. அடுத்தடுத்த எச்சில் விழுங்கல்கள் மெல்ல ஒரு விடுதலையை வயிற்றுக்கு அளிக்கத் தொடங்கியதை அவன் உணர்ந்தான்.

கடலை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த அவர் மெல்லப் பேசத் தொடங்கினார்.

“அடிச்சதுல வயிறு நோகுதோ”

“இல்லையய்யா”

“மனிச வாழ்வின்ற தத்துவம் வயித்திலயும் தங்கிக்கிடக்கு. வயிறுதான் வாழ்க்கையெண்டு நினைக்கிறவன் சாதாரண மனுசன். அவன் தன்ர வயித்த நிரப்பிறதுக்காக என்னவும் செய்வான். அவனுக்கு வயித்துப் பசிதான் முக்கியம். மூண்டு நேரமும் இல்லாட்டி அதுக்கும் மேலயும் அவனுக்கு வயிறு நிரம்போணும். வயித்த நிரப்போணும் எண்ட யோசன வரேக்க அவன் மிருகம். அந்த மிருகத்துக்கு மற்ற மனுசரையும் மிருகமாத்தான் தெரியும். உன்ன அடிச்சவனும் அந்த ரகம் தான். அவன் தன்ர இனத்தையே தன்ர பசிக்கு பலியாக்க தயங்கமாட்டான். உன்ன அடிக்கேக்கயும் நாங்கள் பாத்துக்கொண்டுதான் இருந்தனாங்கள். ‘காட்டு காட்டு’ எண்டு அந்த ஆமிக்காரன் வதைக்கேக்கயும் பாத்துக்கொண்டுதான் இருந்தனாங்கள். ஆனா உனக்குக்கிட்ட நாங்க வரேலா. வந்திருந்தால் உனக்கு கனக்க அடி விழுந்திருக்கும். பெரிய திட்டத்தோட தனித்தனிய நாங்கள் பயணிக்கிறமாதிரி அவனுக்கு யோசன வரும். அந்த திட்டம் தன்ர வயித்துப் பசிய போக்கிற வழிகளுக்கு ஆபத்தக்கொண்டு வரும் எண்டு அவன் பயப்பிடுவான். அந்தப்பயம் அவனுக்குள்ளுக்க இருக்கிற மிருகத்த உலுப்பும். அந்த மிருகம் உன்னக் கொல்லத்தான் யோசிக்கும்”

அவர் சற்று அமைதியானார்.

கரனின் கண்களுக்குள் அந்த சோனகத் தாயின் கதறல் விரிந்தது. அந்தத் தாயைப் பார்த்து ஏதோ பேசியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காறித்துப்பிவிட்டுச் சென்ற அலியின் முகம் கரன் மயங்கிய போது மங்கலாக அவனது கண்களுக்குள் பதிந்தது ஞாபகம் வந்தது.

“ஆனா சரித்திரம் படைக்கிறவங்கள் வயித்துப் பசியப்பத்தி யோசிக்க மாட்டாங்கள்” அவர் தொடர்ந்தார்.

“வயித்துப் பசிக்கு எந்த மரியாதையும் தராத மக்கள்தாண்டா வரலாற்றில இடம் பிடிக்கிறாங்கள். சோத்தக்குடுத்து சுதந்திரத்தைப் பறிக்கலாம் எண்ட உலகத்துக்கு சோத்த விட சுதந்திரம் முக்கியம் எண்டு சொல்றவங்கள் உத்தமனுகள். கண்ணுக்கு முன்னுக்கு அவங்கள நாங்கள் பாக்கிறம். சோத்துக்காக நீ உன்ர சுயத்த இழக்காத. உத மட்டுந்தான் நான் உனக்குச் சொல்லேலும்” மூச்சை முழுவதுமாக உள்ளே இழுத்தார் கிழவர்.

பெருங்கடலுக்குள் நுழையும் படகு அள்ளி வீசும் காற்று முழுவதையும் குடித்துவிடத்துடிக்கும் ஒரு வயதான போர் வீரனாக அவரை அவன் பார்த்தான்.

மனிதர்களை அறியாமல் அவர்களை மதிப்பிடக்கூடாது என்பது அவனுக்குப் புரிந்தது.

“விடு விடு ... அவன் பாவம்... சின்னப்பொடியன்” அந்த சுமையான மௌனத்தைக் கலைக்க மற்றையவர் முனைந்தார்.

“இவங்கள் சின்னப்பெடியள் என்ட சிந்தனையே பிழையடா.. .. நாங்கள் சின்னப்பெடியள் எண்டு நினைச்சவங்கள்தாண்டா இண்டைக்கு தமிழினத்த உலகமே திரும்பிப் பாக்க வச்சிருக்கிறாங்கள்”

அவர் பேச்சை முடிக்கமுன்னரே தடாரென்று ஒரு சத்தம் எழுந்தது. படகு ஏதோ ஒரு பொருளில் மோதியதால் அந்தச் சத்தம் எழுந்ததாக கரன் பயந்தான். படகு பேயாட்டம் போடத் தொடங்கியது. இரண்டு கிழவர்களுக்கு நடுவில் தான் இருப்பது ஏதோ ஒரு பாதுகாப்பை அவனுக்குத் தந்தது. என்றாலும் பயத்தால் முகம் வெளிறியதை அவர்கள் அவதானித்தனர்.

முன்னைய கிழவரின் முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பியது.

“பயந்திட்டியே?” பொய் சொல்ல முகம் விடவில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஐயா"

"ம்.... பயப்பிடத்தான் வேணும்... பாதாள மலைக்குள்ள படகு நுழையுது.. இனி கடல்ராசன் தன்ர ஆட்டத்தக் காட்டுவான்... தண்ணிலதான் படகு தடாரெண்டு மோதீனது ..வேற எதுலயும் இல்ல" முன்னைய கிழவர் அவனை ஆசுவாசப்படுத்தினார்.

"அந்த சத்தத்துக்கு நான் பயந்தே போனன். படகு எதிலயோ மோதி பிரியப்போகுதோ எண்டு நினச்சன்"

அவர்களுடன் கதைத்துக்கொண்டிருந்ததால் படகின் பயங்கர ஆட்டத்தையும் அது தரும் மரண பயத்தையும் கொஞ்சமாவது மறக்கலாம் போல இருந்தது கரனுக்கு.

"அப்பிடியோ... மோனே, முன்னொருக்கா இந்தப் பாதாளமலைக்குள்ளால வந்த படக கடல்ராசன் ரெண்டு துண்டாப் பிரிச்சவன்... நாங்கள் எல்லாரும் செத்துத்தான் போனம்... அதுவும் நடந்துது... மரண ஓலத்தைக் கூட இந்தக் கடல் வெளிய கொண்டு போகேல்லயே.... குஞ்சுகுருமான், குமருகள், இளசுகள், பழசுகள் எண்டு ஒண்டா நூறுபேர இந்தக் கடல் காவு வாங்கிச்சு.... எல்லாக் கடவுளும் கைவிட்ட மக்கள் நாங்கள்" மற்றையவர் திடீரென பொங்கியெழுந்து தன்னுடைய மனதின் அடியாழம் வரை பரவிக்கிடந்த அந்தத்துயரை வார்த்தைகளால் வெளிக்கொட்டினார்.

கரன் அதிர்ந்து போனான்.

ஒவ்வொரு மனிதரின் உள்ளேயும் வரலாறுகள் மகிழ்வாகவும் வலிகளாகவும் விரவிக் கிடக்கின்றன. மனிதர்களால் மட்டுமே வரலாறுகளைக் கடத்த முடிகின்றது. அந்த வரலாறுகளைச் செதுக்க முடிந்தவர்கள் செதுக்குகின்றார்கள், எழுத முடிந்தவர்கள் எழுதுகின்றார்கள், பேச முடிந்தவர்கள் பேசுகின்றார்கள்... ஆனால் பலர் அமைதியாகக் கடந்து போய்விடுகின்றார்கள். வரலாறு மன்னர்களுக்கும் தளபதிகளுக்கும் மட்டுமானதா? சாதாரண மனிதனை இந்த வரலாறு ஏன் வஞ்சித்துவிடுகின்றது? அந்த சாதாரண மனிதனின் வரலாற்றை எழுதுவது யார்? செதுக்குவது யார்? பேசுவது யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

மூதூருக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கடல் பயணமானது கொட்டியாரக்குடாவின் ஊடாகவே நடைபெறும். கொட்டியாரக் குடாவுக்குள் நுழையும் பயணப்படகுகள் சிறிய குன்று ஒன்றினைத் தாண்டிச் செல்லும். அக்குன்றை அண்டிய பிரதேசம் பாதாளமலை என்ற அடைமொழிப்பெயரைக் கொண்டது. அந்த இடத்தில் கடலின் ஆழத்தை அறிய முடியாது என்பதாலே இந்த அடைமொழி உருவாகியது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தின் போது திருகோணமலை துறைமுகத்தின் முக்கியத்துவம் உலகெங்கும் பிரபலமானது. இயற்கையாக மலைகளால் மறைக்கப்பட்டிருக்கும் இத்துறைமுகத்தினுள் போர்க்கப்பல்களை மறைத்துவைப்பது அன்றைய காலத்தில் சாத்தியமானதாக இருந்தது. ஆங்கிலேயர்கள் பாதாளமலைப் பிரதேசத்தில் கடலின் ஆழத்தைக் கணிப்பதற்கு மிகப்பாரமான பொருளுடன் கட்டப்பட்ட சங்கிலிகளை இறக்கிப் பார்த்ததாகவும் பல்லாயிரக்கணக்கான மீற்றர்கள் நீளமுடைய சங்கிலிகளை இறக்கியும் கடலின் அடியினை அந்தச் சங்கிலி போய் முட்டவில்லையென்றும் கதைகள் பேசப்படுவதுண்டு. எனினும் குறித்த பிரதேசத்தின் கடற்படுக்கையில் சுழல்களுடன் கூடிய மிகவேகமான நீரோட்டம் இருப்பதாகவும் அந்நீரோட்டத்தின் காரணமாக உருவாகும் சக்தி மிக வலுவானது என்பதால் சங்கிலிகளை அச்சக்தி இழுத்துச் சென்று கொண்டிருக்குமே தவிர கடலின் அடியை அடைய விடாது என்றும் கடல் பற்றிய அறிவைக் கொண்டவர்கள் சொல்வதுண்டு.

பயணம் ஆரம்பித்து இருபத்தைந்து நிமிடங்கள் ஆகியிருந்ததை கரனின் கைமணிக்கூடு காட்டியது. புவனம் அந்த மணிக்கூட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் கைகளில் கட்டிவிட்ட போது கண்கள் பனித்துப்போனதை எவ்வளவோ சிரமப்பட்டு மறைத்தாள். எனினும் விழிகளில் இருந்து வழிந்த துளிகள் அவன் கைகளில் வீழ்ந்தன.

"அம்மா..."

"கவனம் டா ராசா"

அதற்கு மேல் அவளும் பேசவில்லை அவனும் பேசவில்லை.

கடல் தன் ஆசை தீர படகைப் பேயாட்டியது. அவனுக்கோ பயம் போனதாகவே தெரியவில்லை. பயம் என்று வரும் போது புவனத்தின் ஞாபகங்கள் ஏன் வருகின்றன. ஆண்கள் பயப்பிடும்போதெல்லாம் தம் அம்மாவைத்தான் நினைத்துக் கொள்வார்களோ? பெண்களும் அப்படித்தானே?

கரன் தன் அம்மாவை நினைத்துக்கொண்டிருந்தான். பெரியவர் கடலை வெறித்துப் பார்த்தபடி இருந்தார். மற்றையவரோ படகு விபத்தால் இறந்த யாரையோ எண்ணி மனங்குமைந்தபடி இருந்தார். அங்கு நிலவிய அமைதியை படகின் பேயாட்டத்தாலோ வீசும் பெருங்காற்றாலோ கலைத்துவிட முடியாமலிருந்தது.

"அந்த விபத்தில ஐயாவும் படகில இருந்தனீங்களோ?" ஒருவரின் மனப்புழுக்கத்தை நீக்க வேண்டுமானால் அவரை கிளறி கதைக்க விட வேண்டும் என்பதை கட்டபறிச்சான் கிராம வாழ்வு கரனுக்கு கற்றுத் தந்திருந்தது.

வருணண் ஐயாவின் சாவு நாளில் அவரது மனைவி சுந்தரி அக்கா பேயறைந்தது போல் இருந்தார். அவருடைய சாவு அப்பிடித்தான் நிகழ்ந்திருந்தது. சுந்தரியக்கா அழவேயில்லை. ஆனால் சாவுச்சேதி உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கிராமத்திலிருந்த மக்கள் அனைவரும் இடைவிடாது சுந்தரி அக்காவைக் கட்டியணைத்து ஒப்பாரி வைத்து அழுதுகொண்டே இருந்தனர். ஒரு கட்டத்தில் சுந்தரியக்காவும் அழத்தொடங்கினார். அவர் வீரிட்டு கத்தியழுததை கரனால் தாங்க முடியவில்லை.

"இந்தச்சனங்கள் கடசியா அவாவை அழவைச்சுப் போட்டுதுகள் பாரம்மா... நீயும் அவாவ விடாம கட்டிப்பிடிச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப்பிடிச்சு அழுறாய்" என்று தன் கடுப்பை தாய் புவனத்திடம் அன்று மாலை வெளிப்படுத்தினான் கரன்.

"ராசா... செத்த வீடெண்டு சொல்லி நாங்கள் ஒரு ஐஞ்சு நாள் முழுசா அவவோட நிப்பம். பிறகு எங்கட சோலியப்பாக்க போயிருவம். தனியக்கிடந்து அவஸ்தப்படப்போறது சுந்தரியக்காதான். அந்த அவஸ்தய தாங்கிறதுக்கு சக்தி தேவையெண்டா அவாட கவலை குறையோணும். மனப்பாரந்தீர அழோணும்.... கதைக்கோணும், கவலையைச் சொல்லிக் கதறோனும். கவலை குறையேல்ல எண்டா மனிசி மனப்பாரம் தாங்காம மருத்தக்கிருந்த குடிச்சு செத்துப் போயிரும். பிள்ளைகள் அனாதையாகீரும். மனப்பாரத்த தீர்க்கிற வேலயத்தான் நாங்கள் செய்றம்."

கரனுக்கு செத்த வீட்டு ஒப்பாரியின் அர்த்தம் அன்றுதான் புரிந்தது. அதையே அவன் இங்கும் பிரயோகிக்க விரும்பினான். மற்றைய பெரியவரின் வாயைக்கிளறினான்.

"ஓம்... படகில இருந்தனான். நாங்க நூற்றேழுபேர் இருந்தம். ஆமி, பொலிஸ், முஸ்லிமாக்கள், தமிழாக்கள் எண்டு எல்லாரும் இருந்தம். ஆயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று மூன்று தை மாசம் இருவத்தாறாந்தேதி சனாதிபதி பிரேமதாசாட நடமாடுஞ் சேவைக்கு திருகோணமலைக்கு போயிருந்தம். அந்த நடமாடுஞ் சேவைக்கு சனங்கள் கனக்க வந்திட்டாங்களெண்டு முதல் நாள் பின்னேரம் கனபேரத் திரும்பி போக சொல்லிப் போட்டாங்கள். நானும் ஐயாவும் திரும்புவம் எண்டு பின்னேர லோஞ்சுக்கு வந்தம். லோஞ்சுல நூறு பேர வழமையா ஏத்திறதில்ல. ஆனா அண்டைக்கெண்டு எல்லாரையும் ஏத்தச்சொல்லி கட்டளையாம். தியாகு அண்ணதான் சுக்கான்ல நிண்டவர். அவர்தான் என்னய காப்பாத்தீனவர். படகு சரியான பாரத்தோட கடலுக்க போய்க்கொண்டிருந்தது. தை மாதம் எண்ட படியால காத்தும் கொஞ்சம் உரமாத்தான் இருந்துது. இண்டைக்கு கேக்கிறதப்போல "நற..நற"ண்டு கல்லுப் பொரியிறமாதிரி அண்டைக்கும் கேட்டுக் கொண்டிருந்துது. பாதாளமலைக்குக் கிட்ட வரேக்க கனமான அலைகள் படுவேகமா படக மோதத் தொடங்கிச்சு. நானும் ஐயாவும் மேல் தளத்தில தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிண்டனாங்கள். சிவலிங்கம் அண்ணைதான் படகின்ர மேல்தளத்துக்குப் பொறுப்பு மாதிரி. அவர் ஐயாவோட நல்ல பழக்கம். ஐயாவ எப்பவும் 'கைலாயப்பு... கைலாயப்பு' எண்டு வாஞ்சையா கூப்பிடுவார். படகின்ற ஆட்டம் பிழையாப் போகுதெண்டு ஐயாவுக்கு விளங்கீட்டு. என்னைய வடிவாப்பாத்தார். பாத்திட்டுச் சொன்னார் 'படகு கவிழும் போல கிடக்கு. நீ என்னப் பாக்காத. சின்னப் பொடியன் தானே நீ. கொஞ்சநேரம் தாக்குப் பிடிக்கவேணும். எப்பிடியும் உதவி உனக்குக் கிடைக்கும்' இப்பிடி இன்னும் என்னென்னவோ சொல்லிக்கொண்டிருக்கேக்கயே பெரிய அலையொண்டு மலையளவு உயரத்துக்கு எழும்பிச்சுது. நான் முழிச்சுப்பாக்கேக்க திருகோணமலை ஆஸ்பத்திரியில கிடக்கிறன். ஐயாவக் கடல் கொண்டு போய்ட்டு." அவர் ஒரே மூச்சில் சொல்லி முடித்து அமைதியானார். இன்னும் ஏதோ சொல்வார் போல இருந்தது. கரன் அமைதி காத்தான்.

"எண்ட ஐயா மட்டுமில்ல மொத்தமா அம்பத்தொம்பது பேர் அண்டைக்கு செத்துப் போச்சினம். அதுல பதிமூண்டு பேரிண்ட உடம்புகள எடுத்தவங்கள். ஐயாட மாட்டுப்படேல்ல. மிச்சம் நாப்பதாறு பேரோட இந்தக்கடலுக்க தான் ஐயா எங்கயோ கிடக்கிறார்"

"உன்னப் பாத்து சின்னப்பொடியன் தானே எண்டு நான் சொல்லேக்க என்ர ஐயா என்னப்பாத்துக் கடசியாச் சொன்ன அந்த சொல்லுத்தாண்டா நினைப்பு வந்திச்சு"

இனி கதைப்பதற்கு ஏதுமில்லை என்பது போல் அவர் தலையை சிலிர்த்துக் கொண்டார். திடீரெனக் கவிந்த மௌனத்தை மற்றைய பெரியவர் விரும்பவில்லை.

"ஓமடா உன்ர கொப்பரோட அம்பத்தாறு பேர் செத்தவை. மிச்சப்பேர காப்பாத்திப்போட்டாங்கள். லோஞ்சின்ர மனேசர் சின்ராசா எண்டு நாங்கள் கூப்பிடுற நாகேந்திரராசா அண்ணயும் அண்டைக்குச் செத்துப்போனார் என்ன?" என்றவர் கடலில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிந்த கறுப்புப்புள்ளியொன்று மெல்ல மெல்ல பெரிதாகி வருவதை அவதானித்தார்.

"டேய் வாறாண்டா" என்று சொல்லும்போதே அவர் பதட்டமடையத் தொடங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படையின் அதிவேக ‘டோரா’ பீரங்கிப்படகொன்று அவர்களின் படகைப் பிளந்துவிடும் நோக்கோடு வருவதாகவே கரனுக்குப்பட்டது. என்றாலும் கிழவர்கள் இருவரும் அவனையும் இறுக்கிப் பிடித்தபடி மேல் தட்டில் தமது பிடிமானங்களை வலுப்படுத்திக் கொண்டார்கள்.

மேல்தட்டில் இருந்த வேறு சிலர் கீழ்தட்டை நோக்கி ஓட முயற்சித்தனர்.

“எல்லாரும் இறுக்கிப் பிடிச்சுக்கொள்ளுங்கோ.... இறுக்கிப் பிடிச்சுக்கொள்ளுங்கோ” என்று மேல்தட்டுக்குப் பொறுப்பாக இருந்த இளைஞன் கத்திய கத்தலில் ஓடும் எண்ணத்தை விட்டுவிட்டு அந்தந்த இடங்களிலேயே அவர்கள் தங்களை வலுப்படுத்திக் கொண்டார்கள்.

அந்த கடற்படையின் இராட்சதப்படகு பயணிகள் படகை அண்மிக்க முதலே தனது முகத்தை திருகோணமலைக் கடற்படைத்தளத்தை நோக்கித் திருப்புவதை மிகத் தெளிவாக கண்டான் கரன். “பிறகேன் பயப்பிடுறம்” என்ற அவனது சிந்தனைக்கு அடுத்த ஓரிரு நிமிடங்களில் வானளவு உயர்ந்த கடல் அலைகள் பதிலளித்தன.

கடற்படை படகின் வேகம் மற்றும் அதே வேகத்தில் அது திரும்பிய அசாதாரண விசை எல்லாம் சேர்ந்து கடலில் பெரிய அதிர்வை உண்டாக்கியது. அந்த அதிர்வால் உயர்ந்த அலைகள் பயணிகள் படகை கவிழ்த்து வீழ்த்த முயற்சிப்பது போல் உலாஞ்சல்களை ஏற்படுத்தியது. படகோட்டி படகின் வேகத்தை மிகையாகக் குறைத்து படகை தளம்பாது நிலையாக வைத்திருக்க முயன்றான். எனினும் அது சாத்தியப்படவில்லை.

“கவனம் டா ராசா”

புவனம் கண்ணுக்குள் வந்து போனாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

"ஸ்டாண்டீஸ்"

குமரன் மாஸ்டரின் குரல் ஓங்கி ஒலித்தது.

காலையில் இருந்து நடைபெற்ற கடுமையான பயிற்சியின் இடைவேளையில் அந்த மைதானம் முழுவதும் பொதுமக்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தார்கள். ஈழத்தமிழினத்தின் எதிர்காலத்தை மட்டுமல்ல நிகழ்காலத்தையும் தங்களின் தோள்களில் சுமக்கும் விதி அவர்களுடையது.

தங்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு கட்டாய பயிற்சிகளை வழங்குவதற்கு விடுதலைப்புலிகளின் தலைமை தீர்க்கமான முடிவொன்றை எடுத்திருந்தது.

இரு வாரங்களிற்கு முன் விடுதலைப்புலிகளின் மாவட்டச்சிறப்புத் தளபதியின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அக்கலந்துரையாடலில் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல், படைத்துறை, புலனாய்வு மற்றும் கடற்புலி பொறுப்பாளர்கள் சம்பூரில் கூடியிருந்தனர்.

அக வணக்கத்தின் பின்னர் சிறப்புத் தளபதி பேசத்தொடங்கினார்.

"நாங்கள் இண்டைக்கு சமதரப்பா ஸ்ரீலங்கா அரசாங்கத்தோட பேச்சுக்கள நடத்திக்கொண்டிருக்கிறம். உலக நாடுகள் எல்லாம் இந்தத் தீவில ரெண்டு சமதரப்புகள் இருக்கு எண்டு ஒத்துக்கொண்டு தான் பேச்சுக்கள ஆரம்பிச்சவே. இரண்டு தரப்பு எண்டு நான் சொல்லுறது ரெண்டு அரசு எண்டதைத்தான். எங்களையும் ஒரு அரசாக ஏற்றுக்கொண்ட அங்கீகாரம் தமிழர்கள் தங்கட நோக்கத்த அடையிறதுக்கு மிக முக்கியம். ஆனா இந்த அங்கீகாரத்த தொடர்ந்து தர உலகத்துக்கு விருப்பம் இல்ல. எங்கள சமாதான பேச்சுக்களோட முடிக்கத்தான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிச்சு ஒழிக்கத்தான் அவ பாக்கினம். ஆனா நாங்கள் சமதரப்பு என்ர அங்கீகாரத்தோடயே மேலும் சில விட்டுக் கொடுப்புக்களுக்கும் தயாராகியிருக்கிறம் எண்டத ஆரும் எதிர்பாக்கேல்ல. எங்கட சுயநிர்ணய உரிமையை நாங்கள் வலியுறுத்திக்கொண்டே விட்டுக்கொடுப்புகளுக்கு முன்வருவம் எண்டது அவைக்குப் பேரதிர்ச்சி. எங்களுக்கு வச்ச பொறிய எங்கட தலைவரிண்ட சாமர்த்தியம் இப்ப அவங்கட பக்கம் திருப்பீட்டு. இந்த பொறியில இருந்து அவை வெளிய வரோணும் எண்டதுக்காக சமாதானப் பேச்சுக்கள குழப்பிறத தவிர வேற வழியில்ல எண்டது அவையிட முடிவாகீட்டு''

மேசையில் இருந்த தண்ணீர் கோப்பையை முழுவதுமாக காலி செய்தார் தளபதி. அவருடைய மெய்பாதுகாவலர்களில் ஒருவன் அந்த கோப்பையை மீண்டும் தண்ணீரால் நிரப்பினான்.

“அமெரிக்கா எங்கள சமதரப்பா கருத ஏலா எண்டு இப்ப அறிவிச்சிருக்கு. அந்த அறிவிப்ப ‘வோசிங்டன் நிகழ்வு’ எண்ட பெயரால அழைக்கிறம். எங்கட சமதரப்பு அந்தஸ்த குழப்ப நிறைய நடவடிக்கைகள சர்வதேச நாடுகள் எடுக்குது. சண்டை பிடிச்சுக்கொண்டு இருக்கேக்க எங்கள ஒரு பயங்கரவாத அமைப்பு எண்டு ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்யேல்ல. ஆனா இப்ப, நாங்கள் பேச்சுவார்த்தைகள்ள ஈடுபட்டுக்கொண்டு இருக்கேக்க எங்களத் தடைசெய்ற நடவடிக்கைகள எடுக்கப்பாக்குது. பேச்சுவார்த்தையில நாங்கள் வச்ச பொறியில இருந்து அவை தப்பிறதுக்காக எங்கள போருக்குத்தள்ள நடவடிக்கைகள் தொடங்கீட்டு. போர் வரும். ஆனா இந்த முறை மக்களோட சேத்துத்தான் எங்கள அழிச்சு ஒழிக்கப் போறாங்கள். அது நடக்கும். ஏனென்டால் மக்கள அழிச்சால்தான் போராடுற வலுவையும் புலிகளையும் அழிக்க ஏலும் எண்டது சர்வதேசத்தின்ர கணக்கு. நாங்கள் போராட்ட வலுவக் காப்போத்தோணும் எண்டா எங்கட மக்களக் காப்பாத்தோணும். மக்களுக்கு தற்காப்பு பயிற்சிகள நாங்கள் குடுக்கோணும். மக்கள் இருந்தாதான் மண்ணும் காப்பாத்துப்படும். தேசியமும் வாழும். இதுதான் தலைவரிண்ட முடிவும்'' நின்று நிதானித்த அவர் அடுத்த விடயத்தைக் கட்டளையாகப் பிறப்பித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்கள திரட்டி அடிப்படைப் பயிற்சிகள குடுக்க உடனடியா ஆரம்பிக்கிறம். குமரன் நீதான் ட்ரெயினிங் பொறுப்பாளர். மக்கள திரட்டுறதும் அரசியல் விழிப்புணர்வூட்டுறதும் நாளைக்கே அரசியல் துறையால தொடங்கப்பட வேணும். அதோட போராளிகளாக இருந்து விலகி இப்ப சாதாரண வாழ்க்கையில இருக்கிற எல்லாப் போராளிகளையும் மீள எங்களோட இணைக்க வேணும். அவங்களில ஆருக்குத் தேவையோ அவங்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட வேணும். அதை உடனடியா புலனாய்வுத் துறை பொறுப்பெடுத்து ஒவ்வொரு விலகிய போராளியையும் தனித்தனிய அணுகி அவங்கள்ட விருப்பு வெறுப்புகள அறிஞ்சு அவங்கள் தொடர்பான அறிக்கைகள எனக்குத்தரோணும். விலகிய போராளிகள்தான் இனி எல்லைகளப் பாதுகாக்க துணைப்படையோட பணிசெய்ய வேண்டிய ஆக்கள். அவையளச் சண்டைக்கு அனுப்ப மாட்டம் எண்ட உத்தரவாதத்தையும் குடுங்கோ" அவரது கட்டளைகள் தொடர்ந்துகொண்டே இருந்தது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சர்வதேச மேற்பார்வையின் கீழ் நோர்வேயின் தூதுவர் எரிக் சொல்கெய்ம் தலைமையில் நடந்துகொண்டிருந்த வேளையிலேயே மக்களுக்கான பயிற்சிகள் திட்டமிடப்பட்டு நடைபெறத்தொடங்கின.

இனிவரும் போர் முந்தைய போர்களைப்போல் சாதாரணமாக இருக்காது என்பதை முன்னுணர்ந்த புலிகளின் தலைமை மக்களைப் பாதுகாக்க இரண்டு வகையான பயிற்சித் திட்டங்களை மக்களிடையே அறிமுகப்படுத்த தயாரானது.

முதலாவது வகைப் பயிற்சியினை அடிப்படைப் பயிற்சியாக அமைப்பது. அந்த வகைப் பயிற்சியில் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளத்தக்க வகையில் தயார்படுத்தப்படுவர். வகை வகையான பங்கர்களை அமைப்பது, விமானத்தாக்குதல்கள், கடற்படையினரால் கடலில் இருந்து ஏவப்படும் பீரங்கிக்குண்டுத்தாக்குதல், தரைப்படையினரின் பல்குழல் எறிகணைத்தாக்குதல்கள், ஆட்டிலறி செல் தாக்குதல்கள், மோட்டார் குண்டுகள், கையெறி குண்டுகள், ரைபிள்களிலிருந்து வீசப்படும் குண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறுவது என்பது பற்றிய பயிற்சிகளை அடிப்படைப் பயிற்சியாக மக்களுக்கு வழங்குவது.

இரண்டாவது வகைப் பயிற்சியானது முதற்கட்ட பயிற்சியில் சிறப்பாகச் செயற்படுபவர்களைத் தேர்ந்தெடுத்து தாக்குதல் பயிற்சிகளை வழங்குவதாகும். இவையே அந்த இருவகைத் திட்டமாக இருந்தது.

அதன்படி முதற்கட்ட பயிற்சிகளை நிறைவு செய்யும் தறுவாயிலிருந்த மக்கள் படையணியினை தனது அறிவிப்பால் ஒன்று கூட்டினார் குமரன்.

"ஸ்டாண்டடீஸ்"

இருபத்தினான்கு பயிற்சியாளர்களைக் கொண்ட தொகுதியை அவர்கள் பிளாட்டூன்கள் என வரையறுத்திருந்தார்கள். ஒவ்வொரு பிளாட்டூன்களும் ஏழு பேரைக்கொண்ட மூன்று அணிகளையும் அதற்கான தலைவர்களையும் கொண்டிருந்தது. ஒவ்வொரு பிளாட்டூனுக்கும் ஒரு தலைவர் இருந்தார். எல்லா பிளாட்டூன்களையும் ஒன்றிணைத்து அவற்றுக்குப் பொறுப்பாக ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் கொம்பனித் தலைவர் என அறியப்பட்டிருந்தார்.

குமரனின் அறிவிப்பை அடுத்து ஆங்காங்கே சிதறிக்கிடந்தவர்கள் தங்களது பிளாட்டூன்களுக்கு வந்து சேர்ந்தனர். பிளாட்டூன் தலைவர்கள் தங்களது அணிகளுக்கு முன்பாக நின்று அணிகள் ஒழுங்கான இடைவெளிகளில் சரியான நிரைகளில் நிற்பதை உறுதிப்படுத்தினர். தங்களுடைய ரைபிளின் அடிப்பகுதியை இடது காலுக்கு அருகில் நிலத்தில் வைத்து இடது கை நீளும் அளவிற்கு றைபிளின் முனையை சரித்து இரண்டு கால்களையும் விரித்து இலகுவாக நிற்கின்ற மக்களால் அந்த மைதானம் நிரம்பியிருந்தது.

அந்த மைதானத்தில் புலிக்கொடி பறந்துகொண்டிருக்கும் புள்ளியில் இருந்து பார்த்தால் அணிகளைக் கூம்பகமாக காணக்கிடைத்தது. கொம்பனித்தலைவர் முதலாவதாகவும் அதன் அடுத்த நிரையில் எட்டு பிளாட்டூன்களின் தலைவர்களும் அவர்களுக்கு அடுத்த நிரையில் வரிசைக்கு நான்கு பேர்களைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட ஆறு வரிசைகளில் பயிற்சிபெறும் மக்களும் அணிவகுத்திருந்தனர். அந்த அணியின் பின்னால் ஒவ்வொரு பிளாட்டூனுக்கும் பயிற்சி வழங்கும் ஆசிரியர்களாக மூன்று பேர் ஒரு வரிசையாக நின்றனர்.

கொம்பனித்தலைவரும் பயிற்சி ஆசிரியர்களும் மட்டுமே புலிகள். ஏனைய பிளாட்டூன் தலைவர்களும் பிரிவுத்தலைவர்களும் மக்கள் அணியிலிருந்தே தெரிவு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டிருந்தனர்.

கொடிக்கம்பத்தின் உச்சத்தில் காற்றின் தாலாட்டில் கம்பீரமாக பறந்துகொண்டிருந்தது புலிக்கொடி. அந்தக் கொடித்தம்பத்திற்கு அருகில் கட்டப்பட்டிருந்த சற்று உயர்வான மேடையில் குமரன் வரிப்புலிச் சீருடையில் நின்று கொண்டிருந்தார். வார்த்தையில் வடிக்க முடியாத பெருமிதம் அவருக்குள் புகுந்திருந்தது. 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்' என்று முழங்கிய தியாகி திலீபனின் கண்கள் இந்த அணிவகுப்பைப் பார்க்க வேண்டும் என்றே அவர் விரும்பினார். இந்த அணிவகுப்பை ஆத்மார்த்தமாக தியாகி திலீபனுக்கே குமரன் சமர்ப்பணஞ் செய்தார்.

அந்த மைதானத்தின் அமைதியை மீண்டும் கிழித்துப்போட்டது குமரனின் கம்பீரக் குரல்.

"அட்டேன்சன்!"

இடதுகையினை நீட்டி முனையை சரித்துப் பிடித்திருந்த தமது ரைபிள்களை கைகளை மடித்து உள்ளே இழுத்து வலதுகாலை உயர்த்தி இடதுகாலுக்கு அருகாக நிலத்தில் அடித்து மிடுக்குடன் மக்கள் படை குமரனின் அடுத்த கட்டளைக்குத் தயாராகி நின்றது.

ரவிக்குமாரின் கைகளில் இருந்து ரைபிள் வழுகியதை அருகில் நின்ற ஜீவன் அவதானித்தான். மெதுவான குரலில் "டேய்" என்றான். அந்தப் பிளாட்டூனில் ரவிக்குமாருக்கு அருகிலேயே வலதுபுறமாக நண்பன் ஜீவன் இருந்தான். ரவிக்குமார் தனது ரைபிளைத் தவற விட்டதற்காக அண்மையில் பெற்ற தண்டனையின் ஞாபகங்கள் ஜீவனுக்குள் வந்து போனதாலேயே தன்னையறியாமலே ஒலியெழுப்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

“மச்சான் எல்லாருக்கும் கட்டாயப் பயிற்சி வருதாமடா”

கட்டபறிச்சான் இறால் பாலத்தில் கால்களைத் தண்ணீருக்குள் நீந்தவிட்டு சின்னத் தூண்டிலை எறிந்துவிட்டு எதுவும் மாட்டுமா? என்று பார்த்துக்கொண்டிருந்த ரவிக்குமாருக்கு ஜீவன் சொன்னது கேட்டதாகவே தெரியவில்லை.

“டேய்... நாங்கள் கட்டாயம் பயிற்சி எடுக்கோணுமாமோ”

“நே... பயிற்சியாமோ... எங்களுக்கோ...அப்ப நாங்களும் இனி இயக்கமோ?”

“இயக்கமில்ல, ஆனா இயக்கத்துக்கு உதவியா.. நாங்களும் செயல்படோணும்”

அவர்களுக்கு சற்றுத் தள்ளியிருந்த குந்தில் இருந்து சுருட்டைப் புகைத்தபடியே தனது இறால் கூடுகளை நோட்டம் விட்டுக்கொண்டிருந்த ராசாவிற்கு இவர்களின் கதை தெளிவாகக் கேட்டது.

“மக்காள், இயக்கத்துக்கெண்டோ, இல்லாட்டி தங்களுக்கு உதவிக்கெண்டோ பயிற்சி கொடுக்க பொடியள் நினைக்கேல்ல... உங்களக் காப்பாத்தோணும் எண்டுதான் அவங்கள் நினைக்கிறாங்கள். பெடியள் சண்டயில நிக்கிறதா அல்லது உங்கள பாக்கிறதா? ...ஙா... சொல்லுங்கோவன்? உங்கள நீங்களே பாதுகாக்கிற முயற்சிதான் இந்தப் பயிற்சி... பயிற்சிய எடுத்தியலெண்டால் உங்களயும் உங்கட சுற்றங்களயும் நீங்களே பாதுகாக்கலாம்...பயிற்சி எடுங்கோ.. நல்லம்.”

“ஓ அது தான் பயிற்சியாமோ”

“அண்ண நீங்களும் முந்திப் பயிற்சி எடுத்தனீங்களோ?...”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ராசாவை கிளறினான் ஜெகன். அவனது இரையில் மீனொன்று மாட்டியது.

சுருட்டை ஆழமாக உள்ளுக்குள் இழுத்தார் ராசா. அவர் பேசத் தயாராகிறார் என்பதை அவரது செய்கைகள் உணர்த்தின. நுரையீரலை நிரப்பிய புகை மெல்ல மெல்ல சுவாசக்காற்றுடன் வெளியேறியது. எஞ்சிய புகையை ஊதி வெளியேற்றிய பின் அவர் ஆரம்பித்தார்.

"நாங்கள் பொடியளிட்ட ரெயினிங் எடுக்க முதலே துவக்கால சுடத்தெரிஞ்ச ஆக்கள். கட்டுத் துவக்கோட காட்டுக்க திரிஞ்சவங்கள். கொல்லுறது, கொல்லவாற மிருகங்களிட்ட இருந்து எங்களக் காப்பாத்துறது, உருமறைக்கிறது, குறிபாத்து சுடுறது எல்லாமே பரம்பர பரம்பரயா தெரிஞ்சவங்கள். ஆனா பெடியளோட சேந்தாப்பிறகுதான் உதுண்ட நுட்பங்களத் தெரிஞ்சு கொண்டம்."

"ஓகோண்டாராம்.... நீங்களும் அவயோட சேந்த ஆள்தானப்ப" சற்றுக் கேலியாக ஒலித்தான் ஜெகன்.

"உசிரயே இனத்துக்காக குடுக்கிறவங்கள். அவங்களோட சேராம இருக்கேலுமே?" ராசா சற்று அமைதியானார்.

"எண்பத்தி மூண்டாமாண்டு கடசி காலப்பகுதியில நாங்களும் பெடியளோட சேந்து காவலுக்கு நிண்டனாங்கள். அப்ப எங்கட ரீமிண்ட பெரென்ன எண்டு தெரியுமோ? மம்பட்டியான் குறூப். கிராமங்களப் பாதுகாக்குறதுதான் எங்கட வேல. காம்பில இருந்து ஆமி வெளிக்கிட்டானெண்டா பெடியள் தந்திருந்த எஸ்எல்ஆர் ரைபிள், த்ரிஓத்ரி, சொட்கன் இதுகள வச்சு அடிச்சம் எண்டால் ஓட்டமெடுப்பாங்கள். இண்டைக்கு திருகோணமலையையும் மட்டக்களப்பையும் இணைக்கிற ஏ-15 வீதியில, மூண்டாங்கட்டை மலைக்கு பக்கத்தில பெரிய சென்றிபொய்ண்ட் போட்டு நிண்ட ஆக்கள் நாங்கள். அது ஒரு பொற்காலமடா. பிறகு பெடியள் எங்கள தங்கட நிர்வாகத்துக்க கொண்டந்திட்டாங்கள். மம்பட்டியான் குறூப்ப கிராமியப்படை எண்டு மாத்தினாங்கள். கொஞ்சம் கட்டுப்பாடுகளையும் கொண்டந்தாங்கள். ஏனெண்டா நாங்கள் கட்டுப்பாடு இல்லாத ஆக்கள். ரைபிள் கையில இருந்தபடியால கொஞ்சம் குளப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுட்டம். அது பிழைச்சுப் போட்டுது. அந்த கிராமியப்படை இப்ப துணைப்படையாகீட்டு" சுருட்டை மேலும் ஒரு இழு இழுத்து தனது கதைக்கு சுருதி சேர்த்தார் ராசா.... தொடர்ந்தார்.

"மம்பட்டியான் குறுப் எண்ட பெயர் எப்பிடி வந்தது தெரியுமோ. அது ஒரு தனிக்கதையடா. ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து மூண்டு ஜூலை மாசம் எங்கட சனத்த இனப்படுகொலை செய்ய தெற்கில தொடங்கிச்சு சிங்களம். அந்த தகவலக் கேட்டுக்கொண்டிருந்த எங்களுக்கு கையும் ஓடேல காலும் ஓடேல்ல. கதறுற எங்கட சனத்தக் காப்பாத்தோணும் எண்ட உணர்வுதான். ஆனா எப்பிடி எண்டு தெரியேல்ல. அதே நேரம் திருகோணமலையிலயும் தொடங்குவானுகள் என்ட தகவல் மெதுவா பரவ ஆரம்பிச்சுது. உடனே எங்கட இடியன், வெடியன், சொட்கன் எல்லாத்தோடயும் நாங்கள் தயாராகீட்டம். எங்கட ஊருக்க வரட்டும் பாப்பம். ஒருத்தனயும் விடக்கூடா எண்டு கடும் கொதிப்பில நிக்கிறம். பழிவாங்கீனாத்தான் வன்மம் அடங்கும் போலக்கிடந்துது. எங்கட குறூப்புக்கு ஒரு பெயர வச்சாத்தான் சனத்திட்ட சொல்லவும் எங்கள அடையாளப்படுத்தவும் முடியும் எண்டு சுப்பையா அத்தான் சொன்னார். அவர்தான் எங்கட குறூப் லீடர். பெயரப்பத்தி எல்லாரும் யோசிக்கிறம். அந்த நேரத்தில மலையூர் மம்பட்டியான் எண்ட படமொண்டு எல்லாத் தியேட்டரிலயும் பிரபலமா ஓடிக்கொண்டிருந்துது. மலையூர் எண்ட கிராமத்த காப்பாத்த மம்பட்டியான் எண்ட அந்த கதாநாயகன் ஆயுதந்தூக்கிற கததான் அது. மம்பட்டியானா வலுதிறமா நடிச்சிருந்தவர் ஆரண்டா....." அவர் நிறுத்தினார். நடிகரின் பெயர் அவருக்கு மறந்து போயிருந்தது. ஒரு சிறந்த நடிகன் தன்னையல்ல தான் தாங்குகின்ற பாத்திரத்தையே மக்களின் மனங்களில் விட்டுச்செல்வான் என்பதற்கு அந்தப் பாத்திரமேற்ற நடிகர் உதாரணமாகியிருந்தான்.

"ஆரண்டா....அவன்தாண்டா..... என்ன...என்ன பெயர்...ச்... மகனும் நடிகன்.... அவன்தான்...." நடிகரின் பெயர் விடயத்தில் ராசா அண்ணை திக்கித் திணறுவது ஜெகனை பொறுமையிழக்கச் செய்தது.

"சரி அவரிண்ட பெயர விட்டுட்டு சொல்லுங்கோவன்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இல்ல அது பிழ.. மம்பட்டியான் பாத்திரத்தை மனசுக்குள்ள நிறுத்தினவன்ட பெயரச் சொல்லாம இந்தக்கதயத் தொடரவே கூடா” அவர் தீர்மானமாக இருந்தார். அது அவருடைய அறம். கிராமங்களில் தனிமனிதர்கள் தாங்குகின்ற அறம்தான் அந்தக் கிராமத்தையே காத்து நிற்கின்றது.

“ஹா.... தியாகராஜன்... ஷா..மறப்பனா நான் அவன... அவன் தான் மம்பட்டியான். சுப்பையா அத்தான்ர தம்பி மூர்த்திதான் மம்பட்டியான் குறூப் எண்டு பெயர வப்பம் எண்டான்.... அந்தப் பெயரக் கேட்டோன்ன எங்களுக்கெல்லாம் சும்மா புதுரெத்தம் பாஞ்சுது ... உண்மையாடா பொடியளே... அந்தப் படத்தில அவன் கிராமத்துக்கா உயிரயும் குடுக்கிறான். எங்கள நாங்கள் பெரிய தியாகிகளா உணர அந்தப் பெயர்தான் காரணமா இருந்திச்சு” அதற்கு மேல் அவர் தொடரவில்லை. மம்பட்டியான்களில் தானும் ஒருவராக வாழ்ந்த அந்த உலகத்திற்குள் அவர் ஆழ்ந்துபோனார்.

கடலில் இருந்து உள்ளே வரும் நீர் கட்டப்பறிச்சான் பாலத்தைத் தாண்டி இடப்புறமாகப் பாய்ந்து சந்தோசபுரம் கிராமம் வரை செல்லும் வகையில் அழகிய அந்த நீரேரியை இயற்கை என்னும் கைதேர்ந்த வரைஞன் அமைத்திருந்தான். இருபுறமும் பச்சைப் பசேலெனத் தழைத்திருக்கும் மரங்கள் அசாத்திய அழகை அந்த நீரேரிக்கு வழங்கியிருந்தன. இறால் வளர்வதற்கு மிக உவப்பான சீதோஸ்ண நிலையை அந்த நீரேரி கொண்டிருந்தது. கடலில் நீர் குறையும்போது தண்ணீர் கடலை நோக்கிப் பாயும். மாறாக கடலில் நீர் அதிகரிக்கும் போது கடல்நீர் உள்நோக்கிப் பாயும். இதனால் காலையில் ஒரு திசை நோக்கியும் மாலையில் மறுதிசை நோக்கியும் நீர் ஓடிக்கொண்டிருக்கும். கட்டபறிச்சானை மேலும் பல கிராமங்களுடன் இணைக்கும் ஒரு தாழ்வான பாலமே இறால்பாலம். மழை கொட்டும் நாட்களிலிலோ, கடல் சீற்றம் கொள்ளும் போதிலோ தண்ணீர் பாலத்தை மேவிப்பாயும். போக்குவரத்து தடைப்படும். மற்றைய நாட்களில் பாலத்தின் மட்டத்துடனேயே நீர் அங்குமிங்கும் அலைவதை பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

ராசா அண்ணை சொன்ன விடயம் ஜீவனுக்கு பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளை உருவாக்கியிருந்தது. நவீன மம்பட்டியான்களாக தானும் உருவாகிவிடலாம் என்பது அவனுக்கு மெல்லிய சிரிப்பைத் தந்தது. "பயிற்சி எடுத்தா எங்களுக்கும் ஆயுதங்களக் கையாள முடியும். சுட்டுப் பாக்கலாம். ஆமி வந்தாலும் வெடி வைக்கலாம். எங்களக் கண்டே உவனுகள் ஓடறதப் பாத்துச் சிரிக்கலாம். எவ்வளவு கஸ்டப்படுத்துறாங்கள். நினைச்சமாரிப் பிடிக்கிறதும் சுடுறதும் எங்கயாவது கொண்டுபோய் வெட்டித் தாட்டுப்போட்டு எங்களுக்கு தெரியா எண்டு சவடாலா சொல்றதும்... பயிற்சிக்குப் பிறகு உவனுகள சுடலாம் ... ஆனா அவங்கள் சுட்டு நாங்கள் செத்துப்போனா?...?" உடலை ஒருமுறை சிலிர்க்கச் செய்தது அந்த சாவு எண்ணம்.

இந்த நாட்களில் சித்திராவின் அழகான கண்கள் தன்னை கள்ளமாகப் பார்ப்பதை ஜெகன் உணரத் தொடங்கியிருந்தான். எந்த அகராதியும் உள்ளடக்காத, எந்தக் கவிஞனும் வடிக்காத, எந்த மொழியிலும் மொழிபெயர்க்கப்படாத உணர்வை அந்தக் கள்ளப்பார்வை அவனுக்குள் தூவிச் சென்றது.

"இண்டைக்கு ஸ்கூலுக்குப் போறீங்களோ?" ... "ஓம்"

அவளது கேள்விக்கு நிறைய சொற்களால் பதில் சொல்ல வேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஆனால் ஒரு சொல்லுக்கு அப்பால் எதையும் தர அவனது மூளை தயாராகவில்லை. அவன் அவஸ்தைப்பட்டான்.

அவளோ நிலையில்லாமல் தவிக்கும் அவனது கண்களின் அலைவை இரசிக்கத்தொடங்கினாள். அந்த இரசிப்பு அவளையறியாமல் அவளின் உடலில் துள்ளலைத் தூண்டியது. அவனின் அவஸ்தைகள் அவளின் குறும்பை மேலும் உந்தித்தள்ளியது. அவனது அவஸ்தையை அவள் இன்னும் அதிகமாக நுகர ஆசைப்பட்டாள். பதிலளிப்பதை தாமதப்படுத்தினாள்.

"ஏதாவது சொல்லு" என்பதாக ஏங்கும் அவனது பார்வை கெஞ்சத்தொடங்கியது. அவள் எதையும் சட்டை செய்யாமல் அவனின் அவஸ்தைகளை நுகர்ந்துகொண்டிருந்தாள்.

வெப்பம் தாளாமல் அந்த யானை குளத்தினுள் இறங்கி தண்ணீரைப் பன்னீராய் தன் உடலெங்கும் விசிறித் தூவிக் கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏன் கேட்டனீங்கள்?” அவனது குரல் அவனுக்கே அன்னியப்பட்டிருந்தது.

“என்னது?”

“இல்ல... ஏன் ஸ்கூலுக்குப் போறீங்களா எண்டு கேட்டனீங்கள்”

“ஓ அதா?” இப்போதும் அவள் பதில் சொல்லத் தயாராக இல்லை. இன்னும் இன்னும் அவனது அலைவுகள் அவளுக்குத் தேவையாயிருந்தது.

யானை குளத்தினுள் உடலை முழுவதும் அமிழ்த்தி மெல்லத் தன்னுடலில் மேலேறிவரும் குளிரை சொல்லெணா இன்பத்துடன் நுகர்ந்தது.

“அப்பாவும் அம்மாவும் வீட்ட இல்லை. நான் தான் வீட்ட நிக்கவேணும்”

சொன்னாள். சொல்லிமுடித்தால் அவன் போய்விடுவான். ஆனாலும் சொல்லித்தீரவேண்டும். சொன்னாள்.

“நான் லீவு எண்டு டீச்சருக்கு கடிதம் எழுதியிருக்கிறன். குடுத்துவிடுங்கோ.. இந்தாங்கோ”

நான்காக மடித்த காகிதத்தை அவள் அவனுக்கு நீட்டினாள். பட்டைகள் உரிந்த வாழைத்தண்டு அவனுக்கு நினைவு வந்தது. அவளின் கையினைப் பார்த்தபடி அவன் அசைவற்றுப் போயிருந்தான்.

“வாங்குங்களன்” அவள் சிணுங்கினாள். அவன் தன் கைகளை இரசிப்பது அவளுக்குள் நெருப்பை எரித்தது.

“ஓம் குடுக்கிறன்” என்று சடாரென அக்கடிதத்தைப் பறித்தெடுத்துக்கொண்டு அவன் தன் சைக்கிளை மிதித்து சீற்றில் ஏறி அமர்ந்தான்.

அவன் சிட்டெனப் பறந்து மறைவதை சித்திரா மெல்லிய சிரிப்புடன் வீட்டுப் படலையில் சாய்ந்தபடி பார்த்துக்கொண்டிருந்தாள். தன்னுடைய கையின் அழகு அவன் பார்வையால் பட்டை தீட்டப்பட்டிருப்பதாய் உணர்ந்தாள். தன்னை மறந்து தனது கைகளை நீண்டநேரமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். “அவ்வளவு அழகா என் கைகள்?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குள் புரண்டோடிய அந்த உணர்வுக்குப் பெயர் அறியாது அவன் அவஸ்தைப்பட்டான். அந்த உணர்வுக்கு பெயர் எதுவாக இருந்தாலும் அது அவனுக்கு மிக விருப்பமானதும் எப்போதும் நாவினுள் ருசியைத் தருவதாகவுமே இருந்தது. அது இந்த வாழ்வின் மீதொரு பற்றை அவனுக்குள் விதைக்கத் தொடங்கியது.

மேல்பொக்கற்றில் வைக்கப்பட்டிருந்த அந்த நான்காக மடிக்கப்பட்ட காகிதத்தின் மீது அவனது இருதயம் வந்தமர்ந்து துடிப்பதை உணர்ந்தான். சுவாசிப்பது துன்பமாக இருந்தது. மெல்லியதொரு புன்னகையைத்தவிர அவனுக்கு எதுவும் பதிலாகவில்லை.

அன்றைய நாளில் காலைப் பிரார்த்தனை ஏன் அவ்வளவு நீள்கின்றது? அதிபரின் அறிவூட்டும் பேச்சு ஏன் அர்த்தமிழந்து போனது? ஏன் வகுப்பாசிரியை பிந்தி வகுப்பறைக்கு வருகின்றார்? எல்லாமே அவனை சினங்கொள்ளச் செய்தன.

"குட்மோஒஒஒஒஒனிங் டீச்சர்" இந்த ராகம் எந்தப் பாடசாலையிலும் ஒன்றேதான்.

"குட்மோனிங் பிள்ளைகள்.. இருங்கோ"

வருகைப்பதிவேட்டைப் பூரணப்படுத்த ஆசிரியை முனைந்தார். வரிசை ஒழுங்கில் மாணவர்களின் பெயர் உச்சரிக்கப்பட தொடங்கியது.

"பிரசன் டீச்சர், வந்தேன் டீச்சர், உள்ளேன் டீச்சர், ஓம் டீச்சர்"

தமக்குப் பிடித்த பாணியில் மாணவர்களின் வருகையை பதிவு செய்ய ராஜஜானகி ஆசிரியர் அனுமதித்திருந்தார். அவர் விடுமுறையில் இருக்கும் நேரத்தில் பதிலீடாக வரும் ஆசிரியர்களில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் வந்தால் மட்டுமே எல்லோரும் கட்டாயம் "பிரசன்ட் டீச்சர்" என்று சொல்ல வேண்டும் என கட்டளையிடுவார். அவரை ஒரு ராட்சசனாகவே அந்த வகுப்பு மாணவர்கள் பார்ப்பதுண்டு. அதற்கு சில காரணங்களும் உண்டு. அவர் படிப்பிக்கும் பாடம் ஆங்கிலம், கையில் வைத்திருக்கும் பிரம்பு, பிரசன்ட் டீச்சர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லச் சொல்லி வற்புறுத்துவது அல்லது அதற்குத் தண்டனை தருவது, நடந்து வரும்போது 'டொக்...டொக்' என சத்தமெழுப்பும் அவரது சப்பாத்து இவையெல்லாம் சேர்ந்து அவரை மாணவர்களுக்கு அன்னியப்படுத்தியிருந்தது. அவருக்கு 'டொக்க்' என்ற பட்டப்பெயரை அவர்கள் சூட்டியிருந்தார்கள்.

ஜெகன் தன்னுடைய பெயரை மறந்து சித்திராவின் பெயர் எப்போது கூப்பிடப்படும் என காத்துக்கொண்டிருந்தான். ஆனால் திடீரென எழுந்த வாசுகி ஆசிரியையிடம் ஓடிச்சென்றாள்.

"டீச்சர் சித்திரா இண்டைக்கு லீவாம்... வீட்ட ஆரும் இல்லையாம்.. தான்தானாம் நிக்கோணுமாம்... இந்தாங்கோ கடிதம் தந்தவள்"

ஜீவனுக்கு தூக்கிவாரிப்போட்டது. "அப்ப என்னட்ட தந்த கடிதம்..."

அவனது இதயம் சேட்டுப் பொக்கற்றால் வெளியே வந்து விழுந்துவிடும் அளவிற்குப் பெருத்தது. உடனடியாகவே அந்தக் கடிதத்தை பிரித்து பார்க்கும் ஆசை பூதாகரமானது. ஆனால் அருகில் இருந்த ரவிக்குமாருக்கோ அல்லது செல்வனுக்கோ கடிதமொன்று தன்னுடைய பொக்கற்றில் இருப்பது தெரியக்கூடாது. வருகை பதிவேட்டை பூரணப்படுத்திய ஆசிரியை ராஜஜானகி தமிழ்ப்பாடத்தின் பன்னிரெண்டாம் தலைப்பை வாசித்து விளக்கங்கொடுக்கத் தொடங்கியிருந்தார்.

தமிழில் முதுநிலைக்கல்வியைக் கற்றிருந்த ராஜஜானகி தமிழ்ப்பாடத்தை மிக இலாவகமாக கற்றுத்தரும் பண்பைப் பெற்றிருந்தார். பாடம் தொடங்கியதும் புத்தகத்தை இடது கையில் பிடித்தபடி ஆசிரியருக்குரிய பெரிய மேசையின் முன்பாக வந்து அம் மேசையின் நடுவில் சற்றுச் சாய்ந்தபடி வலது கையினால் தமிழின் அட்சரங்களைப் பிரித்துப் போடும்போது அவரின் அழகிய முகம் முழுவதும் தமிழால் பெருமை பொங்கிப்பரவும். மாணவர்கள் மந்தைகளாகவும் அவரோ குழலூதும் கண்ணனாகவும் ஒரு பிரமையை உருவாக்கும் வகுப்பறையாக அது காணப்பட்டது. அவரது வகுப்பின் நாற்பத்தைந்து நிமிடங்கள் கழிவதே தெரியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் இலயித்துப் போயிருந்தார்கள். ஜீவனால் மட்டும் அந்த இலாகிரியில் மூழ்கவே முடியவில்லை. கடிதம் அவனுக்கு பெரும் சுமையாக இருந்தது. ஒரு முடிவுக்கு வந்தான். சடாரென்று அந்தக் கடிதத்தை புத்தகத்துக்குள் புகுத்திக்கொண்டான். நான்காக மடிந்திருந்த அந்த வெள்ளைக் காகிதம் அவ்வாறே பவ்வியமாக அந்தப் புத்தகத்தில் ஒளிந்துகொண்டது. புத்தகத்தின் ஒரு பக்கத்தைத் திருப்பும் நேரம் வந்தபோது ஜீவன் கடிதத்தை இரண்டாக மடிந்த நிலைக்கு கொண்டு வந்தான். ஆசிரியை புத்தகத்தின் அடுத்த பக்கத்தை திருப்பும் வரைக்கும் காத்திருக்க வேண்டும். நேரம் ஒரு நத்தையாக அவனுக்கு முன் நகர்ந்து கொண்டிருந்தது. அவனால் தாங்கவே முடியவில்லை. அழுதுவிடுவான் போல் இருந்தான். ஆசிரியை அடுத்த பக்கத்தைத் திருப்பினார். இரண்டாக விரிந்திருந்த அக்காகிதம் கிடையாக புத்தகத்தின் இரண்டு பக்கங்களும் பரவி முழுவதுமாகத் திறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

போர் என்பது வெல்வதற்கானது அல்ல, கொல்வதற்கானது என்பதே ஸ்ரீலங்காவில் எழுதப்படாத சட்டமாகிப் போயிருந்தது. ஒரு இனம் மற்றைய இனத்தைக் கொல்வதற்கான போராகவே ஸ்ரீலங்காவின் போர் அரச பாதுகாப்பு தரப்பை உருமாற்றியிருந்தது. விடுதலைக்காக போராடப் புறப்பட்ட தமிழர்களை அடக்கி சட்டத்தை அமலாக்கப் புறப்பட்ட சிங்கள அரச படைகள் காலப்போக்கில் சட்டத்திற்கு அப்பாற்பட்டியங்கும் படையாகத் தம்மை தகவமைத்துக் கொண்டன. கிளர்ச்சிகள் நடைபெறும்போது சட்டதிட்டங்களை அனுசரித்துச் செல்வது சாத்தியமானதல்லவே. இருக்கின்ற சட்டதிட்டங்களை உடைத்தெறிந்து புதிய சட்டங்களை, தம்மையாளும் சட்டங்களைத் தாமே உருவாக்குவதற்கு முயற்சிப்பதுதானே புரட்சிகளின் அடிப்படை. புரட்சிகளை அடக்க நினைப்பவர்கள் முன்னைய சட்டங்களை அமலாக்கத்தான் போராடுவார்கள். ஆனால் ஈழத்தில் தமக்கான புதிய சட்டத்தை உருவாக்கத்திரண்ட தமிழ் மக்களை அடக்க முனைந்த அரச படைகள் காட்டுமிராண்டித்தனமான கொலை, சித்திரவதைச் சட்டங்களை தமக்காக வரித்துக்கொண்டன. நீதி செத்துப்போனதொரு தேசமாக தமிழ்த்தேசம் இருந்தது.

இந்தப் போர் தன்னையும் உள்வாங்கிக் கொள்ளும் என்று ஒருபோதும் ஜீவன் நினைத்திருந்ததில்லை. ஆனால் இன்று பயிற்சியெடுக்க வேண்டும் என்ற நிலை வந்தவுடன் சாவு பற்றிய சிந்தனை அவனுக்குள் உருவாகியிருந்தது. கட்டாயப்பயிற்சி தொடர்பாக ராசா அண்ணை சொன்ன விடயங்களை அவனது புத்தி முழுவதுமாக ஏற்றுக்கொள்ள மறுத்தது. புத்தி இரண்டாகி அறிவு என்றும் மனம் என்றும் தம்முள்ளே சண்டையிட்டுக்கொண்ட வித்தையை அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தான். பயிற்சியை அறிவு ஏற்றுக்கொண்டாலும் மனம் சித்திராவுடன் வாழும் அந்த தெய்வீகக்காலத்தின் கனவுகளை முன்நிறுத்தி பயிற்சியை ஏற்றுக்கொள்ள மறுத்தது. அருகில் இருந்த ரவிக்குமாரை அவன் மிகப்பொறாமையோடு பார்த்தான். ரவிக்குமாரின் கவனம் ஜீவனின் மீதோ அல்லது ராசா அண்ணாவின் மீதோ அல்ல. தன் தூண்டிலிலேயே இருந்தது. ஏனெனில் முன்னர் பல தடவைகள் அவனது தூண்டிலை ஒன்றில் நீரோட்டமோ அல்லது இரையில் மாட்டும் மீனோ இழுத்துச்சென்றிருந்தது.

அவனுடைய நண்பர்கள் அவனைக் கிண்டல் செய்ய வேண்டுமாயின் ஒரு தூண்டிலையே ஒழுங்காப் பிடிக்கத் தெரியாதவனுக்கு... என்று தான் ஆரம்பிப்பார்கள். அதனை மறுபடியும் நிகழவிடக்கூடாது என்ற உறுதி ரவிகுமாருக்குள் முகிழ்த்திருந்தது. தோல்வியடைந்த அவனுடைய நாட்களை அழித்துவிட ஒரு வெற்றி தேவைப்பட்டது. அந்த தூண்டிலின் முனையில் அவனது அன்றைய வாழ்வு ஆடிக்கொண்டிருந்ததாக ஜீவனுக்குப்பட்டது.

ராசா அண்ணை சுருட்டைப் புகைத்து கடைசிக்கந்துவரை உள்ளிழுத்தார். தனது தலையாய கடமை முடிந்துவிட்டது போல தன்னைத்தானே ஆசுவாசப்படுத்திக் கொண்டார். மாலை கரைந்து இருள் வரும் நேரத்தில் இறால் கூடுகளில் நெருப்பு மூட்டவேண்டியிருந்தது. அக் கூடுகளில் கட்டப்பட்டிருக்கும் பந்தங்களை கொளுத்துவதற்காக அவர் கரையோரமாக நடந்து தண்ணீருக்குள் இறங்கவேண்டியிருந்தது. அவர் நகர்ந்தார்.

“மச்சான் பயிற்சிக்குப் போகாமல் ஒளிச்சு ஓடேலாதோ?”

எப்போது ராசா அண்ணை நகர்வார் எனக் காத்துக்கொண்டிருந்த ஜீவன் கிசுகிசுப்பாக இந்தக் கேள்வியை ரவிக்குமாரை நோக்கி எறிந்தான். ரவிக்குமார் சலனமின்றி இருந்தான்.

ரவிக்குமாரிடம் இருந்து பதிலேதும் கிடைக்காததால் ‘டேய்’ எனக் கத்தியவாறே தனக்கு இடதுபுறமாக இருந்த ரவிக்குமாரின் தோள் மீது ஓங்கி அடித்தான் ஜீவன். எதிர்பாராத நேரத்தில் தன்மீது விழுந்த அடி ரவிக்குமாரை நிலைகுலையச் செய்தது. அவன் திடுக்கிட தூண்டில் கைநழுவி நீரோடைக்குள் வீழ்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் அவர்கள் பயிற்சிக் களத்தில் இருந்தார்கள். சித்திராவும், வாசுகியும் அவர்களது பாடசாலைப் பட்டாளம் முழுவதும் பயிற்சியணிகளில் இருந்தார்கள். ஜீவனும் மிக சந்தோசமாக பயிற்சியில் கலந்துகொண்டான். ரவிக்குமாருக்கு நேற்றைய மாலையில் இழந்த தூண்டில் அடிக்கடி ஞாபகத்திற்கு வந்துகொண்டேயிருந்தது.

பெண்கள் பயிற்சியில் ஈடுபடும்போது கடினமான பயிற்சிகளைச் செய்யும் உடல்நிலை அற்ற நாட்களில் அவர்கள் பயிற்களைச் செய்யத்தேவையில்லை. ஆனால் பயிற்சித்திடலுக்கு கட்டாயம் வரவேண்டும். பயிற்சிகளைப் பார்க்க வேண்டும். அணிகள் நிரையாக நிற்கும்போது அணிகளுக்குள் நிற்க வேண்டும்.

பயிற்சியின் இரண்டாம் நாளன்று அவர்களுக்கான சுடுகலன்கள் வந்திருப்பதாகவும் அதனைச் சென்று பெற்றுவருமாறும் அறிவுறுத்தல் தரப்பட்டது.

"மச்சான் கறள் பிடிக்காத வடிவான ரைபிளா தேடி எடுக்கோணும்" ஜீவன் மெதுவாக ரவிக்குமாருக்கு கிசுகிசுத்தான்.

"ஓம்டா அணி அணியாத்தான் விடுறாங்கள்.. எங்கட அணிக்கு செல்வா தானே பொறுப்பு. அவனிட்ட கதைச்சு நல்ல ரைபிளாத் தேடி எடுத்திரோணும்"

வலது கையில் ரைபிளைப் பிடித்து தோளில் வைத்துக்கொண்டு சித்திராவின் முன் கம்பீரமாக நடந்து வருவது ஜீவனின் கண்ணுக்குள் மலர்ந்தது.

அன்றைய இரவில் அவனொரு கவிதையை எழுதுவதாக தனக்குள் முடிவெடுத்துக் கொண்டான். 'இரும்புக் குழாய்குள் துளிர்விடும் செவ்விரோசா செடிகள்' என அக்கவிதையின் வரிகள் அவனுள் முகிழ்கத் தொடங்கியன.

இருபத்தி நான்கு அணிகளைக் கொண்ட எட்டு பிளாட்டூன்களும் இலக்கக் குறியீடுகளையே தமது பொது அடையாளமாகக் கொண்டிருந்தன. முதலாம் இலக்க பிளாட்டூனில் உள்ள மூன்று அணிகளும் முறையே ஒன்று-ஒன்று, ஒன்று–இரண்டு, ஒன்று–மூன்று என இலக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீட்டைக் கொண்டிருந்தன. அவ்வாறே ஐந்து- இரண்டு என்பது ஐந்தாவது பிளாட்டூனின் இரண்டாவது அணியைச் சேர்ந்த ஏழு பேரையும் குறித்து நின்றது.

"பிளாட்டூன் ஒன்று... பிளாட்டூன் ஒன்று... போய் ஆயுதங்களை எடுத்து வாருங்கள்"

கவிதையில் மூழ்கிப் போன ஜெகனைத் தட்டியெழுப்பியது அந்த அழைப்பு. ஜெகனின் அணி செல்வாவின் தலைமையில் நிரையாக வேகமாக நடந்து பாடசாலையின் கட்டடத்துக்குள் நுழைந்தது. ரைபிள்கள் அங்கு கொட்டிக் கிடந்தன. அந்த அணி ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தது.

"என்ன மச்சான்... ஒரே மரக்குத்தியாக் கிடக்கு"

அங்க நின்ற புலி உறுப்பினர் ஒருவர் புன்னகைத்தார்.

"இது தான் உங்கட ரைபிள்.... ரைபிள் சம்பந்தமாப் படிக்காமல் உங்களிட்ட உண்மையான ரைபிளத் தந்தா நீங்கள் என்ன செய்வியல் எண்டு ஆர் கண்டது? அடிப்படைப் பயிற்சி முடியும் வரைக்கும் உங்கட ரைபிள் இதுதான்".

சுமார் நான்கு கிலோ கிராம் நிறையும் மூன்றரை அடி உயரமும் கொண்ட உருளைக் கட்டைகள் முதற்கட்டப் பயிற்சிக்கான 'ரைபிள்' களாக விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டன. அவை இலக்கமிடப்பட்டிருந்தன. அந்த மர ரைபிள்களை மிகக் கவனமாக வைத்திருக்கவும் பயிற்சியளிக்கப்பட்டது.

ஜெகனின் கனவு 'பொசுக்' கென்று போய் விட்டது. ரைபிளைத் தூக்கிக்கொண்டு தலையைத் தொங்கப் போட்டபடி 'பிளாட்டூன் ஒன்று' பயிற்சித் திடலுக்குள் நுழைந்தது. ஜெகனைப் போலவே ஒவ்வொருவருக்கும் ரைபிள் சம்பந்தமான கனவுகள் இருந்ததையும் அவை பொசுங்கிப் போனதையும் அப்போது உணரக் கூடியதாக இருந்தது.

பயிற்சித்திடலில் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்த ஏனைய பிளாட்டூன்களில் ரைபிள் தொடர்பான ஆவல் கிசுகிசுப்பாகவும் சிரிப்பாகவும் மாறியிருந்தது. அனைத்து பிளாட்டூன்களும் தங்களது ரைபிள்களைப் பெற்று வந்தபின் குமரன் மிகத் தெளிவாக ஒரு விடயத்தை அவர்களுக்கு கட்டளையாக்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் கையில் வச்சிருக்கிறதுதான் உங்கட ரைபிள். உங்கட ரைபிளுக்குரிய மரியாதைய நீங்கள் எப்பவும் தரோணும். ரைபிள உயிரிலும் மேலாக பாதுகாக்க வேணும். என்னச் சுட்டுட்டு என்ர ரைபிளக் கொண்டு போ எண்டது தான் வீரச்சாவடஞ்ச எங்கட முதலாவது மாவீரன் இட்ட கட்டளை. இன்று வரைக்கும் அந்தக்கட்டளை வலுவில இருக்கு. ரைபிள மரியாதைக் குறைவா பாவிக்கிற பயிற்சியாளர்களுக்கு என்னென்ன பணிஸ்மென்ட் இருக்கு எண்டத கொம்பனி லீடர்கள் சொல்லித் தருவினம்"

பயிற்சியின் இரண்டாவது வார ஓய்வு நேரத்தில் ரவிக்குமார் தனது ரைபிளை மரத்தில் சாத்தி வைத்துவிட்டு சலம் கழிக்கச் சென்றுவிட்டான். பயிற்சி நேரம் முழுவதும் ரைபிளைத் தம்முடன் வைத்திருக்க வேண்டும் என்பது கட்டளை. மரத்தில் சாத்தப்பட்டு இருந்த ரைபிளை அணித்தலைவன் கொம்பனி லீடரிடம் கையளித்தான். சலம் கழித்துவிட்டு வந்த ரவிக்குமாருக்கு ஆப்பு இறுகியது. ரைபிளைத் தலைக்கு மேலே தூக்கியபடி மூன்று தடவைகள் அந்த மைதானத்தைச் சுற்றி அவன் ஓட வேண்டியிருந்தது. அடிப்படைப் பயிற்சிகள் நிறைவு பெறவிருக்கின்ற இந்த மூன்றாவது வாரத்தில் அணிக்கூட்டலின் போது ரவிக்குமார் தனது ரைபிளைக் கைவிடப் பார்த்தது ஜெகனை அவ்வாறு கத்த வைத்தது.

"இந்த முறை அஞ்சு ரவுண்ட் ஓடப்போறாய்... ஒழுங்கா ரைபிள பிடி... ஒரு தூண்டிலையே..." என ஆரம்பித்த ஜெகன் தனது வாய்க்கு பூட்டுப் போட்டுக்கொண்டான். தான் திடீரென அடிக்காது விட்டிருந்தால் அன்று இறால்பாலத்தில் ரவிக்குமார் வீசிய தூண்டிலில் இரையைப் பிடித்திருப்பான் என்ற உண்மை அவனைத் தாக்கியிருந்தது. அதற்குப் பிராயச்சித்தமாய் இனி ஒருபோதும் அப்படிச் சொல்லி ரவிக்குமாரைக் கேலி செய்வதில்லை என அவன் நினைத்திருந்தான்.

அடிப்படைப்பயிற்சியின் நிறைவு நாள் ஒருவாறு வந்து சேர்ந்தது. மாலை மூன்று மணிக்குப் பயிற்சி நிறைவு அணிக்கூட்டல் நடைபெற்றது.

"ஏறுது பார் கொடி... ஏறுது பார்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தேசிய கீதம் இசைக்கப்பட புலிக்கொடி அந்த கம்பத்தில் காற்றின் திசையை எதிர்த்து பறந்துகொண்டிருந்தது. ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தும் போது அந்த மைதானம் மிக அமைதியாக தனது வணக்கத்தைச் செலுத்தியது. குமரன் ஒலிவாங்கியின் முன் பிரசன்னமானார்.

"எங்களது வேண்டுகோளையேற்று உடனடியாக அணி திரண்டு இந்த மண்ணையும் மக்களையும் காப்பாற்ற முன்வந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் புலிகளின் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அடிப்படைப்பயிற்சியானது முதற்கண் உங்களைப் பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்டது. தன்னைப் பாதுகாக்கத் தெரிந்தவனே தன் மக்களையும் பாதுகாப்பான் என்பது எமது தலைவரின் திடமான சிந்தனை.

அந்த வகையில் நீங்கள் இன்று உங்களைப் பாதுகாக்கத்தக்க பயிற்சிகளையும் உங்களை அழித்தொழிக்கும் நோக்கோடு ஏவப்படும் குண்டுகளை வகைப்படுத்தி அவை எவ்வாறான சேதங்களை விளைவிக்கும் என்பதையும் அச்சேதங்களில் இருந்து நீங்கள் உங்களையும் மற்றவர்களையும் எப்படிப் பாதுகாக்கலாம் என்பதையும் கற்றுக்கொண்டிருக்கின்றீர்கள். எதிரியானவன் தமிழ் மக்களை அழித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு மீண்டும் போரைத் தொடங்க முயற்சித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்தப் பயிற்சியின் மூலம் நீங்கள் அவனது எண்ணத்தை நிறைவேறவிடாது தடுக்கும் முதல் வெற்றியைப் பெற்றிருக்கின்றீர்கள். இனி அடுத்த கட்டப் பயிற்சியான ஆயுதப்பயிற்சிக்கு இந்த எட்டுப் பிளாட்டூன்களில் இருந்து திருமணமாகாத பதினெட்டு வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்ட ஆண்களும் பெண்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளீர்கள். அவர்கள் யாரென்பதை உரிய பிளாட்டூன் தலைவர்கள் உங்களுக்கு அறியத் தந்திருப்பார்கள். மேலும் இங்கு அடிப்படைப் பயிற்சிக்கு உள்வாங்கப்பட்ட உயர்தரம் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களை கல்வி கற்று முடியும்வரை மேலதிகப் பயிற்சிகளுக்கு இணைக்கப் போவதில்லை. மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தாயகம் மலரட்டும். புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" குமரனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு நிறைவுபெற்று சில நிமிடங்கள் வரை அந்த மைதானம் அமைதியாக இருந்தது. கொடி தன்னைச் சுருக்க விடாமல் காற்றில் போராடிக் கொண்டே நிமிர்ந்து பறந்து கொண்டிருந்தது.

அந்தப் பிளாட்டூன்களில் ஒன்றில் கரன் இருந்தான். அடிப்படைப் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட அவன் ஏழு பேர்களைக்கொண்ட அணி ஒன்றின் தலைவனாக அடுத்தகட்டப் பயிற்சிக்குத் தெரிவாகியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

"கவனம் டா ராசா"

தாய் எப்போதும் தன் குஞ்சுகள் தனக்குள்ளேயே இருக்க வேண்டும் என்றே விரும்புவாள். தன் கண்பார்வைக்குள் தன் பிள்ளைகள் எப்போதும் வாழ வேண்டும் என்றே ஆசைப்படுவாள். தாய்மை என்பதன் சாரங்களில் அதுவும் ஒன்று. தந்தை அப்படியல்ல. இந்த உலகின் ஒவ்வொரு அலைக்கழித்தலையும் தன் பிள்ளைகளை அனுபவிக்க விட்டுவிட்டு தான் அப்பிள்ளைகளுக்கு பின்பலமாக இருப்பதை விரும்பும் அன்பு. கரனுக்கு அப்பா இல்லை. அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். விடுதலையை நேசிப்பதாகச் சொல்லிக்கொண்ட ஒருவனால் ஏந்தப்பட்டிருந்த சுடுகலன் ஒன்றிலிருந்துதான் அவருக்கான தோட்டா உமிழப்பட்டது.

அது இந்திய ராணுவம் அமைதி காக்கும் படை என்ற பெயரில் வடக்குக் கிழக்கில் நிலைகொண்டிருந்த காலம். விடுதலைப்புலிகளின் தலைமையினை அழித்தொழித்துவிடும் திட்டத்தில் போரைத் தொடங்கிய இந்திய இராணுவம் தனது நோக்கத்தை எய்துவது அவ்வளவு இலகுவானதல்ல என்பதை போரைத் தொடங்கிய சில நாட்களிலேயே உணரத் தொடங்கியிருந்தது. 'நான்கு தொடக்கம் ஏழு நாட்களுக்குள் புலிகளை அழித்துவிடுவேன்' என இந்திய ஜெனரல் சுந்தர்ஜி அப்போதைய இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு தெரிவித்திருந்ததாக இந்திய அமைதிப்படையின் முதலாவது கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் கர்கிரத்சிங் வெளிப்படுத்தியதைப் போல அந்தப் போர் இருக்கவில்லை. எனவே முதலில் புலிகளின் ஆளணி வளத்தை அழிக்க இந்தியப்படைகள் போர் புரியத் தொடங்கியிருந்தன. நகரங்களில் தொடங்கிய அந்தப் போர் கிராமங்களை நோக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ந்து பின் காடுகளுக்குள் நிகழ்ந்துகொண்டிருந்தது. அந்தப் போரினை விடுதலைப்புலிகள் காடுகளுக்குள் பதுங்கியிருந்தபடி நடத்திக் கொண்டிருந்தனர். வன்னிக்காடுகளுக்குள் போர் மிகத் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஏனைய மாவட்டங்களிலும் விடுதலைப்புலிகள் சிறு சிறு குழுக்களாக சுதந்திரமாக செயற்படவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர். தொடர்பாடல்கள் மிக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்தக் காலத்தில்தான் கரனின் தந்தையை தனது தனிப்பட்ட நலன்களுக்காக விடுதலைப்புலி உறுப்பினன் ஒருவன் சுட்டுக் கொன்றான்.

கட்டபறிச்சானில் இருந்து கரனின் தந்தை வெளியேறி திருகோணமலை நகரில் சிலகாலம் வசித்த பின் சல்லி கிராமத்தில் அவர் வாழ்ந்து வந்தார். சல்லியில் இருந்து நகரத்திற்கு கருவாடு கட்டிச் சென்று விற்றுத்திரும்பும் பிழைப்பு அவருடையது. அவ்வாறு செல்லும் போதும் வரும் போதும் சல்லி கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையே அமைந்திருந்த இராணுவ முகாமின் சோதனைகளை நாளாந்தம் கடக்க வேண்டியவராக இருந்தார். அங்கிருக்கும் இராணுவத்தினர் அவ்வாறு சென்று வருபவர்களைக்கொண்டு தமக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்வது வழமையாக இருந்தது. பொருட்களை வாங்கித் தராதவர்களைத் தாக்குவதும் தடுத்து வைத்து மணித்தியாலக்கணக்கில் காத்திருக்க வைப்பதும் பொதுவான நடைமுறை. கரனின் தகப்பனாரும் முதலில் பொருட்களை வாங்கிக் கொடுப்பதை மறுத்து அனுபவித்த துன்பம் சொல்லி மாளாது. அதனைத் தவிர்க்க இராணுவத்திற்குத் தேவையான பொருட்களை நகரத்தில் இருந்து வாங்கிக் கொடுப்பதை செய்யத்தொடங்கியிருந்தார். அந்த தகவலை பெற்றுக்கொண்ட விடுதலைப்புலிகளின் குழுவொன்று அவர் உயிர் ஒறுப்புத் தண்டனைக்குரியவர் என அறிக்கையிட்டனர். தலைமைக்கும் அவர்களுக்கும் இருந்த தொடர்பாடல் மட்டுப்பாடுகளை சாதகமாகப் பயன்படுத்தி அத்தண்டனையை நிறைவேற்றி முடித்தனர். எனினும் இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகளால் மீளாய்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தப்பட்டன. அதன் போது கரனின் தகப்பனின் தண்டனை தனிப்பட்ட காரணங்களுக்கானது என்பது தெளிவாகியது. அதனைக் கொலைக்குற்றமாக புலிகள் பதிவு செய்தனர். அதன்பேரில் நடைபெற்ற உள்ளக விசாரணைகளின் பின்னர் அக்கொலைக்கு உடந்தையான இருவரும் உடனடியாக அமைப்பில் இருந்து நீக்கப்பட்டதுடன் அவர்களுக்கு உயிர் ஒறுப்புத்தண்டனை தீர்ப்பாக்கப்பட்டது. எனினும் இவ்விசாரணைகள் நடைபெற்ற காலப்பகுதியில் உயிர் ஒறுப்புத் தண்டனை வழங்கப்பட்ட ஒருவர் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். அவரை மாவீரர் பட்டியலில் இருந்து நீக்கிய விடுதலைப்புலிகள் மற்றவருக்கு உயிர் ஒறுப்புத் தண்டனையை நிறைவேற்றினர்.

கரன் நகரத்திற்கு கல்வி கற்க புறப்பட்டபோது புவனம் சொன்ன வார்த்தையான "கவனம் டா ராசா" விற்குள் கனத்த அர்த்தங்கள் பொதிந்திருந்தன. அவள் தனது கணவனையும் நகரத்திற்கு அனுப்பியதாலேயே இழந்திருந்ததாக அடிக்கடி நினைத்துக் கொள்வாள்.

இயற்கை அழகினால் சூழப்பட்டிருந்த திருகோணமலை நகரின் சிறு துறைமுகத்தில் அந்தப் படகு தரித்து நின்றது. பாரிய கயிறுகளால் மூன்று இடங்களில் குறித்த படகு துறைமுகத்தளத்தில் அமைக்கப்பட்டிருந்த சீமெந்து உருளைகளில் கட்டப்பட்டிருந்தது. சிறிய துறைமுகங்களில் படகுகளை நிறுத்தக்கூடிய ஆழமுள்ள கடற்பகுதிகளில் கடலினுள் துருத்திக்கொண்டு நீள் சதுர வடிவில் சீமெந்துக் கட்டமைப்பும் அக்கட்டமைப்பின் மேல்தளத்தின் கரைப்பகுதிகளில் சீரான இடைவெளிகளில் சீமெந்து உருளைகளும் உருவாக்கப்பட்டிருக்கும். அந்த சீமெந்து உருளைகளில் படகு கனமான கயிறால் கட்டப்பட்டிருக்கும். அவ்வாறு கட்டப்பட்டிருக்கும் படகை அலை வந்து அலைக்கழிக்கும். அப்போது சீமெந்துத் தளத்தில் படகு மோதும். மோதுவதால் படகு சேதமடையாமல் இருப்பதற்காக கட்டப்பட்டிருக்கும் படகுக்கும் சீமெந்துத் தளத்திற்கும் இடையில் டயர்கள் படகில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும்.

தான் மூதூரில் இருந்து வந்த படகு துறைமுகத்தில் தரித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று அலையின் அலைக்கழிவால் திமிறுவதைப் பார்க்கும் போது கடிவாளமிடப்பட்ட குதிரையொன்று தடையை உடைத்து ஓடத் திமிறுவதைப் போலவே கரனுக்குப் பட்டது. 'கரையில் கட்டப்பட்டிருக்கும் படகு கடலுக்கு அன்னியம் தான்... கடலில் இருந்தால் தான் படகுக்கு அழகு' அவன் அந்த அழகை இரசிக்கத் தொடங்கினான்.

"என்ன தம்பி.. வந்திறங்கீன உடனேயே வாயப்பாக்கிறீர்... ஆவெண்டு பாத்தா பிடிச்சு உள்ளுக்கப் போட்டிருவாங்கள். பையத் தூக்கிக்கொண்டு வாரும் எனக்கு முன்னுக்கு...." பெரியவரின் குரல் மனோரதங்களைத் துண்டித்தது.

பயணிகள் அனைவரும் வரிசைப்படுத்தப்பட்டனர். இராணுவம், கடற்படை, காவல்துறை என பலர் ஆயுதங்களுடன் அந்தச் சிறிய துறைமுகத்தில் பயணிகளைப் அச்சமூட்டி வரவேற்கக் காத்திருந்தனர். எல்லோருடைய முகங்களிலும் வன்மம். அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்ட பின்பு பைகளுக்கான சோதனைகள் முடிவடைந்து பெண்களும் ஆண்களும் தனிவரிசைகளில் 'தடவல்' நிலையங்களுக்குள் ஒவ்வொருவராக அனுமதிக்கப்பட்டனர்.

"செருப்பக் கழட்டு" ... கழட்டினான் "பையக் கீழ வை" ... வைத்தான். "கைய உயத்து" ... உயர்த்தினான் ..."கால விரி" ... விரித்தான்.

அவ்வளவு நேரம் கொடூரத்தொனியில் உத்தரவிட்டவனின் கண்களில் ஒரு வக்கிரம் மெதுவாக கவிழ்வதை கரன் அவதானித்தான். அந்த வக்கிரம் பிடித்தவனின் தடவல்கள் ஆரம்பமாகின. தோள்பட்டையில் தொடங்கிய அவை சாதாரண தடவல்களாக கரனுக்குத் தெரியவில்லை. கழுத்துப்பக்கங்களை மெதுவாகத் தடவி நெஞ்சு முலைகளைக் கிள்ளியது அவனது கைகள். சேட்டை உயர்த்தி கரனது இடுப்பை மெதுவாகத் தடவிய பின் கீழிறங்கிய வலது கை அவனுடைய ஆண்குறிப்பிரதேசத்தில் எதையோ செய்யத் தொடங்கியது. இடது கை குண்டியை முன்னுக்கு தள்ளி வலது கைக்கு உதவியது. கரனுக்குள் சின நெருப்பு சுடராடியது.

'கவனம்டா ராசா... இந்த வார்த்தையின் அர்த்தம் தாங்கிக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதா?' அவனுக்கு தாயைக் கட்டிக்கொண்டு அழ வேண்டும் போல இருந்தது.

பெரியதொரு இருமல் அந்த தடவல் நிலையத்துக்கு வெளியே ஒலித்தது. அது பெரியவர்தான். தடவியவன் சுதாகரித்தான்.

"செருப்பின்ட பின்பக்கத்தத் தூக்கிக் காட்டு"... தடவியவன் செருப்பின் பின்பக்கத்தைத் பார்த்தபோது மலம் தின்ன முகர்ந்துபார்க்கும் நாயின் முகம் கரனுக்குத் தெரிந்தது.

"சரி போ" .... "அடுத்தது வா"

மிக வேகமாக பெரியவர் உள்ளே நுழைந்தார். கரனை வலது கையால் வெளியே தள்ளினார். அவர் தள்ளிய தள்ளில் பையைத் தூக்க குனிந்த கரன் தடவல் நிலையத்தின் மறுபுறமாகத் தள்ளாடி விழுந்தான். அவனை யாரும் கவனிப்பதாக இல்லை. அவன் எழும்பி பையைத் தூக்கித் தோளில் போட்டவாறு மெதுவாக நகரத் தொடங்க பெரியவர் அவனுக்கு பின்னே வந்தார்.

"என்ன? உங்கள மட்டும் டக்கெண்டு விட்டுட்டான்"

பெரியவர் சிரித்தார்.

"செத்த கிளிக்கு சிங்காரம் செய்வானே அந்த வேசமவன்" அவரின் பதிலில் கரன் திக்குண்டான்.

"அவன் உனக்கு என்ன செய்வான் எண்டு எனக்குத் தெரியும். அதான் உன்னை எனக்கு முன்னுக்கு வரச்சொன்னான். இதப்போல பல விசயங்கள நீ அனுபவிப்பாய் இந்த நகரத்தில. ஆனா பயப்பிடாத.. இது எங்கட மண்" முகத்தில் எந்தவிதமான மாற்றத்தையுங் காட்டாமல் உறுதியாக அவரின் குரல் மெதுவாக அவனது காதுகளுக்குள் கேட்டது.

துறைமுக கெடுபிடிகளைத் தாண்டி பிரதான தெருவுக்கு அவர்கள் இருவரும் வந்தார்கள். இடதுபுறமிருந்து வந்த அந்தப் பிரதான வீதி அவனுக்கு முன்னே தெரிந்த சுற்றுவட்டத்தில் வலதுபுறமாகவும் நேர் முன்பாகவும் நீண்டு சென்றது.

மறுபக்கமாக மக்கள் நிரையாக துறைமுகத்துக்குள் பிரவேசிக்க காத்திருந்தார்கள். வெளியே செல்பவர்கள் உள்ளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்பவர்களைப் பார்க்க முடியும். ஆனால் அருகில் செல்ல முடியாது. அவர்கள் திருகோணமலையில் இருந்து மூதூருக்குச் செல்பவர்கள். அவ்வாறு செல்ல நின்றவர்களுள் கரனுக்குப் பின்னே வந்த பெரியவர் ஒருவனைக் கண்டுவிட்டார்.

"வந்திட்டம் எண்டு வீட்ட சொல்லி விடு" அவர் சத்தமாக அந்த தெரிந்தவனுக்குக் கேட்கக்கூடியதாக சொன்னார். அவரும் பெரியவரின் வயதை ஒத்தவராகத் தெரிந்தார். "ஓமோம்"... அதற்கு மேல் அங்கு நேரமில்லை.

பெரியவரும் கரனும் தம்முன்னே சென்ற தெருவுக்குச் சென்று அங்கிருந்து தத்தமது பாதைகளில் பயணிக்கத் தொடங்கினர்.

"ஐயா.. நான் போய்ட்டு வாறன்" கரனை அவர் ஆதுரமாக பார்த்து சிரித்தார். "போய்ட்டு வா மேனே.. மண்ணுக்குப் பணி செய்யடா"

"ஐயா மன்னிக்கோணும்... உங்கட பெயர் என்ன எண்டு சொல்லேல்லயே?"

"பெயர் ஒண்டும் முக்கியமில்ல.. என்ன நீ எப்பிடி ஞாபகம் வச்சிருக்கப்போறியோ அதுக்கொரு பெயர வச்சு ஞாபகம் வச்சிரு.. அடுத்த முறை சந்திக்கேக்குள்ள உனக்கு என்ர பெயர் தெரியவரும்.. வாறன் நான்" அதற்கு மேல் அவர் தாமதிக்கவில்லை. அவன் அவரைப் பார்த்துக்கொண்டிருக்க அவர் சில பத்தடிகள் முன்னே நடந்து பிரதேசச்செயலகத்துக்கு முன்புறமாக பிரதான சாலையில் இருந்து இடதுபுறமாகத் திருப்பும் தெருவுக்குள் 'விறுக் விறுக்கென' நடந்து மறைந்தார். 'நான் இவரச் சந்திப்பனோ?' என்ற கேள்வியுடன் அவன் 'அன்பில்லத்தை' நோக்கி நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

கேவுளியாமுனை வெளிச்சவீட்டில் இருந்து விரியும் இந்துமாகடலின் எல்லைகளைக் கண்களால் காணமுடியாது. அடியும் முடியும் தேடிய வரலாற்றைக் கொண்ட தமிழினத்தின் கண்கள் அந்த வெளிச்சவீட்டிலும் நிலைகொண்டிருக்கலாம். அவ்வெளிச்சவீட்டிலிருந்து இடதுபுறமாகப் பார்வையை வீசினால் வங்காள விரிகுடாவும் அதிலிருந்து பிரிந்து திருகோணமலையின் இயற்கைத் துறைமுகத்தை உருவாக்கும் கொட்டியாரக்குடாவும் கண்களுக்குள் அடங்காது திமிறும். அக் கொட்டியாரக்குடாவின் அழகை முழுவதும் தன்னகத்தே ஆக்கிரமிக்கும் சம்பூர் பிரதேசம் திருகோணமலை இயற்கைத்துறைமுகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க ஆங்கிலேயரால் கட்டப்பட்ட கடற்படைத்தளத்திற்கு நேரெதிரான அமைவிற்குள் இருந்தது. அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த சம்பூரணமான ஊர் என்பதால் அந்த ஊர் சம்பூர் என மருவியதாக ஒரு கதை உண்டு. கடல், மலை, குளங்கள் என மக்கள் தன்னிறைவுடன் வாழும் அந்தப் பிரதேசம் அதன் கேந்திர நிலையினால் முக்கியத்துவம் பெற்றிருந்தது. திருகோணமலை இயற்கைத்துறைமுகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பும் எந்தவொரு தரப்பும் அக்கட்டுப்பாட்டை தொடர்ந்து பேணவேண்டுமாக இருந்தால் சம்பூரையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதே சம்பூரின் கேந்திர முக்கியத்துவம் சொல்லும் செய்தியாகும்.

சம்பூரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தரப்பிற்கு மிகச்சவாலான விடயமாக விளங்குவது அதற்கிருக்கும் பரந்த கடற்படுக்கையே. வங்காள விரிகுடாவினதும் கொட்டியாரக்குடாவினதும் ஆழ்கடல் பரப்பானது சம்பூருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக அருகாமையில் முடிவடைந்து சிறிய படகுகளில் மிக வேகமாக வந்திறங்க கூடிய பல இடங்கள் சம்பூர் மற்றும் அதனையண்டிய கடற்படுக்கைகளில் இருந்தன. அவை இயற்கையானவை. எனவே பாரிய தாக்குதல் படகுகளில் வரும் எவரும் உடனடியாக சிறிய படகுகளில் ஏறி சம்பூர் கரைகளில் வந்திறங்கிவிடும் அபாயமே சம்பூரைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தரப்பு எதிர்கொள்ளும் சவால் மிக்கதொரு விடயமாக இருந்தது. சம்பூரின் கட்டுப்பாட்டைப் பலப்படுத்தி வைத்திருக்க வேண்டிய தேவை அப்போது விடுதலைப்புலிகளுக்கு இருந்தது. அவர்களுடைய பிரதான தலைமை தாங்கும் அலுவலகங்கள் மற்றும் அதனோடு இணைந்த அனைத்து நிர்வாக பிரிவுகளினதும் பிரதான மையங்கள் சம்பூரிலேயே உருவாக்கப்பட்டிருந்தன.

சம்பூரில்தான் அமலனும் வாழ்ந்து வந்தான். அமலன் சிவபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். சிவபுரம், கங்குவேலி, மேன்காமம், ஆதிஅம்மன்கேணி போன்ற கிராமங்கள் ஏ-15 பிரதான வீதியில் திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணிக்கும் போது வலப்புறமாக அமைந்த கிராமங்களாகும். இவ்வாறு பயணிக்கும் போது இடதுபுறமாகவே விடுதலைப்புலிகளின் முழுக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் உள்ளன. வலதுபுறமாக உள்ள தமிழ்க்கிராமங்கள் விடுதலைப்புலிகள் வந்து செல்லும் இடங்களாகவும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் இராணுவம் முகாம்களில் இருந்தபடி நிர்வகிக்கும் பிரதேசங்களாகவும் இருந்தன. இவ்வாறு நிர்வகிக்கும் பிரதேசங்களை நோக்கி திடீரென இராணுவம் தமது முகாம்களில் இருந்து வந்து போகும். அவ்வாறு வரும்போது இக்கிராமங்களில் உள்ள விடுதலைப்புலிகள் காடுகளுக்குள் அடைக்கலமாகிவிடுவர். முன்னேறிவரும் இராணுவம் மனிதவேட்டையை சில வேளைகளில் நிகழ்த்தும். சந்தேகத்திடமானவர்களை கைது செய்வது, கைதுக்குப் பயந்து ஓடுபவர்களை சுட்டுக் கொல்வது என தாண்டவம் ஆடிய பின் மாலை மங்குமுன் முகாம்களுக்குத் திரும்பிச் செல்லும். இராணுவத்தை எக்குத்தப்பாக விடுதலைப்புலிகள் எதிர்கொண்டால் துப்பாக்கிச்சூடுகள் ஆரம்பிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காப்புக்காக விடுதலைப்புலிகள் சுட்டுக்கொண்டே காடுகளை நோக்கி நகர்ந்து விடுவர். அவ்வாறு நிகழும் நாள் தமிழ் மக்களுக்கு மற்றொரு மரண தண்டனை நாளாகவே இருக்கும். விடுதலைப் புலிகள் காட்டுக்குள் பதுங்கிவிட்டாலும் இராணுவம் சுடுவதை நிறுத்தாது. உயிர்ப்பயம் காரணமாக மிக மூர்க்கமாக கண்மூடித்தனமாக சுட்டுக்கொண்டே கிராமங்களை நோக்கி இராணுவம் நகரத்தொடங்கும். கிராமத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு வேறு வழியே கிடையாது. அவர்களும் தமது உயிர்களைப் பாதுகாக்க பாதுகாப்பான இடங்களை, காடுகளை நோக்கி ஓடத் தொடங்கிவிடுவர். ஓடக்கூடிய வயதுள்ள அனைவரும் சிதறியோடுவர். ஓட முடியாத குழந்தைகளை தூக்கிக்கொண்டு தாயோ தகப்பனோ அயலவனோ அண்ணணோ எங்காவது ஓடி ஒளிவர். வயதானவர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. அவர்களால் வேகமாக நகரமுடியாததால் கிராமங்களிலேயே கைவிடப்படுவர்.

இராணுவம் முகாம்களுக்குத் திரும்பும் வரை கிராமங்கள் மயானங்களாகவே இருக்கும். துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டு கொண்டேயிருக்கும். அவ்வாறான நாட்களின் வலி சொற்களுக்கு அப்பாற்பட்டவை. யார் உயிருடன் இருக்கின்றார்கள் என்பது யாருக்கும் தெரியாது. தீர்க்கப்படும் ஒவ்வொரு வேட்டும் தனது கணவனையோ மனைவியையோ பிள்ளையையோ அயலவனையோ தாயையோ தந்தையையோ நண்பனையோ கொலை செய்திருக்கும் என்று எண்ணியெண்ணியே மக்கள் ஒளிந்திருப்பர். இரவாகும் போது அவர்கள் கிராமத்திற்கு மீளத்தொடங்குவர். ஒவ்வொரு குடும்பமும் தமக்குரித்தானவர்களை உயிருடன் காணும்போது எழும் உவகையை மீறி அழுகுரல்கள் அந்தக் கிராமங்களின் ஆன்மாவை உலுப்பும். தெருவில், வீட்டினுள், கிணற்றினுள் அல்லது முற்றத்தில் உயிர் பிரிந்த உடலொன்று கிடக்கும். வெட்டியெறியப்பட்டிருக்கலாம் அல்லது சுட்டு சல்லடையாக்கப்பட்டிருக்கலாம்.

மீண்டும் இராணுவம் முன்னேறி வரும்வரை அடுத்த தடவை யாரை இழக்கப் போகின்றோம் என்பது தெரியாமல் கிராமங்கள் மெல்லத் தங்களின் இயல்பு வாழ்வுக்குத் திரும்பும். இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வுதான் இவ்வாறான கிராமங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான கிராமமொன்றான சிவபுரத்தில் பிறந்த அமலன் தனது பதினைந்து வயதிலேயே விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்டான். தன்னுடைய பத்து வயதில் இருந்தே வாழ்வின் நிரந்தரத் தன்மையை அமலன் இழந்திருந்தான். பல தடவை உயிரை பாதுகாக்க காடுகளுக்குள் ஓடியிருந்தான். உணவின்றி வாடும் வயிறு அவனுக்கு பெரும் பிரச்சனையாக மாறியிருந்தது. தங்கையும் தாயும் வயிறு நிறையச் சாப்பிட வேண்டுமென்றால் அவன் சாப்பாட்டைக் குறைக்க வேண்டியிருந்தது. உயிர்ப்பயமும் வயிற்றுப்பசியும் அவனுக்கு வேறு எந்தத் தெரிவையும் விட்டு வைக்கவில்லை. அவனுடைய நண்பர்கள் எடுத்த முடிவையே அவனும் தனது பதினைந்தாவது வயதில் எடுத்தான். ஏன் போராட வேண்டும்? என்ற தெளிவற்ற வயதில் அவன் பயிற்சிகளுக்கு உள்வாங்கப்பட்டான். எனினும் அதன் பின்னரே அவன் போராட்டத் தெளிவைக் கற்றுக்கொண்டான்.

முன்னாள் போராளியான அமலன் தனது வீட்டில் இருந்து தூண்டிலைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தான். சம்பூரில் இருந்த அவனது வீடு ஒரு தன்னார்வத்தொண்டு நிறுவனத்தினால் சமாதான காலப்பகுதியில் கட்டிக்கொடுக்கப்பட்டிருந்தது. சுற்றிவர சதுரமாக சீமெந்தினால் கட்டப்பட்ட அரைக்குந்து. அதற்கு மேல் 'அமோனா' தகரங்களால் கூரை வரை உயர்த்தப்பட்டு பின் 'சீட்' போடப்பட்ட கூரைகளைக் கொண்ட தற்காலிகமான வீடு. உள்ளே அறையாகவும் சமையலறையாகவும் வேறுபிரித்தறிய ஒரு தகரப்பிரிப்பு. மரங்களால் சூழப்பட்டிருந்த காணியில் உருவாக்கப்பட்ட அவ் வீட்டில் அமலனுக்கு வாழ்வு ஒன்றும் அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. மனைவியும் மகளும் அவனுக்கு அந்த அழகிய வாழ்வை பரிசளித்திருந்தனர். அவன் முன்னைநாள் புலி உறுப்பினர் என்பதால் அவனுக்கு சம்பூரில் அனைத்துப் புலி உறுப்பினர்களுடனும் நட்புண்டு. அமலன் எந்தவொரு வேலையையும் செய்வான். கூலி வேலைகள் கிடைக்காத போது தூண்டிலை எடுத்துக்கொண்டு ஆற்றுக்கு மீன் பிடிக்கக் கிளம்பி விடுவான். அன்றும் அதைத்தான் செய்துகொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலையை திறந்து பிரபா உள்ளே வந்தான். குலைப்பதற்குத் தயாரான நாய் உடனடியாகவே அந்த எண்ணத்தைக் கைவிட்டது. வாலை வேகமாக ஆட்டிக்கொண்டு பிரபாவை நோக்கி ஓடியது. வலதுகையில் வைத்திருந்த ரி ஐம்பத்தாறு ரைபிளை இடதுகைக்கு மாற்றிய பிரபா குந்தியிருந்து வாஞ்சையுடன் நாயின் தலையில் வருடிவிட்டு அப்படியே கழுத்துப்பகுதியில் விரல்களை நுழைத்து நாயை குசிப்படுத்தினான்.

“அத விட்டுட்டு வாடா... நீ குடுக்கிற செல்லம் தான் அது ஊரெல்லாம் பெட்ட தேடித்திரியுது” அமலன் கடிந்தான்.

“வணக்கமண்ண... என்ன குளத்துக்கு ரெடியோ.. அப்ப இண்டைக்கு மத்தியானம் இஞ்சதான் வரோணும் சாப்பாட்டுக்கு....” குளத்துமீனை வறுக்கவும் வாட்டவும் குழம்பில் போட்டு கொதிக்க வைத்து வாய்க்கு ருசியாக்கவும் ரஞ்சியை வெல்ல யாராலும் முடியாது.

“வாவன்...உன்ர வீடு தானே” என்ற அமலன் வீட்டுக்குள்ளே பார்த்து “ரஞ்சிஈஈஈஈ பிளேன்டீக்கு ஆள் வந்திருக்கு” என்று கூவினான். ஆளைப் பாாக்காமலே உள்ளே இருந்து பதில் வந்தது

“பிரபாவே வந்திருக்கிறான்... படலையை திறக்க ரெக்ஸ் குலைக்காமல் வாலாட்டிக்கொண்டு ஓடேக்கயே யோசிச்சன்.. அவனாத்தான் இருக்குமெண்டு”

“ஓமண்ணி.. நானேதான்... பிளேன்டீயோட வா.. நான் முக்கியமான கதையொண்டு கதைக்கோணும்”

“சரியாப்போச்சு.. இண்டைக்கு நான் மீன் பிடிக்கப் போன மாதிரித்தான்.. என்னடா அப்பிடி முக்கியமான கத.....”

“பெரிய கத இல்லையண்ணை.. ஒரு சின்னக்கத தான்.. ஆனா ரெண்டு பேரயும் வச்சுத்தான் கதைக்கோணும்”

“ஓ அப்பிடியே..” சற்று அமைதியானான் அமலன். மனைவி ரஞ்சி தேநீர் ஊற்றி வரும் வரை அங்கு நிலவிய இறுக்கம் அவனுக்கு ஏதோ போல இருந்தது.

“என்னடா சொல்லுது ஊர்?... சனத்துக்கெல்லாம் ட்ரெயினிங் குடுக்கிறியள்... எங்கட சனம் படுற பாட்டைப்பாக்க சிரிப்பாக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கு... அவையிண்ட நினைப்பெண்டா நாளைக்கே பிப்டி கலிபரோட ஆமீட காம்புக்க பாய்ற நினைப்புத்தான். ட்ரெயினிங் எடுக்கிறம் ட்ரெயினிங் எடுக்கிறம் எண்டு பெருமையாத்தான் திரியினம்"

"ஓமண்ண... பெரும்பாலான ஆக்கள் வலுசந்தோசமாச் செய்யினம்... கொஞ்சப் பேருக்கு கஸ்டமாத்தான் இருக்கு. அடிப்படைப் பயிற்சி எண்டுறதால பெருசா இறுக்கவேணாம் எண்டு குமரன் மாஸ்டர் சொல்லிப் போட்டாராம். அதால விட்டுப் பிடிக்கிறம் எண்டு ராகவன் சொன்னான். அதோட அரசாங்கத்தில வேலை செய்ற ஆக்களுக்கும் அடிப்படைப் பயிற்சியத் தொடங்கீட்டானாம். ஆனந்தம் அதிபரைத் தெரியும் தானே? அவர் வோக்கியோட கட்டக்காச்சட்டயும் போட்டுக்கொண்டு கொட்டனோட ஓடுற படமொண்டு அண்டைக்குப் பாத்தனான். அப்ப தான் ராகவனிட்ட கேட்டன். அவன்தான் இந்த விசயமெல்லாம் சொன்னான். இப்பிடி பயிற்சி எடுக்கிற ஆக்களுக்குள்ள இருந்து அடுத்த அணி ஒண்டை தயாராக்கி சண்டை பயிற்சிக்கு அனுப்ப போறாங்களாம்"

"ஓம் டா... கேள்விப்பட்டனான்.. நல்ல விசயம்"

"வேற ஒண்டும் கேள்விப்படேல்லயே" பிரபா நேராக அமலனின் கண்களை ஏறிட்டான்.

"நாங்கள் கேள்விப்பட்டனாங்கள் தான்...." என்று பதில் பிரபாவிற்குப் பின்புறமாகவிருந்து வந்தது. மூன்று தேநீர்க் கோப்பைகளுடன் ரஞ்சி அவனுக்கு முன்பாக வந்து அவர்கள் இருவருக்கும் கொடுத்துவிட்டு தனது கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்டு அங்கிருந்த மரக்கட்டையொன்றில் வாகாக அமர்ந்தாள்.

பிரபாவிற்கு என்ன சொல்லுவதென்றே தெரியவில்லை. அந்த தேநீர்க் கோப்பைக்குள் கலங்கித் தெரியும் அவனது முகத்தின் விம்பம் பலவற்றைப் பிரதிபலித்தது.

"பைவ்பைவ் (5-5) கூட்டம் வச்சவர் எண்டு கேள்விப்பட்டன்" பைவ்பைவ் என்பது திருகோணமலை மாவட்ட விடுதலைப்புலிகளின் சிறப்புத் தளபதியாக அப்போதிருந்த சொர்ணம் அவர்களின் சங்கேதக் குறியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இயக்கத்தில இருந்து துண்டுகுடுத்து விலகியிருக்கிற ஆக்களையும் சேக்கச் சொல்லிச் சொல்லியிருக்கிறாராம்.. அதத்தானே நீ எங்கள்ட சொல்ல வந்தனி” அமலன் வினாவினான். அமலனே விடயத்தைப் போட்டுடைத்தது பிரபாவிற்கு நிம்மதியைத் தந்தது.

“ஓம் அண்ணை.. அதோட வேற ஒரு விசயமும் சொல்லிப்போட்டுப் போகத்தான் வந்தனான்”

“நான் இவரோட இந்த விசயத்தக் கதச்சிட்டன் பிரபா.. நீ பயமில்லாமச் சொல்லு” ரஞ்சி ஒரு மிடறை உறிஞ்சினாள்.

“ஓம் அண்ணி.. நீங்க ரெண்டு பேரும் இப்படிச் சொல்றது எனக்கு நிம்மதியாப் போச்சு... அமலனண்ணய நாளைக்கொருக்கா வந்து சந்திக்கட்டாம் எண்டு தேவன் அண்னை சொல்லிவிட்டவர். தான் விடிய எட்டு மணிவாக்கில ரூ-வன் (2-1) பேஸ்ல நிப்பாராம்.. ஒருக்கா வரட்டாம்” ரூ-வன் என்பது சிறப்புத்தளபதியின் பெரும் பாசறை. அவர்களிடையே திடீரென ஒரு அமைதி நிலவியது.

“குடிச்சா கப்பை தரமாட்டியே.. அதையே சுழட்டி சுழட்டிப் பாத்துக்கொண்டிருக்கிறாய்... சாரக் கட்டுக்க போட்டுக்கொண்டு போயிடுவாய் போலக்கிடக்கு.. நீங்க வெளிக்கிடுங்கோப்பா.. டேய் நீ மத்தியானஞ் சாப்பிட வருவியெண்டால் அரிசி போடுவன்... தேவன் அண்ணயிட்ட சொல்லு நாளைக்கு இவர் வருவார் எண்டு” பெண்களால் மட்டுமே மலை சரிவதைத் தாங்கிக்கொள்ளவும் முடியும்... மலர் கருகுவதற்காக கலங்கவும் முடியும்.

பிரபா எல்லாவற்றுக்கும் தலையை ஆட்டினான். “அண்ண வாறன்..அண்ணி மத்தியானம் கொஞ்சம் லேட்டாகும்.. ஆனா சாப்பிட வந்திருவன்.. மறக்காம அரிசி போடு” என்றவாறே ரைபிளைத் தூக்கி தோளில் போட்டபடி படலைக்கு வெளியே சாத்தியிருந்த சைக்கிளை நோக்கி நடந்தான்.

மண்புழுவின் துண்டொன்றை தூண்டில் முள்ளில் செருகி தூண்டில் தடியை வேகமாகச் சுழற்றிக் குளத்துக்குள் எறிந்தான் அமலன். தூண்டில் தடியில் கட்டப்பட்டிருந்த நூல் காற்றைக் கிழித்துக்கொண்டு தனது முனையில் பொருத்தப்பட்டிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளையும் அதில் குத்தப்பட்டிருந்த மண்புழுவையும் சேர்த்துக்கொண்டு பறந்து சென்று குளத்திற்குள் விழுந்தது. காணாமல் போனது. மீன் கட்டாயம் மாட்டும். அது அமலனின் கையின் வரப்பிரசாதம்.

தனக்கும் பிரபாவின் ஊடாகத் தூண்டில் எறியப்பட்டிருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

தேசக்கடமையை ஆற்ற அவன் ஒரு போதும் பின்நின்றதில்லை. பதினைந்து வயதில் பசியினாலும் பயத்தினாலும் விடுதலைப்புலிகளில் இணைந்தாலும் அங்கு ஆறுமாதங்களாகப் பெற்ற பயிற்சிகளும் படிப்பும் அவனைப் புடம் போட்டிருந்தன. ஒவ்வொரு தமிழனும் போராட வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பது அங்கு சொல்லித்தரப்பட்ட பாடங்கள், வரலாறுகள் மூலம் தெளிவாகியிருந்தது. ஆனால் அப்போது அவன் தனி மனிதன். இப்போதோ அவனுக்கு மனைவியென்று ஒருத்தியிருந்தாள். ஒரு பிள்ளையும் இருந்தது. அவளுக்கோ அவனை விட வேறு யாரும் இல்லை. அவள் பிறக்கும் போதே அவளது தாய் சாவடைந்தார். ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தியாறில் தகப்பனார் குமாரபுரம் கிராமத்தில் நடந்த படுகொலையில் இராணுவத்தால் கொல்லப்பட்ட இருபத்தியாறு அப்பாவித் தமிழர்களில் ஒருவரானார். யாருமேயில்லாமல் யாரோ ஒரு அன்பான பெண்ணுடன் வளர்ந்த ரஞ்சியை அமலன் விரும்பி மணந்திருந்தான். தேவனைச் சந்தித்து இந்த விடயங்களைச் சொல்ல வேண்டும் என அவன் திட்டமிட்டான். மண்புழுவைச் சுமந்த தூண்டில் முள் குளத்தின் ஆழத்தில் அலைந்துகொண்டிருந்தது.

காலியான தேநீர் கோப்பைகளை கழுவிக்கொண்டிருந்த ரஞ்சியின் மனம் சற்றுப் பேதலித்திருந்தது. 'சீ... என்ன வாழ்க்கையிது.. என்னோட ஆருமே தொடர்ந்து இருக்க மாட்டினமோ?... நான் அன்பு வச்ச எல்லாரும் என்னப் பிரிஞ்சு போயிருவினமோ?' என்றே அவள் எண்ணினாள். அவளைத் தாயாகவும் தந்தையாகவும் கவனித்து வளர்த்த தந்தையை அவள் பறிகொடுத்திருந்தாள். தகப்பனின் நினைவுகள் வந்தவுடனேயே ரஞ்சி செய்துகொண்டிருந்த வேலைகள் அனைத்தையும் விட்டுவிட்டு முற்றத்து வேப்பமரத்தின் கீழ் இருந்த சாய்மனைக்கதிரையில் தன்னைப் புதைத்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கொடிய நாளின் ஞாபகங்கள் ரஞ்சியின் மனதை வாளென அறுக்கத்தொடங்கின.

இப்படித்தான் அவள் அன்றும் கதறினாள்... அவர் பதில் சொல்லவே இல்லை. அந்தக் கடையில் பரவிய மெல்லிய காலை ஒளியில் அவர் தரையில் குந்தியிருந்தார். தோட்டாவொன்று அவரது நெற்றியை துளைத்துச் சென்றிருந்தது. மூடப்படாத கண்கள் கொன்றவனை தன் ஆன்மாவில் பத்திரப்படுத்தியிருந்தன.

குமாரபுரத்தின் மயானத்திற்குப் பின்புறமாக உள்ள அந்த பற்றைக் காட்டுக்குள் அவர்கள் எட்டுப் பேரும் கூடியிருந்தார்கள்.

“அண்ணை சரியா ஒரு மணி பதினைஞ்சு நிமிசத்துக்கு தெகியத்த காம்பில இருந்து ரெண்டு பேர் வெளிக்கிடுறாங்கள். அவங்கட சைக்கிள் கெரியர்ல பச்சநிற பிளாஸ்டிக் பெட்டி கட்டியிருக்கும். அதுக்குள்ளதான் சாப்பாடுகள் பார்சல் பண்ணியிருக்கு. இரெண்டு பேரும் ரி பிப்டி சிக்ஸ் ரைபிளும் நெஞ்சுக் கோல்சரும் அதுக்குள்ள நாலு மகசின்களும் சிலவேளை ரெண்டு ஜேஆர் கிரனேட்டும் கொழுவி வர்றாங்கள். ரெண்டு பேரும் இடது பக்கத் தோள்ல தான் ரைபிள கொழுவி இருக்கிறாங்கள். என்ர கணிப்பின்படி அவங்கள் வலதுகைப் பழக்கம் உள்ளவங்களா இருந்தா இடது பக்கம் தொங்கிற ரைபிள வலது கைக்கு மாத்திச் சுட ஆகக் குறைஞ்சது ரெண்டு நிமிசம் வேணும்.” மணலில் கீறப்பட்டிருந்த வரைபடமொன்றை நீண்ட குச்சியால் ஒருவன் விளக்கிக்கொண்டிருந்தான். அவர்களுக்கு ஆயுதங்கள் மிகத் தேவையாக இருந்தன. அவற்றை இராணுவத்திடமிருந்து அடித்தெடுப்பதே வழமையாகவும் பெருமையாகவும் இருந்தது. ஆகவே சாப்பாடு கொண்டு செல்லும் அந்த இரு இராணுவத்தினரையும் அவர்கள் குறி வைத்தார்கள். அசட்டையாகச் செல்லும் அந்த இருவரும் இவர்களுக்கு இலகுவான இலக்கு. அந்த நீண்ட குச்சியை வாங்கிக்கொண்ட மற்றொருவன் தாக்குதல் திட்டத்தை விளக்கினான்.

“சி.ஐ.டி பாலத்துக்கு கீழ இரண்டு பக்கமும் சதாவும் நானும் நிலையெடுக்கிறம். அவங்கள் தெகிவத்த முகாமில இருந்து வந்து திரும்பிற இடத்தில இருந்து ஒரு நூறு மீற்றர் தூரத்தில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிளோட அன்பன்.. நீ நிப்பாய். அவங்கள் அந்தச் சந்தியில திரும்ப நீ சைக்கிள மிரிச்சுக் கொண்டு பாலத்தால வருவாய். எல்லாம் சரியெண்டா எங்களத் தாண்டேக்க நீ ஒருக்கா பெல் அடிப்பாய். பெல் அடிச்சு ஐம்பது எண்ணி முடிய நாங்கள் ரெண்டு பேரும் பாலத்துக்கு மேல வருவம். எங்களுக்கும் அவங்களுக்கும் இடையில ஒரு முப்பது நாப்பது அடி தூரம்தான் இருக்கும். ஆக்கள போடுறம். கோல்சர வெட்டியெடுத்துக்கொண்டு இந்த இடத்துக்கு வாறம். பிறகு எல்லாரும் உடனடியா காட்டுக்குள்ள போயிருவம்." அவனது தாக்குதல் திட்டத்தில் அவர்கள் திருப்தியடைந்தார்கள்.

பெப்ரவரி மாதம் பதினோராம் திகதி ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தியாறு அன்று பகல் இரண்டு மணிக்கு இருபது நிமிடங்கள் இருக்கையில் அன்பனின் சைக்கிள் அந்தப் பாலத்தைக் கடந்தது. 'டிங்டிங்' அன்பன் தனது சைக்கிளின் 'பெல்லை' ஒலித்தான். ஐம்பது செக்கன்களின் பின் இருவர் பாலத்தின் கரைகளில் தெருவின் இரண்டு பக்கங்களிலும் பிரசன்னமாகினர். அவர்களது கைகளில் சுடத்தயாராக ரைபிள்கள் இருந்தன.

தம்முன்னே சாரம் கட்டிய இருவர் திடீரென ரைபிள்களுடன் தோன்றியதை அந்த இராணுவ வீரர்கள் சரியாகப் புரிந்துகொள்ளும் முன்னரே வேட்டொலிகள் வானைப் பிளந்தன.

வெற்றிகரமான அத்தாக்குதல் இரண்டு ரி ஐம்பத்தாறு ரைபிள்கள், எட்டு ரவைக்கூடுகள், இரண்டு ஜேஆர் ரக கையெறி குண்டுகள் மற்றும் கையடக்க இராணுவ தொடர் புச்சாதனமான வோக்கிரோக்கி போன்றவற்றை உயிரிழப்பின்றி பெற்றுத்தந்தது. இரண்டு இராணுவத்தினரின் உடல்கள் சல்லடையிடப்பட்டு தெருவில் இங்குமங்குமாகக் கிடந்தன. சோறு சிதறி சாவடைந்த அந்த இரு இராணுவ வீரர்களினது உடலங்களின் மீதும் கொட்டிக் கிடந்தது.

வேட்டொலியின் வித்தியாசத்தை தெகிவத்தை முகாமில் சென்றியில் இருந்த நிசாந்த புரிந்துகொண்டான். தன்னுடைய வோக்கிடோக்கியில் சாப்பாடு கொண்டு சென்றிருந்த சிறிவர் தனவைத் தொடர்புகொள்ள முயற்சித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எம் - ஒன்று .. எம் - ஒன்று .. சி ஒன்று.. ஓவர்" எம் என்பது மொபைல் என்ற ஆங்கில வார்த்தையின் சுருக்கமாக இருந்தது. பயணத்தில் இருந்த இருவரையும் குறிக்கும் சங்கேதச் சொல்லாக அது இருந்தது. அதேவேளை சி என்பது சென்றி என்பதையும் சி-ஒன்று என்பது வாயில் காப்புச் சென்றி என்பதையும் குறித்து நின்றன.

பலதடவை அழைத்தும் 'எம் – ஒன்று' இடமிருந்து பதிலெதுவும் இல்லை. நிசாந்த பதட்டமானான். முகாமின் பிரதான தொடர்பாடல் அறைக்கு உரிய செய்தியை அனுப்பினான்.

"ஒன்று நாற்பத்தைந்து மணியளவில் வெடிச் சத்தங்கள் கேட்டன. அவை வித்தியாசமானவை. அதற்குப் பின் எம்-ஒன்றுடன் தொடர்புகள் ஏதுமில்லை"

அந்தச் செய்தியைப் பெற்றுக்கொண்ட முகாமின் பிரதான தொடர்பகம் கிளிவெட்டி முகாமிற்குத் தொடர்பை மேற்கொண்டு 'எம் – ஒன்று' அங்கு வந்து சேர்ந்ததை உறுதிப்படுத்துமாறு கோரியது. கிளிவெட்டி இராணுவ முகாமில் இருந்து வந்த செய்தி அந்த இரண்டு இராணுவ வீரர்களும் கொல்லப்பட்டதாக உறுதிப்படுத்தியது. அச்செய்தி காற்றைவிட வேகமாக தெகிவத்தை சிங்களக் கிராம மக்களிடையே பரவியது. போராளிகள் குமாரபுரக்கிராமத்தில் பதுங்கியிருப்பதாக கதைகளை அவர்கள் உலாவ விட்டனர்.

இராணுவ முகாம்கள் இரண்டும் பதற்றமாகின. போராளிகள் குமாரபுரத்தில் பதுங்கியிருப்பதாகவும் அவர்களைத் தாக்கியழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முடிவாகியது. தெகிவத்தை இராணுவ முகாமின் அபாயச் சங்கு ஒலித்தது.

கடந்த மூன்று நாட்களாகத் தொடர்ந்து சேவையாற்றிய கோப்ரல் சிசிர தனது அணியுடன் ஓய்வான அன்றைய நாளைத் தமக்கானதாக்கிக் குடித்துக் கும்மாளமிட்டுக்கொண்டிருந்தனர். அபாயச் சங்கின் ஒலி அவர்களை சினங்கொள்ளச் செய்தது.

"லைன் அப்" லெப்டினன்ட் மாரசிங்க கட்டளையிட்டான்.

கப்டன் விராஜ் தலைமையில் தெகிவத்தை முகாமிலிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் வரிசையில் நின்றனர். பச்சை உடைகள், முழுவதும் நிரப்பப்பட்ட நான்கு மகசீன்களுடன் மார்பு கோல்சர்கள். இடுப்புப் பட்டிகளில் மேலும் இரண்டு மகசீன்கள் செருகப்பட்டிருந்தன. இரண்டு கையெறி குண்டுகள். இரும்பு தலைக்கவசம். அவர்கள் அனைவரும் தயாராகி நின்றனர். தங்களின் நிம்மதி கெடுக்கப்பட்டதாக உணர்ந்திருந்த சிசரவும் அவனது அணியினரும் கூட மிகக் கோபத்துடன் அந்த வரிசையில் நின்றனர்.

விராஜ் தனது தொண்டையைச் செருமினான். "பத்திரனவும் பிரபாத்தும் சற்று முன்னர் சுட்டுக்கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களது உடல்கள் சி.ஐ.டி பாலத்திற்கு அருகில் கிடக்கின்றன. புலிகள் குமாரபுரத்தினுள் பதுங்கியுள்ளனர். உடலங்களை மீட்கவேண்டும். அதேவேளை குமாரபுரத்தில் பதுங்கியுள்ள புலிகளையும் அழிக்க வேண்டும்." விராஜ் சொல்லி முடிக்கும் முன்பே சிசிர தனது குரலை உயரத்தினான். "சேர்...நானும் எனது அணியும் முதல் வரிசையில் செல்கிறோம். உடலங்களைத் தாண்டி குமாரபுரத்தில் பதுங்கியிருக்கும் அந்தப் புலி நாய்களைச் சுட்டுக்கொல்கிறோம். எமக்கு அடுத்ததாக வரும் அணி உடலங்களை மீட்கட்டும். அதேவேளை நாம் முன்பாகச் செல்வது எமக்கு பின்பு வரும் அணிக்கு பாதுகாப்பாகவும் அமையும்" சிசர பழிவாங்கும் வெறியுடன் இருந்தான்.

"சரி. உனது அணியுடன் மேலும் எட்டுப்பேரையும் இணைத்துக்கொள்... தயாராகு..." மேலதிகக் கட்டளைகளை வோக்கியின் மூலம் விராஜ் வழங்கிக் கொண்டிருக்க சிசிர தலைமையிலான அணி களத்தில் இறங்கியது. அருந்திய மது மூர்க்கத்தைக் கிளறக் கிளற முன்னேறிச்சென்ற பதினைந்து பேரடங்கிய அந்த இராணுவ அணி கண்மூடித்தனமாகச் சுட்டபடி குமாரபுரத்தை நெருங்கியது.

குமாரபுரம் அந்த வெடிச்சத்தங்களைச் சட்டைசெய்யவில்லை. காளிமுத்தண்ணையின் கடை திறந்திருந்தது.

"என்னண்ணை... இண்டைக்கு வெடி கொஞ்சம் கூடவாக் கிடக்கு... கொஞ்ச நேரத்துக்கு முதல்லயும் கேட்டுது.. இப்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேக்குது" கடையில் சீனி வாங்க வந்த ரஞ்சியின் அப்பா தெருவைக் கூர்ந்து பார்த்தபடி கேட்டார்.

"வெறியில கொக்கு சுட்டா வெடி படவா போகுது? அதான் சுழட்டிப்பிடிக்கிறாங்கள் போல" காளிமுத்து கொஞ்சம் நகைச்சுவையானவர். பதிலும் அப்படித்தான் இருந்தது. கடைக்கு முன்பாக இருந்த மரப்பலகையில் இருவர் அமர்ந்திருந்தனர். வெடிச்சத்தங்கள் சற்று நெருங்கி வரத் தொடங்கிய போதுதான் அங்கிருந்தவர்களை அச்சம் கௌவத்தொடங்கியது. இராணுவம் வந்துகொண்டிருந்த திசையில் இருந்து இரண்டு முஸ்லிம்கள் வேகமாக ஓடி வந்துகொண்டிருந்தார்கள்.. "ஆமிக்காரங்கள் கண்டதையெல்லாம் சுட்டுக்கொண்டு வாறாங்கள்... ஓடித் தப்புங்கோ...." என்ற அலறலுடன் அவர்கள் பெருந்தெருவில் இருந்து இறங்கி கடைக்குப் பின்புறமாக இருந்த விளையாட்டுத்திடலில் விளையாடிக்கொண்டிருந்தவர்களை நோக்கி கத்திக்கொண்டு ஓடி மறைந்தார்கள்.

மரணபயம் என்பது மனிதர்களை அசாத்திய பலமுள்ளவர்களாக மாற்றிவிடும். சாதாரணனையும் தெய்வீகமானவனையும் மரணபயமே பிரித்துக் காட்டத்தக்கது. சாதாரணன் மரண பயத்தை எதிர்கொள்ள நேரிட்டால் தன்னைக் காத்துக்கொள்ள மற்றைய அனைத்தையும் பலியிடத் தயாராகுவான். தெய்வீகமானவனோ மரணபயத்தினால் எழும் அசாத்திய பலத்தைக் கொண்டு மற்றையோரைத் தப்புவித்து தன்னுயிர் துறப்பான்.

இறந்து கிடந்த பத்திரனவின் கண்கள் வானத்தில் நிலைகுத்தியிருந்தன. நெஞ்சு மற்றும் கன்னத் தாடையின் ஊடே இரண்டு சன்னங்கள் புகுந்து மறுபுறம் வெளியேறியிருந்தன. எதிர்த்துச் சுடவோ, தற்காத்துக்கொள்ளவோ அவனுக்கு நேரமிருக்கவில்லை என்பதும் சுட்டவன் குறிதப்பாது சுடுவதில் தேர்ந்தவனாக இருக்கலாம் என்பதும் சிசிரவிற்கு விளங்கியது. சற்று தள்ளி பிரபாத் குப்பிறக் கிடந்தான். தொடையிலும் வயிற்றிலும் சூடுகள் முன்புறமாக விழுந்து பின்புறமாகப் பெரிய அளவில் தசைகளைச் சிதைத்து வெளியேறியிருந்தன. 'சுட்டவன் சற்று பதட்டமடைந்திருக்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் சூடுகள் இரண்டும் பிரபாத்தைக் கொல்லவில்லை. சைக்கிளில் இருந்து விழுந்த பிரபாத் சற்று தூரம் இழுத்து இழுத்து போயிருக்கிறான். அதற்குப் பிறகுதான் அவனது தலையில் சுடப்பட்டிருக்கிறது' சிசிரவின் அனுபவம் கணிப்பில் சரியாக இருந்தது. தலையின் முன்புறம் கபாலம் சிதைந்து வெள்ளை நிறமாக மூளையும் குருதியும் கலந்த திரவத்தில் பிரபாத்தின் முகம் முங்கிக்கிடந்தது.

"ஒத்த நாய்களே... உங்களைக் கொல்லாமல் விடமாட்டனடா" சிசிர பெருங்குரலில் கத்தினான். அவனுடன் முன்னேறிய ஏனையவர்களும் மிருகங்களாகினர். தங்களுடைய நண்பர்களின் சாவு அவர்களுக்கு பெரும் கோபத்தை உருவாக்கியிருந்தது. ஒரு கணத்தில் அவர்கள் ஒவ்வொருவரும் தம்மை பத்திரனவாகவும் பிரபாத் ஆகவும் கற்பனை செய்து கொண்டார்கள். மிருகங்களின் கண்களுக்குள் வேட்டையாடும் வெறி தணலெறிந்தது.

கிராம மக்கள் எப்புறமாக தப்பியோட வேண்டும் என்பதை தீர்மானித்து தப்பியோட தொடங்கிய போது துப்பாக்கி ரவைகள் அந்த மக்களை தாண்டிச்செல்லத் தொடங்கியிருந்தன. விளையாட்டுத் திடலில் இருந்து ஓடி வந்த பிள்ளைகளும் தெருவில் வந்தவர்களும் காளிமுத்தண்ணையின் கடையில் தஞ்சமடைந்தனர். அதற்குமேல் தெருவைக் கடக்க அவர்களால் முடியவில்லை. தெருவில் ரஞ்சியின் அப்பா நிலைகுலைந்து கிடந்தார். அவர் தெருவைக் கடந்து தனது வீட்டுக்கு ஓடிப்போக முயன்ற போது முழங்காலைத் துளைத்துச் சென்ற ரவை அவரை நிலைகுலையச் செய்தது.

"அம்மோவ்... ரஞ்சீ...." என்று அலறியபடி அவர் தெருவின் நடுவிலேயே விழுந்தார். மெல்ல மெல்ல கடையை நோக்கித் தன்னால் இயன்றளவு இழுத்து இழுத்து வர முயன்றார்.. முடியவில்லை.

அவர்கள் சுட்டுக்கொண்டே முன்னேறினார்கள். பதிலுக்கு ஒரு சூடும் விழவில்லை. புலிகள் அங்கில்லை என்பது அவர்களுக்குப் புரிந்தது. என்றாலும் வேட்டையாட வேண்டும். பத்திரனவுக்காகவும் பிரபாத்துக்காகவும் வேட்டையாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். புலிகள் தாக்குவார்கள் என்பது இந்த மக்களுக்கு தெரிந்திருந்தும் அவர்கள் எமக்குச் சொல்லவில்லை. ஆகவே இவர்களும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்....

இருள் மெல்லக் கவியத் தொடங்கியது. குமாரபுரத்தின் வீடுகளுக்குள் மக்கள் ஒளிந்திருந்தார்கள்.

புலிகள் இல்லை என்றவுடன் அச்சமின்றித் தனித்தனியாக இராணுவத்தினர் கிராமத்தினுள் நுழைந்தார்கள். பூட்டப்பட்ட வீடுகளைத் தட்டி வெளியே வருமாறு அழைத்தார்கள். வெளியே வந்தவர்களை சுட்டுக்கொன்றார்கள். பிறகு திறந்து கிடந்த வீட்டினுள் புகுந்து எழுந்தமானமாக வேட்டுக்களைத் தீர்த்தார்கள்.

பதினொரு வயதான ரஞ்சி வெடிச்சத்தங்கள் கேட்டவுடனேயே கடைக்குப் போன தகப்பனைப் பார்க்க தெருவுக்கு ஓடிவர முயன்றாள். ஆனால் அயல் வீட்டு லெட்சுமி அக்கா அவளையும் இழுத்துக் கொண்டு தனது வீட்டுக்குள் ஓடினார். அங்கு ஏற்கனவே சிலர் ஒளிந்திருந்தார்கள். முன் கதவைப் பூட்டி ரஞ்சியை யன்னலோரமாக படுக்கவைத்தார் லட்சுமி அக்கா.

“கதவத் தொற... பயப்பிட வேணாங் ... வெளிய வந்தா சுடங் மாட்டங்”

இராணுவத்தினன் ஒருவன் மூர்க்கமாக கதவை மோதினான். அந்த தகரக் கதவு ஆட்டங்காணத் தொடங்கியது.

“கதவு தாங்காது.. நீங்க ஆரும் வெளிய வராதீங்கோ.. ரஞ்சி நீ படுத்திருக்கிற இடம் வெளிச்சமில்ல பேசாமக் கிட... நான் மட்டும் வெளிய போறன்... என்ன நடந்தாலும் நான் கூப்பிடாட்டி வெளிய வரக்கூடா”

லெட்சுமியக்கா குசுகுசுத்தார். பின் மெதுவாக எழும்பிக் கதவைத் திறந்து வெளியே வந்தார். “ஐயா...என்னச்சுட்டுப் போடாதீங்கோ... நான் தனியத்தான் இருக்கிறன். எனக்கு ஒண்டும் தெரியா” என்று கதறிய அவர் அந்த இராணுவத்தினனின் கால்களில் விழுந்தார். மிருகத்திற்கு இரை தெரிந்ததே தவிர ஓர் மனித உயிரை அந்த வயதான பெண்மணியில் காணவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய துப்பாக்கி நெருப்பை உமிழ்ந்தது. லெட்சுமியின் கைகள் அவனது இராணுவ பூட்சை ஒரு முறை இறுக்கித் தளர்ந்தன. பின் இரண்டு உள்ளங்கைகளும் வானை நோக்கி திரும்பி விரல்களை விரித்து மண்ணில் விழுந்தன. லெட்சுமி திறந்து விட்ட கதவினூடாக வீட்டிற்கு உள்ளே புகுந்தான் அவன். இருள் முழுக்கக் கவிந்து எதனையும் சரியாக வெளிக்காட்டாது அந்த வீடு தன்னை ஒளிக்க எத்தனித்துக் கொண்டிருந்தது. அவனுக்கு இருள் துரோகம் செய்தது. எனினும் அவனது உள்ளுணர்வு அந்த இருண்ட வீட்டுக்குள்ளிருந்து யாரோ மிக அவலமாகத் தன்னைப் பார்ப்பதாகச் சொன்னது. அவன் தன்னுடைய டோர்ச்லைட்டை மார்புக்கோல்சரில் கொழுவியிருக்கும் இடத்தில தேடினான்.

"சைக்... அதக்கொண்டரேல்ல பாரன்" தனக்குத்தானே கறுவிக் கொண்டான். போதை தலைக்கேறியிருந்த போதே அபாயச் சங்கொலித்தது. அதனைத்தொடர்ந்து விராஜ் இட்ட கட்டளைகளினால் ரவைக் கூடுகளையும் நீண்ட கத்தியினையும் கோல்சரில் கொழுவிக்கொண்ட அவன் டோர்ச்லைட்டை மறந்திருந்தான். 'வேற வழியில்லை'. புதிய ரவைக்கூடொன்றை ரைபிளில் மாட்டினான். ரைபிளை உயர்த்தி சகட்டு மேனிக்கு வெடிகளை வீட்டின் அனைத்து அந்தங்களையும் நோக்கித் தீர்த்தான். புதிய ரவைக்கூடு காலியாகியது. மனத்திருப்தியுடன் அவன் வெளியேறினான். ரஞ்சி அந்தச் சத்தத்தில் செத்துப்போனாள்.

குமாரபுர கிராமத்தில் வெடிச்சத்தங்களும் அழுகுரல்களும் மெல்ல மெல்ல ஓய்ந்து போயின.

அந்த இரவில் ரஞ்சி தன் தகப்பனை நினைத்து சத்தமில்லாமல் விம்மி விம்மி அழுதபடியே இருந்தாள். நினைவு தெரிந்த நாள் முதல் ஒரு இரவும் அவரைப் பிரிந்து அவள் இருந்ததில்லை. அப்பா எப்பிடியும் தப்பியிருப்பார் என்று அவள் நம்பினாள். வெளியே போன லெட்சுமி அக்கா ஏன் இன்னும் தங்களைக் கூப்பிடவில்லை என்பது வேறு அவளை அச்சமடையச் செய்திருந்தது. வீட்டிலிருந்த ஏனையவர்களை யாரென்றே அவளுக்குத் தெரியாது. அவர்களும் அந்த இரவில் சத்தமேதும் போடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரபுரத்தில் கொலைவெறியாட்டம் நடந்ததை அரச இயந்திரம் அன்றைய இரவே தெரிந்துகொண்டிருந்தது. அந்தக் கிராமத்தில் மக்கள் ஒளிந்திருக்கிறார்கள் என்பதால் அடுத்த நாள் காலையிலேயே காவல்துறையும் உயர் அரச அதிகாரிகளும் குமாரபுரத்தைச் சூழ்ந்துகொண்டனர்.

"வீடுகளில் ஒளிந்திருப்பவர்கள் வெளியே வாருங்கள்... இனி அச்சமில்லை. அனைவரும் வெளியே வாருங்கள்" என ஒலிபெருக்கி கதறத் தொடங்கியது. காவல்துறை மற்றும் அரச அதிகாரிகள் அந்த அழைப்பை மேற்கொண்டிருந்தார்கள்.

"ரஞ்சி.. ரஞ்சி.." அவளது அப்பா அவளைத் தட்டி எழுப்புவதை ரஞ்சி உணர்ந்தாள். திடுக்கிட்டு விழித்தாள். "வீடுகளில் ஒளிந்திருப்பவர்கள் வெளியே வாருங்கள்... பயப்பிட வேண்டாம். அனைவரும் வெளியே வாருங்கள்" என்ற அந்த அறிவிப்பை அவள் கேட்டாள். ஆனால் அவளது தகப்பனை அங்கு காணவில்லை. ஒரு அம்பின் வேகத்தில் அவள் எழுந்து நின்றாள். அந்த வீட்டில் ஒளிந்திருந்த மூன்று பேரும் தலை சிதறி இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தனர். அதனால் தான் அவர்கள் நேற்றைய இரவில் அமைதியாய் கிடந்தனரோ!

"ஐயோ...." கதறியபடியே வெளியே ஓடிய அவள் வாசலில் முகங்குப்புற லெட்சுமி அக்கா விழுந்து கிடந்ததைக்கண்டாள்..... "ஐயோ அப்பா....எங்கயப்பா போய்டீங்கள்" என்று கத்தியவாறு ஒலிபெருக்கிச் சத்தம் வந்த பிரதான தெருவை நோக்கி ஓடினாள். காளிமுத்து கடைக்குள் பரவிய மெல்லிய காலை ஒளியில் அவளது அப்பா தரையில் குந்தியிருந்ததைக் கண்டாள். அருகே ஓடிச் சென்றாள். அப்பா...அப்பா...ஐயோ.... துப்பாக்கி ரவையொன்று அவரது நெற்றியை துளைத்து சென்றிருந்தது. மூடப்படாத கண்கள் கொன்றவனை தன் ஆன்மாவில் பத்திரப்படுத்தியிருந்தன.

'அப்பா....அப்பா...சே இந்த நினைவு என்ர சாவு மட்டும் என்ன விட்டுப் போகாது' ரஞ்சி தனக்குத்தானே முணுமுணுத்தபடி கைகளை உதறி தன்னை நிலைப்படுத்தி கொண்டாள். தனித்துப் போய் விடுவேனோ என எண்ணும் போதெல்லாம் அவளது தகப்பனின் நினைவு தவறாது வந்து அவளை சடமாக்கிவிடும். தலையை அங்குமிங்கும் ஆட்டினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகம் தண்ணீருக்குள் இறங்கிய பின் சிலிர்த்துத் தன் செட்டைகளை துவட்டிக்கொள்வதுபோல் இருந்தது அவளின் ஆட்டம்.

நேற்று அவளும் அமலனும் கதைத்துக் கொண்டது ஞாபகம் வந்தது.

"திரும்ப வரச்சொல்லிக் கேக்கினமாம்" "என்ன செய்யப் போறியள்?" "போகத்தானே வேணும்"

"என்னப்பா இப்பிடிச் சொல்றியள்..." அவள் அழுதே விடுவாள் போல இருந்தது. "ஒண்டையும் யோசிக்காத... முதல் போவம்... அங்க நான் கதைக்கிறன்.. உன்னை விட்டுட்டு எங்கயும் போக மாட்டன்... இது சத்தியம்".

அவளைத்தேற்றுவதற்கு அந்த சத்தியம் போதுமென்று அவன் நினைத்தான். அந்த சத்தியத்தை நம்பவில்லையென்றால் அவன் மேலும் துன்பப்படுவான் என்று அவள் நினைத்தாள். அவனுக்காக அவளும் அவளுக்காக அவனும் சிந்திப்பதே அவர்களின் வாழ்வின் சுக சங்கீதத்தின் லாகிரி.

வீட்டின் படலை திறக்கும் சத்தம் கேட்டது. அளவான விரால் மீன்கள் சிலவற்றுடன் அமலன் உள்ளே வந்தான்.

ரஞ்சி தலையைச் சிலுப்பிக்கொண்டு இருப்பதை அமலன் வரும்போதே வேலியூடாக கண்டுவிட்டான். அவள் தன்னிலை மறந்திருந்ததை அது அவனுக்குச் சொல்லியது.

"என்ன.. அம்மணி வேப்பமரத்துப் பேய் பிடிச்சிட்டு போல" அவள் அவனிடம் ஓடிச் சென்றாள்.

"ஓம் உங்களக் கட்டின அண்டு பிடிச்சது.. இனி எங்க போறது அந்தப் பேய்.. வாழ்நாள் முழுக்க..." வார்த்தைகளை முடிக்க முன் அவனில் மோதி நின்றாள். மீன் கட்டை வாங்கிக் கொண்டு அவனைப் பார்த்து அந்தப் புன்னகையை வீசினாள். கிறங்கடிக்கும் அந்தப் புன்னகையை அவன் புரிந்துகொண்டான். அன்றைய இரவு அவளின் அந்த கிறங்கடிக்கும் புன்னகைக்கு அர்த்தம் கற்பித்துக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

"அமலன் அண்ணய வரச்சொல்லுங்கோ"

தேவனின் குரல் தெளிவாகக் கேட்டது. அமலன் அன்று எட்டு மணிக்கே முகாமுக்கு வந்திருந்தான். நேரத்திற்கே தேவனைச் சந்தித்துப் பேசி விட்டால் வேறு ஏதும் வேலைக்குப் போகலாம் என்பது அமலனின் திட்டம்.

"தேவண்ணை வணக்கம்" "வணக்கம் அமலண்ணை... எப்பிடி இருக்கிறியல்" அந்த 'எப்பிடி' யில் உண்மையான அன்பை தேவன் வழியவிட்டான்.

ஈழத்துப்போராளிகளின் போராட்ட வாழ்வானது அவர்களது தனிப்பட்ட வாழ்வில் எதனையும் திட்டமிட்டுச் செய்யச் சந்தர்ப்பங்களை வழங்குவதில்லை. உண்மைப் போராளிகளின் போராளி வாழ்வு என்றுமே பொதுவான வாழ்வுதான். அவர்கள் எப்போதுமே தமது இனத்திற்கான வாழ்வையே தமது வாழ்வாக வரித்துக்கொள்வர். ஒரு உண்மைப் போராளியின் கண்களுக்கு தனது தாய் மட்டுமே அம்மாவாகத் தெரிவதில்லை. தாய்மையடைந்த தமிழீழப் பெண்கள் அனைவருமே அவர்களுக்குத் தாயாகவே தெரிவாள். மற்றைய போராளியின் தாயும் அவர்களுக்கு தாய் தான். பொதுமனிதனின் தாயும் அவர்களுக்குத் தாய் தான்.

தன்னிடமிருக்கும் ஆயுதம் தனக்கானது மட்டுமல்ல. அது தனது இனத்தைக் காக்க வரும் ஒவ்வொருவனுக்குமானது என்பதே அவன் சிந்தனை. ஆயுதத்தைக் காக்க தன் உயிரை அர்ப்பணிக்கத் தயாராயிருக்கும் வாழ்வு அவர்களுடையது. இதுவே அவர்களின் பொது வாழ்வு. அந்த வாழ்வில் இருந்து தனிப்பட்ட வாழ்விற்குள் புகுந்துவிட்ட போராளியொருவரைக் கண்டபோது தேவன் பாவித்த 'எப்பிடி இருக்கிறியல்' என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைக்குள் பொதிந்திருந்த அர்த்தம் போராளியொருவனுக்கு தனிப்பட்ட வாழ்வு சாத்தியமாகின்றதா? என்பதையும் அவ்வாறான வாழ்வொன்றை தான் என்றாவது வாழக்கிடைத்தால் அது எப்படியிருக்கும் என்பதை அறிந்துகொள்ளும் அவாவுமாகவே இருக்கும். தன்னையொத்த முன்னாள் போராளியொருவரைக் கண்டவுடன் தேவனிடம் அந்தக் கேள்வி இயல்பாகவே உருவானது.

"நல்லா இருக்கிறன் தேவண்ணை.. இயக்கத்தில இருந்து வந்தோண்ண கொஞ்சம் கஸ்டமாத்தான் இருந்துது. பொதுவாழ்வப் பழக முதலே போராட்ட வாழ்வுக்க வந்திட்டமெல்லோ.... ம்...இப்ப எல்லாம் பழகீட்டு..."

"கேக்க சந்தோசமாக் கிடக்கு" தேவன் ஒரு நிம்மதிப் பெருமூச்சை விட்டான். போராளிக்கு பொதுவாழ்வு அப்படியொன்றும் சிக்கலானதல்ல.

அந்த அறையில் சற்று நேரம் அமைதி நிலவியது. தேவனுக்கு எதிர்ப்பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு இருக்கைகளில் ஒன்றில் அமலன் அமர்ந்திருந்தான். அந்த அமைதியில் அவன் அந்த அறையை சுற்றி நோட்டம் விட்டான். ஒரு அகன்ற மேசை. அந்த மேசையின் இரண்டு நீளப் பக்கங்களில் ஒரு புறத்தில் அமர்ந்திருந்தான் தேவன். அவனுக்கு வலது புறமாக சில மட்டைக் கோப்புக்கள். அக் கோப்புகளின் மேல் ஒரு நீலப் பேனை. இடது புறமாக இரண்டு போராட்ட வரலாற்றுப்புத்தகங்கள். அவை ஆங்கில மூலத்தில் இருந்து தமிழீழ கல்விச் சேவைப் பிரிவினரால் தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டவை. அவற்றிற்கு மேல் வைக்கப்பட்டிருந்த வோக்கிடோக்கி. அதன் ஒலி மிகக் குறைக்கப்பட்டிருந்த போதும் அதனூடாக வெளிவந்த கரகரத்த பேச்சுக் குரல்கள் அமலனுடைய கடந்த காலத்தை அவனுக்கு நினைவுபடுத்தியது. தேவனுக்கு பின்புறமாக வலப்பக்கத்தில் சுவரில் சரியான இடைவெளியில் அறையப்பட்டிருந்த இரண்டு மரத்துண்டுகளில் ரி ஐம்பத்தாறு ரைபிள், மிக வேகமாக ரைபிளை எடுக்கக்கூடிய வகையில் அதன் பிடியும் ரவைக்கூடும் கீழ் நோக்கித் தொங்க விடப்பட்ட நிலையில் கிடையாக வைக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே அந்த அலுவலகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாளராகச் செயற்பட்டு வீரமரணம் அடைந்த போராளிகளின் படங்கள் அவர்களுக்குரிய இராணுவ நிலைகளுடன் இடப்புறமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. யன்னல்கள் திறந்து விடப்பட்டிருந்தன. தேவனுக்குப் பின்புறமாக மேலே சுவரில் தேசியத்தலைவரின் படம் மாட்டப்பட்டிருந்தது. தேசியத்தலைவரின் கண்கள் அதே காந்தத்தன்மையுடன் தன்னைப் பார்ப்பதாக அமலனுக்குப்பட்டது.

"அண்ணை" மனசுக்குள் தன்னையறியாமல் அந்த வார்த்தையை அவன் மிக வாஞ்சையுடன் மெதுவாகச் சொல்லிக்கொண்டான். புலிகளின் தலைவரை போராளிகள் அண்ணை என்றே அழைப்பது வழமை.

தேவன் வேறு எதையும் நோக்காமல் அமலனின் கண்களைப் பார்த்தபடியே இருந்தான். தேசியத்தலைவரின் படத்தைப் பார்த்த போது அமலனின் உடலில் தோன்றிய மாற்றம் தேவனுக்கு ஒரு சமிக்ஞையை அனுப்பியது. அது தான் சரியான தருணம்.

"அமலண்ணை.. விசயம் என்ன எண்டு உங்களுக்குத் தெரியும். தலைவரின்ட முடிவுகள் தீர்க்கதரிசனமானவை. இப்ப இயக்கத்துக்கு உங்கட உதவி தேவை எண்டு தலைவர் முடிவெடுத்திருக்கிறார்"

புலனாய்வுத் துறையினரால் அமலன் தொடர்பாக அனுப்பப்பட்டிருந்த கோப்பினை தேவன் ஏற்கனவே படித்திருந்தான். "லீமா" என்ற சங்கேதப்பெயருடன் களமாடிய தளபதி பால்ராஜ் அவர்களின் படையணியில் சுமார் நான்கு ஆண்டுகள் தோளோடுதோள் நின்று வன்னிக்களங்களிலும் யாழ்ப்பாண முன்னரங்குகளிலும் அமலன் போராடியிருந்தான். அவனுடைய போராட்ட வரலாறும் அதன் பின்னரான பொதுவாழ்வும் கறைபடியாததாக இருந்தமையும் புலனாய்வுத் தகவல்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

"இன்னுமொரு கொஞ்சப் போராளிகள என்னிட்ட தந்திருந்தா நான் அந்தப் பதினாலாயிரம் பேருக்கும் சமாதி கட்டியிருப்பன் எண்டு தரையிறக்கத் தாக்குதலுக்குப் பிறகு லீமா வெளியிட்ட

 Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடியோவப் பாத்திருப்பீங்கள்... லீமா சொன்னது சரி தானே.."
தளபதி பால்ராஜ் அவர்களின் பெயரை தேவன் தேர்ந்தெடுத்தே பாவித்தான். அமலன் அந்தப் பெயரைக் கேட்டவுடன் ஆகர்சிக்கப்பட்டான். புலிகளின் ஒப்பற்ற தளபதி 'லீமா' அவர்களுடன் களமாடிய நாட்கள் பசுமையாக அமலனுக்குள் விரிந்தன. களத்தில் ஒப்பற்ற மனவுறுதியை வெளிப்படுத்தும் அந்த தளபதி போராளிகளைத் தாய் போல அரவணைக்கத்தக்க மென்னுள்ளம் கொண்டவரென்பது அவருடன் களத்தில் நின்ற அத்தனை போராளிகளுக்கும் தெரியும். அவரைக் கடைசியாகச் சந்தித்த நாள் அமலனுக்கு நினைவு வந்தது.

தமிழீழம் என விடுதலைப்புலிகளால் அடையாளப் படுத்தப்பட்ட இலங்கையின் வடக்குக்கிழக்கு பிரதேசங்கள் தமிழர்களின் வரலாற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்ட வாழ்விடமாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஈழத்தமிழர்களின் பூர்வீக குடிகள் தமக்கான வாழ்விடமாகவும் தமக்கான தேசமாகவும் வடக்கையும் கிழக்கையும் கொண்டிருந்தனர்.

அவர்களது வாழ்விடங்களை அழித்து அவர்களை நாடற்றவர்களாக்கி ஒட்டுமொத்த இலங்கைத் தீவையும் சிங்கள மொழிபேசும் பௌத்த மத அடையாளத்தைப் பின்பற்றும் அல்லது அதனை ஏற்றுக்கொண்டு வாழும் மக்களை கொண்டதுமான நாடாக மாற்ற முயற்சித்த சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு எதிராக ஈழத்தமிழர்கள் தம்மைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். ஈழத்தின் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரதேசம் மணலாறு ஆகும். வடக்கின் முல்லைத்தீவிற்கு தென்கிழக்காகவும் கிழக்கின் திருகோணமலைக்கு வடமேற்காகவும் அமைந்துள்ள மணலாறு ஈழத் தமிழர்களின் "இதயபூமி" ஆகும்.

கிழக்கு ஐரோப்பாவை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர்களாலேயே உலகைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்ற இதயபூமிக் கோட்பாட்டை கோமகன் "ஹல்போட் மக்கின்டர்" முதன்முதலில் முன்மொழிந்தார். அந்தக் கோட்பாட்டிற்கு அமையவே வடக்குக்கிழக்கின் இதயபூமியான மணலாறைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது புலிகளுக்கு இன்றியமையாததாக இருந்தது. வடக்கையும் கிழக்கையும் மட்டுமன்றி வங்காள விரிகுடாக் கடலின் மீதும் கட்டுப்பாட்டைப் பேண இதயபூமியின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பது தேவையாக இருந்தது. அதற்கமைய மணலாற்றின் தனித்துவமானதும் இயற்கை அரணாகவும் இருந்த ஆனந்தகுளம் மற்றும் நாகசோலை பெருங்காட்டுப் பிரதேசத்தில் முல்லைத்தீவை அண்டிய புறமாக விடுதலைப்புலிகளின் முதலாவது மரபு வழிப் படையணியான சாள்ஸ்-அன்ரணிப் படையணியின் படையணித் தங்ககம் உருவாக்கப்பட்டிருந்தது. அந்தப் படையணியின் முதலாவது தளபதியாக 'சமர்க்கள நாயகன்' எனப் புகழ்பெற்ற பால்ராஜ் நியமிக்கப்பட்டிருந்தார்.

"வாரும் அமலன்..." மரங்களால் உருவாக்கப்பட்டு கூரை தென்னம்மட்டைகளால் வேயப்பட்டிருந்த தனது இராணுவ குடியிருப்புக்குடிலில் இலேசாகச் சாய்ந்திருக்கத்தக்க வகையில் அமைக்கப்பட்டிருந்த மரக்கதிரையில் மெல்லிய பச்சை நிற ரீசேட் அணிந்து சாரத்தை இடுப்பில் தளர்வாகக் கட்டிய லீமாவின் குரல் அமலனை அவருக்கு முன் வரப்பண்ணியது. "இரும்" அவருக்கு முன்பாக போடப்பட்டிருந்த மரக்குற்றியொன்றில் அமலன் வாகாக அமர்ந்தான். ரைபிளை மடியில் கிடத்திக்கொண்டான். "அமலன்.. சாப்பிட்டீரோ?" காலை பத்துமணிக்குக் கிட்டியதால் அதனை அவர் விசாரித்தார். "ஓம் அண்ணை.. புட்டும் பருப்புச் சொதியும் முட்டையும் சாப்பிட்டனண்ணை" அடுத்து என்ன கேட்பார் என்பதை முன்னுணர்ந்த அமலன் பதிலை முதலே சொல்லிவிட்டான். அன்றைய காலை உணவு என்ன என்பது அவருக்குத் தெரியும். தனது படையணியின் ஒவ்வொரு அசைவிலும் அவர் ஆழ்ந்த கரிசனை கொண்டவர். "உம்மட பொறுப்பாளர் சொன்னவர்... தங்கச்சியும் இயக்கத்துக்கு வந்திட்டாவாம் எண்டு..."

"ஓம் அண்ணை... வீடு தனிச்சுப் போச்சு.. நான் உங்களோட இருக்கிறன் எண்டத ஆரோ சொல்லிப்போட்டாங்கள்... அதோட அப்பாவக் பிடிச்சுக்கொண்டுபோய் ஆமி அடிச்ச அடியில அவருக்கு துண்டற ஒரு வேலையையும் செய்யேலாம தமிழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியஞ்செய்யுறார். அண்டைக்கு எங்கட வீட்ட ஆமி ரவுண்டப் பண்ணேக்க தங்கச்சியக் காட்டுக்க ஓடிப்போகச் சொல்லி அப்பர்தான் அனுப்பீருக்கிறார். அவளப் பிடிச்சிருந்தா அவங்கள் திண்டிருப்பாங்கள்.'' ரைபிளின் மீதிருந்த அமலனின் வலதுகை ரைபிளை அக்கணத்தில் மிக அழுத்திப்பிடித்ததை லீமா அவதானித்தார். அமலனுடைய வரலாற்றை சாள்ஸ் அன்ரணிப் படையணியின் அரசியற் பிரிவுக்குப் பொறுப்பாயிருந்த இலக்கியன் லீமாவிடம் சுருக்கமாகத் தெரிவித்திருந்தான். பதினைந்து வயதில் போராட இணைந்த அந்த இருபத்தியொரு வயது இளைஞனின் உணர்வுகளை அவரால் துல்லியமாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

திருகோணமலை மாவட்டத்தின் சிவபுரம் கிராமம் விடுதலைப்புலிகளின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் உட்படாத பல கிராமங்களுள் ஒன்றாக இருந்தது. அந்த கிராமங்களில் வாழும் மக்கள் விடுதலைப்புலிகளை அரவணைத்தாலும் அதனை மிக இரகசியமாகவே வைத்திருந்தனர். அந்த இரகசியம் எப்போதெல்லாம் இராணுவத்திற்கு தெரிய வருகின்றதோ அப்போதெல்லாம் உரிய கிராமம் முழுவதுமாக ஒரு அழிப்பு நடவடிக்கைக்கு உட்படும். அவ்வாறான கிராமங்களில் ஒரு குடும்பம் தொடர்பாக இராணுவம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாயின் அந்தக் குடும்பம் சின்னாபின்னம் ஆக்கப்படும்.

சிவபுரத்தில் வாழ்ந்த அந்தப் பதினைந்து வயது சிறுவன் காணாமல் போயிருந்தான். அவன் விடுதலைப்புலிகளுடன் இணைந்துவிட்டான் என்ற தகவல் அவனது பெற்றோருக்குக் கிடைத்தது. என்றாலும் காட்டுக்குள் முயல் பிடிக்கப் போனவன் திரும்பி வரவில்லை என்ற தகவலையே அந்தப் பெற்றோர்கள் கிராமத்துக்குள் பரப்பியிருந்தனர். அவன் காணாமற் போய் நாற்பத்தைந்தாம் நாள் கிராமத்தவர்கள் சிலரைக் கூப்பிட்டு அவனுடைய நினைவாக மரக்கறிச் சாப்பாடும் போட்டனர். பின்னர் ஆறாம் மாதம் கோவிலில் அவனது பெயரில் பொங்கிப் படைத்தனர். ஒவ்வொரு வருடமும் அவன் காணாமற்போன நாளில் அவர்களது வீட்டில் சிலருக்கு மரக்கறிச் சாப்பாடு கிடைத்துக்கொண்டேயிருந்தது. மிக இரகசியமாக அமலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய தகவல்களை அந்தக் குடும்பம் பெற்றுக்கொண்டிருந்தது. எனினும் எங்கேயோ விழுந்த ஓட்டை அவன் சாள்ஸ் அன்ரணிப் படைப்பிரிவில் இருக்கும் செய்தியை இராணுவத்திற்குக் கசியச் செய்தது. இராணுவத்திற்குச் செய்தி கசிந்த விடயம் அவனது பெற்றோருக்கும் தெரிந்திருந்தது. மறுநாள் மகளை வேறு இடத்திற்கு அனுப்ப அவர்கள் திட்டமிட்டிருந்தனர். என்றாலும் இராணுவம் முந்திக்கொண்டது. செய்தி கிடைத்த அடுத்தநாள் அதிகாலை இராணுவ அணியொன்று சிவபுரம் நோக்கி நகர்வதாக புலிகளுக்கு தகவல் கிடைத்தது. அவர்கள் கிராமத்திற்கு அந்த தகவலை அனுப்பியிருந்தனர். ஓரளவு வயதானவர்களைத் தவிர அனைவரும் காட்டுக்குள் ஓடி ஒளிந்தனர். அவ்வாறு ஒளிந்திருந்தவர்களைப் பாதுகாப்பாக வைத்திருந்த புலிகளிடம் அமலனின் தங்கை ஆனந்தி சரண் புகுந்திருந்தாள். திரும்ப வீட்டிற்குச் செல்ல முடியாத அவளது நிலையினைத் தெரிந்துகொண்ட புலிகள் அவளையும் இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர்.

தனது கையை ரைபிளில் இருந்து மெதுவாகத் தளர்த்தினான் அமலன். "அவள் திரும்பி வீட்ட போகவே மாட்டன் எண்டு அடம் பிடிக்கிறாள்" மிகக் கெட்டிக்காரத்தனமாகவும் ஓர்மமாகவும் பயிற்சிகளைச் செய்து முடித்திருந்த அவளை மேலதிக பயிற்சிகளுக்காக வன்னித் தலைமையகத்திற்கு அனுப்பியிருந்தனர் புலிகள். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் அவளை சந்தித்துக் கதைத்திருந்தான் அமலன்.

"நான் இருக்கிறன் தானே.... நீ விலகிப் போனா அம்மாவையும் அப்பாவையும் பாக்கலாம் தானே..." அவனுக்கே அவ்வாறு கேட்பது விருப்பமாக இல்லை. என்றாலும் கேட்டுவைத்தான். "நீ அஞ்சு வருசம் தேசியக்கடமையை முடிச்சிட்டாய்.. நான் இப்பதான் தொடங்கியிருக்கிறன். எனக்குப் படிக்க ஆசை எண்டு உனக்குத் தெரியும் தானே.. இஞ்ச எனக்கு மருத்துவப் படிப்புக்கு சிபாரிசு செய்திருக்கினம். நான் படிக்கப்போறன்." ஆனந்தி சற்று நிறுத்தினாள்.

அவன் வீட்டைவிட்டு வெளியேறிய போது ஆனந்திக்கு எட்டரை வயது. பாலைப்பழங்கள் கனியத் தொடங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமொன்றில் ஒருவருக்கும் சொல்லாமல் காட்டுக்குள் பாலைப்பழம் ஆயச் சென்றவள் மதியமாகியும் வீடு திரும்பவில்லை. கிராமத்திலுள்ள பெரியவர்கள் இளைஞர்களென பட்டாளமாக பாலைப்பழக் காட்டுக்குள் சென்ற போது பெரிய மரமொன்றின் மீது ஏறியிருந்த அவளைக் கண்டு பிடித்து கூட்டி வந்தனர். கரடி திரத்தத் தொடங்கியதால் அந்த மரத்தில் ஏறிய அவளின் செயல் பல வாரங்களாக அந்தக் கிராமத்தில் வீரப்பிரதாபமாக அலசப்பட்டது.

“அந்தப் பெரிய மரத்தில ஏறீட்டாளே.. தரமான பெட்ட தான்”.. “அழவுமில்ல... வலு அமைதியா இருந்தாளென்ன”... கிளையே இல்லாத அந்த பால மரத்தில ஏறித்தானே இருக்கிறாள்”

பரட்டைத் தலையுடன் கிராமத்தின் புழுதி முழுவதையும் தனக்குரித்தாக்கிக் கொண்டு திரிந்தவள் பச்சை நிற காக்கிச் சீருடையில் எண்ணெய் தேய்த்து பின்னப்பட்ட இரட்டைச் சடையை தலைக்கு மேல்புறமாகக் கட்டி கண்களைப் பார்த்துப் பேசும் கம்பீர அழகை அவனால் ஒரு கணம் நம்ப முடியவில்லை.

ஆனந்தி தேர்ந்தெடுத்த வார்த்தைகளைப் பேசினாள். அவை மிக உறுதியாக இருந்தன.

“அவளுக்கு மருத்துவம் படிப்பிக்கப் போறதா சொன்னவள். வன்னி மருத்துவப் பிரிவு பொறுப்பாளர் ரவி அண்ணைக்கு கீழ இணைக்கப்பட்டிருக்கிறாள். அதால அவள் வரவே மாட்டன் எண்டு சொல்லீட்டாள்.” அமலன் சற்று நிதானித்தான். அவன் அடுத்து பேசப் போகும் வார்த்தையினை லீமா உணர்ந்து கொண்டார். “அண்ணை நான் வீட்ட போகலாமெண்டு நினைக்கிறன்... ஒரு மகனா நான் எண்ட குடும்பத்துக்குச் செய்வேண்டியத செய்திட்டு வர அனுமதிப்பீங்களா?”

அமலன் மீளவருவான் என்பதை லீமா தெரிந்துகொண்டார். “ஓம் நீர் போகலாம்... பணிஸ்மென்ட் இருக்கும்... ஆனால் உம்மட தேசசேவைக் காலம் மற்றது தங்கச்சி எங்களோட வந்தபடியாலயும் உம்மட தண்டனைக்காலத்தைக் குறைக்கச் சொல்லி நான் தலைவருக்கு எழுதுவன்... நீர் இப்ப படையணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனாய்வுப் பிரிவிலயும் இருக்கிறீர் எண்டதால இண்டையில இருந்து இருவது நாளைக்குப் பிறகு தான் உமக்கு விடுவிப்பு வரும்... போம்... போய் வீட்டுக் கடமையைச் செய்யும்.. ஆனால் நாட்டையும் மறந்திராதையும்..." அமலனின் குடும்பம் தற்போது அனுபவித்துவரும் சொல்லெணாத் துன்பங்களை லீமா அறிந்திருந்தார். அதனால் அவனை விடுவிப்பதற்கு அவர் ஒரு போதும் தயங்கவில்லை.

சமரொன்றின் வெற்றி அச்சமரில் ஈடுபட்டிருக்கும் போராளியின் மனநிலையிலேயே தங்கியிருக்கின்றது என்பதை சமர்கள நாயகனுக்கு அவரது களப் போராட்ட அனுபவங்கள் தெளிவாக்கியிருந்தது.

போர்க்களங்களில் போராளிகளின் கலங்காத மனநிலையே அவர்களைச் சரியான முடிவுகளை எடுக்கச்செய்யும் என்பதை அவர் தெரிந்திருந்தார். சிலவேளைகளில் அச்சரியான முடிவு போராளியின் உயிரைத் தியாகஞ் செய்யும் வரை செல்லும் என்பதும் அவருக்குத் தெரியும். அவ்வாறானதொரு போர்ச்சம்பவம் அவருக்கு என்றும் ஞாபகம் இருந்தது.

சண்டையொன்றின் போது "டர்பிடோ" என்ற சங்கேதச் சொல் கொண்டு அழைக்கப்படும் நீண்ட பிளாஸ்ரிக் குழாய்களில் அடைக்கப்பட்டு உருவாக்கப்படும் வெடிகுண்டினை இராணுவக் கம்பி வேலியின் கீழ் செருகி வெடிக்க வைத்து இராணுவக் கம்பி வேலியைத் தகர்த்து உள் நுழையும் திட்டமொன்றின் படி போராளிகள் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

டர்பிடோவை வெடிக்க வைத்து தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களின் ஊடாக இரண்டு தாக்குதல் அணிகள் உள் நுழைந்துவிட அவ்விரு அணிகளுக்கும் பாதுகாப்பை வழங்கும் முகமாக உள்நுழையவேண்டிய மூன்றாவது தாக்குதல் அணியினர் தாண்டவேண்டிய இராணுவக் கம்பி வேலியைத் தகர்க்க வைத்த டர்பிடோ வெடிக்கவில்லை.

உள் நுழைந்து பாதுகாப்பு இல்லாமல் இருந்த இரண்டு அணிகளின் மீதும் எதிரியின் துப்பாக்கிச் சூடுகள் இழப்பை ஏற்படுத்தத் தொடங்கின. நிலைமை எதிரிக்குச் சாதகமாகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பத் தொடங்கியிருந்தது. அப்போது மூன்றாவது அணியில் இருந்த போராளியொருவன் தன் மீது நேரடிச்சூடு விழும் எனத் தெரிந்து கொண்டே தகர்க்கப்பட வேண்டிய கம்பி வேலிக்கு அருகில் சென்று கம்பி வேலியை வெட்டும் கருவியினால் சில கம்பிகளை வெட்டித் தள்ளினான். அவனுடைய உடல் ரவைகளால் துளைக்கப்பட தன் சாவு நிச்சயமான பொழுதில் மேலும் சில கம்பிகள் வெட்டப்படாமல் இருந்ததை அவன் கண்டான். ஊர்ந்து சென்ற அவன் வெட்டப்படாத அக் கம்பிகளின் ஊடாக ஏனைய போராளிகள் உள்நுழைய தக்கவகையில் அக் கம்பிகளின் மீது வீழ்ந்து படுத்து தன் உயிரைத் தியாகம் செய்தான். மூன்றாவது அணிப் போராளிகள் அந்த மாவீரனின் உடலின் மீது தவழ்ந்து உள்நுழைந்து தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கினர். போரின் நிலைமை புலிகளுக்குச் சாதகமாகியது. அவனின் தியாகத்தால் அன்று பல போராளிகளின் உயிர்கள் காக்கப்பட்டிருந்தன. தனது உயிரை இழக்கத் துணிந்த முடிவை அந்தக் கணத்தில் எடுக்காமல் தனது உயிரை முக்கியம் என அந்தப் போராளி கருதியிருந்தால் முடிவு வேறாக இருந்திருக்கும்.

சண்டைகளின் போதுதான் போராளிகளின் மனநிலை தெளிவாகவும் உச்சமாக வெளிப்படும். அந்த மனநிலையில் தன்னுடைய உயிர் தனது குடும்பத்திற்கு இன்றியமையாதது என ஒரு போராளி நினைத்தால் ஒட்டுமொத்தப் போரின் வடிவமே மாறிவிடும். எனவே அவர் அமலனின் வேண்டுகோளை உடனடியாக ஏற்றிருந்தார். அதற்குப் பிறகு அமலன் அவரைச் சந்திக்கவேயில்லை.

தன்னுடைய வார்த்தைகள் அமலனைக் கட்டிப்போடும் என்பதை தேவன் அறிந்திருந்தான்.

"ஓம் தேவண்ணை.. 'லீமா சொன்னது சரிதான்...". "எங்கட நிலமை விளங்குது தானே உங்களுக்கு. இப்ப எங்களுக்கு ஆக்கள் தேவை. போருக்கு போக நாங்கள் தயாரா இருக்கிறம். ஆனா களத்தில நாங்கள் கவனத்தைச் செலுத்தேக்க மற்ற விசயங்களப் பாக்கிறதுக்கு ஆக்கள் தேவை அமலன் அண்ணை... அதுக்காகத்தான் உங்களக் கேக்கிறம்..." "எனக்கு விளங்குது தேவண்ணை.. ஆனா ரஞ்சியப் பற்றி நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்பட்டிருப்பீங்கள் தானே. அவள விட்டுட்டு கனதூரம் போறது எனக்கு சாத்தியப்படாது போல கிடக்கு. அதோட கிழமையில ஒரு மூண்டு நாளாவது நான் வேலை செய்து சம்பளத்தக் குடுக்கோணும்."... இடைமறித்தான் தேவன் "அமலண்ணை அதுகள நாங்கள் பாக்கிறம். ரஞ்சி எப்பிடிப்பட்ட பிள்ளையெண்டு எங்களுக்குத் தெரியும். அவாவ விட்டுட்டு நீங்கள தூர ஒண்டும் போக வேணாம். நீங்கள் படையணிப் புலனாய்வில இருந்ததால இஞ்ச உங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற சிறைச்சாலைக்கு உங்களப் போடுங்கோ எண்டும் மாசம் ஐயாயிரம் ரூவா காசும் இரண்டாயிரத்து ஐநூறு ரூவாக்கு மளிகைச் சாமானும் குடுங்கோ எண்டும் பைவ்பைவ் சொன்னவர்".

"எனக்கு அதெல்லாம் வேணாம். என்னை மூண்டு நாள் வேலை செய்ய விடுங்கோ" போராட்டப் பங்களிப்பிற்கு சம்பளம் வாங்க அமலனின் போராளிப்பண்பு இடங்கொடுக்க மறுத்தது. "இல்ல அண்ணை.. நீங்கள் முழுநேரமும் அங்க நிக்கோணும். லீவு எடுத்து வீட்ட போகலாம். உங்களோட இன்னும் ஒரு முன்னாள் போராளியும் பகல்ல நிப்பார். இரவு எங்கட ரீம் பெடியள் சிலரும் நிப்பாங்கள். சிறைச்சாலய இரவு திறக்கவும் மாட்டந்தானே." அமலனுக்கு வேறெதுவும் சொல்லத்தோன்றவில்லை.

"சரி தேவண்ணை.. எப்ப வரோணும் ..." "இண்டைக்கு... இண்டைக்கே வாங்கோ...." தேவன் பெரிதாகச் சிரித்தான். அமலனும் சிரித்து விட்டான். "நாளையில இருந்து தொடங்குவம். விடிய எட்டு மணிக்கு வாங்கோ".

புலிப்பண்பாட்டின் மற்றொரு அம்சம்தான் தேவன் அமலனை அண்ணை என்று விளிப்பதும், அமலன் தேவனை அண்ணை என்று விளிப்பதுமாக இருந்தது. களம் பல கண்ட வயதில் கூடிய முன்னாள் போராளி என்பதால் அமலனை அண்ணை என தேவன் அழைத்தான். வயதிற் குறைந்தவனாக இருந்தாலும் ஒரு பொறுப்பாளருக்கு செலுத்த வேண்டிய மரியாதையின் நிமித்தம் அமலன் தேவனை அண்ணை என விளித்தான். அவர்கள் இருவரும் தங்களை மறந்து சிரித்த அந்தக் கணம் வாழ்வின் மறக்கமுடியாத இன்னுமொரு தருணமாகப் போனது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

கரன் அடுத்த நாளே தனியார் கல்வி நிலையங்கள் சிலவற்றில் சேர்ந்திருந்தான். இறுதிப் பரீட்சைக்கு இன்னும் ஐந்து மாதங்களே இருந்தன. "கடன உடனப்பட்டாவது நான் காசனுப்புறன் நீ படிச்சு முடி ராசா" என்ற புவனத்தின் வார்த்தைகளைத் தட்டமுடியாமல் கரன் நகரத்திற்கு வந்திருந்தான். இருப்பிடமும் சாப்பாடும் அன்பில்லத்தில் இருந்து அவனுக்குக் கிடைத்ததால் டியூசன் கட்டணங்களை மட்டுமே செலுத்த வேண்டியிருந்தது.

"டேய் மச்சான்.. எப்படா வந்தனி" மேகா இன்ஸ்டிடியூட்டிற்கு வந்த கரனைத் தெரிந்த ஒருவன் அவனை அணுகினான். அந்த முகம் கரனுக்கு சில சலனமான ஞாபகங்களைத் தந்தது. என்றாலும் சரியாக அவனை ஞாபகப்படுத்த முடியவில்லை. "என்னய மறந்திட்டாய் என்ன?.. நான் ஜெயந்தன் டா!... அரசரட்ணம் மாமாட மகன்.. கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு பின்னால வீடு.. நான் பி வகுப்பு. நீ கெட்டிக்காரன் எண்டதால ஏ வகுப்புல படிச்சனி" அவன் சொல்லச் சொல்ல ஜெயந்தன் என்ற அவனின் தோற்றம் கரனுக்கு நினைவில் வந்தது. ஆனால் அந்த ஜெயந்தனுக்கும் இந்த ஜெயந்தனுக்கும் இடையில் மலையளவு வித்தியாசங்கள். நான்கு வருடங்களுக்கு முன் ஜெயந்தன் இயக்கத்திற்கு போய்விட்டதாகவும் வன்னியில் இருப்பதாகவும் ஊரில் இப்போதும் கதை இருந்தது. "நீ இயக்கத்துக்கு போய்ட்டாய் எண்டு தானே கதை" கரன் மெதுவாக கேட்டான். "அதைப்பற்றிப் பிறகு கதைப்பம் மச்சான்.. அது பெரிய கதை... இப்ப இந்த வாசலில நிண்டு கதைச்சுக்கொண்டிருந்தமெண்டா வாத்தி கத்துமடா... வா கிளாசுக்கு போவம்.. முடியக் கதைப்பம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெரிய நகரத்தில் தனக்குத் தெரிந்த ஒருவன் அதுவும் தன்னுடன் படித்தவன், தற்போதும் படித்துக் கொண்டிருப்பவனைக் கண்டது கரனுக்குள் ஒரு ஆசுவாசத்தை ஏற்படுத்தியது.

நான்கு மணி நேரமாக இரண்டு பாடங்கள் தொடர்சியாக நடைபெற்றது. பன்னிரண்டு மணிக்கு முடிந்த வகுப்புக்கள் மீண்டும் இரண்டு மணிக்குத் தொடங்க இருந்தன. முதலாவது வகுப்பில் ஜெயந்தனின் அருகாமை கரனுக்கு மலையளவு உதவியது. அந்த வகுப்புக்கு வந்திருந்த அனைவருடனும் ஜெயந்தன் நட்பாக பழகினான். எனினும் சில பெண்கள் அவனைச் சட்டை செய்யவில்லை.

"இதுகள் எல்லாம் சென். மேரீஸ் பெட்டைகள்... நல்ல மார்க்சும் கொஞ்சம் தஸ் புஸ் இங்கிலீசும் கதைச்சால் தான் பாப்பாளுகள்...எனக்கு மார்க்ஸ் தாண்டா சரிவரும்... தஸ் புஸ் சரியே வராது மச்சான்" என்று அதற்குக் காரணத்தையும் சொன்னான் ஜெயந்தன்.

கரன் அந்த உலகத்தைப் பார்த்து அரண்டே போய்விட்டான். மிக அருகில் இருக்கும் கிராமங்களில் நாளாந்தம் தமிழ் மக்களின் வாழ்வு கேள்விக்குறியாகிக் கிடக்க நகரம் தன் செல்வச் செழிப்பில் வேறு ஒரு உலகத்தைப் படைத்திருந்தது.

"எப்பிடி மச்சான் இருக்கு? இண்டைக்கு முதல் நாள் தானே! கொஞ்சம் கஸ்டமாத்தான் இருக்கும்... யோசிக்காத நான் இருக்கிறன்" அன்றே ஜெயந்தனின் பக்கம் சாய்ந்துபோனான் கரன். ஜெயந்தன் இல்லாத நகர வாழ்வை கரன் விரும்புவான் போல தெரியவில்லை. பன்னிரண்டு மணிக்கு வகுப்பு நிறைவு பெற்றவுடன் ஜெயந்தனின் சைக்கிளில் அன்பில்லம் வரை சவாரி கிடைத்தது கரனுக்கு.

"கரன் ஒண்டரைக்கு ரெடியா நில்.. நான் வாறன் ஏத்த" என்றபடி ஜெயந்தன் பிரதான வீதியின் ஊடாகச் சென்று காசுத் தெருவுக்குள் திரும்பும் வரை அன்பில்லத்தின் வாசலில் அவனைப் பார்த்தபடி நின்றான் கரன். ஓரிரண்டு நாட்கள் அவ்வாறே கடந்தன. கரன் ஜெயந்தனின் இறுக்கமான ஆதரவிற்குள் மூழ்கிப்போனான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பில்லத்தில் இருபத்தினான்கு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களுள் ஒரு ஆண் மற்றும் இரு பெண் மாணவர்கள் கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையான பத்தாம் வகுப்புப் பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் மூவருக்கும் இரவில் ஒரு மணிநேரம் கரன் கணிதம் கற்பிக்கப் பணிக்கப்பட்டான். அவர்கள் மூவருடனும் கரனின் ஊடாட்டமானது அவனது தனிமையை இல்லாமற் செய்திருந்தது.

சில நாட்களின் பின் அன்று மாலை வகுப்புகள் நான்கு மணிக்கு நிறைவாகின. "கரன் எத்தன மணிக்கெடா நீ இல்லத்துக்குள்ள போயிரோணும்?" "ஆறு மணிக்குள்ள அங்க போயிரோணும் மச்சான்" "ஓகே.. அப்ப இன்னும் நேரங்கிடக்கு.. வா பீச் வரைக்கும் போய்ட்டு வருவம்"

"மச்சான் நாங்கள் பீச்சுக்குப் போறம்" ஜெயந்தன் மற்றைய மாணவர்கள் சிலரைப் பார்த்து சொன்னான். அது தகவலாகவும் அழைப்பாகவும் ஒரே நேரத்தில் இரண்டு அர்த்தத்தைப் பரப்பியது. இன்னும் இரண்டு சைக்கிள்கள் அவர்களுடன் இணைந்தன. ஆறு பேரும் மேகாவில் இருந்து புறப்பட்டு இடதுபுறமாகத் திரும்பி பிரதான நெடுஞ்சாலையில் சில மீற்றர்கள் பயணித்து வாடிவீட்டு சுற்றுவட்டத்தில் வலதுபுறமாகத் திரும்பி மேலும் சில மீற்றர்கள் பயணிக்க கடற்கரையின் விசாலம் கரனின் கண்களுக்குள் மெல்ல மெல்லப் புகுந்தது. பிரதான நெடுஞ்சாலையில் திரும்பியவுடன் வலது பக்கமாக காவல்துறை நிலையமும் இரும்பினால் செய்யப்பட்ட வீதித் தடைகளையும் தாண்டிய போது ஜெயந்தன் கரனின் காதுக்குள் குசுகுசுத்தான்.

"இது தான் பழைய பொலிஸ்... இதுக்குள்ள தான் விசேட விசாரணைப் பிரிவுகளெல்லாம் இருக்காம்"

இனி அந்தப் பெருந்தெருவால் வரக்கூடாது என்று கரன் மனத்திற் கொண்டான். "ஏன் சும்மா கரச்சல் பிடிச்ச றோட்டால எல்லாம் போறாய்.. பொலிஸ் ஆமி இல்லாத றோட்டால போகலாம் தானே" கரனின் கதை முடியும் முன்னரே ஏனைய ஐவரும் சிரிக்கத் தொடங்கினர். அறுவருக்குள்ளும் சற்றுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டான மதன் கரனைப் பார்த்துக் கத்தினான். "டேய்... வந்து இன்னும் ஒரு கிழமையாகேல்ல தானே... இன்னும் ஒரு மாசத்துக்குப் பிறகு ஏலுமெண்டா நீ ஆமி இல்லாத ரோட்டால கூட்டிக்கொண்டு போடா பாப்பம்" அது என்றுமே சாத்தியப்படவில்லை கரனுக்கு.

"மோட்டர் சைக்கிள் சரியாகீட்டு... இனி என்னால ஓடித்திரிய ஏலும்" என்ற ஜெயந்தனின் தகவல் கரன் நகரத்திற்கு வந்து ஒரு வாரத்தின் பின் வான்மீ யிடம் வந்து சேர்ந்தது.

அந்த மஞ்சள் நிற பயண அனுமதியின் அர்த்தங்களே வேறு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

"கரன் இண்டைக்கு எண்ட ரூமுக்கு வாறியா... கொப்பிகள எடுத்துக்கொண்டு போனயெண்டால் எழுதிப் போட்டு கொண்டு வரலாம் நீ." கரனுக்கு ஜெயந்தனுடைய கொப்பிகள் தேவையாக இருந்தன. கரன் கற்பிக்கும் அந்த பத்தாம் வகுப்பு மாணவர்கள் நோட்ஸ் எழுதித்தர உடன்பட்டிருந்தார்கள். "ஓம் மச்சான் வாறன்" அன்று மதியம் வகுப்புக்கள் முடிய ஜெயந்தன் தங்கியிருக்கும் அறையை நோக்கி அவர்களின் சைக்கிள் பயணித்தது. மேகாவில் இருந்து புறப்பட்டு சில மீற்றர்களில் பெருந்தெருவை அடைந்து வலதுபுறமாகத் திரும்பி தபாலகச் சந்தியைக் கடந்தபோது கரன் வந்திறங்கிய துறைமுக வாசல் சுற்றுவட்டத்தை அவர்களது சைக்கிள் வந்தடைந்தது.

"கரன் நீ வந்திறங்கின இடம் தான்டா இது"

"என்ன மச்சான் விசயன் இலங்கைக்கு வந்த இடம் மாதிரிச் சொல்றாய்" அவர்கள் இருவரும் வாய்விட்டு சிரித்தார்கள். அந்தச் சிரிப்பை துறைமுக வாயிலில் காவல் பங்கரில் இருந்த இரண்டு கண்கள் தவறாகப் புரிந்து கொண்டன. உட்துறைமுக பெருந்தெருவின் ஊடாக அவர்களின் பயணம் புனித சூசையப்ப கல்லூரியின் பின்பக்கமாக அமைந்திருந்த தொழில்நுட்பக் கல்லூரியினைத் தாண்டியபோது "இதில தான் மச்சான் கரும்புலியொண்டு பாஞ்சது" என்றான் ஜெயந்தன். "உண்மையாவோடா" "ஓம் டா.. அக்கா ஒராள் பாஞ்சவா.. ஆனா மிஸ் ஆகீட்டு .. வெடிச்சுச் செத்த அந்த அக்கா தாண்டா பாவம்" சிங்கள மகா வித்தியாலயத்தைத் தாண்டி பெருந்தெரு ஏற்றம் கண்டது. அந்த ஏற்றத்தில் சைக்கிளில் 'டபுள்' என்று சொல்லப்படும் இன்னுமொருவரையும் ஏற்றிக்கொண்டு ஓடுவது சாத்தியமற்றது. இருவரும் இறங்கி சைக்கிளை உருட்டியபடி நடந்து உவர்மலைச் சந்தியை வந்தடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவர்மலை எனவும் 'ஓர்ஸ்ஹில்' எனவும் அழைக்கப்படும் அந்த மலைப்பிரதேசம் முழுவதும் தனியே தமிழர்கள் வசித்து வந்தார்கள். மலைப்பிரதேசத்தில் அந்தத்தில் 'பிளாங்டன் பொயின்ட்' எனப்படும் பெரிய இராணுவ முகாம் அமைந்திருந்தது. இருபத்தியிரண்டாவது படைப்பிரிவின் தலைமையகம் 'பிரிகேட் கொமாண்ட்' அங்கு அமைந்திருந்தது. அதனால் உவர்மலைக்கு பிரவேசிக்கும் மூன்று வீதிகளிலும் சென்றிகள் உருவாக்கப்பட்டிருந்தன. அச் சென்றிகளில் இடதுகரை கீழ்வீதி மற்றும் வலதுகரை கீழ்வீதி ஆகியவற்றில் இராணுவமும் உவர்மலை மத்திய வீதியில் காவல்துறையும் காவற்கடமையில் இருந்தன. அக் காவல் சென்றிகளின் ஊடாகப் பயணிப்பவர்கள் சந்தேகத்திற்கிடமானவர்களாக இருந்தால் துருவப்படுவார்கள். மேலும் சந்தேகமிருந்தால் கைது செய்யப்படுவார்கள். சந்தேகத்தைத் தீர்க்க முடியாது விட்டால் வலிந்து காணாமல் போய்விடுவார்கள்.

பொதுவாகவே உவர்மலை மத்திய வீதியையே மக்கள் போக்குவரவுக்குப் பயன்படுத்தி வந்தனர். அந்த மத்திய வீதியூடாக இவர்கள் இருவரும் உள்நுழைந்தபோது அங்கு காவலில் இருந்த காவல்துறையினன் ஒருவன் இவர்களை மறித்தான்.

"எங்கே போறது?" "ரூமுக்குப் போறம்" "என்ன படிக்கிறதா?" "ஓம் சயன்ஸ் படிக்கிறம்" "பாக்கைக்காட்டு" கொப்பிகளை எடுத்து அங்கிருந்த பாடசாலை மேசையொன்றில் கொட்டிவிட்டு இருவரும் அமைதியாக நின்றனர். அந்த காவல்துறையினனின் முகத்தில் திருப்தி தெரிந்தது. அடையாள ஆவணங்களைப் பரிசீலித்த பின் அவன் ஒரு கேள்வி கேட்டான் "வராய சென்றியக் கடக்கேக்க ஏன் சிரிச்ச ரெண்டு பேரும்"

துறைமுகத்தை "வராய" என சிங்களத்தில் அழைப்பது ஜெயந்தனுக்குத் தெரியும். அவர்களுக்கு தூக்கிவாரிப் போட்டது. ஜெயந்தன் தயாரானான்.

"அது சேர்.. இவன் இண்டைக்கு ஜீன்சிண்ட சிப்ப பூட்டாம கிளாசுக்கு வந்திருந்தவன். அத ஒரு பெட்டைதான் பாத்துட்டு சிப்ப பூட்டுடா முதல்ல எண்டவள் அத சொல்லித்தான் சிரிச்சம்..." ஜெயந்தன் சொன்ன பொய் அந்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல்துறையினனையும் சிரிக்கச் செய்தது. அதேவேளை கரன் உண்மையிலேயே சிப்பைத் தடவிப்பார்த்தான். அதைக்கண்ட அந்தக் காவல்துறையினன் கொஞ்சம் சத்தமாகவே சிரித்தான். உடனடியாகவே கட்டாயப்படுத்தி அந்தச் சிரிப்பைத் தணித்தான். முகத்தில் கடுமையை வரவைத்தான். "சென்றிகளத் தாண்டேக்க மருவாத தறவேணும்... நாங்க உங்கள எல்லாம் பாத்துக்கொண்டுதான் இருக்கிறம். புலி எண்டு கூட கனநேரம் புடிக்கா.. ஹறித... சரியா?" அவன் அவர்களை வெருட்டினான்.

"என்னண்டுடா உனக்கு அப்பிடியொரு ஐடியா வந்தது?" கரன் அப்பாவியாக கேட்டான். "ஐடியா என்ன மச்சான் ஐடியா...நீ சிப்ப தடவி அதுக்கொரு அக்சன் குடுத்தாய் பார்... அதுதான் மச்சான் கிளைமாக்ஸ்" மீண்டும் ஜெயந்தன் தன்னை மறந்து சிரித்தான். வேறு சென்றிகள் எங்காவது உள்ளதா என்று கரன் அங்குமிங்கும் பார்த்தான். இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு அவனும் சிரித்தான். "பயப்பிடாத மச்சான்... இவங்கள் இப்பிடித்தான்".

ஜெயந்தனின் அறை அப்பிடியொன்றும் சுத்தமானது அல்ல. கரனுக்கு அவ்வாறு சுத்தமில்லாமல் இருக்கத் தெரியாது. ஒரு அசூசையை அந்த அறையில் கரன் உணர்ந்தான். வயதான ஒரு அம்மம்மா மட்டும் வசிக்கும் அந்த வீட்டில் ஜெயந்தனின் அறை இருந்தது. அந்த அம்மாவின் பிள்ளைகள் எல்லோரும் வெளிநாட்டில் இருந்தார்கள். அந்த தாயை பராமரிப்பதற்கு ஒரு நடுவயது பெண் வந்து செல்வார். ஜெயந்தனுக்கே அந்த அம்மாவின் பிள்ளைகள் காசு அனுப்புவார்கள். அவன் வங்கியில் இருந்து காசை எடுத்து அந்த தாயிடம் கொடுத்து விடுவான். இந்த உதவியால் அறை மட்டும் ஜெயந்தனுக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் அவன் அந்த வீடு முழுவதையும் சுதந்திரமாகப் பாவித்தான்.

"மச்சான் நீ இயக்கத்துக்கு போன கதையப் பத்தி சொல்றன் எண்டாய் சொல்லண்டா?"

மூச்சை விட்டேற்றித்தனமாக சத்தத்துடன் வெளியே விட்டான் ஜெயந்தன்.

"ஹ... போனண்டா... சம்பூரில போய்ச் சேந்தன் மச்சான்... சேந்தாப் பிறகு மூண்டு நாளா என்னப் பற்றின தகவல்களத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்டிக் கொண்டிருந்தாங்கள்... அந்த மூண்டு நாளும் சரியான விசரா இருந்துதுடா.. போனா உடனே ரெயினிங் அனுப்போணும். ரைபிளத் தரோணும். ஆமியச் சுடோணும். இதென்ன சும்மா வச்சிருக்கிறாங்கள் எண்ட யோசன வேற... பிறகு வேற காம்ப் ஒண்டுக்கு மாத்தீனாங்கள்.. அங்க மச்சான் மூண்டு மாசம் சும்மாத்தான் இருந்தனான்.... அந்த நேரத்தில காம்பில எடுபிடி வேலைகளச் செய்துகொண்டிருந்தன்... அதோட மனசு வெறுத்திட்டு.. எனக்கு ஐடேண்டிகாட் எடுத்தாங்கள். இஞ்சபார் வச்சிருக்கிறன். என்ர பெயரே இது.. அன்பழகன் கிறிஸ்டி அலோசியஸ் எண்டு இருக்கு. ஐடேண்டி காட் வந்தோன்ன எனக்கு ஐடியா மாறீட்டு. ஒரு நாள் ஒருத்தருக்குஞ்சொல்லாம காட்டுக்கால நடந்து மெயின்ரோட்டுக்கு வந்திட்டன். அங்க இருந்த ஒரு வீட்டுக்குப் போய் விசயத்த சொன்னன். அதுகளோட கொஞ்ச நாள் நிண்டனான். பிறகு ஒரு நாள் எங்கட வீட்டுக்கு செய்தியக் குடுக்ககூடிய ஒரு ஆள் கிடைச்சார். வீட்டுக்கு மெசேஜ் அனுப்பீனன். அப்பர் வந்து இஞ்ச டவுனுக்கு கூட்டிக் கொண்டு வந்து விட்டவர். நான் இயக்கத்த விட்டு ஓடீட்டன் எண்டா ஊரில அப்பராத்தைக்கு மரியாதயில்லாம போகும்.. அதால அவயும் ஒருத்தருக்குஞ்சொல்லேல்ல.. நானும் ஒருத்தருக்குஞ்சொல்லேல்ல. இப்ப ரெண்டாந்தரம் படிச்சுக்கொண்டிருக்கிறன்" ஒவ்வொரு வசனங்களையும் முடிக்கும்போது ஜெயந்தன் கரனின் முகத்தில் ஏதும் சந்தேகங்கள் வருகின்றதா என்பதை அவதானித்தான். அவ்வாறு அவதானிப்பதையும் கரன் காணாமலிருக்கத்தக்க வகையில் மறைத்துக் கொண்டான். இரண்டு வருடக் கடும் பயிற்சி அதனை அவனுக்கு சாத்தியமாக்கியிருந்தது.

ஜெயந்தன் சொல்லியவற்றில் முதலிரண்டு விடயங்கள் மட்டுமே உண்மை. அவன் இயக்கத்திற்குப் போனதும் முதல் மூன்று நாட்கள் அவனைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கச் செலவிட்டதாகவும் அதற்குப் பிறகான மூன்று மாதங்களும் புலிகளின் முகாமொன்றில் பணிக்கமர்த்தப்பட்டு தனது பொறுமை சோதிக்கப்பட்டதாகவும் இரண்டு வருட புலனாய்வுப் பயிற்சியின் போதுதான் ஜெயந்தன் அறிந்துகொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறையானது பெருவளர்ச்சி பெற்ற துறையாக இருந்தது. தொடர்பாடலையும் புலனாய்வையும் பெருவிருத்தி செய்வதில் புலிகள் அதீத கவனஞ் செலுத்தியிருந்தனர். மிகக்குறைந்தளவு வளங்களுடன் நேரடியாக ஸ்ரீலங்கா இராணுவத்தையும் இராணுவத்திற்குப் பின்புலமாக செயற்படும் பன்னாட்டு வல்லரசுகளையும் எதிர்கொள்வதற்கு சிறந்த புலனாய்வும் அதிநவீன தொடர் பாடலும் இன்றியமையாதது என்பதை அவர்களுக்கு ஈழப்போராட்ட வரலாறு கற்றுத் தந்திருந்தது. புலனாய்வின் ஒரு பகுதியாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புலனாய்வு மற்றும் முக்கிய இலக்குகளின் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கிய படையப்புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டிருந்தது. அதற்கு சாள்ஸ் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார். ஜெயந்தன் அந்தப் பிரிவினுள் உள்வாங்கப்பட்டிருந்தான். அதற்கான பயிற்சிகளை இரண்டு வருடங்கள் பெற்றிருந்த அவன் திருகோணமலை நகரப்பகுதியில் மாணவனாக நிலைப்படுத்தப் பட்டிருந்தான். அவனுக்கு நம்பிக்கையான ஆனால் அவனைப்பற்றியோ அவனது செயற்பாடுகள் பற்றியோ தெரியாதவர்களைக் கொண்டு அவன் தனக்கிடப்பட்ட பணிகளைச் செய்துகொண்டிருந்தான். தற்போது ஜெயந்தனுக்குக் கிடைத்திருக்கிறான் கரன். புலனாய்வுத் திட்டமிடலின் படியே கரன் நகரத்திற்குப் பயணித்திருந்தான். ஆனால் அது கரனுக்கோ அல்லது புவனத்திற்கோ தெரிந்திருக்கவில்லை.

“இது தான் மச்சான் அந்தப் பெரிய கத... ஆனாச் சுருக்கமாச் சொல்லிப்போட்டன் என்ன?” “ம்...நல்லகாலம் நீ தப்பி வந்திட்டாய்... இஞ்ச உனக்குப் பிரச்சனையில்லையோ?” “இல்லடா...தப்பிக்கோணும் எண்டால் உடனே ஒரு கதைய நம்பிற மாதிரி சொல்ல வேணும்.. ஆனா அந்தக் கதய பிறகு வேற ஆரையும் கொண்டு உறுதிப்படுத்தக்கூடிய மாதிரி சொல்லவும் கூடாது.. இதுதான் தாரக மந்திரம்.. நீயும் பழகீருவாய்” ஜெயந்தன் கரனுக்கு வகுப்பெடுத்தான். “பழகுவம்... பழகுவம்...” அவர்கள் தம்மிடையே பல விடயங்களைப் பழகிக் கொண்டார்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அறையிலிருந்த மேசை முழுவதும் வீசப்பட்டிருந்த கொப்பி புத்தகங்களை கரன் அடுக்கி வைத்தான். பின்னர் தனக்கு தேவையான கொப்பிகள் சிலவற்றை தனியாக எடுத்து வைத்தான்.

அந்தக் கொப்பிகளுக்குள் அவனுக்குத் தேவையில்லாத மற்றொரு கொப்பியையும் ஜெயந்தன் செருகினான். சில மணித்தியாலங்களின் பின் கரன் புறப்பட்டான்.

"மச்சான் சைக்கிள நீ கொண்டு போ. எனக்கு வீட்ட கொஞ்ச வேலையிருக்கு.. முடிச்சிட்டு நிக்கிறன் பின்னேரம் அஞ்சு மணிக்கு வாறீயா என்னய ஏத்திக் கொண்டு போக..." கரன் ஒத்துக்கொண்டான்.

"மோட்டார் சைக்கிள் சரியாகீட்டு... இனி என்னால ஓடித்திரிய ஏலும்" என்று வான்மீ-க்கு ஜெகன் அனுப்பிய செய்தி செயலுருப்பெறத் தொடங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

புவனத்திற்கு கரனின் மீது அதீத வாஞ்சை, தனியானதொரு கரிசனம்.

மயிர்கள் நிறைந்த "புஸ்...புஸ்" என்ற பஞ்சுத்தன்மையுடன் கணுக்கால்களின் இடையே சுழன்று திரியும் சாம்பலும் வெள்ளையும் கலந்த பூனைக்குட்டியாகவே கரனை புவனம் நினைத்துக் கொள்வாள். 'அம்மா.... அம்மா' என கரனின் குரல், தாய்ப்பூனையைச் சுற்றியலையும் பூனைக்குட்டியைப் போல அவளோடு கூடவே திரியும். அவனுடைய இன்மை அந்த வீட்டை வெறுமையாக்கியிருந்தது. கரன் புறப்பட்ட நாளன்று அவள் காலையிலேயே வீரபத்திரன் காலடிக்குச் சென்று விட்டாள். கரன் திருகோணமலையைச் சென்றடைந்து விட்டான் என்ற செய்தி கிடைக்கும் வரை அவள் சோறு தண்ணி இல்லாமல் வீரபத்திரன் கோவிலிலேயே கதியாய்க் கிடந்தாள். செய்தி வந்தது. அதேவேளை அலி அடித்த செய்தியும் சேர்ந்தே வந்திருந்தது.

"அலி அடிச்சவனாமே... வீரபத்திரா என்ர குஞ்சைக் காப்பாத்திக் கொண்டு போய்ட்டாயப்பா... அந்த அலி வாயால ரெத்தம் கக்கிச் சாகோணும் வீரபத்திரா.. நான் உனக்கு வடைமாலை போட்டு தீச்சட்டி எடுப்பன் ஐயா..." அவள் பெருங்குரலெடுத்து அழுதாள். ஒரு பிடி மண்ணை எடுத்து தன் சேலைத்தலைப்பில் கட்டிக் கொண்டாள்.

அந்தக் கிராமத்தின் பொதுவான நிறத்துக்குச் சற்றும் பொருத்தமில்லாத வெள்ளை நிறம் செண்பகத்திற்கு வாய்த்தது எப்படி என்று எல்லோரும் ஆச்சரியப்படுவதுண்டு. சின்ன வயதில் இருந்தே சிவலைப்பெட்டை என்பது அவளது செல்லப்பெயர். வளர்ந்த பின் அவளது முழுப்பெயர் மறைந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டது. 'சிவலை' என்பதே அவளது பெயராகிப் போனது.

"சிவலை... பத்து நாளாகீட்டு என்ர பிள்ளையக் கண்டு" புவனத்தின் நெருங்கிய நட்பாகிப் போன செண்பகத்திடம் சொல்லி மாய்ந்துகொண்டிருந்தாள் புவனம். புவனம் பிள்ளையை எண்ணி மாய்வது சிவலைக்கு நன்றாகத் தெரியும். "நாளைக்கு ஒருக்கா போய்ட்டு வாவன்...என்ன விடிய வெளிக்கிட்டயெண்டால் பின்னேரம் வந்திரலாம் தானே." புவனத்தின் எண்ணத்தில் இருந்ததை அப்படியே புரிந்துகொண்டு சிவலை சொல்லி முடித்தாள். அவர்களின் நட்பு பல்லாண்டுகளாக நிலைத்திருப்பதன் சூட்சுமம் இதுதான். "ஓமடி எனக்கும் ஆசையாத்தான் இருக்கு.. போய் பாத்திட்டு வந்தாத்தான் கொஞ்சமாவது மனசாறும்" அவளையறியாமல் அவளின் கண்களைக் கலக்கிய கண்ணீர் இமைகளைத் தாண்டி மண்ணில் நேராக வீழ்ந்து மறைந்தது.

"அரசியல் துறை அலுவலகத்துக்கு இப்ப போனாயெண்டால் பாஸ் எழுதித் தருவான். நாளைக்கு விடியப் போய்ட்டு வந்திரலாம்" அவள் அழுவதை சிவலையால் தாங்க முடியவில்லை. "என்னட்ட ஒரு ஐநூறு இருக்கு எடுத்துக் கொண்டு போ" புவனத்திற்கு இருந்த தடையைத் தீர்த்தாள் சிவலை. 'வீரபத்திரா..' அவள் உள்ளுணர்ந்தாள். விறுக்கென எழுந்தாள். முகத்தைக் கழுவி திருநீறை பட்டைபோட்டாள். "சிவலை... வீட்டுக் கதவுகளப் பூட்டு... நான் பாஸ் எடுத்துக்கொண்டு வாறன்.." அரசியல் அலுவலகத்தை நோக்கி வேகமாக அவள் நடந்தாள். பாஸ் கொடுக்கும் வீரபத்திரனை அவ்வளவு குறைந்த நாட்களில் மீண்டும் சந்திப்போம் என்று புவனம் ஒரு போதும் நினைத்ததில்லை. அலுவலகத்திற்கு முன்பாக இருந்த இருக்கைகளில் ஏற்கனவே முகம் பரிச்சயமில்லாத ஒருவர் அமர்ந்திருந்தார். அவருடைய வேட்டி நல்ல வெள்ளை நிறமாக இருந்தது. வந்திருந்தவர் நகரத்தில் இருந்தே வந்திருக்க வேண்டும் என்பதை அவரது வேட்டியின் நிறத்தைக் கொண்டு புவனம் ஊகித்தாள். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இவ்வளவு வெள்ளையாக வேட்டியிருப்பது சாத்தியமற்றது. சோப் தடைசெய்யப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் என்பதாலும் தெருக்கள் யாவும் மண்தெருக்கள் என்பதால் புழுதி படர்வதாலும் வெள்ளை வேட்டிகள் பழுப்பாக மாறியிருக்கும். சுத்த வெள்ளை வேட்டிகளை விசேசங்களுக்கு மட்டுமே அவர்கள் உடுத்துவார்கள்.

"ஒருத்தரும் இல்லையோ" புவனத்தின் அவசரம் அந்தப் பரிச்சயமில்லாதவருடன் பேச்சுக் கொடுக்கத்தூண்டியது. "இப்பதானாம் சாப்பிடப் போனவங்கள்... இருக்கச் சொல்லியிருக்கிறாங்கள்" அவர் போராளிகளை சற்று மரியாதையின்மையாக விளித்ததை புவனம் குறித்துக்கொண்டாள். "பாஸ் எடுக்கவோ வந்தனியள்?" "இல்லையுங்கோ.. வரி கட்டறதுல சின்ன பிரச்சனை. அதைக் கதைக்கத்தான் மலையில இருந்து வந்தனான்" "ஓ.." அவருடைய மரியாதையின்மையான விளிப்புக்களுக்கு காரணம் என்ன என்பது புவனத்திற்கு இப்போது விளங்கியது. "அது ஆயப்பிரிவு.. நீங்க சம்பூருக்குத்தான் போக வேணும்" "நான் அங்கதான் முதல்ல போனனான்.. பெரிய பொறுப்பாளரைச் சந்திக்கச் சொன்னவனுகள். அவன்ட பெயர் முகுந்தனாம். அவன் இண்டைக்கு அங்க வர மாட்டானாம். இந்த அலுவலகத்துக்குத்தான் வருவானாம்.. அதான் இஞ்ச வந்தனான்" அவர் 'அவன்.. இவன்' என புலிகளைக் கதைப்பது அவளுக்கு சூடேற்றியது. அதற்கு மேல் அவருடன் கதைத்தால் தான் பொறுமையிழந்து விடுவேன் என்பதை புவனம் உணர்ந்தாள்.

புவனமும் அந்தப் பெரியவரும் அடக்குமுறைக்குள்ளான ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்... திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்... நாளாந்தம் அவச்சாவுகளில் சிக்கித் தப்பியிருப்பவர்கள். நாளை உயிர்தரிக்குமா? என்பதை உறுதிப்படுத்த முடியாத அடிமை வாழ்வு.. புலிகளோ அதை எதிர்த்துப் போராடும் மனிதர்கள்.. அந்த சுதந்திரப் போராளிகளைச் சிலர் புனிதராகவும் காவற்தெய்வங்களாகவும் போற்ற மேலும் சிலர் வெறும் மண்ணாக நினைப்பது எவ்வாறு? அது நிகழ்ந்தது. விசித்திரமான இந்த மனோநிலை தமிழர்களிடம் விரவிக் கிடந்தது.

அலுவலக அறையில் கதைச் சத்தங்கள் கேட்கத்தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளுக்க வாங்கோ" முகுந்தனின் குரலில் கட்டளையும் வேண்டுகோளும் கலந்திருந்தது. அவர் தடாலென எழுந்தார். சேட்டை இழுத்து விட்டு வேட்டியைச் சரி செய்தார். விறைப்பாயிருந்த உடலை சற்று தணித்து செயற்கையான மெல்லிய கூனலை வயிற்றுப் பகுதியில் உருவாக்கினார்.

"தம்பீ" வாசலில் வாஞ்சையுடன் தனது குரலைப் பதிந்தார். புவனம் வைத்த கண் வாங்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கண்களுக்கு நாளாந்தம் வீடு தேடி வந்து நீர்பருகிச் செல்லும் வெள்ளை நிற கொம்பன் மாட்டின் நினைவு ஏனோ வந்து போனது. கொம்பன் ஊரெல்லாம் பெரிய இடியன். ஆனால் அவள் வீட்டில் மட்டும் செல்லப்பிள்ளை.

உள்ளே அவர் கெஞ்சுவது அவளுக்குக் கேட்டது. தான் இருந்த இடத்தில் இருந்து எழுந்து வாகாக வாசலுக்கு அருகாக இருந்த இருக்கையில் குடுகுடுவெனச் சென்று அமர்ந்து காதைத் தீட்டிக் கொண்டாள்.

"மன்னிக்கோணும் ஐயா! நாங்கள் வரி கட்டச் சொல்லிச் சொல்றது எங்கட தனிப்பட்ட நலனுக்கே? இல்ல தானே. இந்த மண்ண மீட்கிற போரில நாங்கள் ஈடுபட தேவையான நிதி அது. தமிழீழத்தில நீங்கள் எப்பிடி இருக்கப்போறியல் எண்டு உங்கட நிலைய நினைச்சுப்பாருங்கோ. நீங்களே பொருட்கள இறக்குமதி செய்து விக்கலாம். உற்பத்தி செய்து ஏற்றுமதியும் செய்யலாம். இப்ப என்ன செய்றியள்? சிங்களவங்கள் இறக்கிற பொருள வாங்கித் தமிழீழத்தில் விக்கிறியல். சிங்களவன் சொல்றது தான் விலை. நாங்கள் போராடுறது இந்த அடக்குமுறைக்கும் சேத்துத்தானே.. அதப் புரிஞ்சுகொண்டிருந்தா நாங்க அனுப்பின முதல் கடிதத்துக்கே நீங்கள் வந்து காசக்கட்டிப்போட்டு போயிருப்பியல். அஞ்சு கடிதம் அனுப்பியும் வரேல்ல... தண்டனை எண்டு அறிவிச்சோன்ன ஓடி வாறியல்... சுட்டுப்போடுவம் எண்ட உயிர்ப்பயம் என்ன? எங்கட பெடியள் உயிருக்கு பயந்திருந்தா இண்டைக்கு நீங்கள் மலையிலயே இருந்திருக்க மாட்டியள். மட்கோவிலயும் ஸ்ரீமாபுரத்திலயும் கொண்டு வந்து குடியேத்தின சிங்களவன் ஆரெண்டு தெரியுந்தானே? மாத்தறயில ஜெயில்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த ரவுடிகளையும்.. ஊர்ச்சண்டியனுகளயும் தானே! இருத்திப்போட்டு உங்கட வளம் எல்லாத்தயும் புடுங்கி குடுத்ததோட சொட்கண், வாள், ஜெலிக்கநைட் குண்டு எல்லாம் வச்சிருக்க விட்டிருக்கிறாங்கள். அவங்களுக்கு நடுவில ஆரிருக்கிற பாதுகாப்பில நீங்கள் இருக்கிறியல்?. ஏன் மட்கோவிலயும் ஸ்ரீமாபுரத்திலயும் குடியேத்தினவங்கள்?. நீங்க டவுன விட்டு வெளிய வாரெண்டால் அவனுகள தாண்டித்தான் வரோணும். பிரச்சனயெண்டா வருவியலே? உள்ளுக்கயே வச்சு முடிச்சுப் போடுவாங்கள். நாங்கள் ஆயுதத்தோட இருக்கிறபடியாலதான் சும்மா கிடக்கிறான் சிங்களவன்." அவன் நிறுத்தினான். வெள்ளை வேட்டியுடன் போனவர் பேசியது அவளுக்குக் கேட்கவில்லை. ஆனால் முகுந்தனின் குரல் தெளிவாக கேட்டது. "அஞ்சு மாசமா ரீல் விட்டதுக்கு உங்களுக்கு ஒரு மாசம் சிறை. பத்து நாளைக்குள்ள ரெண்டு லச்சம் வரி மூண்டு லச்சம் தண்டம் மொத்தம் ஐஞ்சு லச்சம் கட்டுப்பட வேணும். கட்டாமல் பத்து நாள் தாண்டினா ஒரு வருசம் சிறை. பிறகு எவ்வளவு கட்டினாலும் ஒரு வருசம் முடிஞ்சு தான் வீட்ட போகலாம்." "தம்பி நாளைக்கே காசக் கட்டச் சொல்றன்.. மாசம் மாசம் ஒழுங்கா வரி கட்டுறன். ஆனா ஒரு மாசம் சிறையிருக்க என்னால ஏலா ராசா.. என்னை மன்னிச்சு விடுங்கோ ராசா" "முதல்ல காசக் கட்டுற வழியப் பாருங்கோ. மிச்சத்த பிறகு யோசிப்பம்... வெளிய இருங்கோ" புவனம் அதிர்ந்து போனாள். "சிவா.. ஐயாவ வெளிய இருத்து... வாகனம் வர இந்தத் துண்டோட அவரச் சம்பூருக்கு அனுப்பு.. முன் சென்றிக்குச் சொல்லி விடு" அவனது கட்டளை தெளிவாக இருந்தது. கதிரையொன்று வேகமாகப் பின் தள்ளப்படும் ஓசை புவனத்திற்குக் கேட்டது. அவள் குனிந்தபடியே எழுந்து ஓடிச்சென்று தான் முதலில் இருந்த கதிரையில் இருந்தாள். தன்னை யாரும் பார்க்கிறார்களா என்பதை சுற்று முற்றும் பார்த்தாள். வாயிலுக்கு காப்பாக நின்ற போராளி தன்னைப் பார்த்து சிரிப்பதைக் கண்ட அவளின் முகத்தில் அசடு வழிந்தது. 'இவன் எப்ப வந்தவன்' பாஸ் எடுக்க வந்த வேகத்தில் வாயிலைக் கவனிக்க தவறியது அப்போது தான் அவளுக்குப் புரிந்தது.

ஒரு குள்ளமான இளைஞன் வீட்டின் வாசலுக்கு வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை நிற காக்கி சேட். கறுப்புநிற ஜீன்ஸ். இடுப்புக்குச் சற்று மேலாகக் கட்டப்பட்ட அகன்ற பெல்ட். அதனது வலது பக்கம் கைத்துப்பாக்கி. இடது பக்கம் கைத்துப்பாக்கிக்குரிய இரண்டு ரவைக்கூடுகளைத் தாங்கிய பொதி. அதற்கு அருகில் வோக்கிடோக்கி. கால்களில் பாட்டா செருப்பு. குரலுக்கும் உருவத்திற்கும் எந்தத் தொடர்புமே இருக்கவில்லை. ஆனால் அவனிடமிருந்து எழுந்த ஆகர்சிக்கும் சக்தி அவளை அசைத்தது. தானாவே கதிரையை விட்டு புவனம் எழும்பினாள். "என்ன எணை.. இஞ்ச வந்திருக்கிறியல்" அந்த கம்பீரக்குரல் மறைந்து புவனத்தைப் பார்த்தவுடன் குழையும் ஒரு குரலை அவன் வெளிப்படுத்தினான். 'எணை' என்பது அம்மாவை மிக வாஞ்சையுடன் அழைக்கும் குரல். "பாஸ் எடுக்க வந்தனான் ராசா" "வாங்கோ இஞ்ச... என்ன எங்கள விட்டுட்டு ஓடப் போறியலோ?" "இல்ல ராசா... மகனப் பாக்கப் போகோணும்.. மலையில படிக்கப் போனவன் ஒரு பத்து நாளைக்கு முதல்" "அப்பிடியோ? எப்ப போறியல்.. எப்ப வருவியல்" "நாளைக்கு போய்ட்டு... பின்னேரம் வந்திருவன்" ஒரு கணம் அவன் நிதானித்தான். "பாஸ் தார ஆள் போய்ட்டாரே அம்மா...ம்... என்ன செய்வம்...? சொல்லுங்கோ" புவனத்திற்குள் கழிவிரக்கம் பரவியது. கண்கள் கீழே சரிந்தன. "உள்ளுக்க... வாங்கோ பாப்பம்" அவனைத் தொடர்ந்தாள் அவள்.

"இருங்கோ... பாஸ் தரவேண்டியவர் நாளைக்கு மத்தியானத்துக்குப் பிறகு தான் வருவார். நீங்க நாளையண்டைக்கு போங்கோவன்" "இல்ல தம்பி இண்டைக்கும் நாளைக்கும் மட்டும் தான் எங்களுக்கு வயலில வேலை இல்ல.. பிறகு தொடங்கீரும்.. அந்தச் சம்பளத்தில் தானே நாங்கள் வாழுறம் ராசா"

"ஓ... சரி..நான் பாஸ் தந்தா...நீங்கள் எனக்கொரு உதவி செய்வியலே?" "ஓம் செய்றன்.." உடனடியாகவே அவள் ஒப்புக்கொண்டாள். "வெளில இருக்கிற ஐயா ஒரு தகவல் தருவார். அதைக் கொண்டு போய் டவுனுக்குள்ள இருக்கிற கடையில சேர்க்கவேணும்...செய்வியலே?" அவள் 'ஙே' என முளித்தாள். ஏதோ சாமான் வாங்கி வரச் சொல்லுவான் என்றே அவள் எதிர்ப்பார்த்தாள். "எணை.. பயப்பிடுறதுக்கு.. இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்டும் புலீண்ட வேலை இல்ல.. அவருக்கு நீங்கள் செய்ற உதவி.. ஆனா மகனக் கூட்டிக்கொண்டு கடைக்குப் போயிராதையுங்கோ.. சரியே" அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆனால் உடன்பட்டாள். நாளைக்கு செல்வதற்கு அவளுக்கு பாஸ் வேண்டும்.

"சிவா.. ஐயாவ வரச்சொல்லு..." அந்த ஐயாவைக் கண்டவுடன் முகுந்தனின் குரலில் கடுமை எகிறியது.

"இந்த அம்மா நாளைக்கு டவுனுக்குப் போறா. செய்தியக் குடுத்துவிடப் போறீங்களோ இல்லாட்டி உங்கட யாக்கள் தேடி வரட்டுமோ?" "இல்லையுங்கோ.. செய்தியக் குடுப்பம்" அவரின் சொற்களில் மரியாதை வந்திருப்பதை புவனம் அவதானித்தாள். "செய்தியக் கொண்டு போவம்" மனதுக்குள் நினைத்துக்கொண்டவுடன் அவருக்கு முன்பாக தான் சற்று உயர்ந்திருப்பதாக புவனத்திற்குப் பட்டது.

"இது தான் கடையின்ர பெயர்.. கொமர்சல் வங்கிக்கு ரெண்டு கட தள்ளி இருக்கு. அங்க பிரபா எண்டு ஒருவர் இருக்கிறார்.. அவரிட்ட இந்த துண்ட உங்கட ஐயா தந்தவர் எண்டு சொல்லி குடுங்கோ. நீங்கள் படகால இறங்கீன உடனேயே முச்சக்கர வண்டியப் பிடிச்சுப் போய் கடையில சொல்லீருங்கோ. முச்சக்கர வண்டிக்கு குடுக்க இந்தாங்கோ காசு". அவள் விடாப்பிடியாக காசை வாங்க மறுத்தாள். முகுந்தன் அவளை வற்புறுத்தி அதனைப் பெற வைத்தான். ஐநூறு ரூபாவும் பாஸ் மற்றும் அவரது கடிதமும் அவளுக்குக் கிடைத்தன. 'உங்கட ஐயா தந்தவர்' என்ற அந்த வரிகளை அவள் நெட்டுருப் போட்டபடி அங்கிருந்து வெளியேற ஆயத்தமானாள்.

புவனம் பொறுப்பாளரின் அறையில் இருந்து சந்திப்பவர்கள் இருக்கும் பகுதிக்கு வந்தாள். அந்த வெள்ளை வேட்டி அணிந்தவர் அங்கு இருந்தார். சற்று நேரத்திற்கு முன் அவரிடமிருந்த கம்பீரமெல்லாம் வடிந்து சாமான்ய மனிதனாக அவர் தோற்றமளித்தார். கண்கள் பனித்துப்போய் இருந்த அவரைப் பார்க்கவே புவனம் விரும்பவில்லை. ஆனால் அவரைத் தாண்டித்தான் வாயிலுக்குச் செல்ல முடியும். புவனம் அருகில் வந்ததை உணர்ந்த அவர் எழும்பி நின்றார். "அம்மா..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பிடியாவது நாளைக்கு முதல் வேலையாப் போய் சொல்லீருங்கோ அம்மா... உங்களக் கையெடுத்துக் கும்பிட்டுக்கேக்கிறன்.." அவர் அம்மா என்று அழைத்தவுடனேயே புவனம் அங்கிருந்த அனைத்தையும் மறந்தாள். அவரை மிக்க வாஞ்சையுடன் பார்த்தாள். "எனக்கு ஒரு மகனும் ஒரு மகளும் அம்மா... மகன் சரியாப் பிந்தித்தான் பிறந்தவன்... முதல் மகனுக்காக நாங்கள் அலையாத கோயிலில்ல. பத்து வருசத்துக்குப் பிறகு பிறந்தவனுக்கு இண்டைக்கு பதினாலு வயசு. இந்த பதினாலு வருசமும் நான் அவனப் பிரிஞ்சு ஒரு நாள் கூட இருந்ததில்ல.. இண்டையில இருந்து ஒரு மாசத்துக்கு அவனப் பாக்கேலாமப் போப்போகுது எண்டு...." அந்த வசனத்தை முடிக்க முதலே அவர் வெடித்தழத் தொடங்கினார்.

ஒரு கண நேரத்தில் காலம் மனிதர்களை எப்படியெல்லாம் மாற்றிவிடுகின்றது. புவனம் ஆறுதல் எதுவும் சொல்லாமலே அவரை அழ விட்டாள். அவருடைய கேவல்கள் அடங்கும் வரை அவள் அங்கு நின்றாள். மீளமுடியாததும் அடக்க முடியாததுமான கவலை மனிதனுக்கு ஏற்படும் போது துணை ஒரு மனிதனே தவிர பணமோ சிலையான கடவுளரோ அல்ல என்பதை அவள் நன்றாக அறிவாள். "ஐயா.. கதிரையில இருங்கோ.." அவர் ஒரு கதிரையிற் சரிய அவளும் அமர்ந்தாள். "நான் நாளைக்கு முதல் வேலையா உங்கட கடைக்குத்தான் போவன். இது சத்தியம். அதுக்குப் பிறகு அவை செய்ய வேண்டியத செய்வினம்.. நீங்கள் கெதியா வீட்ட போகலாம்.. பெடியள் கொஞ்சம் கண்டிப்புத்தானே ஒழிய நல்ல மனசுள்ளவங்கள் ஐயா.. அவங்கள நீங்கள் சபிச்சுப் போடாதீங்கோ.. உங்களுக்கு நல்ல வழி கிடைக்கும். நான் என்ர வீரபத்திரனிட்ட வேண்டுவன். நீங்கள் கெதியா விடுதலையாகோணும் எண்டு" அவர் தன்னை மெதுவாக ஆசுவாசப்படுத்திக்கொண்டார். அவள் அங்கிருந்து எழும்பி அமைதியாக வாயிலை நோக்கிச் சென்றாள். "ஏனம்மா கோவமாப் போறியள்?" வாயிலில் சென்றிக்கு நின்ற கரனின் வயதையொத்தவன் புவனத்தை மறித்தான். "பின்ன என்னடா.. உந்தப் பொறுப்பாளர் தம்பி இப்பிடியா நடந்து கொள்றது.. எனக்கெண்டால் பிடிக்கவேயில்ல.." புவனத்தின் சிந்தனையில் போராளிகள் என்பவர்கள் அன்பும் இரக்கமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்தவர்களாகவும் இயேசுவிற்குச் சமமானவர்களாகவும் எண்ணியிருந்த எண்ணங்கள் அவளது கண்முன்னே சுக்குநூறாவதை அவள் விரும்பவில்லை.

"அம்மா நீங்கள் கோவிக்கிறதுல ஞாயம் இருக்கு.. ஆனா இவருக்கு அஞ்சு தடவ கடிதம் கொண்டு போய் குடுத்தநாங்கள்.. ஒரு கடிதம் கொண்டுபோய் குடுக்கிறதுக்குள்ள சில வேளை உயிரையே குடுக்க வேண்டிவரும். அப்பிடி இருக்கேக்குள்ள வந்து சந்திச்சிருந்தா பிரச்சன முடிஞ்சிருக்கும். சுடுவம் எண்டு கடிதம் போட்ட உடனே ஓடி வருகினம். எங்கட நிலைமையையும் கொஞ்சம் யோசிக்கோணும் தானே." அவன் தனக்கு சொல்வது போல அவருக்குச்சொல்வதாகவே அவளுக்கு பட்டது. "ஓமப்பு.. நாங்கள் உடனேயே உணர்ச்சி வயப்படுற ஆக்கள் தானே.. அதான் கோவிச்சிட்டன்.. நான் வாறன் தம்பி.. நாளைக்கு நான் டவுனுக்குப் போறன்... பிள்ளைக்கு ஏதும் வேணுமே?" "இல்லணை... கவனமாப் போய்ட்டு வாங்கோ.. ஏலுமெண்டா ஒரு சொக்கலேட் கிறீம் பிஸ்கட் பக்கட் வாங்கியாங்கோ... எனக்கு விருப்பம்"

"கட்டாயம் ராசா.. கட்டாயமா வாங்கியாறன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

மில்கான் ரேடர்ஸ்சின் முதலாளி சைபுள்ளா கல்லாப்பெட்டியின் முன்னே மிகவும் அந்தரித்தபடியிருந்தார். மூதூரின் மிகப்பெரிய பலசரக்குக் கடைகளில் ஒன்றாக மில்கான் ரேடர்ஸ்சைக் கட்டியெழுப்பியிருந்தார் சைபுள்ளா. திருகோணமலை நகரத்தில் பெரிய பலசரக்குக் கடையை பாட்டன் காலத்திலிருந்து நடாத்திவரும் ஈஸ்வரலிங்கத்தின் தகப்பனாரிடம் சாமான் நிறுத்துக் கொடுக்கும் பெடியனாக வேலைக்குச் சேர்ந்த சைபுள்ளா இன்று மிகப்பெரிய கடை முதலாளியாக அமர்வதற்கு அவரது விடாமுயற்சியும் அர்ப்பணிப்பும் மட்டுமே காரணமல்ல என்று அவர் நம்பினார். அல்லாவின் கிருபையும் ஈஸ்வரலிங்கத்தின் உதவியும் கூடவே இருந்ததும் தான் என எப்போதும் சொல்பவர். ஈஸ்வரலிங்கத்தினை விட ஐந்து வயது பெரியவரான சைபுள்ளாவுக்கும் ஈஸ்வர லிங்கத்திற்கும் இடையிலான உறவு ஈஸ்வரலிங்கத்தை பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்று அழைத்து வருவதில் ஆரம்பித்தது. ஈஸ்வரலிங்கம் அவரை நானா என்றே அழைப்பார். சைபுள்ளா அவரை லிங்கம் என அழைப்பார். இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு சைபுள்ளாவிற்கு மூதூரில் கடைவைத்துக் கொடுத்தது ஈஸ்வரலிங்கத்தின் தகப்பன் தான். அடுத்த மாதமே அவர் மரணித்து விட ஈஸ்வரலிங்கம் முதலாளியானான். உறவிலும் வணிகத்திலும் நெருக்கமானவர்களாக அவர்கள் இருந்தனர்.

புலிகளிடமிருந்து இரண்டாவது கடிதம் வந்தவுடன் லிங்கம் நானாவைத் தொடர்பு கொண்டார். “ஒருக்கா வந்துட்டு போங்க லிங்கம்” “பாப்பம் நானா... கட்டாயமா வரோணும் எண்டேக்க வாறன்” “பொடியளோட விளையாடாதீங்க.. அவங்கட சட்டம் துவக்கில தான் இருக்கு” எவ்வளவோ சொல்லியும் லிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவதாக இல்லை. நேற்று மாலை லிங்கம் சற்று அந்தரப்பட்டு நானாவுடன் தொலைபேசினார். “கடசி எச்சரிக்கையெண்டு கடிதம் வந்திருக்கு நானா.. ரெண்டு நாளைக்குள்ள வரோணும் எண்டும் போட்டிருக்கு” சைபுள்ளாவிற்கு கடைசி எச்சரிக்கையின் அர்த்தம் விளங்கியது. ஆனால் லிங்கத்தை குழப்ப அவர் விரும்பவில்லை. புலிகளைச் சந்தித்து அவர்கள் வழங்கும் தண்டனையை செய்து முடித்துவிட்டால் பிறகு அவர்களோடு நட்பாக உறவாட முடியும் என்பதை சைபுள்ளா உணர்ந்தார். “கடசி எச்சரிக்க எண்டுறது சும்மா வெருட்டத்தான்.. ஆனா லிங்கம் நீங்க வாங்க கட்டாயம்” “ஓம் நானா.. நாளைக்கு வாறன்..” அடுத்த நாள் படகில் வந்திறங்கிய லிங்கத்தை தனது காரில் ஜிபிஎஸ் முகாமின் கடைசிக் காவல்நிலை வரை கொண்டுசென்று விட்டுவந்தார் சைபுள்ளா. சிபாரிசுடன் புலிகளிடம் போவது சிக்கலை மேலும் தீவிரமாக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். அதனால் அவர் எந்தச் சிபாரிசையும் லிங்கம் சார்பாக புலிகளிடம் செய்யவில்லை.

காலை பத்துமணிவாக்கில் கட்டபறிச்சானுக்குள் போன லிங்கத்தை மாலை வரை காணவில்லை. மூதூரில் இருந்து திருகோணமலைக்குச் செல்லும் கடைசிப்படகும் மணி மூன்று முப்பதிற்குப் புறப்பட்டுப் போயிருந்தது. இன்று இனி அவர் வரமாட்டார் என்பது புரிந்தது. லிங்கத்தின் வீட்டிலிருந்தும் கடையில் இருந்தும் பல தடவைகள் அவருக்கு தொலைபேசி அழைப்புக்கள் வந்த வண்ணமே இருந்தன. ஆரம்பத்தில் ‘வந்திருவார்’ என்ற நம்பிக்கையாகச் சொன்ன சைபுள்ளாவிற்கு நேரம் செல்லச் செல்ல நம்பிக்கை வற்றத்தொடங்கியிருந்தது. எனினும் அதனை அவர் மற்றவர்களுக்குக் காட்டாமல் “நானும் காத்துக்கொண்டு தான் இருக்கிறன்” “என்ர கடைப் பெடியன் ஒருவன பாலத்து சென்றியோட நிக்க விட்டிருக்கிறன்” என்றெல்லாம் சொல்லி சமாளித்துக்கொண்டிருந்தார். மாலை ஐந்து மணியைத் தாண்டியதும் அவரால் பொய் சொல்ல முடியவில்லை. “நாளைக்குக் காலமை நான் அங்க போய் பாக்கிறன். பயப்பிடாதீங்கோ” என்று திரும்பத்திரும்ப சொல்லி அவர்களை தேற்றிக்கொண்டிருந்தார். அவர்களை மட்டுமல்ல தன்னையும் தான். மறுநாள் எப்படியும் அங்கு சென்று பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதாகவே அவர் முடிவு செய்தார். மாலை ஆறு மணி பாங்கு அழைப்பு பள்ளியில் இருந்து வரமுதலே அவர் பள்ளியில் தொழுகைக்கு போயிருந்தார். "யா அல்லாஹ்... என்னுடைய சகோதரனைக் காப்பாற்று.. அவன் யாருக்கும் தீமை செய்யாதவன். உதவி கேட்டு வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாதவன்.. என் உண்மைச்சகோதரன்.. என் மீது இரங்கங்காட்டுவதைப் போல அவன் மீதும் உன் கருணையைப் பரப்பு" அவரின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

விடுதலைப்புலிகளுடன் சைபுள்ளாவிற்கு தொடர்புகள் இருந்தன. அவரது பலசரக்குக் கடையில் இருந்தே பொருட்களை விடுதலைப்புலிகள் இரகசியமாகக் கொள்வனவு செய்வர். புலிகளுக்குத் தேவையான பொருட்களின் பட்டியலை அவர்கள் அனுப்பி வைப்பார்கள். அந்தப் பொருட்கள் தயாரானதும் 'சரியான நாள்' ஒன்றில் கட்டபறிச்சான் ஆற்றின் ஊடாக வத்தையில் ஏற்றப்படுகின்ற பொருட்கள் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்து சேரும். மாதத்தில் ஓரிரு தடவைகள் இவ்வாறு பொருட்கள் அனுப்பப்படும். சரியான நாள் என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள கப்டன் குணத்திலக்கவிற்கும் சைபுள்ளாவுக்கும் உள்ள தொடர்பு முக்கியமானது. கப்டன் குணத்திலக்க மூதூர் பிரதேசத்தின் கிழக்குப் பகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவராக இருந்த நடுத்தர வயதுடையவர். ஒருமுறை தன்னுடைய குடும்பத்துடன் தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டிருந்த போது அவரது வாகனம் பழுதாகி நகரமுடியாது நின்றது. அந்த நேரத்தில் அவ்வழியாக தனது வாகனத்தில் வந்த சைபுள்ளா எவ்வித நன்மையும் எதிர்பாராமல் அறிமுகமில்லாத குணத்திலகவிற்கு உதவி புரிந்திருந்தார். அந்த நட்பு பின்னர் குணத்திலக்க மூதூருக்கு மாற்றலாகி வந்ததும் மேலும் பலப்பட்டதுடன் வணிக நட்பாகவும் மாறியது. கப்டன் குணத்திலக்க இராணுவப் புலனாய்வு விசேட கல்விப் பயிற்சியை அமெரிக்க இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் மூன்று மாதங்களாகக் கற்றிருந்தார். அவர் தமிழையும் சரளமாகக் கதைக்கக்கூடியவர். எதைக் கொடுத்து எதை எடுக்கலாம் என்பது அவருக்கு அத்துப்படி. சைபுள்ளா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைக் கடத்துவதை தடுத்தால் புலிகள் வேறு ஒருவரின் ஊடாக இன்னும் மேம்பட்ட வழிகளில் பொருட்களைக் கடத்தும் வல்லமையைக் கொண்டவர்கள் என்பதை கப்டன் அறிந்திருந்தார். அவ்வாறு தடுப்பதால் கிடைக்கும் இராணுவ நலன்களை விட தனது கண்காணிப்பின் கீழ் பொருட்கள் நகர்வதும் சைபுள்ளாவை ஒரு இரட்டை முகவராகப் பயன்படுத்துவதும் அவருக்கு பெருமளவு நலன்களைத் தரும் என்பதை சரியாகக் கணிப்பிட்டே இந்த நடவடிக்கையை அவர் அனுமதித்திருந்தார். அவருடைய புலனாய்வுக் கல்வியும் அனுபவமும் அவருக்கு இவ்வாறான முடிவை எடுக்கத் தூண்டியிருந்தன. அதன்படி கப்டன் குணத்திலக்கவிற்கு நம்பிக்கையான இராணுவத்தினர் ஆற்றை அண்டிய சென்றிக்கு பணிக்கமர்த்தப்படும் இரவில் பொருட்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் செல்லும். சைபுள்ளாவிடமும் குணத்திலக்கவிடமும் மறுகரையில் இருந்த புலிகளிடமும் ஒரு புரிந்துணர்வொன்று இருந்தது. அரசாங்கத்தினால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அனுப்பத் தடைவிதிக்கப்பட்ட பொருட்கள் எவற்றையும் சைபுள்ளா அனுப்பமாட்டார். மளிகைப் பொருட்களே அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் பொருட்களின் பட்டியலை குணத்திலக்கவும் அவதானிப்பார். பொருட்கள் அதிகமாகக் கேட்கப்படும் போது விடுதலைப் புலிகளின் பிரசன்னம் அதிகரித்திருப்பதை குணத்திலக்க அறிந்துகொண்டு அதற்கு ஏற்ப இராணுவக் காவல் நிலைகளை உசார் படுத்தியிருப்பார். பொருட்கள் இராணுவ கப்டனின் ஆதரவுடன் தான் தமது பகுதிக்கு அனுப்பப்படுகின்றன என்பதையும் தகவல்களை சைபுள்ளாவே இராணுவத்திற்கு வழங்குகின்றார் என்பதையும் புலிகள் நன்கு அறிவர். அதனை விடுத்தால் வேறு வழிகளில் பொருட்களைப் பெற்றுக்கொள்ள பெருஞ்சிரமத்தை தாம் அனுபவிக்க வேண்டிவரும் என்றும் அவர்கள் அறிவார்கள். எனவே சரியான சந்தர்ப்பம் கிடைக்கும் வரை இந்த வழியிலேயே பொருட்களைப் பெற்றுக்கொள்வதென்றும் காலம் கனிந்து வரும் போது சைபுள்ளாவை குறிவைக்கலாம் என்பதும் அவர்களது நிலைப்பாடாக இருந்தது. அதனை சைபுள்ளாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக அறிந்திருந்ததால் தன்னுடைய தனிப்பட்ட பாதுகாப்பில் கூடிய கவனம் செலுத்தியிருந்தார். அவர் லிங்கத்துடன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு செல்லாமலிருந்ததும் அதனால்தான்.

லிங்கத்திற்கு தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது என்பதனை பள்ளிவாயலில் இருந்து திரும்பி வந்த சைபுள்ளா ஓரளவிற்கு உணர்ந்திருந்தார். முகுந்தன் சரியான 'கிராக்' பிடித்தவன் என்பதை அண்மையில் அவன் டிஸ்பென்சரி முதலாளி குலதீபனுக்கு வழங்கிய தண்டனையில் இருந்து அறிந்து கொண்டார். திருகோணமலையில் ஆங்கில மருத்துவ மருந்துகளை விற்கும் டிஸ்பென்சரி நடாத்தி வந்த குலதீபனுக்கு ஒரு நாள் சம்பூருக்கு வருமாறு கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது. அடுத்த நாளே குலதீபன் சைபுள்ளாவின் கடைக்கு வந்திருந்தார்.

"என்ன செய்வம்.. வரச்சொல்லிப் போட்டாங்கள்.. உடனேயே வந்திட்டன்... போய்ப்பாப்பம்" குலதீபன் சொல்லச் சொல்ல சைபுள்ளா யோசனையில் ஆழ்ந்தார். "காசு கேக்கப்போறாங்கள் போல..." "அப்பிடியெண்டா பரவாயில்ல.. கதைச்சுக் கட்டிப்போட்டு வந்திருவன்.." "அதான் சரி.. ஆனா கேக்கிறத குடுக்க ஓம்படாம ஒரு கணக்கா கட்டப்பாருங்கோ தீபன்" "ஓம் நானா... பாக்கிறன் நான்" கடைப்பெடியனுடன் மோட்டார் சைக்கிளில் இறுதி இராணுவ நிலை வரை அனுப்பி வைத்தார் சைபுள்ளா. குலதீபன் கடையில் இருந்து அகன்றவுடன் நிலையான தொலைபேசி இணைப்பில் கப்டன் குணத்திலக்கவைத் தொடர்புகொண்டார் சைபுள்ளா. "யா... கப்டன் குணத்திலக்க கியர்" உறுதியான அந்தக் குரலைக் கேட்கும் முதல் தருணங்களில் எப்போதும் சைபுள்ளா சற்றுப் பயப்படுவது உண்டு. "நான் சைபுள்ளா கதைக்கிறன்" "ஓம் சைபுள்ளா... சொல்லும்" "தீபன் எண்டு ஒரு ஆளை வரச்சொல்லிக்கிடக்கு.. அவர இப்பதான் என்ர கடைப்பெடியனோட அனுப்பி வச்சிருக்கிறன்" "சரி நான் பாக்கிறன்"

விடுதலைப்புலிகளின் காவல் நிலையத்தை நோக்கி வேக வேகமாக நடந்தான் தீபன். சைபுள்ளாவின் மோட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிளில் அவரது கடையாளுடன் வந்ததால் இராணுவக் கெடுபிடிகளோ புலனாய்வு விசாரணைகளோ தீபனுக்கு நடைபெறவில்லை. 'நானாவுக்கு செல்வாக்கு அதிகம்' என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டான் அவன். விடுதலைப்புலிகளின் ஆரம்ப காவல்நிலையை அடைந்தபோது விசாரணைகள் ஆரம்பமாகின. புதிதாக வருபவர்கள் விசாரணைகளை முடித்து தற்காலிக அனுமதி பெற்றே உட்செல்ல வேண்டியிருந்தது. "என்ன பெயர்" "க.குலதீபன்" "முகவரி...." அவர்களது சாதாரண பதிவுகளிற்கான கேள்வியின் முடிவில் பதிவினை மேற்கொண்ட போராளி உள்வரும் காரணத்தை வினவினான். "என்ன காரணமா போறீங்கள்" "ஆயப்பகுதி வரச்சொல்லி விட்டிருக்கினம்" "கடிதம் வந்ததோ?" "ஓம்" அந்த பதிலை கேட்டவுடன் ஒரு பதிவேடொன்றை தேடி எடுத்து மேசையில் வைத்தான் அந்த விசாரணையாளன். "கடிதத்தின்ர இலக்கம் அல்லாட்டி திகதி ஞாபகம் இருக்கோ" "இலக்கம் அறுபத்து மூன்று கோடு இருபத்திநாலு" "ஓ.. முகுந்தன் அண்ணயிட்ட போகோணும் நீங்கள்" என்றவாறே குறித்த இலக்கத்தை அந்தக் கொப்பியில் தேடியெடுத்து அதிலுள்ள விபரங்களும் தீபன் முதலே தனக்கு வழங்கிய விபரங்களும் சரியானவையா என ஒப்பிட்ட பின் ஏற்கனவே அச்சடிக்கப்பட்டிருந்த தாளொன்றினையெடுத்து விபரங்களைப் பதிந்து தீபனிடம் நீட்டினான். "சம்பூருக்குப் போய் ஆயப்பகுதியெண்டு கேளுங்கோ.. காட்டுவாங்கள் அங்கபோய் இந்தத் துண்டக் குடுங்கோ" "சரி தம்பி"

'ஓ.. முகுந்தன் அண்ணயிட்ட' என்ற அந்தப்போராளியின் தொனி தீபனுக்குள் மெல்லிய கலக்கமொன்றைப் பரப்பியிருந்தது.

கட்டபறிச்சான் சந்தி தாண்டி நடந்து போய்க்கொண்டிருந்த தீபனைத் தாண்டிச் சென்ற ராசா சைக்கிளை நிற்பாட்டினார். "தம்பி எங்க போறியல்" "சம்பூருக்கு ஐயா" "கெரியல்ல பின்னுக்கு இருந்து பழக்கமிருக்கோ?" "ஓம் ஐயா.. இருப்பன்" "சரி ஏறுங்கோ" ராசா சைக்கிளை மிதிக்கத்தொடங்க ஓடிச்சென்று பின் கரியலில் ஏறி இருந்தான் குலதீபன். "ஏன் ஐயா கெரியலில இருந்து பழக்கம் இருக்கோ எண்டு கேட்டனியள்" ராசா மூச்சை நன்றாக உள்ளே இழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிளை சற்று வேகமாக மிதித்து நுரையீரலில் புகுந்திருந்த காற்றை முற்றாக ஊதி வெளித்தள்ளினார். இறால் பிடிக்கும்போது சுருட்டைத் தொடர்ந்து புகைப்பதால் நுரையீரல் சுருங்கி மூச்சுவாங்குவதாக அவர் உணரத் தொடங்கியிருந்தார். அதனால் நேரங்கிடைக்கும் போதெல்லாம் நுரையீரலை முழுதாகக் காற்றால் நிரப்ப முயற்சிப்பதை வழமையாகக் கொண்டிருந்தார். அவர் வாயால் காற்றை ஊதித் தள்ளியதை கவனித்த குலதீபன் அவருக்கு மூச்சு முட்டுவதாகவே புரிந்துகொண்டான். ஆனால் ராசா கதைக்கத் தொடங்கியவுடன் அந்த ஊதித்தள்ளல் வேறு காரணத்துக்கானது என்று தெரிந்தது. "மொட மொடப்பான காச்சட்டையும் மடிப்புக்குலையாத சேட்டும் போட்டிருக்கிறபடியால டவுனில இருந்து வாறியல் எண்டு தெரியுது. நடையில வேகமில்ல என்டதால நடந்து பழக்கமில்ல எண்டும் தெரியுது. இஞ்சாலப்பக்கம் உறவுகள் இருந்தா அவங்கள் வந்து ஏத்திக்கொண்டு போயிருப்பாங்கள். உங்களுக்கு அதுவுமில்லயெண்டு ஊகிச்சன். அதால தான் கேட்டன்" தீபன் அதிர்ந்து போனான். "ஐயாட கொமன்ஸ்சென்ஸ் திறமாயிருக்கு" "அதென்ன தம்பி அது" "அது ஐயா...அது.... அதுக்கு என்ன தமிழ் எண்டு உடனே வருதில்ல" "ஓ அப்பிடியே" "ஓம் ஐயா... நல்ல புத்தி எண்டு சொல்லுவமே" "இது புத்தியில்லடா மகனே புலி சொல்லித்தாற அறிவு" "ராணுவப் புலனாய்வுக்காரனுகள் இரவோட இரவா ஊருக்குள்ள வந்து அடுத்த நாள் காலமை சும்மா எங்கடயாக்கள் மாதிரி திரிவானுகள். அவங்களப் பாத்தோன்ன கண்டுபிடிக்கிறது எப்பிடியெண்டு எங்களுக்கு தெரியும் ராசா... போரோட வாழ்ற எங்களுக்கு புத்தி கொஞ்சம் கூர்மை கண்டியோ... சாவு சந்திக்குச் சந்தி மறைஞ்சுகிடக்கும்.. ஆனா நாங்கள் வாழுவம்"

நாவலடிச்சந்தியில் இடதுபுறமாகத் திரும்பி சற்று தூரம் போய் நின்றது சைக்கிள். "தம்பி இனி கிட்டத்தான் நடந்து போங்கோ.. பொடியள்ட நிர்வாக பேஸ் எல்லாம் பக்கத்துப் பக்கத்திலதான் இருக்கு" "நன்றி ஐயா பெரிய உதவி இந்தாங்கோ..." சட்டைப் பொக்கற்றுக்குள் இருந்து ஐம்பது ரூபாவை எடுத்து அவரிடம் தர முயன்றான் குலதீபன். "அம்பது ரூவா வேணாம் தம்பி. சந்தோசத்துக்குப் பத்து ரூவா தந்திட்டுப் போ.. வெத்தில பாக்கு வாங்குவம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயப்பகுதி என்ற பெயர்ப்பலகை குலதீபனை வரவேற்றது. உள்ளே நுழைய தான் மட்டும் தனியாக வருகையாளர் கூடத்திற்கு வந்திருப்பது அவனை ஒரு தயக்கத்திற்கு உட்படுத்தியது. கணப்பொழுதில் உள்ளேயிருந்து பிரபா வெளியே வந்தான். "வாங்கோ.. என்ன விசயமா வந்திருக்கிறியல்" துண்டை நீட்டினான் குலதீபன். வாசித்தவுடன் பிரபா குலதீபனை இருக்கையொன்றில் அமரச் செய்தான். பின் உள்ளே சென்றுவிட்டு சற்று நேரத்தில் வெளியே வந்து தனது இடத்தில் அமர்ந்தான்.

நேரம் யாருக்காகவும் தனது வேகத்தை மாற்றிக்கொண்டதில்லை. செக்கன்களில் தொடங்கி நிமிடமாகி மணித்தியாலங்களைக் கடந்து நாட்களைக் கழித்து திரும்பத் திரும்ப ஓடும் அந்த வேகம் பிரபஞ்சத்தில் என்றும் மாறியதில்லை. மாற்றமில்லாதது எதுவும் இல்லை என்ற பிரபஞ்சத் தத்துவத்தின் மீதொரு பெரும் கேள்வியை ஏற்படுத்துகின்றது இந்த நேரம் சுழலும் வேகம். கடையில் இருக்கும் போது விடிவதும் இருள்வதும் குலதீபனுக்கு ஒரு கணப்பொழுதில் நிகழ்ந்து விடுவதுண்டு. 'என்னடா விடிஞ்சது மட்டும் தான் ஞாபகம் கிடக்கு ..இப்ப பார் பின்னேரம் ஐஞ்சு மணியாகீட்டு' என்பவனுக்கு அன்று நேரம் மாயமாகாமல் இருந்தது. அந்த வரவேற்பாளர் பகுதியில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தில் பெரியமுள் அசையும் ஒவ்வொரு அடிப்பும் ஒரு நாளாக மாறி அவனை வருத்திக்கொண்டிருந்தது. அந்த அமைதியை அவன் விரும்பவில்லை. வலிந்து அதனைக் குலைத்தான். "தம்பி கனநேரம் காத்திருக்கோணுமோ?" பிரபாவில் எந்தவொரு 'அசுமாத்தமும்' இல்லை. தான் கதைத்தது தனக்கே கேட்கவில்லையோ என்ற பிரமை குலதீபனை எட்டியது. அடுத்த முயற்சியைத் தொடங்கினான். "தம்பி நீங்களோ முகுந்தன்?" இப்போது இரை சரியாகக் கொழுவியது. "இல்லை.. நான் பிரபா.. முகுந்தன் அண்ணை இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திருவார். காலம சாப்பிட்டனீங்களோ?" கடிகாரத்தின் பெரியமுள் அசையும் அசூசைச் சத்தத்திலிருந்து தனது நேரம் வேகமெடுத்து ஓடுவதாக அவன் நினைத்தான்.. அப்பாடா அது போதும். "இல்ல தம்பி வழமையாவே காலம சாப்பிடுறதில்ல... கடையில வந்து குந்தினா எங்க தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்ட யோசிக்கிறது...'' "அப்பிடியே... நீங்கள் உழைப்புக்காக சாப்பாட்ட விட்டிருவியல்.. நாங்கள் உரிமைக்காக உயிரயும் விட்டிருவம்... ஆனா கிடைக்கிற நேரம் சாப்பாட்ட விடமாட்டம்'' பிரபாவின் வார்த்தைகள் ஓர் ஆணியாக குலதீபனை எங்கோ தைத்தது. சைக்கிள் ஒன்றை ஸ்டாண்ட் போடும் சத்தம் கேட்டது.

"முகுந்தண்ணை வந்திட்டார்'' என்றான் பிரபா

"வணக்கம் குலதீபன்.... வந்திருக்கிறியல் எண்டு செய்தி வந்தது. வாங்கோ உள்ளுக்க போவம்'' அடுத்திருந்த அறையைக் நோக்கி முகுந்தன் செல்ல அவனைத் தொடர்ந்தார் குலதீபன். "இருங்கோ....'' இருக்கையை நோக்கி அவன் விரல் நீண்டது. "நாங்கள் போட்ட கடிதத்த மதிச்சு உடனே வந்ததுக்கு நன்றி. சாப்பிட்டியலோ'' "ஓம்... தம்பி... நன்றி... இல்ல...'' குலதீபன் தடுமாறி எல்லாக் கேள்விக்கும் ஒரேயடியாக பதிலளிக்க முயன்றான். "அண்ணை.. பயப்பிடவேணாம். ஒரு சின்ன விசாரணைக்கு தான் கூப்பிட்டனாங்கள்'' அவன் நிறுத்தினான். கடிகாரத்தின் பெரியமுள் அசையும் சத்தம் குலதீபனுக்குத் தெளிவாகக் கேட்டது. "மருந்துக் கட வச்சிருக்கிறியள் என்ன?'' "ஓம் அண்ணை'' முதலில் தம்பியென்றவர் தற்போது அண்ணை என்பதை முகுந்தன் மெல்லிய புன்னகையுடன் குறித்துக்கொண்டான். "நீங்கள் முகுந்தன் எண்டே கூப்பிடுங்கோ.. அன்டிபயட்டிக் மாத்திரைகள ஆர்கேட்டாலும் குடுப்பியலோ?'' அந்தக் கேள்வி குலதீபனை நேரடியாகத் தாக்கி வீழ்த்தியது. வலிநிவாரணி மாத்திரையான 'அன்டிபயட்டிக்' மாத்திரைகளில் கூடிய செறிவைக்கொண்டவை போதை தரும் பொருளாகப் பாவிக்க முடியும் என்பது அந்தக் கேள்வியில் தொக்கி நின்றதை குலதீபன் புரிந்துகொண்டார். இதற்குத்தான் விசாரணையா? தப்பிச்சே ஆகோணும். "இல்ல கனக்க குடுக்க மாட்டம்... அளவாத்தான் குடுப்பம்.. வைத்தியரிண்ட துண்டோட வாறவேக்கு பரிந்துரைச்ச அளவக் குடுப்பம்.'' "ஓ...அப்பிடியோ....'' முகுந்தனின் கண்கள் குலதீபனின் கண்களை ஊடுறுவின. அதிலிருந்த உண்மை குலதீபனின் கண்களைத் தாழ்த்தச் செய்தது. "புலி ஒண்டும் சும்மாக் கதையாது எண்டத தெரிஞ்சுகொண்டோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கிறியள்..'' கடுமை மெதுவாக முகுந்தனின் குரலில் ஏறத்தொடங்கியது. "அப்ப ஆதாரங்கள டவுனில இருந்து இஞ்ச கொண்டுவரும் வரைக்கும் நீங்கள் எங்களோட இருங்கோ.. சரியோ.. ஆதாரம் வந்தாப்பிறகு கதைப்பம் என்ன?'' குலதீபன் அதிர்ந்தார். சம்பூரில் தமது கட்டுப்பாட்டுக்குள் தன்னை நிறுத்தி தன்னுடைய வாயால் இந்த உண்மையை எடுக்கும் வரைக்கும் அவர்களுடைய சிறைக்கூடத்தில் இருக்க வேண்டிவரும் என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது. "இல்லையண்ண. மன்னிச்சுக் கொள்ளுங்கோ.. ரெண்டு கிழமைக்கு முதல்தான் இந்த வேலையச் செய்யத் தொடங்கின நாங்கள்'' குலதீபன் உண்மையை ஒத்துக்கொண்டார். "இது தான் எங்களுக்குத் தேவையான பதில்..'' இப்போது அவனின் குரல் ஒரு மிதமான ஒலிக்கு மாறியிருந்தது. "நாங்கள் இனத்தக் காப்பாத்த போராடிக்கொண்டு இருக்கேக்க நீங்கள் காசுக்காக அழிக்க முயற்சிக்கிறியள்..'' "மன்னிச்சுக்கொள்ளுங்கோ.. இனி வாழ்நாளில இப்பிடி செய்ய மாட்டம்....'' அவர் தொடரமுன் இடைமறித்தான் முகுந்தன் "மன்னிப்பெல்லாம் கிடையாது.. தண்டனை தான்.. அதை தீர்மானிச்சிட்டுச் சொல்லும் வரைக்கும் முன்னுக்கு வரவேற்பறையில இருப்பம் வாங்கோ..'' என்றவுடன் தனது இருக்கையை விட்டு எழுந்த முகுந்தன் அவரது பதிலுக்கு காத்திராமல் வரவேற்புப் பகுதிக்கு நடந்தான். "பிரபா.. அண்ணைக்கு மத்தியானச் சாப்பாட்டக் குடுத்து இருத்தி வை.. நான் வெளிய போட்டு வாறன்''

அந்த மூன்று மணி நேரக் காத்திருப்பில் மரண அவஸ்தையை குலதீபன் அனுபவித்தான். தனக்கு என்ன நடக்கும் என்பதை ஒவ்வொரு செக்கன்களிலும் அவன் மனம் சங்கிலிக்கோர்வை ஆக்கிக்கொண்டே சென்றது. மனித மனத்தின் மிகப் பெரும் பலவீனம் அதுதான். அது நிகழ்காலத்தில் வாழ்வதை விட கடந்தகாலத்திலும் எதிர்காலத்திலுமே விரும்பி வாழத் தலைப்படும். அதுவும் துன்பம் நேர்கையில் மனித மனத்தின் போக்கு மிகப்பயங்கரமாக மாறிவிடும். கடந்தகாலங்களில் அடுத்தவருக்கு நிகழ்ந்த துன்பங்கள் அனைத்தையும் தனக்கும் நிகழலாம் என கற்பனை செய்யும். அவ்வகையான துன்பியல் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் மனம் தன்னைப் பொருத்திப்பார்க்கும். துன்பத்தின் கனத்தினை மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கச்செய்யும். பின்னர் தனக்கு அவ்வாறு நிகழ்ந்தால் தன்னைச் சார்ந்திருக்கும் உயிருள்ள மற்றும் உயிரற்ற ஒவ்வொன்றும் தனக்கு நேர்ந்த துன்பத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்ளும் எனச் சிந்திக்கும். மிகப்பெரும் துயர உலகொன்றை அது உருவாக்கும். அந்தத் துயர உலகில் இந்த அற்ப மனிதனைச் சுழற்றியடிக்கும். நேரம் கடந்திருந்தது.

பிரபா இரண்டு உணவுப் பொதிகளுடன் அங்கு வந்தான். "அண்ணை வாங்கோ சாப்பிடுவம்" "இல்ல தம்பி எனக்கு சாப்பிடேனும் போல இல்ல... நீங்க சாப்பிடுங்கோ" "நீங்கள் சாப்பிடேல்ல எண்டால் எனக்குத்தான் பனிஸ்மென்ட்... மாட்டன் எண்டியலெண்டால் நான் வலுக்கட்டாயமாத் தீத்ததான் வேணும்." சொல்லி முடித்துப் பெருங்குரலில் சிரித்தான். "வாங்கோ.. வாங்கோ... சாப்பிடுவம்" சாப்பிடுவதற்கான ஏற்பாடாக அந்த வரவேற்பறையின் இடது பக்கத்தில் இரண்டு கதிரைகளைப் போட்டு அக் கதிரைகளுக்கு முன்பாக மேலும் இரண்டு கதிரைகளைப் போட்டான். ஒரு கதிரையில் இருந்து கொண்டு மற்றக் கதிரையில் பொதியினைப் பிரித்து வைத்துச் சாப்பிடும் வகையில் செய்துகொண்டு இரண்டு கண்ணாடிக் குவளைகளில் தண்ணீரைக் கொண்டு வைத்து வைத்தான். "சண்டையில சாகிறமோ இல்லையோ இவங்கட சாப்பாட்டச் சாப்பிடேக்க தொண்டை அடைச்சு செத்துருவம்...அதான் தண்ணியப் பக்கத்திலேயே வச்சிருக்கிறது" அதற்கு அவன் விளக்கமும் சொன்னான். குலதீபன் வேறுவழியின்றி அவனுக்கு அருகில் வந்திருந்து உணவுப்பொதியைப் பிரித்தான். நன்றாக அவிந்த அரிசிச் சோறு, பருப்பு ஊற்றப்பட்டதால் பொங்கலாக குழைந்திருந்தது. கீரை ஒரு புறமும் கத்தரிக்காய் ஒரு புறமும் இருந்தன. பிரபா என்ன செய்கிறான் என்பதை குலதீபன் பார்த்தான். விரிக்கப்பட்ட பொதியின் நடுப்பகுதியில் ஐந்து விரல்களையும் சராலெனப் புதைத்தான் பிரபா. அந்த விரல்கள் வெளியே இழுக்கப்பட்ட போது கும்பலாகப் பிடித்திருந்த சோறு விரிந்தது. உள்ளே சோற்றின் நிறம் சிவப்பாக மாறியிருந்தது. பிரபாவின் அந்த விரல்களில் அவித்த முட்டை சிக்கியிருந்தது. "குழம்ப உள்ளுக்க விட்டுத்தான் கட்டுவாங்கள். என்ன நடந்தாலும் முட்டையக் காப்பாத்திப்போடோணும் தானே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சிரித்தபடியே சாப்பிடத் தொடங்கினான். குலதீபனும் அதேபோலச் செய்து முட்டையை வெளியே எடுத்தான். பிரபா சாப்பிடுவதைக் கவனித்த போது தனக்கும் பசியெழுவதை அவன் உணர்ந்தான். விரல்களில் ஒட்டியிருந்த சோற்றை உதறவேண்டும் போல இருந்தது. விரல்களின் விடுதலை மனதுக்கும் விடுதலை தரும் என்பதை அவன் உணர்ந்தான். என்றாலும் அதனை நிறைவேற்ற அது தருணமல்லவே. உப்பும் உறைப்பும் தூக்கலாக இருந்த அந்த மதிய உணவு அவனுக்கு உண்மையிலேயே ஒரு விழிப்பைத் தந்தது.

மூன்று மணி நேரமும் தந்த தண்டனையை இனி யாராலும் குலதீபனுக்கு வழங்க முடியாது. அவன் தெளிவடைந்திருந்தானா? அல்லது ஒரு மயக்க நிலையில் இருந்தானா? என்பதை அவனாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை. உச்ச தண்டனை என்ன? மரணம் தானே! அதனை எதிர்கொள்ளும் மனநிலை அவனுக்குள் உருவாகியிருந்தது.

முகுந்தன் ஆரவாரம் ஏதுமில்லாமல் மீண்டும் அங்கு வந்தான். "உள்ளுக்க வாங்கோ.." என்றவாறு தனது அறைக்குள் சென்றான். "அண்ணை சாப்பிட்டவரோ பிரபா?" "ஓம் நல்லாச் சாப்பிட்டவர்" "சரி இருங்கோ... எப்பிடிச் சாப்பாடு? எங்கட பெடியள் சமைச்சு நீங்கள் சாப்பிட்டால் எங்கள விட்டுப் போகவே மனம் வராது" முகுந்தன் அந்தச் சூழலை நகைச்சுவையாக்குவது தெரிந்தது. ஆனாலும் குலதீபன் அசைவுகள் ஏதுமின்றி இருந்தான். "உங்களுக்கு தண்டனை என்ன எண்டு தீர்மானிச்சாச்சு. முதல் தடவை எண்டதாலயும் குற்றத்த உடனே ஒப்புக்கொண்ட படியாலும் உங்கள சிறையில போடுறதில்ல எண்டு முடிவெடுத்திருக்கிறம். ஆனா அந்த வணிகத்தால நீங்கள் எண்பத்தெட்டாயிரம் ரூவா உழைச்சிருக்கிறியல் எண்டது எங்கட மதிப்பீடு. அந்தத் தொகைய அடுத்த ரெண்டு நாளைக்குள்ள எங்களுக்கு தரவேணும். அதோட அந்த வணிகத்த செய்ததுக்கு தண்டப்பணமா ஒரு லட்சம் ரூவா கட்டோணும். அந்த ஒரு லட்சத்த ஒவ்வொரு கிழமையும் ஐயாயிரம் ரூவாப்படி நீங்கள் சம்பூருக்கு வந்து கட்டோணும். இதுக்குப் பிறகும் அந்த யாவாரத்தத் தொடர்ந்தால் நாங்கள் கூப்பிட மாட்டம். தேதிதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோணும்....” சாதாரணமாகத் தொடங்கிய முகுந்தனின் குரல் மிகக் கடுமையாகி தங்களுடைய தண்டனையின் தீவிரத்தன்மையை குலதீபனுக்குள் இறக்கியது. ‘இனி செய்தால் சாவுதான்...’ குலதீபனுடைய மனம் அந்த வார்த்தையை நெட்டுருப்பொட்டது. நிதித்தண்டம் பெரிதாக அவனைப் பாதிக்கவில்லை. ஆனால் அடுத்துவரும் இருபது கிழமைகள் இராணுவத்தைத்தாண்டி புலிகளிடம் வருவது ஒன்றும் அவ்வளவு இலகுவாக இருக்கப்போவதில்லை என்பதை அவன் உணர்ந்தான். இனி ஒருபோதும் அந்த வணிகத்தைச் செய்யப்போவதில்லை என்று சபதமெடுத்தான். “நாளை மறுநாள் உங்கட கடையில ஒருவர் உங்களச் சந்திப்பார். அவரிட்ட அந்த எண்பத்தெட்டாயிரம் ரூவா குடுபடோணும். இப்ப போகேக்க ஆமி உங்கள மறிச்சுக் கேப்பாங்கள். ஒரு லட்சம் வரி எண்டும் வாரா வாரம் நான்தான் கொண்டுவந்து ஐயாயிரம் கட்டோணும் எண்டும் சொல்லுங்கோ. எங்கட பெயருகளக் கேப்பாங்கள் உண்மையச் சொல்லுங்கோ. வேற ஒண்டுஞ்சொல்லத் தேவயில்ல. போய்ட்டுவாங்கோ” எதுவும் சொல்லாமல் குலதீபன் அந்த முகாமை விட்டு வெளியேறினான். கட்டபறிச்சானில் புலிகளின் காவல்நிலையைத் தாண்டும்போது காலையில் விசாரணை செய்த இளைஞன் குலதீபனைக் கண்டான். “இண்டைக்கு வரமாட்டியல் எண்டுதான் நினச்சன். நல்லது... கெதியாப் போங்கோ.. மம்மல் அடிச்சுதெண்டால் போக்குவரவு கஸ்டம்”

ஐந்து மணியளவில் சைபுள்ளாவின் கடையை அடைந்தான் குலதீபன். அவன் வருவதைக் கண்டவுடனேயே கடை வாசலுக்கு ஓடி வந்தார் சைபுள்ளா. “யா..அல்லா.. எல்லாப் பெருமையும் உனக்குத்தான் அல்லாவே” என்று வானத்தை நோக்கிக் கைகளை விரித்தார். எதுவுமே கதைக்காமல் அவனை கடைக்குள் தன்னுடைய தனிப்பட்ட அறைக்கு அழைத்துச்சென்று அமர வைத்தார். குளிரூட்டியைத் திறந்து தண்ணீர் போத்தலை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு வெளியே எட்டிப்பார்த்து “ரெண்டு டீ கொண்டு வாங்கடா” என்று கடைச்சிப்பந்திகளை பணித்தார். குலதீபன் தண்ணீரைக் குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டான். அவரைக் கேட்டகாமலேயே அந்த அறையுடன் இணைப்பாக இருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவும் அறைக்குள் நுழைந்து கதவைப் பூட்டிக்கொண்டான். போத்தலில் இருந்த குளிர்ந்த நீரை முகத்தில் தெளித்து கைகளால் தடவிக்கொண்டான். கழிவு இருக்கைக் கக்கூசின் மூடிகள் இரண்டையும் உயர்த்திவிட்டு மூத்திரத்தை பெய்த போது ஒரு நிம்மதி அவனுள் விரவியது. எல்லோரிடமும் என்ன சொல்ல வேண்டும் என்பதை அடுக்கிக்கொண்டான்.

"நானா... வரி கட்ட சொல்லீருக்கிறாங்கள். ஏற்கனவே கடிதம் போட்டவங்களாம் எனக்கு கிடைக்கேல்ல. அதுக்கு வரியும் தண்டமுமா ஒரு லட்சம் கட்டோணும்..அது பிரச்சனையில்ல ஆனா ஒவ்வொரு கிழமையும் கொண்டந்து ஐயாயிரப்படி கட்டோணும். அதான் பிரச்சன." எண்பத்தியெட்டாயிரம் உடனடியாகக்கட்ட வேண்டும் என்பதைத் தவிர்த்தான். "என்னடா இது மனிதாபிமானமில்லாத தண்டன.. ஒவ்வொரு கிழமையும் நீ வந்து போறது உயிருக்கெல்லோ ஆபத்து" "அததான் நானும் யோசிக்கிறன்.. கதைச்சுப்பாத்தன் மசியிற மாதிரித்தெரியேல்ல.. நேரமும் போய்க்கொண்டிருந்துது. அதான் வெளிக்கிட்டு வந்திட்டன்." "பரவாயில்ல வேற வேற தண்டனைகள விட இது பரவாயில்லடா.. நீ இண்டைக்கு மலைக்கு போகேலாது.. வீட்ட போவம்... இண்டைக்கு நிண்டுட்டு நாளைக்கு காலம போ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

காலை ஐந்து மணிக்கே புவனம் வீரபத்திரனின் சந்நிதானத்தில் பூமாலையைப் படையல் செய்தாள். 'வீரபத்திரா... இண்டைக்கு மலைக்குப் போறதுக்கு வழிகாட்டியிருக்கிறாய். சுகமாப் போய் வர வழி செய் அப்பனே' ஐந்து முப்பது வரை அவளது தொழுதல் நீடித்தது. ஏழு முப்பது மணிக்கு நெற்றி நிறையத் திருநீறும் வரிந்து கட்டிய சேலையுமாக புவனம் புலிகளின் காவல் கண்காணிப்பு நிலையத்தில் வரிசையில் மூன்றாவதாகத் தன் இடத்தைப் பிடித்திருந்தாள். கறுப்பு நிறப் பயணப்பை நிறைய கரனுக்கு பிடித்த தின்பண்டங்களைச் செய்து வைத்திருந்தாள். முறுக்கு, அரியதரம் இரண்டும் கரனுக்கு விருப்பானவை. சிவலை தந்த ஐநூறு ரூபாய்களை தனது போக்குவரவுக்கு வைத்துக்கொண்டு தன்னிடம் இருந்த காசில் அவள் இந்த தின்பண்டங்களைச் செய்து சிறு சிறு பைகளில் பொதி செய்திருந்தாள். மக்களைப் பயணத்திற்கு விடுவதெற்கென அந்த சென்றி திறந்தது. புவனத்தின் நேரம் வந்தபோது அவள் தனது கறுப்புப் பையை அங்கிருந்த மேசையில் கொட்டினாள். "இஞ்ச பார்ரா.. அம்மா என்னென்ன டவுனுக்கு கொண்டு போறா எண்டு... மலையில ஆரென இருக்கிறது மகனோ? மகளோ?" அந்தக்குரலில் வெளிப்பட்ட ஏக்கத்தை புவனம் உணர்ந்து கொண்டாள். "மகனடா தம்பி.. படிக்கப் போயிருக்கிறார்..." "அதுதானே பாத்தன்.. மகனெண்டா அம்மாமாருக்கு கொள்ளைப்பிரியம் தானே" "ஓம் தானே... உன்ர அம்மாவுக்கும் உன்னில கொள்ளப் பிரியமாத்தானே இருக்கும்." புவனம் சொல்லி முடிக்க தலையை நிமிர்த்தி அவளை நேராகப்பார்த்தான் அந்தப் போராளி. பரிசோதிப்பதை ஒரு கணம் நிறுத்தினான். தலையைக் கவிழ்ந்து அமைதியானான். "ஓம் எணை.. அம்மா என்னில கொள்ளைப் பிரியம்தான்...

 Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபிர் விமானம் குண்டப்போடேக்க என்னக் கட்டிப் பிடிச்சு முழுசா மூடிக்கொண்டா.... குண்டு வெடிச்சுப்புகை கிளம்பீ ஓய்ஞ்சு போனாப்பிறகு அம்மாவப் பாத்தன்.... முதுகுப் பக்கமெல்லாம் எரிஞ்சு இரும்புத் துண்டுகள் பாய்ஞ்சு பிஞ்சு போய்க் கிடந்தவா.. ஆனா என்னைக் கைவிடேல்ல'' அவன் புன்னகையுடனேயே அதைச் சொன்னான். அந்தப் புன்னகையின் பின்னால் விரவிக் கிடந்த தாயன்பின் ஏக்கமும் அதைப் பறித்தெடுத்தவர்களைப் பழிவாங்கும் உணர்ச்சியின் பரிமாணமும் தெளிவாகத் தெரிந்தது. புவனம் விக்கித்துப் போய் நிற்க "கொள்ளை பிரியம் தான்'' என சிரித்தபடியே மீண்டும் சொல்லிக்கொண்டு அவள் கொட்டிய பொருட்களை எல்லாம் அவளது பைக்குள் அள்ளித் திணித்தான். "அடுத்த ஆள் வாங்கோ'' என்று குரலை எழுப்பினான். அவன் தனது தாயை பற்றிய பேச்சை தொடர விரும்பவில்லை. அதே நேரம் புவனமும் அந்த இடத்தை விட்டு விரைவாக வெளியே போவதையே அவன் விரும்பினான். புவனம் அவனது தாயை நினைத்தவாறே நடக்கத் தொடங்கினாள். அவனும் தன் தாயை நினைத்தவாறேதான் இருந்தான்.

சூனியப்பிரதேசத்தில் ஒரு பயம் தரத்தக்க அமைதி குடிகொண்டிருக்கும். வெடிக்கத் தயாராக இருக்கும் எரிமலையின் அமைதி போல புவனத்திற்கு அது பட்டது. பற்றைகள் சலசலப்பதும் சிறுபறவைகள் திடீரென எழுந்து பறப்பதும் தனது இணையைத் தேடும் பறவையொன்றின் ஏக்கமான ஒலியும் அந்த சூனியப்பிரதேசத்தின் ஏகாந்தத்தில் மிகவும் அச்சம் தருபவையாக இருந்தன. கையில் கனக்கும் பையைச் சிறிது நேரம் கீழே வைத்தால் சுகமாக இருக்கும் போல இருந்தது. அத்தோடு இன்னும் ஒருவருடன் சேர்ந்து நடப்பதற்கு அவள் விரும்பினாள். அதை உடனடியாகவே செயற்படுத்தினாள். இராணுவத்தினதும் விடுதலைப் புலிகளினதும் சென்றிகளில் இருந்து தெளிவாகத் தெரியக்கூடிய இடத்தில் தான் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டு பையை தெருவின் நடுவில் வைத்தாள். இவ்வாறான இடங்களில் தெருவின் கரைகளில் மிதிவெடிகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்பதை அனைத்து தமிழ் மக்களும் அறிந்திருந்தனர். அதனால் அவர்கள் தெருவின் நடுப்பகுதியை பாவனைக்குட்படுத்துவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவானது. பையைத் திறப்பதற்கோ அல்லது சந்தேகம் தரத்தக்க எந்தவொரு நடவடிக்கையையும் செய்வதற்கோ அவள் விரும்பவில்லை. கைகள் இரண்டையும் உயர்த்தி பின் தளரவிட்டாள். முகத்தில் வழியும் வேர்வையை தனது சேலைத்தலைப்பால் வழித்துத்துடைத்தாள். இடுப்பிலிருந்த பையுக்குள் இருந்து திருநீறை நெற்றியில் பட்டையிட்டாள். வயதானாலும் தளர்வடையாத ஒருவர் நடந்து வருவதை அவதானித்தாள். அவர் அருகில் வரும்வரை காத்திருந்தாள். "என்ன களைச்சுப் போனியோ" அவரே பேச்சினை ஆரம்பித்தார். "ஓம்.. பையக்கொஞ்சம் கீழ வைச்சா நல்லாயிருக்கும் போல இருந்துது அதான் நிண்டனான்." "பையுக்க கைய ஏதும் வச்சனியோ? இல்லதானே... இவனுகள் கண்டாலும் சந்தேகப் படுவானுகள் அவனுகள் கண்டாலும் சந்தேகப்படுவானுகள் அதுதான் கேட்டன்... சரி வானே நடப்பம்" அவர் நகரத் தொடங்கினார் "எவ்வளவு தூரம் நடக்கவேண்டியிருக்கு கடவுளே... ஏனனே டவுனுக்குப் போறாய்?" "மகன படிக்க அனுப்பினனான்.. அதான் பாத்திட்டு வருவமெண்டு வெளிக்கிட்டன்" "பிள்ளைய அனுப்பீட்டு இருப்புக்கொள்ளுதில்ல என்ன?" அவர் நடந்தபடியே தனது மேல்பொக்கட்டுக்குள் இருந்த சொப்பிங் பாக்கால் சுற்றிய பொட்டலத்தை மிகப் பவ்வியமாக எடுத்தார். எப்படி கடல் பயணத்தின் போது கரனை ஈர்த்ததோ அதே போல அந்தப் பவ்வியம் புவனத்தையும் ஈர்த்தது. "வெத்தில போடுவியோ?" "இல்ல.. எனக்கு பழக்கமில்ல..ரெண்டு பாக்குத் துண்டு தாங்கோ..வாய்க்க போட்டு சவைச்சுக்கொண்டு நடக்கலாம்" எதையும் சிதற விடாமல் மிகக்கவனமாக அந்தப் பொட்டலத்தில் இருந்து அவளுக்குத் தேவையான இரண்டு பாக்குச்சீவல்களை அவளுக்குக் கொடுத்துவிட்டு வெற்றிலையின் நுனியைக் கிள்ளி எறிந்துவிட்டு நீட்டுவாக்கில் அந்த வெற்றிலையைக் கிழித்து ஒரு பாதியை பைக்குள் பத்திரப்படுத்திக்கொண்டு அடுத்த பாதியின் பின்புறத்தில் லோசாக சுண்ணாம்பைத் தடவி வாய்க்குள் அதக்கிக் கொண்டார். பின்னர் தேவையான அளவிற்குப் பாக்குச் சீவல்களை வாய்க்குள் போட்டு அதையும் அதக்கிக் கொண்டார். கொஞ்சம் சுண்ணாம்பை வலதுகைச் சுட்டுவிரலில் எடுத்துக்கொண்டு பொட்டலத்தை திறந்த அதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவ்வியத்துடன் பாதுகாப்பாக பொக்கற்றுக்குள் செருகிக் கொண்டார். அவருக்கு இடதுபுறமாக சற்று பின்தங்கி நடந்துவந்த புவனத்திற்கு அவரது செய்கைகள் எல்லாம் தெளிவாகத் தெரிந்தன.

ஜிபிஎஸ் முகாமின் முதலாவது சென்றிக்கு வலப்புறமாகத் திரும்பி நஜீம்கடைச்சந்தி வரை அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. வாய்க்குள் அதக்கிய அனைத்தையும் ஒன்றாக்கி சப்புவதில் அவர் கவனம் செல்வதாக அவளுக்குப் பட்டது. வாயில் சுரந்த முதலாவது எச்சிலை அவர் படுநாசூக்காக தெருவின் கரையிலிருந்த பற்றைக்குள் துப்பினார். பெருமரமொன்றின் நிழலில் நின்றுகொண்டிருந்த அலிக்கு அவர்கள் இருவரும் வருவதும் அவர் பற்றைக்குள் எட்டித் துப்புவதும் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்கும் தூரத்தை விட அதிக தூரத்திலேயே அவன் நின்றான்.

“அந்த மரத்துக்கு கீழ ஒருத்தன் நிக்கிறது தெரியுதோ?” அவர் வழமைக்கும் குறைந்த பேச்சொலியில் அவளிடம் கேட்டார். எங்கோவொரு அந்தகாரத்தில் உழன்றுகொண்டிருந்த அவளின் சிந்தனைகள் படீரென உடைந்தன. “அந்த மரத்துக்கு கீழ நிக்கிறவனையோ சொல்றியள்? ஓம் தெரியுது” “அவன் தான் அலி.. தப்பித்தவறி மறிச்சுக்கதைச்சா எதையும் உழட்டிப் போடாத...” அது கட்டளையா அல்லது வேண்டுகோளா என்பது அவளுக்குப் புரியவில்லை. ஆனால் அவள் அலியைக் கண்டுவிட்டாள். தடாரெனத் தனது கைப்பையைத் தெருவில் விட்டாள். ஐந்தடி முன்னே சென்றுவிட்ட கிழவருக்கு அவள் திடீரெனப் பையைக் கீழே விட்டது ஏனென்று தெரியவில்லை. அவர் திரும்பி அவளைப் பார்த்தபடி நின்றுவிட்டார். தனது சேலைத்தலைப்பில் பொதியாக கட்டப்பட்டிருந்த வீரபத்திரனின் கோவில் மண்ணைத் தன் உள்ளங்கையில் கொட்டினாள் அவள். விரல்களை மூடி மண்ணை இறுக்கினாள். கண்களை மூடினாள். மூடிய கையை மெதுவாக நெஞ்சின் நடுப்பகுதிக்கு கொண்டு வந்தாள். கணப்பொழுதில் வாயின் அருகே அவளது மூடிய கை உயர்ந்தது. கண்களைத் திறந்த புவனத்தின் கண்களில் எரியும் தீச்சுவாலையை கண்டு அவர் ஒரு கணம் அதிர்ந்தே போய்விட்டார். அவள் வாயைத் திறந்து தனது சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் திரட்டி மூச்சுக்காற்றை மிக வேகமாகத் தனது உள்ளங்கையில் இருந்த மண்ணை நோக்கி ஊதினாள். தன்னை மறந்து அந்த வார்த்தையை சற்று சத்தமாகவே உதிர்த்தாள். "அழிச்சுப்போடு இவனை வீரபத்திரா".

ஊதித்தள்ளிய மண் பிரபஞ்சத்தின் காற்றில் சீறிப்பாய்ந்து அதிர்வை உண்டாக்கியது. அந்த அதிர்வின் வீச்சம் எட்ட வேண்டிய இடங்களை நோக்கி பயணப்படத் தொடங்கியது. அவள் தளர்ந்து போய் லேசாகத் தள்ளாடினாள். அவருக்கு அவளின் நிலை தெளிவாகத் தெரிந்தது. ஒரே எட்டில் அவளை நோக்கிப் பாய்ந்தார். அவளின் பின்புறமாக சென்று தோள் மூட்டுகளுக்கு கீழ் இரண்டு கைகளையும் பிடித்து அவள் தள்ளாடாமல் நிற்க உதவினார். "இரு...இரு... கீழ.. இரு..." அவளை அவ்வாறே பிடித்தபடி அழுத்தி தெருவில் இருத்தினார். தனது கைப்பைக்குள் இருந்த பழைய பிளாஸ்டிக் போத்தலில் இருந்த தண்ணீரை திறந்து அவளது முகத்தில் கொஞ்சத்தைத் தெளித்தார். அவள் ஆசுவாசமாகி அத்தப் போத்தலைப் பறித்து சில மிடறுகளை வாய்க்குள் விட்டாள். விறுக்கென எழுந்தாள். சற்று முன்னர் ஏதுமே நடக்காதது போல "நடப்பமே நாங்கள்" என்று அவரைப் பார்த்துக் கேட்டாள். அந்தக் கேள்வியில் இருந்த கனிவு அவர் செய்தவற்றிற்கு நன்றியைச் சொன்னது. செத்துப்போன தனது தங்கையை அவருக்கு நினைவுபடுத்தியது. "வாடி..ராசாத்தி... நடப்பம்" அவர் வாஞ்சையுடன் அவளின் பையை தூக்கிக்கொண்டு நடக்கத் தொடங்கினார்.

அலியை அவர்கள் நெருங்கினார்கள். "என்ன பரமசிவம் இண்டைக்கும் பயணமோ?" அலியின் கேள்வி கிழவரை நிறுத்தியது. நான் நிற்பதா போவதா என ஒரு கணம் புவனம் தடுமாறினாள். ஆனால் கிழவர் ஏன் தனது பையைத் தூக்கினார் என்பதை அப்போது அவள் புரிந்துகொண்டாள். அவள் நகரவில்லை. "ஓம் ஐயா கிழமையில மூண்டு நாளைக்காவது மலைக்குப் போய்ட்டு வந்தா தானே.. எனக்கு சாப்பாடு" "அது சரி... இவா ஆர்? என்ன நடந்துது அதில" "இவளென்ற சித்தியொராள்ட மகள்... லேசா உடம்புக்குச் சரியில்ல.. சரி வா டவுனுக்கு போய் வைத்தியரைப் பாப்பம் எண்டு கூட்டிக்கொண்டு வாறன்.. அவள்ட மகன் முறையானவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்க படிக்கிறார். அவரையும் பாத்திட்டு வரப்போறாள்" "ஓ அதுதான் களைச்சுப் போய் அதில விழப்பாத்தவாவோ" "ஓம் ஐயா" "சரி போங்கோ" அவன் மிக அமைதியாக, பண்பான குணங்கொண்டவனாகக் கதைத்து அனுப்பினான். "இவன்ர கதைய நம்பாத.. அவன்ர கண் முழுதும் உன்ர பாக்கிலதான் இருந்தது.. படகடியில இண்டைக்கு கிண்டிப்போட்டுத்தான் விடுவாங்கள்... பிள்ளயப் பாக்கப் போறன் எண்டு சொல்லு.. பயப்பிடாத...".

படகில் ஏறுவதற்கு முன்னரான இராணுவ பாதுகாப்பு சென்றியில் அவர் சொன்னது போலவே நடந்தது. அவளைத் துருவித்துருவிக் கேட்டப்படி அவளது பையை கிண்டி எடுத்தாள் அங்கிருந்த இராணுவப்பெண். புவனத்திடமிருந்து எதையும் அவர்களால் எடுக்க முடியவில்லை. திருகோணமலை துறைமுகத்தில் அவர்களது படகு தரித்து நின்று அனைவரும் இறங்கும் போதே அவள் பரமசிவத்தை மீண்டும் கண்டாள். "சிவமன்ணை" அவள் அழைத்த குரலைக் கேட்டுத் திரும்பியவர் "வெளியே வா கதைப்போம்" என சைகை செய்தார். கெடுபிடிகள் பரிசீலனைகள் அனைத்தும் முடித்துக்கொண்டு அவள் வெளியே வந்தபோது அவர் அவளுக்காக காத்திருந்தார்.

"அண்ணா... நீங்க சொன்ன மாதிரியே துருவித் துருவி எடுத்தாங்கள்" "நான் அலியிட்ட கதைச்சுக்கொண்டு இருக்கேக்கயே அவன் நம்பிக்கயில்லாம உன்னப் பாத்துக்கொண்டு இருந்தவன். நான் சொன்னதுகள்ள அவன் நம்பினது ஒண்டேயொண்டத்தான்...நீ என்ர தங்கச்சி எண்டுறத... அது சரி ஏனிந்த சாபம் அவனுக்கு..." அவளுக்கு அவரை நம்பிச்சொல்வதா இல்லையா என்ற கேள்வி எழும்பியது. என்றாலும் அவருக்கு தான் விட்ட சாபம் தெரிந்து விட்டது என்பதால் இனி ஒளித்தும் ஏதும் ஆகப் போவதில்லை தானே. "அதுவா.. அந்த அறுவான் என்ட பிள்ளையை அடிச்சு என்ட பிள்ளை அந்த றோட்டில மயக்கமாக் கிடந்தவனாம்... என்ன கஸ்டப்பட்டிருக்கும் என்ட குஞ்சு... என்ட பிள்ளைக்கு நானே கை வச்சதில்ல... இவன் ஆர் கை வைக்கிறதுக்கு....ஒரு பத்து நாளுக்கு முதல் இது நடந்தது.. இவன் தான் எங்கட ஆக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனபேர இல்லாமச் செய்தவனாம் எண்டும் கேள்விப்பட்டிருக்கிறன்"

"ஓ ..நீ கரன்ட அம்மாவே" "ஓம் அண்ணா" அலி நம்பிய அண்ணா தங்கை உறவை அவள் ஏற்றுக்கொண்டாள்.

"ஆஹா..ஹா..ஹா.. அப்பிடியோ சங்கதி ... சரி பின்னேரமே ஊருக்குத் திரும்பிறாய் தானே.. சந்திப்பம்... அதோட உன்ர மோனிட்ட பரமசிவம் ஐயா கேட்டவர் எண்டு சொல்லு" "அவனுக்குத் தெரியுமே உங்கள" "நல்லாத் தெரியும்.. கேட்டுப்பாரன்.. சரி நான் வாறன்" அவர் அவளின் பதிலுக்கு காத்திராமல் வலது புறமாக நடக்கத் தொடங்கினார். புவனத்தின் முன்பாக பெருந்தெரு மிக இரைச்சலுடன் தனது அன்றைய நாளில் வாழ்ந்து கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

அதிகாலை வேளையில் ரஞ்சிக்கு கட்டாயம் அமலனின் அணைப்பு தேவையாக இருக்கும். நிலத்தில் போடப்பட்ட மெத்தையில் அவளும் அவர்களின் பிள்ளையும் படுக்க அருகில் நிலத்தில் படுப்பது அமலனின் வழமை. போராளியாக வாழ்ந்த காலத்தில் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் கிடைக்கும் இடங்களில் நித்திரைகொண்டு பழகியிருந்த அமலனுக்கு சொகுசான மெத்தையில் படுத்தால் நித்திரை வருவதேயில்லை. அதனால் அவன் நிலத்திலேயே எப்போதும் படுப்பான்.

மெத்தையில் பிள்ளையை அணைத்தபடி படுக்கும் ரஞ்சி அதிகாலையில் உருண்டு அவனுடன் நிலத்தில் படுத்துக்கொள்வாள். அவனது இடது கையை தனது கழுத்துக்குள்ளால் புகுத்திக்கொண்டு தனது தலையை அவனது இடது தோள்மூட்டுக்கு சற்று கீழாக வைத்தபடி அவளது இடதுகையை அவனுடைய நெஞ்சின் மீது போட்டுக்கொண்டு இடதுகாலை மடித்து அவனது இடுப்பும் வயிறும் பொருந்தும் இடத்தில் போட்டபடி அவனது இடதுகையை மடித்து தன் மீது போட்டுக்கொண்டு படுப்பது அவளது வழமை. அதிகாலையில் விரவும் மெல்லிய குளிரில் அவனது அணைப்புக்குள் சுருள்வதை அவள் எப்போதும் இழக்க விரும்புவதில்லை. ஆரம்பத்தில் அமலனால் இதை தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவன் சுதந்திரமாக கால்களை விரித்துப் போட்டு அண்ணாந்து பார்த்தபடி எதிலும் முட்டுப்படாமல் நித்திரை கொள்வதையே விரும்பினான். போர் வாழ்க்கையும் அவனை அப்படித்தான் படுக்க பழக்கியிருந்தது. என்றாலும் அவள் அதிகாலைத் தூக்கத்தில் அணைப்பைக் கேட்டு அடம்பிடிக்கத் தொடங்கிய பின் அவனால் அதனை மறுக்க முடியவில்லை. இப்பொதெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனே அவளை இழுத்துப் போட்டுக்கொள்வதும் அந்த அதிகாலைகளில் சிலவேளை நிகழும்.

கதகதப்பு நிறைந்த அந்த அணைப்புக்குள் இன்று அவர்களால் நீண்டநேரம் நித்திரை கொள்ள முடியவில்லை. "என்னப்பா முழிச்சிட்டீங்களோ?" "ஓமப்பா.. இண்டைக்கு எட்டு மணிக்கு வாறன் எண்டு சொல்லியிருக்கிறன்" "ம்.. இண்டையில இருந்து ஐயாவுக்கு அரசாங்க உத்தியோகம்..." அவனைச் சீண்டி நிலைமையைச் சகஜமாக்க விரும்பினாள். "நேரப்படிதான் வேலை செய்யோணும்... விரும்பினால் வேலைக்கு போறது.. விரும்பின வேலைக்குப் போனது எல்லாம் இண்டையோட போச்சு ஐயாவுக்கு.. மணியடிச்சோன்ன போகோணும்... வரோணும்.. ஆனா நீங்க இப்பிடி போய்வாறது ஏதோ ஒரு நிம்மதியப்பா.." அவன் அமைதியாக அவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவளது நிம்மதிக்கான காரணங்களில் மற்றொன்று நிரந்தரமான வருமானத்தைத் தரும் தொழிலொன்றாக அந்த தொழில் இருந்தமையும்தான் என்பதை அவன் அறிவான். அந்த நிரந்தர வருமானத்தைக் கொண்டு அவர்களின் மாதாந்த வாழ்வைத் திட்டமிட முடியும் என்று அவள் சிந்திக்கிறாள்.

பணியிடம் அருகிலேயே இருப்பது அவளுக்கு மேலதிக திருப்தியையும் தந்தது. தேசப்பணியில் மீண்டும் இணைவது அவனுக்குள் ஒரு இறுமாப்பை தந்திருந்தாலும் தான் ஒரு போராளியல்ல பணியாள் என வகைப்படுத்தப்படுவதை அவன் மனம் ஏற்றுக்கொள்வதாயில்லை. அவன் போராளியாகவும் பின்னர் முன்னாள் போராளியாகவும் மட்டுமே இன்றுவரை அறியப்பட்டிருந்தான். இனி துணைப்படையினனாக அறியப்படுவது அவனுக்கு ஒரு கிலேசத்தை மூட்டியது. அவள் அதனைச் சரியாகப் புரிந்துகொண்டாள். "உங்களுக்கு இது அருமையான வாய்ப்பப்பா. உங்களுக்கு விரும்பீன நாட்டுக் கடமையையும் செய்றீங்கள். அதேநேரம் எங்களையும் கவனிச்சுக் கொள்ளுவீங்கள். என்ன செய்றது நீங்க தனியாள் இல்லையேப்பா.. உங்கள நம்பித்தானே நானும் பிள்ளையும் இருக்கிறம்..." அவளது வார்த்தைகள் அவனை சற்றேனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொஸ்தப்படுத்தின. "எழும்புவமே?" அவன் மெதுவாகக் கிசுகிசுத்தான். "ம்..." என்ற அவளது பதிலுக்கும் அவளது செய்கைக்கும் எந்தச் சம்பந்தமும் இருக்கவில்லை. இன்னும் நெருங்கி அவனது உடலின் மீது தன்னுடைய முழுப்பாரத்தையும் இறக்கினாள். அணைப்பை இறுக்கினாள். அவன் மூச்சு முட்டிப் போனான்... அன்பாலா? அணைப்பாலா?..

வெளிர்நீலநிற சட்டையை உதறி அணிந்துகொண்டான் அமலன். முழு நீளக்கையமைந்த அந்தச் சட்டையை மடித்து முழங்கைக்கு மேலாக விட்டுக்கொண்டான். கறுப்பு நிற முழு நீள காற்சட்டையை அணிந்து சேட்டை உள்ளே விட்டு இடுப்பில் பெல்ட் அணிந்து இறுக்கிக்கொண்டான். புட்டும் நேற்றைய மீன் குழம்பும் போட்ட தட்டுடன் வெளியே வந்த ரஞ்சி அவனுடைய கம்பீரமான தோற்றத்தில் ஒருகணம் மயங்கி நின்றாள் ரஞ்சி. அன்றாட வாழ்வின் அலைக்கழிதல்களில் மறந்துபோயிருந்த அந்தக் காதல் காலம் இதயத்தின் மேற்பரப்பில் வந்து மிதந்தது. சாரத்துடன் தொள தொளப்பான சேட்டினுள்ளும் வளையவரும் அவனது தோற்றம் முழுவதுமாக மாறிப் போயிருந்தது. "என்ன இப்பிடிப்பாக்கிறாய்..." அவனது கேள்வி அவளை வெட்கமடையச் செய்தது. "போங்கோ" தட்டை அவனை நோக்கி நீட்டிவிட்டு வெடுக்கெனத் திரும்பிப் போய்விட்டாள். சற்று நேரத்தில் குடிக்கத் தண்ணீருடன் திரும்பி வந்தாள். "அழகன் தான்..." சாப்பிட்டு முடித்த தட்டை வாங்கிக் கொண்டு தண்ணியை நீட்டியபடியே சொன்னாள்.

மணி ஏழு ஐம்பதைத் தொட்ட போது அமலன் தேவனின் அலுவலகத்திற்கு வந்திருந்தான். அலுவலகம் அந்த நேரத்திலே சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. பரிச்சயமான சில போராளிகளும் பரிச்சயமற்ற பல போராளிகளும் பணிகளின் நிமித்தம் வருவதும் போவதுமாக இருந்தனர். ஏற்கனவே துணைப்படையில் சேர்ந்திருந்த பொதுமக்கள் அலுவலகத்திற்கு உள்ளே செல்வதும் திரும்பி வரும்போது அவர்களது கைகளில் ரைபிள் இருப்பதையும் அமலன் அவதானித்தான். கலைக்கப்பட்ட குளவிக்கூட்டின் நினைவு எழுவதை அமலனுக்குத் தவிர்க்க முடியவில்லை. சரியாக எட்டு மணிக்கு போராளிகள் அனைவரும் கொடிக்கம்பத்தின் முன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிவரிசையில் நின்றனர். பணியாளர்களான துணைப்படையினர் இடதுபுறமாக மற்றொரு அணிவரிசையில் நின்றனர். அதுவரை வரவேற்புப் பகுதியில் அமர்ந்திருந்து நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த அமலன் தானாகவே எழுந்து துணைப்படையின் அணியில் மூன்றாவது வரிசையில் இடம்பிடித்துக் கொண்டான். எட்டு மணி ஐந்து நிமிடத்திற்கு போராளிகளின் அணி வரிசைகளில் முன்பாக நின்ற துணைப் பொறுப்பாளர்களுடன் தேவன் இணைந்தான். போராளி ஒருவர் புலிக்கொடியை ஏற்றினார். "ஏறுது பார் கொடி.. ஏறுது பார்" என்ற தேசியக் கொடிக்கான பாடல் ஒலிக்க அனைவரும் அணிவகுத்திருந்தனர். அடுத்து போராளிகள் அகவணக்கத்திற்குத் தயாராகினர். வலது கையின் ஐந்து விரல்களையும் இணைத்து நெஞ்சுக்கூட்டின் நடுவில் வைத்தபடி இடது கை தோள் மூட்டிலிருந்து நேராக இடுப்புடன் ஒட்டியபடியிருக்க அக் கையின் விரல்களுள் சுட்டுவிரல் நிலத்தை நோக்கிப் பார்த்திருக்க ஏனைய நான்கு விரல்களும் மடிந்தபடி அனைவரதும் அகவணக்கம் நிறைவு பெற்றது. பின்னர் சத்தியப் பிரமாணம் வாசிக்கப்பட போராளிகள் சத்தியப்பிரமாணத்தை எடுத்துக்கொண்டனர்.

மீண்டும் அந்தக் குளவிகள் பறக்கத் தொடங்கின. "கொஞ்சம் பொறுங்கோ அமலன் அண்ணை... நான் கூப்பிடுறன்" என்று கூறியபடி அமலனின் பதிலுக்கு காத்திராமல் தேவன் தன்னுடைய அலுவலகத்திற்குள் நுழைந்தான். ஒரு பத்து நிமிடத்தில் அமலனை விட சற்று வயதிற் குறைந்த ஒரு இளைஞன் அங்கு தயங்கித் தயங்கி வருகை தந்தான். வரவேற்பறையில் இருந்து முன்னேறிய அவன் மெதுவாக தேவனின் அலுவலகத்தினுள் எட்டிப் பார்த்தான்.

"ஓம்.. ஐயா வந்திட்டியலோ" தேவனின் குறும்புக்குரல் அமலனுக்கும் கேட்டது. "வா உள்ளுக்க வா... அதோட விறாந்தையில ஒரு அண்ணை இருக்கிறார்... பார்.. அவரையும் வரச்சொல்லு" தேவன் தன்னை வரச்சொல்வது தெளிவாக அமலனுக்குக் கேட்டது. அமலன் தானாகவே எழுந்து உள்ளே வந்தான். "அண்ணை வாங்கோ... இருங்கோ... குட்டி நீயும் வா.. இரு".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அமலண் அண்ணை. இவன் குட்டி.. நீங்கள் ரெண்டு பேரும் ஒண்டா டியூட்டி செய்யப் போறியள். காலமை ஏழு மணிக்கு பணி ஆரம்பிச்சு இரவு ஏழு மணிக்கு முடியும். இரவு பெடியள் வருவாங்கள். பெடியள் வராத நாள்கல்ல ரெண்டுபேரும்தான் பாக்கவேணும். ரைபிள்களை பொறுப்பான கவிதனிட்ட எடுத்துக்கொண்டு போங்கோ... பணி முடிஞ்சு லீவில போகேக்க திருப்பி ஒப்படைக்கோணும். இவ்வளவுந்தான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது.. உங்கட கடமை என்ன எண்டு பாத்தியலெண்டா சிறைப்பாதுகாப்புத்தான். அங்க இருக்கிற ஆக்கள கவனமாப் பாத்துக்கொள்றது. சிறையில இருக்கிற ஆக்களுக்கு சாப்பாடு தேத்தண்ணீக்கு நேரத்திட்டங்கள் எல்லாம் இருக்கு. அந்த நேரங்கள்ள லொக்குகளத் திறந்து அந்தந்த வேலைகளச் செய்ய விடலாம். மற்றும்படி ஆக்கள லொக்கில தான் வச்சிருக்க வேணும். வேற தேவைகளுக்கு ஒவ்வாருவரா திறந்துவிடலாம். சமயோசிதமா நடந்து கொள்ளுங்கோ.. வேற ஏதும் கேக்கவேணுமோ?" தேவன் ஏதோ அவசரத்தில் இருந்தான் போலும். அவன் ஒரு மழையாகப் பொழிந்தான். அமலன் பக்கவாட்டாக இருந்த குட்டியைப் பார்த்தான். அவன் ஏற்கனவே அமலனைப் பார்த்தபடிதான் இருந்தான். "என்ர பேசுக்கு கிட்டதானே ஜெயில் இருக்கு. ஏதும் தேவையெண்டா அப்பப்ப கேட்டுக்கொள்ளலாம் தானே?" என்று தேவனே முடித்தும் வைத்தான். "எங்க இருக்கு ஜெயில்?" "என்ன அமலண்ணை தெரியாதே உங்களுக்கு... உங்கட வீட்டுக்க பக்கத்தில தான்.. பொன்னாச்சியின்ர வளவுக்குள்ள" "அட பொன்னாச்சியின்ர வளவுக்குள்ளயே.." அமலன் திகைத்தான். பொன்னாச்சியின் வளவு அமலனது வீட்டுக்கு மிக அருகில்தான் இருந்தது. என்றாலும் அது சிறைச்சாலை என்று தெரியாத அளவிற்கு உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தது. அந்த வளவின் முன்படலை எப்போதுமே பூட்டப்பட்டிருப்பதன் காரணத்தை அமலன் அப்போது விளங்கிக் கொண்டான். "சரி.. நீங்கள் ரைபிள எடுத்துக்கொண்டு போங்கோ.. ரெண்டு பெடியள் ஜெயில்ல நிக்கிறாங்கள் அவங்கள ரிலீஸ் பண்ணி விடுங்கோ" அமலனும் குட்டியும் அந்த முகாமின் அடுத்த பகுதியின் அறையொன்றுக்குச் சென்றனர். அது ஆயுத களஞ்சியப்பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னோடு பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தவனின் பெயருக்கு ஏற்ற அளவினனாக குட்டி இருப்பதை அமலன் கவனித்தான். சிறு கூடான மேனியுடைய அவனுக்கு செல்லம் கொடுத்தே வளர்க்கப்பட்டிருப்பான் என்பதை வெளிக்காட்டும் உடல்வாகு அவனுடையது. “குட்டி.. நீ புலியா? இல்லாட்டி இப்ப துணைப்படை ட்ரெயினிங் எடுத்த ஆளோ?” “நான் புலி அண்ண” என திமிராக வந்த அவனின் பதிலை அமலன் நம்பத்தயாரில்லை. ஆயுத களஞ்சியப் பகுதியின் பொறுப்பாளன் கவிதன் ஒரு சிடுமூஞ்சியன். அன்று காலையிலிருந்து பலர் ஆயுதங்களை பெற்றுச் சென்றிருப்பது அவனது மேசையின் முன்னிருந்த பதிவேட்டில் இருந்தது.

“டேய் குட்டி... என்ன புதுசா ஒரு தாயையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறாய்?” கவிதனின் நகைச்சுவை அமலனுக்குள் சூட்டை ஏற்றியது. குட்டி உடனடியாகவே சமாளித்தான். “தேவன் அண்ணையே இவரப்பாத்து அண்ணையெண்டு கூப்பிடுறார் எண்டால் நீங்க சொன்னது சரிதான் அண்ண.. இவர் எங்களுக்கெல்லாம் தாய் போலத்தான் கிடக்கு” குட்டி சாமர்த்தியமாக கவிதனுக்கு அமலன் யாரென்பதை விளக்கிவிட்டான். குட்டியின் மீது அமலனுக்கு திடீரென ஒரு பரிவு எழும்பியது. கவிதன் கண்களை நிமிர்த்தி அமலனின் கண்களை நேராக பார்த்தான். பின் எதுவும் பேசாமல் தனக்குப் பின்புறமாக அடுக்கப்பட்டிருந்த ஆயுதங்களில் இருந்து இரண்டு ரி ஐம்பத்தாறு ரக ரைபிள்களை எடுத்து வந்து தனது மேசையில் வைத்தான். ரவைக்கூடுகளைக் கழற்றி ஒவ்வொன்றாக அந்த மேசையில் இருந்த இலத்திரனியல் தராசில் வைத்தான். ஒவ்வொரு முறை ரவைக்கூடு வைக்கப்பட்ட போதும் தராசு தொள்ளாயிரம் கிராம்களை தனது வாசிப்பாகக் காட்டியது. கவிதன் அமலனின் ஆற்றலைச் சோதிக்க விரும்பினான். தராசில் இருந்து இரண்டாவது ரவைக் கூட்டை எடுத்தவுடன் அவன் அமலனின் முகத்தை ஏறிட்டான். அந்த ஏறிடலில் இருந்த கேள்வியை அமலன் புரிந்துகொண்டான். சிடுசிடுப்பானவனாக இருந்தாலும் அவன் மற்றவரை அளவிட்டுப்பார்க்க பயன்படுத்தும் நுட்பம் கவிதனொரு கெட்டிக்காரன் என்பதை அமலனுக்குக் காட்டியது. “மகசீன்ல முப்பது ரவுண்ஸ் இருக்கு” என்று அமலன் தனக்குத்தானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கொண்டான். அந்தச் சிடுசிடுமூஞ்சி கவிதனுக்கு திருப்தி முகத்தில் படர்ந்தது. தான் மதிப்பிட விரும்புவதை அறிந்து அதற்கு மதிப்புக் கொடுத்த அமலனின் பதிலின் பின் அவன் முகத்தில் சிடுசிடுப்பு பறந்துவிடும் என்று நம்பிய அமலனுக்கு தோல்வியே ஏற்பட்டது. அந்த முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. “பதிவேட்டில குட்டியின்ர பெயர் இருக்கு உங்கட பெயரென்ன?..” “அமலன்” “ஓ... அமலன் நல்ல பெயர்” அவ்வளவும் தான் அவனது பாராட்டாக இருக்க முடியும். அவனது பதிவுப் புத்தகத்திலிருந்து தலையை கவிதன் நிமிர்த்தவில்லை. குட்டி தனது ரைபிளை எடுத்து மகசீனைப் பொருத்திக் கொண்டதைக் கண்டபின்பே அமலனுக்கு அங்கு வேலை முடிந்து விட்டது என்பது புரிந்தது. தனது ரைபிளை ஒரு கையிலும் மகசீனை மறுகையிலும் எடுத்துக்கொண்டு வேகமாக குட்டியின் பின்னே வெளியேறினான் அமலன்.

அன்றாடம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதர்களும் வெவ்வேறு குணக்கலவைகளைக் கொண்டவர்கள். அவர்களைப் புரிந்துகொண்டு அவர்களோடு ஊடாட எடுக்கும் முயற்சிகளும், ஊடாடவில்லையெனில் விலகி நடப்பதையும் வாழ்க்கையே கற்றுத்தருகின்றது.. புதிதாகச் சந்தித்த குட்டியையும் அந்த சிடுமூஞ்சி ஆயுத களஞ்சியப் பொறுப்பாளன் கவிதனையும் எண்ணியபடி அமலன் தேவனின் முகாமில் நிறுத்தியிருந்த தனது மிதிவண்டிக்கு வந்து சேர்ந்தான். ரைபிளில் மகசீனைக் கொழுவினான். தன்னையறியாமலே முழங்கைமூட்டை மடித்து வலது கையில் ரைபிளைத் தூக்கி இடதுகையால் இழுவிசையைக் கீழே இழுத்து விடுவித்து ரைபிளைக் ‘கோக்’ செய்தான். அந்தச்சத்தம் அவனுள் சொல்லணா இன்பங்களை தூவியது. மீண்டும் போராளியான உணர்வுகள் அவனது நரம்புகளுக்குள் பாய்ந்தது.

“அண்ணை உங்கள எங்கயெல்லாம் நான் தேடுறது” மிக அருகில் கேட்ட குட்டியின் குரலையடுத்து வழமைக்குத் திரும்பிய அவன் ரைபிளின் “சேவ்டி கட்ச்” சை தட்டிவிட்டு ரைபிளை தோளில் கொழுவினான். “வா ரெண்டுபேரும் சைக்கிள்ள போவம்” என்றவாறு சைக்கிளை சம்பூரின் பிரதான தெருவுக்குள் இறக்கினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாச்சியின் பரந்த வளவு சம்பூரின் பிரதான வீதியை முகப்பாகக் கொண்டிருந்தது. அதன் வேலிகள் யாவும் ஆறடி உயரத்திற்கு காய்ந்த பனை ஓலைகள் மற்றும் மட்டைகளால் வரியப்பட்டு உள்ளே இருப்பதை வெளிக்காட்டாத வகையில் இருந்தது. பிரதான படலை இரும்பினால் அமைக்கப்பட்டு ஒரு வாகனம் உள்ளே செல்லும் அகலமுடையதாக வெளிப்புறமிருந்து பார்க்கும் போது புலிகளின் முகாம்களில் ஒன்றாகத் தோற்றமளித்த அந்த வீடு ஒரு சிறைச்சாலை என்பதை எவரும் புரிந்துகொள்ள முடியாத உருமறைப்புடன் இருந்தது.

அவர்கள் ஆயுதங்களுடன் வந்திறங்குவதை உள்ளேயிருந்த ஒருவன் அவதானித்தான். பிரதான படலையை நோக்கி அவன் நடந்து வந்தான். நான்கு மகசீன்கள் வைக்கப்பட்ட கோல்சரை நெஞ்சில் கட்டி தோளில் ரைபிளுடன் வந்த அவனைப் பார்த்தவுடனேயே தெரிந்தது அவன் புலிப்போராளி என்று. படலையைத் திறக்க முன்பே "நீங்கள் அமலனோ?" என்றான் அவன். "ஓம் இவர் அமலன்தான்... நான் குட்டி" அந்தப் போராளி குட்டியைப் பார்த்து சிரித்தபடியே படலையைத் திறந்தான். "தேவண்ணை வோக்கில சொன்னவர்.... வாங்கோ" என்றான். அவர்கள் உள்நுழைந்ததும் படலையைப் பூட்டிவிட்டு அவர்களுடன் சேர்ந்து நடந்தான்.

சிறைச்சாலை கட்டடத்துக்கு முன்புறமாக காவலகம் அமைக்கப்பட்டிருந்தது. காவலகத்திலிருந்து அவதானிக்கும் போது பிரதான சிறைச்சாலைக் கட்டடத்தின் பெரும்பகுதி கண்களுக்குள் புலப்படும் வகையில் இருந்தது. சிறைச்சாலைக் கட்டடத்தின் பிரதான கதவு சாதாரண வீடுகளின் கதவுகள் போலல்லாது சிறைச்சாலையின் கதவுகளை ஒத்திருந்தது. பொருத்தமில்லாத அளவுகளில் உருவாக்கப்பட்ட அந்தக் கதவு நிரையாக சில கம்பிகளையும் கிடையாக மூன்று இடங்களில் இணைப்புக் கம்பிகளையும் கொண்டிருந்தது. அந்தக் கதவின் இடைவெளிகளின் ஊடே மனிதர்களை அமலன் கண்டான். மனிதர்கள்.. சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட மனிதர்கள்... பத்திற்கும் மேற்பட்ட அந்த மனிதர்களின் ஒவ்வொரு முகங்களும் வேறானவை. அம்முகங்களில் விரவியிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகள் மிகவும் அரிதாக காணக்கிடைப்பதைப் போலிருந்தன. பிரமை ஆட்கொண்ட ஒரு கணப்பொழுதை உடைத்து வெளியே வருவதற்கு அமலன் கண்களை மேலே நிமிர்த்தினான்.

அந்த வீடு மிகப்பெரிய நீண்ட தாழ்வாரத்தை மண்டப வடிவில் கொண்டிருந்தது. தாழ்வாரத்தின் முடிவில் இடதும் வலதுமாக சாதாரண அளவுகளை விடப் பெரியதாக இருந்த இரண்டு அறைகள். "அமலண்ணை" அந்தப் போராளி அழைத்தான். "நாங்கள் வெளிக்கிடப்போறம்.. பொறுப்பு எடுங்கோ" "சரி தம்பி" அந்தப் போராளி சிறைச்சாலையின் பிரதான கதவின் மூன்று பெரிய பூட்டுக்களையும் ஒவ்வொன்றாக விடுவித்தான்.. பின்னர் சற்றுப் பிரயத்தனத்துடன் அந்தக் கதவை இடதுபுறமாக திறந்தான். பாரமான அந்தக் கதவுகள் சாதாரணமாக நகர மறுத்தன. பெரிய கிறீச்சிடலைச் செய்தன. அந்தக் கிறீச்சிடல் அந்தக்கதவின் பாரத்தை வெளிப்படுத்தப் போதுமானதாக இருந்தது. சிறைச்சாலை மண்டபத்தில் ஆங்காங்கே இருந்தவர்களும் சரிந்து படுத்துக்கிடந்தவர்களும் உள்ளே வரும் போராளியின் முகத்தை ஆவலுடன் நோக்கியபடி இருந்தனர். "எல்லோரும் எழும்பி லைனுக்கு வாங்கோ" என்ற அவனின் கட்டளையை அடுத்து அவர்கள் மெதுவாக எழுந்து ஒரு வரிசைக்கு எட்டுப் பேராக இரண்டு வரிசைகளில் நின்றனர்.

கைதிகளால் அந்தக் கட்டளைக்கு வேகமாக இயங்க முடியவில்லை. அதற்குக் காரணம் அவர்களில் ஒருவரின் இடது கால் மற்றையவரின் வலது காலுடன் சங்கிலியினால் பூட்டப்பட்டிருந்தன. இரண்டு கால்களுக்கும் இடையில் சில அடி இடைவெளிகள் இருந்தன. அந்தப் பிணைப்பு அவர்களை தன்னிச்சையாக நகரவிடாமல் தடுத்தது.

எந்த மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றோமோ அந்த மக்களிற் சிலரை அப்பிடிக் கட்டிப் போட்டிருப்பதைக் காண அமலனுக்கு மனம் ஒப்பவில்லை. ஒரு போராளியாக எதிரிகளுடன் போராடியதைத் தவிர வேறு எதையும் தெரிந்து கொள்ளாத வாழ்வு அவனுடைய போராட்ட வாழ்வாக இருந்தது. அவர்கள் போரை வாழ்வாகக் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் போராட்டம் என்பது வேறு என்பதை அவன் திருமணம் முடித்த காலத்திலிருந்தே புரிந்துகொள்ளத் தொடங்கியிருந்தான்.

“மொத்தம் பதினாறு பேர்” என்றான் போராளி. சாவிகளை வாங்கிக் கொண்டு “சரி எல்லாரும் உங்கட இடத்துக்குப் போங்கோ” என கட்டளையிட்டான் அமலன். மண்டபத்தைவிட்டு வெளியேறிய போது குட்டி அந்தப் பெரிய கதவை மூடும் கிறீச் ஒலி நாராசமாய் அமலனின் காதுகளுக்குள் புகுந்தது. தங்களது சிறிய தங்ககத்துக்கு வந்த நால்வரும் ஏனைய திறப்புக்கள் பதிவேடுகள் என்பவை தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

போராளிகள் இருவரையும் படலை வரை கொண்டு போய் விட்டு படலையைப்பூட்டிவிட்டு குட்டி உள்ளே வந்தான். காவலகத்தில் ஒரு வெறுமை குடிகொண்டது. படலையில் இருந்து திரும்பிய குட்டி காவலகத்துக்கு வராமல் அந்தச் சிறைச்சாலையின் சுற்றுப்புறத்தை பார்க்கப் போவதை அமலன் அவதானித்தான். சிறைச்சாலைக்குப் பின்புறமாகவே காவலர்களுக்கான கழிவறையும் கழுவும் அறையும் கட்டப்பட்டிருந்தன. காவலகத்திலிருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் உணவு சமைக்கும் சாலை அமைக்கப்பட்டிருந்தது. பொருட்களை வைப்பதற்கு வாகாக தட்டுகள், விறகு அடுப்பு, தேநீர் தயாரிப்பதற்கான பொருட்கள், ஒழுங்காக மழிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டிருந்த இருபது பாதிச் சிரட்டைகள் அடுக்கப்பட்டு இருந்தன. சுற்றுப்பகுதி முழுவதும் சுத்தமாக்கப்பட்டிருந்தது. தூரத்திலிருந்து பார்த்தாலும் நகர்வுகளை அவதானிக்க அந்தச் சுத்தம் உதவியதை குட்டி புரிந்துகொண்டான்.

“அமலண்ணை.. கழிவறையெல்லாம் பின்னுக்குத்தான் கட்டுப்பட்டிருக்கு.. நாங்கள் கட்டாயம் பின்னுக்கு போய் பாக்கோணும் எண்டு எங்கட ஆக்கள் சிஸ்டமாத்தான் கட்டியிருக்கிறாங்கள். மற்றும்படி உடைச்சுக்கொண்டு எல்லாம் ஓடேலா” காவலகத்துக்குள் நுழையும் போதே குட்டி சொல்லிக்கொண்டே புகுந்தான். ரைபிள்கள் கொழுவும் கட்டையில் தோளில் கிடந்த ரைபிளை வைத்தான். முன்னால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த மரக்குற்றியில் குந்தினான். "அண்ணை பிளேண்டீ குடிக்கிற டைம்... என்ன செய்வம்?" "சொல்லன் என்ன செய்வம்?" "ஏற்கனவே ரோஸ்டர் போட்டிருக்கா எண்டு பாப்பம் அப்பிடி போடேல்ல எண்டால் போடுவம்" "சரி அப்ப வா உள்ளுக்க போவம்". கதவு மீண்டும் கிறீச்சிட்டது. "நாசமாப்போன சத்தமடா இது" அமலன் அலுத்துக்கொண்டான். "அண்ண கிறீஸ் வைச்சு விடுவமே?" கேள்வி கேட்ட குட்டியை வினோதமாகப் பார்த்தான் அமலன். "சத்தம் கேட்டாத்தான் ஆரும் திறக்கிறாங்கள் எண்டது எங்களுக்குத் தெரியும்... நீ கிறீச வச்சயெண்டால் திட்டம் போட்டு உடைச்சுக்கொண்டு ஓடுறவனுகளுக்கு வாய்ப்பா போயிரும்" "ஓ..அதா அண்ண.. எண்டாலும் இவயெல்லாம் ஓடி எங்க போகேலும்.." இப்படிச் சொன்னபோதும் குட்டிக்கு அது போதுமானதாக இல்லை. இவர்கள் யாரும் ஓடிப்போனால் தானும் அமலனும் பனிஸ்மென்ட்டுக்கு போக வேண்டும் என்பதை எண்ணிப்பயந்தான்.

அந்த பயத்தைப் போக்க மேலும் கதைத்தான். "ஓடீருவினமே.. ஓடுறவர சுட்டுத் தள்ள வேண்டியதுதான்" என்று வாய்விட்டுக்கூறிய பின்னர்தான் குட்டிக்கு திருப்தி வந்தது. அவர்கள் இருவரும் சிறைச்சாலைக்கு உள்ளே வந்தனர். "தேத்தண்ணி ஊத்துறதுக்கு ஏதாவது திட்டங்கள் இருக்கா?" அமலன் கைதிகளை நோக்கி கேட்டான். "ஓமண்ணை.." பலர் பதிலளித்தார்கள். "இண்டைக்கு ஆர்?" "நானும் வரதனும் தான் இண்டைக்கு" "உங்கட பெயர் என்ன?" "நான் சுந்தரம்" "சரி சுந்தரமும் வரதனும் எழும்பித் தயாராகுங்கோ".

அமலன் தனது ரைபிளைத் தயார்நிலைக்கு கொண்டுவந்தான். அவர்கள் இருவரினதும் கால் சங்கிலிகளைத் தவிர ஏனைய பிணைப்புக்களை குட்டி விடுவித்தான். "கால் கட்டையும் களட்டி விடுங்கோ.. அப்பிடித்தான் விடுறவே" "நாங்கள் அப்பிடி விடமாட்டம்... " உடனேயே மறுத்தான் அமலன். "ரெண்டு பேரும் முன்னுக்கு நடவுங்கோ" அவர்கள் தத்தித்தத்தி நடந்தார்கள். குட்டி அவர்களுடன் சமையற்சாலைக்குச் சென்றான். பிளேண்டி தயாரானது. அமலன் அங்கு வந்தான் "பதினெட்டு சிரட்டைகளையும் எடுத்துக்கொண்டு உள்ளுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவம்" சுந்தரமும் வரதனும் தேநீரை பெரிய குவளைகள் இரண்டில் நிரப்பிக் கையில் எடுத்துக் கொண்டனர். அமலன் சிரட்டைகளை ஒரு தட்டில் அடுக்கிக்கொண்டான். குட்டி திறப்புகளை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு முன்பாக நடந்தான். கதவு இரு முறை கிறீச்சிட்டது. "எல்லாரும் வட்டமா இருங்கோ" கைதிகள் அனைவருக்கும் அந்த விடயம் புதிதாக இருந்தது.

அவர்கள் ஒரு அலங்கோலமான வட்டமொன்றை அமைத்தனர். "என்ன புதுசாக்கிடக்கு?" வரதன் அருகில் இருந்த மற்றைய கைதியுடன் குசுகுசுத்தான். அமலனுக்கு குசுகுசுப்பு புரிந்தது. "இவ்வளவு நாளும் போராளிகள் தான் உங்களுக்குப் பொறுப்பா இருந்தவை. அவ போராடப் போகோணும், எல்லைக் காவலுக்குப் போகோணும், புலனாய்வுக்குப் போகோணும் எண்டு பல வேலைகளச்செய்யோணும். அதுக்குள்ள திருகுதாளங்களச் செய்துபோட்டு உதுக்குள்ள வந்து கிடக்கிற உங்களுக்கு பாதுகாப்பும் குடுக்கோணும். திருகுதாளம் செய்றது நீங்கள்.. பாதுகாப்புக்கு நாட்டைக் காப்பாத்த வந்த போராளிகள்...ம்.... சரி.... இனி உங்கட காவலுக்கு நிரந்தரமா நாங்கள் வந்திருக்கிறம். அதால இண்டைய முதல்நாளில இருந்தே சில விசயங்களப் பழகுவம்." சிரட்டையில் நிரப்பியிருந்த தேநீரைப் பருகினான். கைதிகள் தாங்கள் பருகலாமா இல்லையா என்பதைத் தெரியாமல் 'பேந்தப்பேந்த' முழித்தபடி இருந்தார்கள். "குடியுங்கோ எல்லாரும்.. குடிச்சுக்கொண்டே கதைப்பம்" குட்டி சொல்லிவிட்டு தனது சிரட்டையை கையிலேந்தினான். அமலன் தொடர்ந்தான் "நீங்கள் தண்டனை விதிக்கப்பட்டவர்களா இருந்தாலும் தமிழர்கள். சிங்களசிறை மாதிரி இல்லை இது. நீங்கள் உங்கட பிழைகள விளங்கிக்கொள்ளோணும். இனி பிழை விடக்கூடாது என்டதுல எங்கட தலைவர்மிக்க தெளிவோட இருக்கிறார். நாங்கள் எல்லோரும் அன்போட இருப்பம். தேநீரும் சாப்பாட்டையும் இப்பிடி வட்டமா இருந்தே சாப்பிடுவம். கட்டளைகளுக்கு கீழ்ப்படிஞ்சு நடப்பீங்கள் எண்டா எங்களுக்குள்ள பிரச்சனைகள் வராது. அது மீறப்பட்டால் எங்களிட்ட மன்னிப்ப எதிர்பார்க்கவே வேண்டாம்". அவன் தன்னுடைய வார்த்தைகளுக்கு கொடுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பை அமலனின் குரலின் தொனி வலியுறுத்தியது. சில நிமிடங்களின் பின் மெல்லிய கலகலப்பு அங்கு பரவியது. "அண்ணயாக்கள் உங்கட பெயர் என்ன" "நான் அமலன்... இவர் குட்டி" அவர்கள் எல்லோருக்கும் அமலனைவிடக் குட்டியைப் பிடித்திருந்தது. சுமார் அரை மணிநேரத்தின் பின் கதவு இரண்டு முறை கிறீச்சிட்டது.

"வாசிக்கிறதுக்கு பத்திரிகைகள், கொஞ்சப் புத்தகங்கள் வேணும் அண்ண" குட்டிக்கு நேரம் நகர்வது ஆமை வேகத்திலிருந்தது. தூண்டிலை எறிந்துவிட்டு குளத்தை பார்த்தபடி பல மணித்தியாலங்கள் பொறுமையாக இருந்து பழகிவிட்ட அமலனுக்கு அந்த ஏகாந்தத்தில் கண்களை வானவெளியில் தொலைத்துவிட்டு அமைதியாயிருப்பது பெரிய விடயமாக இருக்கவில்லை. "சரி நாளைக்கு தேவண்ணையிட்ட கேப்பம் பத்திரிகைகள் வாங்கித்தரச்சொல்லி" "ஓம் அமலண்ணை... உங்களப் பற்றிச் சொல்லுங்கோவன்.. கேப்பம்" அமலன் குட்டியை உற்றுப் பார்த்தான். மூச்சை உள்ளே இழுத்து விட்டான். அவனது கடந்தகாலம் கண்முன்னே விரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

திருகோணமலை மாவட்ட பதுங்கித் தாக்குதல் அணியின் பொறுப்பாளர் கிட்டு ரூ-வன் முகாமில் இருந்தார். அவருக்கு முன்பாக கோகிலன் அவனது அணியினர் இருவருடன் அமர்ந்திருந்தான். அனைவரும் தமக்கு முன்னிருந்த மேசையில் விரிக்கப்பட்டிருந்த வரைபடத்தை மிக அவதானமாகப் பார்த்தபடி இருந்தனர். மரக்கிளையொன்றினால் காட்டிக்கொடுக்கப்பட்ட இராணுவத்தின் இரகசியக் கண்காணிப்பு நிலை தொடர்பாக அவர்கள் அங்கு கூடியிருந்தார்கள். "கோகிலன் ரெக்கி பாத்திட்டியா?" "ஓம் கிட்டண்ண. மூண்டு நாளாக் கவனிச்சிட்டம். ஆக்கள் நிரந்தரமா அங்க நிக்கினமில்ல ஆனா ஏதோ ஒரு தேவைக்கு இடைக்கிடை வந்து போறாங்கள். எங்கட முன்லைன் பெடியளும் சொன்னவங்கள் நடமாட்டம் இருக்கெண்டு" "அவங்கட இடத்தில இருந்து நீங்கள் றோட் கிளியர் பண்ற இடம் எத்தனை மீற்றர் இருக்கும்" "சுமாரா ஐநூறு இருக்கும் அண்ண" கிட்டு சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். "அவங்களுக்குத் தேவையெண்டால் இந்நேரம் எங்கள்ள ஒண்டு ரெண்டு பேர போட்டிருப்பாங்கள். இப்பவரைக்கும் போடாமல் இருக்கிறாங்கள் எண்டால் வேற ஏதோ வேல நடக்குது.. தொடர்ந்து கண்காணிக்க வேணும். நான் பைவ்பைவ்க்கு சொல்றன். மறைப்பா சென்றி ஒண்டப் போடுவம். ஒவ்வொரு நாளும் அவங்கட அறிக்கைய நீ பார். பிறகு முடிவெடுப்பம்." கிட்டுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் அவர்கள் கலைந்து சென்றார்கள். கோகிலனுக்கு இன்னும் ஒரு வேலை காத்துக்கிடந்தது.

தன்முன்னே விரிந்த பெருந்தெருவின் பரபரப்பு புவனத்திற்கு அந்நியமாகத் தொன்றியது. மிகவும் அமைதியான கிராம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் சுவைகள் ஒரு துளியேனும் மிச்சமின்றிக் கிடக்கும் நகரத்தில் மனிதர்கள், வாகனங்கள், இரைச்சல்கள் இணைந்ததொரு இயந்திர உலகத்தை அவள் உணர்ந்து கொண்டாள். அந்த உலகம் அவளை தன்னுள் ஈர்க்கமுடியாமல் தோற்றுப் போனது. 'பின்னேரமே திரும்பீரோணும்' முணுமுணுத்த அவளுக்குப் பசிக்கத் தொடங்கியது.

"தம்பி பக்கத்தில கடையேதும் இருக்கா?" படகிலிருந்து இறங்கிவந்த பெடியனிடம் கேட்டாள் அவள். "அந்தா தெரியுது பாருங்கோ அது தேத்தண்ணி கடைதான்... பாத்தா வீடு மாதிரித் தெரியும்" இறங்குதுறையில் இருந்து வலதுபுறமாகத் தெரிந்த அந்த வீடு கடலினுள் கட்டப்பட்டிருந்தது. "மொக்கத ஓனே" அவன் கேட்ட மொழி புவனத்துக்கு புரியவில்லை. ஆனால் என்ன கேட்டிருப்பான் என்பது தெரிந்தது. "தேத்தண்ணியும் பனிஸ்சும்" "பால் தேத்தண்ணியா?" அவன் தமிழுக்கு மாறினான். "இல்ல வெறுந்தேத்தண்ணியும் பனிசும் தா.. எவ்வளவு?" "இருவது" அவள் இரண்டு பத்து ரூபாய்த்தாள்களை நீட்டினாள். கடையினுள் இருக்கைகளில் சில வெறுமையாக இருந்தன. என்றாலும் உள்ளேயிருந்தவர்கள் விடும் புகையால் உள்ளே செல்ல அவள் விரும்பவில்லை. வெளியே போடப்பட்டிருந்த மரத்தட்டில் அமர்ந்தாள். பனிசைப் பிய்த்து வெறுந்தேநீரில் ஊறவைத்து சாப்பிட்டாள். அவளுக்கு அது பிடிக்கும். 'முதல் வேலையா ஐயாட பலசரக்குக் கடைக்குப் போகோணும். துண்டக் குடுக்கோணும்.. பிறகு அன்பில்லத்துக்கு போகோணும். பிள்ளயப் பாக்கோணும்.. கதைக்கோணும்.. வெளிக்கிடோணும்..' அவளது அன்றைய திட்டங்களை யோசித்துக் கொண்டிருந்ததில் பனிஸ் துண்டொன்று தேநீர்க் கோப்பைக்குள் கரைந்து விழுந்தது. "நல்லா ஊறவச்சிட்டனோ?"...

முச்சக்கரவண்டியில் போவதை விட நடந்து போவது அவளுக்கு பிடித்திருந்தது. அந்த நகரத்தின் வேகத்தை நடந்துபோகும் நேரத்தில் அனுபவிக்க விரும்பினாள். கடையில் இருந்து புறப்பட்டு மீண்டும் இறங்குதுறைக்கு வந்து நேர்முன்பாக விரிந்திருந்த பெருந்தெருவில் நடக்கத் தொடங்கினாள். காளி கோயில்வரை அவளுக்குத் தெரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால் அங்குவரை சென்று காளியாச்சிக்கு ஒரு வணக்கம் வைத்தாள். "ஐயா கொமர்சல் வங்கிக்கு போகோணும்.. வழி சொல்லுவியளோ" கோயிலில் வணங்கிக் கொண்டிருந்த ஒருவரை புவனம் குழப்பினாள். "இடது பக்கமா திரும்பி நேராப் போங்கோ. முதலாவது தெருவில திரும்பாம சந்தையத் தாண்டி வாற தெருவில இடதுபக்கமா திரும்பி நடவுங்கோ... கொமர்சல் வங்கி வரும்" வேதவாக்கு சொல்வதைப் போல இருந்தது அவளுக்கு. அவர் வேகமாகக் கண்களை மூடி கடவுளை கும்பிடத் தொடங்கியது புவனம் வேறு ஏதும் தன்னிடம் கேட்கக் கூடாது என்பதை தெளிவாகக் காட்டியது.

குடித்த தேநீர் தெம்பாக இருந்தது. அவள் நடந்தாள். மத்திய வீதியில் அவள் நடந்தபோது அன்பில்லத்தினைக் கண்டாள். 'அட ...இஞ்ச இருக்கு தம்பீட இல்லம்... தம்பியப் பாத்திருவமோ?' அந்த வாசலில் ஒரு கணம் தாமதித்தாள். முகுந்தன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. 'மகனக் கூட்டிக்கொண்டு கடைக்கு போகாதீங்கோ'. 'ஓம்..கரனுக்கு நான் செய்ற இந்த வேலை தெரியக் கூடாது' அவள் மெதுவாக நகர்ந்தாள். மேலும் சில கட்டடங்கள் தாண்ட கொமர்சல் வங்கி தெரிந்தது. அதையும் தாண்டி இரண்டாவது கடை பலசரக்கு வியாபாரத்தில் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. நான்கு பேர் ஒரு வரிசையில் அமர்ந்திருந்தார்கள். மொத்த வியாபாரிகளை கவனிக்க மூவரும் சில்லறை வியாபாரத்துக்கு பற்றுச் சீட்டைப்போட ஒருவரும் இயங்கிக்கொண்டிருக்க உள்ளே பலர் கால்களில் பம்பரங்களைச் கட்டிக்கொண்டு இயங்கிக்கொண்டிருந்தார்கள். புவனம் கடையைப் பார்த்தவுடன் மலைத்துப்போனாள். 'இந்தப் பெரிய கடைக்கு உரிமையாளனா அவர்?.. இதுக்குள்ள பிரபாவ கண்டுபிடிக்கிறது எப்பிடி?' தயங்கினாள். சில்லறை வியாபாரத்துக்கு பற்றுச்சீட்டுகள் வழங்கிக் கொண்டிருந்த ஒருவர் புவனம் தயங்கிக்கொண்டு நிற்பதைக் கவனித்தார். "அம்மா.. இஞ்ச வா..." தன்னைத் திடீரென அவர் கூப்பிடுவார் என புவனம் நினைக்கவில்லை. உடனே முன்னோக்கிச் சென்றவள் கட்டப்பட்டிருந்த படிக்கட்டை கவனிக்கத் தவறினாள். கால் தடக்கி விட முன்பாக நின்றிருந்த ஒருவரில் மோதுண்டாள். "கவனங்கவனம்" அழைத்தவர் கத்தினார். புவனம் அவருக்கு முன்னால் போய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றாள். "என்ன வேணும்?" "பிரபா..." "அவர நாங்கள் விக்க மாட்டமே" வரிசையில் இருந்த நால்வரும் ஒரேயடியாக சிரித்தார்கள். "அந்தா தொங்கல்ல இருக்கிறார். அவர்தான் பிரபா.. போங்கோ" அங்கிருந்தவர்களை விலக்கிக்கொண்டு அவள் முன்னேறினாள். "என்ன அம்மா.. நான்தான் நீங்கள் விலைக்குக் கேட்ட பிரபா" மீண்டும் அனைவரும் சிரித்தார்கள். பிரபா அவர்களுள் சற்று இளமையாக இருந்தான். என்றாலும் வணிக முதிர்ச்சி அவனில் வெளிப்பட்டது. அவள் தாமதிக்காமல் கைகளுக்குள் மடித்து வைத்திருந்த துண்டை எடுத்து நீட்டினாள். அவன் கசங்கிய அக்காகிதத்தை விரித்தான். அந்த எழுத்துக்கள் ஈஸ்வரலிங்கத்தினுடையது. "பிரபா.. ஐந்து லட்சம் நானாட வங்கிக் கணக்குக்கு போடு. உடுப்புகள் கொஞ்சம் கொண்டுவா. ஒரு மாதத்தில் சந்திப்பம். இந்த அம்மா நல்ல உதவி". அதில் எழுதியிருந்ததை உடனடியாக பிரபாவினால் கிரகிக்க முடியவில்லை. மீண்டும் ஓரிருமுறை படித்தான். புரிந்துபோனது. "துண்டுல இருக்கிற சாமான நீங்கள் வடிவாப்பாத்துதான் வாங்கோணும். என்னோட வாங்கோ காட்டுறன்..பாத்திட்டு கதைப்பம்". அவன் மிக அமைதியாக எழுந்து கடையின் பின்பகுதிக்கு புவனத்தை அழைத்துச் சென்றான். பின்புறம் இருக்கைகளுடன் கூடிய இரண்டு அறைகள் இருந்தன. அவளுடைய கைகளைப் பற்றி நன்றிப்பெருக்குடன் இருக்க வைத்தான். "அம்மா என்ன நடந்தது?" அவனது குரலில் தழுதழுப்பிருந்தது. கட்டபறிச்சானில் நடந்தவற்றை மிகச்சுருக்கமாக புவனம் சொல்லி முடித்தாள்.

"ஒரு மாசமோ?" "ஓம் தம்பி" அவள் அவனது கவலை தோய்ந்த முகத்தை உற்று நோக்கினாள். "சரி நான் பாக்கிறன்... உங்களுக்கு நான் என்ன உதவி செய்யோணும்" அவள் சின்னதாகச் சிரித்தாள் "ஒரு உதவி செய்யோணும்." என்றபடி தன்னுடைய கைக்குள் மடித்து வைத்திருந்த ஐநூறு ரூபாய் தாளை அவனின் கைகளில் வைத்தாள். "இந்த காச ஐயாட்ட குடுங்கோ...அவர்மிச்சம் சொல்லுவார்.. நான் வாறன் தம்பி... கெதியா வேலயப் பாருங்கோ" அவனின் பதிலுக்கு காத்திராமல் அந்தக் கடையை விட்டு வெளியேறி அன்பில்லம் நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பில்லத்தின் வாயிலைத் தாண்டி உள்ளே ஏறினாள். அன்பில்லத்தின் பிரதான வாசலுக்கு அண்மித்தாக வயதான பொறுப்பானவர் இருந்தார். "ஆரயம்மா பாக்கோணும்..." "கரன் என்ர மகன்தான்.. அவரப்பாக்க வந்தனான்" "ஓ அந்த புதுசா வந்த தம்பியோ... எங்கட கணித வாத்தியார்.. அவர்வர ஒருமணியாகும் அம்மா.." "ஒருமணியாகுமே?.." "ஓமம்மா நீங்கள் கட்டபறிச்சானில இருந்தோ வாறியல்...?" "ஓம் நான் கட்டபறிச்சானில இருந்து தான் வாறன்" "ஓ.. களைச்சுப் போயிருப்பியல் என்ன... இதில இருங்கோ.. இன்னும் ஒரு ரெண்டு மணித்தியாலம் தானே இருக்கு.. அது பறந்திரும்.. இருங்கோ இதுல" நீண்ட இருக்கையொன்றை அவர் காட்டினார். அவள் ஆசுவாசமாக அந் நீண்ட இருக்கையின் ஓரத்தில் இருந்தாள். அவள் அந்தரப்படுவதை ஐயா புரிந்துகொண்டார். நிலைமையைச் சகஜமாக்க "எப்பிடிப் பயணம்?" என்று கதையை ஆரம்பித்தார்.

***

"அண்ணை என்ன கனவுக்குள்ள போய்ட்டீங்கள் போல?" அமலன் தன்னைப்பற்றிச் சொல்லுவான் என எதிர்பார்த்து காத்திருந்த குட்டிக்கு அமலன் பதிலளிக்காமல் வெற்று நிலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது எரிச்சலை ஏற்படுத்தியது. "ஓமடா... கடந்த காலத்தப்பற்றி ஆர்கதைக்க ஆசப்பட்டாலும் கனவு காணாம கதைக்க ஏலுமே? நிகழ்காலத்தில எப்பவும் நாங்கள் வயசு கூடின ஆக்களாத்தான் இருப்பம். ஆனா கடந்தகாலம் எண்டுறது எங்கட வயசு குறைஞ்ச காலம்.. வயசு குறைஞ்ச காலம் எப்பவும் மனசுக்கு ரம்மியம் தான்" கண்களை மூடி அக்காலத்துக்குள் விழுந்தான். அவன் கடந்துபோன தன் வாழ்வைப் பற்றிச் சொல்வதற்கு தயாராகும் அழகை குட்டி இரசித்தான்.

"பதினைஞ்சு வயசில இயக்கத்துக்குப் போனனான்?..." "என்னது பதினைஞ்சு வயசிலயோ?" அதிர்ந்தான் குட்டி. "என்ன அதிர்ச்சியா இருக்கோ? ம் அப்ப எனக்கு பதினைஞ்சு வயசு தான்.." "பதினைஞ்சு வயசிலயே போராடோணும் எண்டுற யோசனை எப்படி அண்ணை வந்தது?" "உயிரக் காப்பாத்தோணும்.. அதோட பசியையும் போக்கோணும் இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டும் தான் அந்த வயசில என்னைய இயக்கத்துக்குப் போக வச்சது. வேற எங்க போவன் நான்? எங்க போனாலும் எண்ட உயிரக்காப்பாத்தேலாது.. அதோட எங்கட ஊரவங்கள கொலை செய்தவங்களப் பழிவாங்க வேணும் எண்ட விருப்பத்தையும் வேற எங்க போனாலும் நிறைவேத்தவும் ஏலாது. இதெல்லாம் தான் என்னயப் போக வச்சது. ஆனா அங்க போனாப்பிறகு ரெண்டு மாசம் எங்களுக்குப் படிப்பிச்சாங்கள். அந்த ரெண்டு மாசப் படிப்புக்குப் பிறகுதான் எங்கட போராட்டம் ஏன் நடக்குது? நாங்கள் ஏன் போராடோணும் எண்டது விளங்கிச்சு.."

"நான் அப்பிடிப் போகேல்ல அண்ண.. எண்ட ரெண்டு அண்ணாவும் ஒரு அக்காவும் ஏற்கனவே இயக்கத்தில இருக்கினம். அதால எனக்கு போராட்டம் எண்டா என்ன? ஏன் நாங்கள் போராடோணும் எண்டது தெளிவாத் தெரிஞ்சுது. அதால போனன். மூண்டுபேர் ஏற்கனவே இருக்கிறதால எடுக்கமாட்டம் எண்டுட்டாங்கள். சண்ட பிடிச்சு சத்தியாக்கிரகம் பண்ணி போனன். பயிற்சி முடிஞ்சு ஆறு மாசத்தில அக்கா கடல்ல வீரச்சாவு. அம்மா ஒரே பிடியாக் கூட்டிக்கொண்டு வந்திட்டா"

"என்ன காரணத்துக்காக இயக்கத்துக்குப் போறம் எண்டது முக்கியமில்ல. பயிற்சிக்குப் பிறகு ஒரு சுதந்திரப்போராளியாக மாறியிருக்கிறமா எண்டது தான் முக்கியம். சாப்பிட வழியில்லாம, உயிரப் பாதுகாக்க, பழிவாங்க, உண்மையா போராட வேண்டிய தேவையறிஞ்சு எண்டு பல காரணங்கள் இயக்கத்தில சேர இருக்கு. பயிற்சிக்குப் பிறகு, அவன் புலி வீரன் ஆனாப்பிறகு எண்ணம் முழுவதும் சுதந்திரப்போராட்டத்தில் லயிச்சிருக்கும்". அமலனின் கருத்துக்களுக்குப் பிறகு அவர்களிருவரும் அந்த உணர்வில் முழுகிப் போயிருந்தார்கள்.

"அண்ணை இயக்கத்துக்குப் போக வெளிக்கிட்ட நாளில இருந்து வடிவாச் சொல்லுங்கோ அண்ண" குட்டிக்கு முழுவதும் தெரிந்துகொள்ள ஆசையாக இருந்தது. "என்ட கிராமம் ஆதியம்மன்கேணியோட இருக்கிற சிவபுரம். புலிகள்ட கட்டுப்பாட்டுக்குள்ள இல்லாத கிராமம். காடு பக்கத்தில இருக்கு. இரவில பெடியள் வருவாங்கள். ஆமி பகல் நேரத்தில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய படையா வருவாங்கள். ஆமி வர்ரான் எண்டு தெரிஞ்சோன்ன பெடியள் ஆமி வாற தகவல்கள சொல்லிப் போட்டு காட்டுக்குள்ள போயிருவாங்கள். ஆமி வந்தா சிலவேளை பேசாம நல்லவங்களாப் போயிருவாங்கள். பெரும்பாலும் அழிவு தான். பெடியள் வந்து போயிருக்கிறாங்கள் எண்ட தகவல் கிடைச்சு வந்தால் அண்டைக்கு அழிவு தான். புலி பிடிக்கிறம் என்ட போர்வையில வீடுகளுக்குள்ள பூருவாங்கள். அடிச்சி உடைக்கிறதும் வாங்கி வச்சிருக்கிற மளிகைச் சாமான்கள நிலத்தில கொட்டுறதும் பயந்து ஓடுறவங்கள சுடுறதும், கொட்டிலுக்கு நெருப்ப வைக்கிறதும் எண்டு அட்டகாசம் பண்ணிப்போட்டு போவாங்கள்" அமலன் அதற்கு மேல் தொடர முடியாமல் தவித்தான். பேசுவதைச் சற்று நிறுத்தினான். எரிந்த கொட்டில்களில் வெப்பம் அவனை வதைத்தது. இழந்த உயிர்களின் நினைவு அவனை வாட்டியது.

அவனிடமிருந்து வெளியாகிய நீண்ட பெருமூச்சு பிரபஞ்சவெளிக்கு தன் ஆதங்கங்களைப் பதிந்தது. "இதெல்லாம் பாத்துப்பாத்து வாழ்க்கயில பிடிப்பே இல்லாம இருந்தமடா.. வளர வளர பயம் தான் சேந்தது. ஒவ்வொரு பிறந்த நாளையும் எல்லாரும் எவ்வளவு சிறப்பா கொண்டாடுவினம். எங்களுக்கோ பிறந்த நாள்கள் வர கெதீல செத்துப் போயிருவம் எண்ட நினைவு தான் வந்து போகும். தொழில் இல்ல. தொழிலுக்கு அப்பாமார் தூரப் போய் வர ஏலா. வேல முடிஞ்சு இருட்டுக்குள்ள திரும்பி வந்தவை காணாமல் போயிருவினம். வருமானமில்லாததால பசி தாண்டவமாடிச்சுது. எல்லாம் சேந்து எங்கள இயக்கத்துக்கு போக தூண்டிச்சுது. போய்ட்டம்."

"நீங்க மட்டுமே அண்ண போனனீங்கள்?" "இல்ல நானும் இன்னும் நாலுபேரும். அதுக்குள்ள எனக்குத்தான் வயசு குறைவு. அண்டைய இரவு ஊருக்க பெடியள் நிண்டவங்கள். நாங்கள் இரவோட இரவா அவங்களிட்டப் போய்ட்டம். என்ன பகிடியெண்டா அடுத்தநாள் விடிய நாங்கள் இயக்கத்துக்கு போய்ட்டம் எண்டு எங்கட வீடுகளுக்கு தெரிஞ்சுட்டுது. இந்த விசயம் வெளில தெரிஞ்சா எங்கட வீடுகள்ள ஒருத்தரும் உயிரோட இருக்கேலாது. இந்த விசயத்தை வெளிய தெரியவிடாமல் இருக்க எங்கட குடும்பங்கள் சரியா கஸ்டப்பட்டிருக்கும்." "ஓமென்ன?" குட்டி ஒத்தூதினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த இரவில நடக்கத் தொடங்கினம். தொடர்ந்து ரெண்டு நாள் காட்டுக்குள்ளால நடை. பிறகு ஒருநாள் டெக்டர்ல காட்டு ரோட்டுக்குள்ளால பயணம். நண்பர்களோட கதையும் கேலியும் கூத்துமா நல்ல குதூகலமா பயணிச்சம். இடைக்கிடை நல்ல சாப்பாடு. மூண்டாம் நாள் ஒரு பெரிய முகாமுக்கு போய்ச்சேந்தம். ஐயோ டா.. அந்த முகாமுக்குள்ள போகேக்க தான் வீட்டு நினைவு வாட்டத்தொடங்கீட்டு. இனி வீட்ட போகேலா எண்டது அப்பதான் உறைச்சுது. அம்மாட, ஐயாட, தங்கச்சியின்ர முகமெல்லாம் வந்து வந்து போய்க்கொண்டிருந்துது. நான் அழத் தொடங்கீட்டன். என்னப்பாத்து இன்னும் ரெண்டு பேரும் அழுதவங்கள். நாங்கள் அழுகிறத அங்கயிருந்த ஆரும் பொருட்படுத்தேல்ல. கொட்டிலுகளுக்குள்ள இருந்த பெடியள் எங்கட விபரங்கள எல்லாம் பதிவு செய்றதில குறியா இருந்தாங்கள். எண்ட பிறந்த ஆண்டச் சொன்ன உடனே பதிவு செய்துகொண்டிருந்த அண்ணை ஒருக்கா நிமிந்து பாத்தார். பதினைஞ்சு வயசு என்ன? எண்டார். நான் தேம்பி அழுதுகொண்டே ஓம் எண்டன். பிறகு பதிவு செய்றதில கவனமா இருந்தார். அட சின்னப் பொடியன் ஒருவன் அழுறானே, ஒரு ஆறுதல் வார்த்த சொல்லுவம்.. ம்ஹூம்... ஒண்டுமில்ல. அத நினக்கத்தான் இன்னும் அழோணும் போல இருந்தது. ஆனா சத்தமா அழப்பயமா இருந்துது. விம்மி விம்மித்தான் அழுதுகொண்டிருந்தன். அந்த நாள் இரவு அம்மா அப்பாவோட வீட்டில இருக்கிறதா கனவும் கண்டன். ஒரு மாதிரி விடிஞ்சுது."

"எட்டு மணி வாக்கில அங்க இருந்த திடல்ல நாங்கள் எல்லாரும் வரிசையில நிக்கவைக்கப்பட்டம். அப்பதான் தெரிஞ்சுது எங்கள மாதிரி அறுபத்தெட்டுபேர் புதுசா வந்திருக்கினம் எண்டு. அண்டைக்கு துவங்கீனது தான். ஆறு மாசம் கடும் பயிற்சி. ரெண்டு மாசமா படிச்சம். உலகப் போராட்ட வரலாறுகள், எங்கட இனத்தின்ற வரலாறு, நாங்கள் ஆர்? ஏன் போராடுறம்? போராட்டத்தின்ர தேவை என்ன? அதன்ட உன்னதம், உயிர்த்தியாகம், எதிரிகள நடத்துற முறை, துரோகங்களால வாற விளைவுகள் எண்டு ஏராளமாப் படிச்சம். இடைக்கிடை வீட்ட போகோணும் எண்ட யோசனையும் வராமலில்ல." இருவரும் சிரித்துக் கொண்டார்கள். "ம்.. பிறகு" குட்டி தொடரச் செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறகென்ன நாலு மாசத்துக்குப் பிறகுதான் ரைபிளக் காட்டினாங்கள். இதே ரி அம்பத்தாறு ரைபிள் தான்" தனது அன்றைய ரைபிளைக் காட்டிச் சொன்னான் அமலன். "ஆனா அது டாஸ் வன், இது டாஸ் டூ கொஞ்சம் மேம்படுத்தப்பட்ட மொடல்" "ஓமண்ண" குட்டியும் தனது ரைபிளைத் தடவிக்கொண்டான். "பகிடியக்கேளன்.. முதல் முதல் சுடப்போறன். எத்தன வயசில?" "பதினஞ்சு வயசில.." "ஓம் பதினஞ்சு வயசு.. ஒரு ஒட்டலான ஆள் நான்... குப்புற படுத்துக் கிடந்து தலைய உயத்தி குறி பாக்கிறன். ரைபிளின்ட பிடி தோள் மூட்டில பொருந்திக்கிடக்கு. தூரத்தில வெள்ளை பேப்பர்ல வட்டம் வட்டமா சுடுறதுக்கான படம்.. குறி பாக்கிறன்... ட்ரெயினிங் மாஸ்டர் சுடு எண்டதும் ட்ரிகர அமத்தினன். வெடியோட தோள் மூட்டுக்கு ஒரு உதைப்பு. அதிர்ந்து போனன். அதோட ரைபிள் கையால தெறிச்சு தள்ளி விழுந்துது. வெடி எங்க போச்சு எண்டே தெரியேல்ல... ஆண்டவா... ட்ரெயினிங் மாஸ்டர் கையில வச்சிருந்த கிளுவந்தடியால குண்டில ஒண்டு போட்டாண்டா... இண்டைக்கு வரைக்கும் மறக்க மாட்டன் நான் அந்த அடிய"

குட்டியால் சிரிப்பை அடக்க முடியேவில்லை. பெருங்குரலில் வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினான். அமலனும் தான். "அண்ணை ட்ரெயினிங் மாஸ்டரிட்ட அடி வாங்காமல் ட்ரெயினிங் முடிச்ச ஒரு ஆளக் காட்டுங்கோ பாப்பம்.. எல்லாரும் வாங்கித் தெளிஞ்சுதான் வந்தனாங்கள்.. கிழுவந் தடியால குண்டிவார் கிழிஞ்சு வந்தவங்கள் தான் இண்டைக்கு பெரிய தளபதிமார்." குட்டி தன் அனுபவத்தையும் அங்கு இணைத்துக் கொண்டான். "அப்ப நீயும் வாங்கீனனியோ" "ஓ.. வாங்காமல்.. நீங்க சொல்லுங்கோ அண்ண" பிறகென்ன சுடுறது பழக்கத்துக்கு வந்துது.. அடிப்பயத்தில வலுகவனமா சுடத்தொடங்கீனன். எண்டாலும் ஒரு நாளும் துல்லியமான சூடு எனக்கு கைகூடேல்ல... ட்ரெயினிங் முடிய திருகோணமலையில ஆறேழு மாசம் போச்சு. சின்ன சின்ன சண்டைகளில நிண்டம்."

"பிறகு ஒரு நாள் நாங்கள் வேற இடத்துக்குப் போகப் போறம் எண்டு தகவல் வந்தது. நடக்கத் தொடங்கீனம்.. இரவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலா நடந்து புல்மோட்டை தென்னமரவாடி கரையில எங்கயோ ஒரு இடத்தில இருந்து படகில ஏறினம். இரவில ஏறின படியால எங்க ஏறினம் எங்க இறங்கீனம் எண்டு தெரியா. அங்க புது இடத்தில முதல் ரெண்டு நாள் நல்ல வடிவாக் கிடந்தம். அப்பதான் தெரிஞ்சுது வன்னிக்கு வந்திருக்கிறம் எண்டு. எண்ட நண்பன் வந்து காதுக்க சொன்னான் மச்சான் நாங்கள் இப்ப தலைவரிண்ட இடத்தில நிக்கிறமடா. இதுதான் வன்னியாம். இஞ்சதான் தலைவரும் பெருந்தளபதிகளும் இருக்கினம் எண்டு. பெருமையாக் கிடந்துது. மூண்டாம் நாள் விடிய நாங்கள் எல்லாரும் மரங்களுக்கு கீழ நிழலான இடத்தில ஐஞ்சு வரிசையில இருத்தி வைக்கப்பட்டிருக்கிறம். ஒரு ஜீப் வந்துது."

"முன் கதவத் திறந்துகொண்டு கொஞ்சம் உயரம் குறைஞ்ச ஒருவர் இறங்கினார். எங்கள நோக்கி சும்மா சாவதானமா நடந்து வந்தார். இடுப்பில பிஸ்டல். நாலு பெடியள் பொடிகாட்ஸ். தளபதியெண்டு தெரிஞ்சுது. "என்ன பெடியள்.. எப்பிடி இருக்கிறியள் எண்டார்". எங்களுக்கு ஆரெண்டு தெரியேல்ல எண்டாலும் "நல்லா இருக்கிறம் அண்ண" எண்டம். "எண்ட பெயர் பால்ராஜ்" எண்டார். மலச்சுப்போனம். நாங்கள் கேள்விப்பட்டிருந்தனாங்கள் உலகமே வியக்கிற அவரிண்ட தீரத்துக்கும் நடையுடை பாவனைக்கும் ஒரு தொடர்புமில்லாம இருந்துது. சாதாரணமா அந்த மனிசன் வந்து நிலத்தில இருந்து எங்களோட கதைச்சுக்கொண்டிருந்தது தெரியுமே? எங்களுக்குள்ள இருந்துதான் இயக்கத்திண்ட அரசியல், சண்டை, புலனாய்வு, வான்காப்பு, கடல்புலி பிரிவுகளுக்கு ஆக்கள தேர்ந்தெடுத்தாங்கள். என்னைய சாள்ஸ்-அன்டணி படைப்பிரிவுக்கு எடுத்தாங்கள். பிறகென்ன பால்ராஜ் அண்ணயோட தான்.."

"குடுத்து வச்சனீங்கள் அண்ண" என்றான் குட்டி. "ஓமடா... யாழ்ப்பாணத்தில முன்னரங்கச் சண்டைகளிலயும் 'தவளை பாய்ச்சல்' எண்ட ஈருடகசண்டையிலயும் கலந்து கொண்டன். அப்பிடியே காலம் போச்சு... தங்கச்சியும் இயக்கத்துக்கு வந்திட்டா. அதோட அப்பர்அம்மாவப் பாக்க ஆளில்லாம போச்சு. அதால விலகப்போறன் எண்டு லீமா அண்ணயிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டன். மனிசன் உடனேயே அதுக்கான ஏற்பாடுகளச் செய்துதந்துது... இந்தா பார் இப்ப திரும்பவும் ரைபிளத் தூக்கியாச்சு" அமலனும் நிறுத்த பிரதான படலையில் வாகனமொற்றின் 'கோர்ன்' ஒலி கேட்டது. "ஆகா.. மத்தியானச் சாப்பாடு வந்திட்டு" என்றவாறு சொல்லிக்கொண்டே குட்டி ரைபிளைத்தூக்கிக்கொண்டு சாவிகள் கொழுவப்பட்டிருந்த பெட்டகத்தில் இருந்து படலைச்சாவியையும் எடுத்துக்கொண்டு ஓடினான்.

அமலனும் தங்ககத்தில் இருந்து வெளியே வந்து படலையைப் பார்த்தபடி நின்றான். தங்ககத்திற்கும் படலைக்கும் இடையேயிருந்த பரந்த வெளியை அவனது கண்கள் பருகத்தொடங்கியது. பெருவெளியெங்கும் நிறைந்திருக்கும் அரும்பெரும் சக்தியின் இருப்பையும் இன்மையையும் ஒருசேர அவனுள் நிரப்பத் தொடங்கியது அந்த வெளி. இருப்பையும் இன்மையையும் அவரவர் சிந்தனைகளே தீர்மானிக்கின்றது. கண் முன்னே விரியும் பெருவெளியில் இருக்கும் சக்தியை உணர்வதையும் அனுபவிப்பதையும் எவ்வாறு மனித மனம் சாத்தியமாக்குகின்றதோ அதேபோலவே அந்தப் பெருவெளியில் எதுவும் இல்லை என்பதையும் அதே மனம் தான் சிந்திக்க வைக்கின்றது. இருப்பாலும் இன்மையாலும் அலைக்கழிக்கப் பட்டான் அமலன். ரஞ்சி மனதிற்குள் தன்னைப்பற்றியே நினைத்துக்கொண்டிருப்பாள் என்பது அமலனுக்குள் நினைவுக்கு வந்தது. இன்று வரை அவன் விரும்பியவுடனேயே ரஞ்சியைப் பார்க்க கூடியவாறான வேலைகளையே செய்து கொண்டிருந்தான். இன்றிலிருந்து அது சாத்தியப்படப் போவதில்லை. ரஞ்சியை பார்க்க வேண்டும் போல இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

அன்றைய நாளின் இரவு மிக கருமை பூத்திருந்தது. இரவுகள் பரவவிடும் கருமை இந்த உலகத்தின் அனைத்தையும் மனிதர்களின் கண்களில் இருந்து மறைத்துவிடும். மனிதர்களின் தொடர்அசைவியக்கத்துக்கு இயற்கை தரும் ஓய்வாகவே இரவுகளும் அவ் இரவுகள் விரவிவிடும் கருமையும் மனிதர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. ஒளி விரியும் நேரத்தில் இயங்க விரும்பும் மனிதர்கள் ஒளி குறையும் நேரத்தில் ஒதுங்கிப் பாதுகாப்புத்தேடும் வாழ்வு சாதாரண மனிதர்களுக்கு விதிக்கப்பட்டது. ஆனால் அசாதாரணர்களுக்கு உலகில் தவழும் நிறங்கள் தெரிவிதில்லை. 'ஓட்டையும் பொன்னையும்' ஒன்றாகவே பார்க்கும் மகோன்னத நிலை அது. தமது இலக்கு மட்டுமே அவர்களின் கண்களுக்குத் தெரியும். உலகின் நிறம் ஒளியுடன் இருந்தாலுமோ அல்லது கருமை பூத்துக்கிடந்தாலுமோ இலக்கை நோக்கி நகரும் மனிதர்களுக்கு அவை எந்தத் தடையையும் ஏற்படுத்திவிடுவதில்லை.

குமரன் பின்னிரவில் தன்னுடைய மோட்டார்சைக்கிளை குன்றும் குழியுமான தெருவில் செலுத்திக்கொண்டிருந்தான். திருகோணமலை மாவட்டச் சிறப்புத் தளபதி இட்ட கட்டளைக்கு அமைவாக விசேட மருத்துவ முகாமொன்றை உருவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. சில நாட்கள் முன்பாக குமரன் சிறப்புத் தளபதியால் அழைக்கப்பட்டிருந்தான்.

"குமரன்.. நாங்கள் எங்கட விடுதலைப் போரிண்ட இறுதிக்கட்டங்கள வந்தடைஞ்சிருக்கிறம். ஒரு போருக்கு அரசியல் இலக்கொண்டு இருக்கும். எங்கட இனவிடுதலைப் போர் தமிழர்களின் தனித்தாயகத்தை மீட்கிறதும் எங்கட சுயநிர்ணயத்த அடைஞ்சு கொள்றதுமான அரசியல் இலக்கைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது. இந்தப் போரை முடிக்கோணுமெண்டால் நாங்கள் பல சமர்களச் செய்ய வேணும். சமர்கள் மரபுவழி எண்டு சொல்ற நேரடிச் சண்டைகள் பலவற்றக் கொண்டிருக்கும். சண்டைகள் பல தாக்குதல்களக் கொண்டிருக்கும். உதாரணமா அதிரடித் தாக்குதல், பதுங்கித்தாக்குதல், தகர்த்தெறியும் தாக்குதல் இப்பிடி அவை செயற்படுறமுறைகள் பயன்படுத்துற தந்திரோபாயங்களக் கொண்டு நாங்கள் பெயர்களச் சூட்டுவம். ஒவ்வொரு தாக்குதலும் பல மோதல்களக் கொண்டிருக்கும். அந்த வகையில எங்கட இனவிடுதலைப் போரிண்ட சமர்க்களங்கள பௌதீக ரீதியில ரெண்டாப்பிரிச்சுப் பாக்கிறான் எதிரி. அதில முதல் சமர் கிழக்கில நடக்கும். அந்த கிழக்குச்சமரில திருகோணமலைக்கான சண்டை கடுமையா நடக்கும். என்னப் பொறுத்தவரையில இந்தச் சண்டையில ஆரம்பத்தில நாங்கள் தற்காப்புத் தாக்குதல்களை முதன்மையாக் கொள்ள வேணும். அப்பப்ப பதுங்கித்தாக்குதலையும், குறிசூட்டுத் தாக்குதல்களையும் நடத்தக்கூடியதா இருக்கும். எதிரியிண்ட போக்க சரியாக் கணிச்சமெண்டால் தகர்த்தெறிஞ்சு உள்நுழைந்து தாக்குதல நடாத்தலாம். அதோட அவன திசை திருப்பிற மாதிரி சில முன்னகர்வுத் தாக்குதல்களயும் நடாத்தலாம். கருணாட துரோகத்தால கிழக்கில போராட்டத்தின்ர போக்கை தலைவர்தான் தீர்மானிப்பார். கடசிவரைக்கும் திருகோணமலை மாவட்டத்த கைவிட ஏலாது. திருகோணமலைச்சண்டையத் தாக்குப் பிடிக்கிறதுக்கு எங்களுக்கு இன்னுமொரு மருத்துவ முகாம் நல்ல பாதுகாப்புக்களோட தேவை. அதை நீதான் கட்டமைக்க வேணும். உடனடியா வேலையத்தொடங்கு"

குமரன் ஏற்கனவே நிறைந்த வேலைப்பழுவுடன் இருந்தான். என்றாலும் இதனையும் செய்து முடிக்க வேண்டியது அவனது கடமையாயிற்று. கடந்த பல வாரங்களாக அவன் வீட்டிற்குச் செல்லவில்லை. இரவும் பகலும் பணியிலேயே கடந்தது. மனைவியையும் பிள்ளையையும் பார்க்கும் ஆசை கனன்றுகொண்டே இருந்தது.

'இப்பிடியே மோட்டசைக்கிள வீட்ட விடுவம்.. போய்ட்டு விடிய பேசுக்கு போவம்' என்று அவனது மனம் திரும்பத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்ப சொல்லிக்கொண்டே இருந்தது. நேரம் பின்னிரவு இரண்டைத் தொட்டிருந்தது. வீட்டை நோக்கி மோட்டார்சைக்கிளைச் செலுத்தினான் குமரன். படலையை அண்டியதும் 'லைவர்' தனது எசமானின் வரவை உணர்ந்து கொண்டு அன்பு கலந்த சத்தத்தை வெளிப்படுத்தியது. படலையில் தனது முன்னங்கால் இரண்டையும் தூக்கி வைத்துக்கொண்டு செல்லமாக குரைத்தது. குமரன் படலையைத் தொட்டதும் தனது கால்களை இறக்கி படலை திறக்கப்படும் பக்கத்திற்கு மறுபுறமாக நின்று கொண்டு அந்தரிக்கத் தொடங்கியது. குமரன் படலையைத் திறப்பதை சற்று தாமதப்படுத்தினான். லைவர் படும் அந்தரத்தை மகிழ்வு பொங்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நாய் குலைக்கும் ஒலி வதனியை லேசாக உலுப்பியது. என்றாலும் அது ஒரு கனவு போலவே அவளுக்குத் தோன்றியது.

"இண்டைக்கு வீட்ட வருவார் எண்டு நினைக்கிறன்" முதல்நாள் மாலை வதனி தனது தகப்பனிடம் சொல்லியிருந்தாள். வதனியின் தகப்பன் மகளின் விருப்பத்தை நன்றாக உணர்ந்தவர். "ஓம்.. ஓம்.. வருவார் போலத்தான் இருக்கு" என்று மனதில் தெறித்த அவநம்பிக்கையை சற்றேனும் வெளிக்காட்டாமல் பதிலளித்தார். கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக அவள் அப்படிக் கேட்பதும் அவர் அப்படி பதிலளிப்பதும் தொடர்கதையாக இருந்தது. இந்தமுறைதான் குமரன் இவ்வளவு நாட்களாக வீட்டிற்கு வராமல் இருக்கிறான். வதனியின் தகப்பன் ராசரத்தினம் ஒரு ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர். அவரிடம் படித்த பலர் விடுதலைப் புலிகளாக இருப்பதால் குமரன் எங்கிருக்கிறான் என்பதை அடிக்கடி அவர் அறிந்து கொள்ளுவார். வதனியும் ஒரு போராளி தான். என்றாலும் மணம் முடித்த பின் அவள் போராளி வாழ்விலிருந்து விலகி இருக்கிறாள். வட மாகாணத்தின் வன்னி மாவட்டத்தில் நடந்த தாக்குதல் ஒன்றின் போது வதனி காயப்பட்டிருந்தாள். அவளின் வலது கையின் இரண்டு விரல்கள் சிதைந்து போயிருந்தன. இடது கணுக்காலுக்கு மேலான சதைத்தொகுதியில் சன்னமொன்று துளைத்துச்சென்றிருந்தது. அதே தாக்குதலில் குமரனும் விழுப்புண் அடைந்திருந்தான். இராணுவம் ஏவிய ஆட்டிலறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் காட்டு மரமொன்றில் பட்டு வெடித்ததால் சிதறிய உலோகத் துண்டுகள் அவனது வயிற்றின் முன் பகுதியூடாகப் புகுந்து பின்பக்கமாக வெளியேறியிருந்தது. களமுனையில் காயப்பட்டிருந்த அவர்கள் இருவரையும் ஒன்றாகவே தாக்குதல் அரங்கிலிருந்து களமுனை வைத்தியசாலைக்கு காவு வண்டியில் ஏற்றி போராளிகள் பின்னகர்த்தியிருந்தனர். உழவு இயந்திரத்தின் பின்பகுதியில் கழற்ற முடியாத வகையில் இரும்பு பொருத்துக்களின் நடுவே தகரத்தினால் அமைக்கப்பட்ட ஒரு பெட்டியைக் கொண்ட வண்டியை விடுதலைப்புலிகள் அமைத்து வைத்திருந்தார்கள். போக்குவரத்துக்கு உகந்த பாதைகளில்லாத களங்களுக்குள்ளும் காடுகளுக்குள்ளும் புகுந்து வரத்தக்க வகையில் உருவாக்கப்பட்ட அந்த வாகனம் தனது ஐந்தடி நீளமான பின் பெட்டியில் எதனையும் காவிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்ட காவு வண்டியாக வெற்றிகரமாக செயற்பட்டது. அந்த வண்டியில் நீட்டு வாக்கில் குமரன் கிடத்தப்பட்டிருந்தான். வதனி அவனுக்குக் குறுக்காக ஏற்றி இருக்க வைக்கப்பட்டாள். தனது வலது கையை உயர்த்திப் பிடித்தபடி காயம்பட்ட காலை குமரனின் உடலுக்கு மேலாக அவனது உடலில் படாமல் பெட்டியின் விளிம்பில் உயர்த்தி வைத்திருந்தாள். களமுனையில் தோழிகள் கட்டிவிட்ட இரத்தபோக்குத் தடுப்புத் துணிப்பந்து அவளுக்கு இரத்தப் போக்கை மட்டுப்படுத்தியிருந்தது. ஆனால் குமரனுக்குக் கட்டப்பட்ட முதலுதவிக் கட்டுக்களின் ஊடாக இரத்தம் கசிந்து வெளியேறிக் கொண்டிருந்தது. அவனுக்கு நினைவு வருவதும் போவதுமாக இருந்தது. பெட்டி குலுங்கும் போதெல்லாம் அவன் ‘அம்மா... அம்மா...’என அரற்றிய வண்ணமே கிடந்தான்.

அது வதனியைக் கலைத்தது. களமுனை மருத்துவசாலைவரை அவள் அவனைப் பார்த்தபடியே தனது இடதுகையால் அந்த அறிமுகமில்லாத போராளியின் கட்டுக்களின் மீது மெல்லிய அழுத்தத்தை பிரயோகித்து இரத்தப்போக்கை நிறுத்த முயற்சித்துக் கொண்டிருந்தாள். அம்மாவை அதீதமாகக் காதலிக்கும் ஆண்களை எப்போதும் பெண்கள் விரும்புவார்கள் என்பது உண்மைதானே!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் அடிப்பது சற்றே ஓய்ந்திருந்ததால் களமுனை வைத்தியசாலையின் பதுங்குகுழிகளில் இருந்து போராளி மருத்துவர்கள் வெளியே நின்றார்கள். அவர்களுடன் மருத்துவப் போராளிகள் கதைத்துக் கொண்டிருந்தார்கள். “இந்தா வருது” ஒரு மருத்துவ போராளியின் காதுகளுக்கு காவு வண்டியின் சத்தம் கேட்டது. அவனது ‘இந்தாவருது’ என்ற அந்தச்சொல் அங்கிருந்த அனைவரையும் இயக்கும் மந்திரமானது. போராளி மருத்துவர்களும் ஏனைய சிகிச்சைத் தாதியர்களும் பதுங்கு குழிக்குள் அவசரமாக இறங்கினார்கள். காயப்பட்ட போராளிகளைத் தூக்கி இறக்குவதற்கு ஆறு போராளிகள் தயாரானார்கள். தாமதிக்காத ஒவ்வொரு நிமிடமும் ஒரு போராளியின் உன்னதமான உயிரைக் காப்பாற்ற முடியும் என்பதை அவர்களின் பட்டறிவு தெளிய வைத்திருந்தது. வண்டி வந்து நிறுத்த முன்பாகவே காவு போராளிகள் வேகமாக வண்டியை நோக்கி ஓடி வந்தனர். ”அக்கா எப்பிடி... ” என்றபடி அவளை இறக்க ஒரு பெண் போராளியும் ஆண் போராளியும் முயல “இல்ல இவர முதல் இறக்குங்கோ.. ஆள் மயக்கமாகீட்டார்” கத்தினாள் வதனி.

அந்தக்குரல் குமரனின் மனதில் பதிந்தது. “அட குமரன் அண்ணை...” சாக்குக்கட்டிலில் கிடந்த குமரனை அவர்கள் தூக்கி வைத்தியசாலைக்குள் கொண்டு ஓடினார்கள். ‘ஓ... உங்கட பெயர் குமரனா.... ம்’ அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள். அதுவரை அவள் மயக்கமடையவில்லை.

அந்தச் சமர்முன்னெப்போதும் ஈழப்போராட்டத்தில் நிகழாததும் இரண்டரையாண்டுகள் நீடித்ததுமான “ஜெயசிக்குறு” என்ற சிங்களப்பெயரைக் கொண்ட சண்டை. இராணுவம் வலுச்சண்டைக்கு வந்து தோற்றோடிய பெருஞ்சண்டை.

புலிகள் நிர்வகிக்கும் அந்தப் பெருநிலப்பிரதேசத்தை மீண்டும் ஸ்ரீலங்காவின் ஆட்சிக்குள் கொண்டு வரவே ஜெயசிக்குறு ஆரம்பமானது.

அந்தச் சண்டை வன்னிப்பெருநிலப்பரப்பின் பெரும்பகுதிகளைத் தன்னகப்படுத்தி தற்போது மாங்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தில் நடந்துகொண்டிருந்தது. மாங்குளத்தில் நிறுவப்பட்டிருந்த புலிகளின் முன்னரங்கக் காவல் அரண்களில் ஒன்றின் பெறுப்பு வதனியுடையது. அவள் தன்னுடைய இலகு இயந்திர ரைபிளுடன் காவலுக்கு இருந்தாள். அவளின் கட்டளையின் கீழ் செயற்படும் ஒளிநிலாவும் ரேவதியும் அவளுடன் அந்தக் காவலரணில் இருந்தனர். இவர்கள் மூவரும் கிழக்கிலிருந்து வடக்குக்கு நகர்ந்த விடுதலைப்புலிகளின் படையணியைச் சேர்ந்தவர்கள்.

"வதனியக்கா நாங்கள் இப்ப ஏ-ஒம்பது றோட்டில பங்கரடிச்சி இருக்கிறம். ஏ-முப்பதிரெண்டு என்ட பாதை எது எண்டு உங்களுக்கு தெரியுமோ?" ரேவதி அங்கு விரவிய மௌனத்தைக் கலைத்தாள்.

"ஓம் ஏ-முப்பதிரெண்டு எண்டது மன்னார்ல தொடங்கி யாழ்ப்பாணத்தில இருக்கிற நாவக்குளி வரைக்கும் போற றோட். வடக்கில இருந்து தெற்கப்பாத்துக்கொண்டு நிண்டயெண்டால் அதாவது எங்கட பக்கரில இருந்து பாத்தா வடக்குப் பக்கமா ஏ-ஒம்பது றோட்டுக்கு சமாந்தரமா போற றோட். இந்த ரெண்டு றோட்டும் தான் தெற்கையும் வடக்கையும் இணைக்கிற பாதைகள்"

"இந்த ரெண்டு பாதையும் எங்கட கட்டுப்பாட்டு பிரதேசத்துக்க வந்து தான் வடக்கில யாழ்ப்பாணத்துக்கு போகுது" என்றாள் ஒளிநிலா.

"எங்கட கட்டுப்பாட்டுக்க வாற படியால யாழ்ப்பாணத்திற்கும் தெற்குக்கும் நேரடித் தொடர்பு இல்லாமப் போய்ட்டு. நேரடித்தொடர்ப உருவாக்கத்தான் இந்த சண்டை நடக்குது. அதோட நாங்கள் இந்தக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ள ஒரு நடைமுறை அரசையும் எல்லோ நிறுவியிருக்கிறம்"

"ஓம் அக்கா.." ஒளிநிலா தொடர்ந்தாள். "திருகோணமலையில திலீபன் மருத்துவமனையைத் திறந்து வைக்கேக்க அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன் அண்ணா இந்த விசயத்த சொன்னவர். வடக்கில எங்கட கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்க ஒரு அரசாங்கமே நடக்குது எண்டு. இப்பிடி உலகத்தில எந்த ஒரு விடுதலை இயக்கமும் தங்கட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ளுக்கு நடைமுறை அரசொண்டைக் கட்டியெழுப்பேல்ல எண்டும் சொன்னவர். இப்பிடி அரசொண்ட நடத்திறதால சிங்கள அரசாங்கத்துக்கு எங்களப் பயங்கரவாதிகள் எண்டு சொல்ல ஏலாமக்கிடக்கு எண்டும் சொன்னவர். மக்களுக்கான பொருண்மியம், நிதி, நீதி, நிர்வாகம், சுகாதாரம் எண்டு எல்லாத் துறையையும் இயக்கிற எங்கள எப்பிடி பயங்கரவாதிகள் எண்டுறது?"

"அண்டைக்கு நாங்கள் சில அண்ணாமாரோட ஒண்டா இருந்து சாப்பிடேக்க அவ சொன்னது ஞாபகம் இருக்கோ?" ஒளிநிலாவின் அந்தக் கேள்விக்கு பதில் யாரிடமிருந்தும் வரவில்லை. "அவே சொன்னவே.... தாங்கள் பொருண்மியக்காரர் எண்டு. அப்ப மற்ற ரெண்டுபேர் சொன்னவே தாங்கள் நிர்வாகத்துறை எண்டு"

"எந்தத் துறையா இருந்தாலும் சண்டையெண்டு வந்தா எல்லாருக்கும் பங்கர் தான்" ரேவதி சிரிப்பையடக்க முடியாமல் சொல்லிச் சிரித்தாள்.

வெளியே தெரிந்த காட்டை கவனித்துக்கொண்டிருந்த வதனியாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. "ஓமடி... முதல்ல நாங்கள் புலிகள். சண்டைதான் எங்கட முதல் பணி. பிறகு தான் எங்களுக்குள்ள துறைகள்..."

"ஏனக்கா? வானத்தாலயும் கடலாலயும் ஆமி போக்குவரத்து செய்றான் தானே?" ரேவதி மிக அண்மையில் பயிற்சி பெற்ற போராளியாக இருந்தாள். போர் சம்பந்தமாக நிறைய கேள்விகள் அவளிடமிருந்தன. அவளது கேள்விகளுக்கு வதனி சலிப்பில்லாமல் எப்போதும் பதிலளிப்பாள்.

"அவங்கள் வானத்தாலயும் கடலாலயும் மட்டுந்தான் போய் வந்துகொண்டு இருந்தவங்கள். நாங்கள் விடுவமே அத?.... ரெண்டு அன்ரனோவ் விமானங்கள அடுத்தடுத்து சுட்டு விழுத்தினதால தெற்கில இருந்து வடக்குக்கு சாமாங்களையும் ஆமியையும் போக்குவரவு செய்றதுக்கு ஹெலியத்தான் ஆமி பாவிக்கிறான். அது பெருஞ்செலவு. அதோட முல்லைத்தீவு காம்ப அடிச்சுக் கிளியர் பண்ணினாப்பிறகு கடல் போக்குவரத்தும் ஆமிக்கு பெருங்கஸ்டம். காங்கேசந்துறையில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து நேவிக்கப்பல் வெளிக்கிட்டா திருகோணமலைக்கு போய்ச் சேர்ரதுக்குள்ள எங்கட கடல் கட்டுப்பாட்டு பிரதேசந்தான் கூட. கன படகுகள பாதுகாப்புக்கு இறக்கித்தான் அவன் போய் வரவேண்டிக்கிடக்கு. எங்கட இடியனுகள் இடைக்கிடை வெளுத்துப்போடுதுகள்''

கடற்கரும்புலிப் படகுகளை இடியன் என்று அழைப்பதுண்டு.

புலிகளின் நடைமுறை அரசை அழித்தொழிப்பது மற்றும் போக்குவரவுப் பாதைகளைத் திறப்பது ஆகிய இரண்டு நோக்கங்களைக் கொண்ட அழித்தொழிப்பு யுத்தமாக ஜெயசிக்குறு திட்டமிடப்பட்டது. ஸ்ரீலங்காவின் கூட்டு இராணுவ நடவடிக்கை படை அலுவலகம் அன்று சற்று பதட்டமடைந்திருந்தது. அந்த ஆண்டு ஆயிரத்து தொளாயிரத்து தொன்னூற்றி ஏழு. மாதம் மாசி. அந்த அலுவலகத்தின் குளிரூட்டப்பட்ட மாநாட்டு மண்டபத்தில் அவர்கள் கூடியிருந்தார்கள். சில ஜெனரல்கள், பிரிகேடியர்கள், ரியர் அட்மிரல்கள் இருவர், மற்றும் எயர்வைஸ் மார்சல் ஆகியோர் தம்முள்ளே கலந்துரையாடியபடி யாருக்காகவோ காத்திருந்தனர். ஸ்ரீலங்காவின் பாதுகாப்புத்துறை துணை அமைச்சரும் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய நடவடிக்கையை முன்னெடுக்கக் காரணமானவர் என்பதால் ஜெனராலாகப் பதிவியுயர்த்தப்பட்டவருமான "ஜெனரல் அனுருத்த ரத்வத்த" அங்கு பிரசன்னமானார்.

படைத்துறை சல்யூட்டுக்களை அங்கிருந்தவர்களிடமிருந்து ஏற்றுக்கொண்ட பின்னர் அவர் உரையாடலைத் தொடக்கினார். "முல்லைத்தீவின் இழப்பிற்கு இராணுவ அரசியல் பரிமாணங்கள் பல உள்ளன. அந்த இழப்பால நாங்கள் பின்தங்கிப் போயிருக்கிறம் என்பது உண்மை. ஆனால் நான் எப்போதும் சொல்வதைப் போல சண்டைகளில் வெற்றியைக் கொண்டாடும் மனநிலையிலேயே தோல்வியையும் அனுபவிக்க கற்றுக்கொள்ள வேண்டும் நாங்கள்'' சற்று நிதானித்தார். "வடக்குக்கான போக்குவரவு மிகப் பிரச்சனையாக மாறியிருக்கு. அதே வேளை முல்லைத்தீவு பின்னடைவில இருந்து நாங்கள் மீள வேணும். இந்த இரண்டையும் ஒன்றாக அடையக் கூடிய ஒரே செயற்பாடு ஏ 9 அல்லது ஏ 32 றோட்டில ஒன்றைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறக்கிறது தான். சமாதானத்தால திறக்கிறது எங்கட படைத்துறைக்கு இழுக்கு. சண்டை தான் ஒரே வழி." அவர் தொடர்ந்தார். அவருடைய கூற்றை மனதளவில் அங்கிருந்த அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அங்கிருந்த முப்படைத் தளபதிகளுக்கும் முல்லைத்தீவின் இழப்பு ஒரு வெட்கத்தைத் தந்திருந்தது. அந்த உணர்விலிருந்து வெளியே வர ஒரு ராணுவ வெற்றி தேவைப்பட்டது. எந்தப் பாதையைத் திறப்பது என்பதைப் பற்றி அவர்கள் கலந்தாலோசிக்கத் தொடங்கினார்கள். ஏ 9 என்பது அவர்களின் முடிவாகியது. அத்துடன் அச் சமரின் பெயராக "வெற்றி நிச்சயம்" என்ற அர்த்தம் தரும் சிங்களப் பெயரான "ஜெயசிக்குறு" என்று தீர்மானிக்கப்பட்டது. ஆயிரத்து தொளாயிரத்து தொன்னூற்று ஏழு மார்ச் மாதம் "ஒப்பரேசன் ஜெயசிக்குறு" ஆரம்பமானது.

புலிகளின் முன்னரங்க காவல் நிலைகள் இருபத்தைந்திற்குப் பொறுப்பாளராக இருந்த சுந்தரி வதனியின் காவலரணை நோக்கி பதுங்குகுழிப் பாதையின் ஊடாக வருவது தெரிந்தது.

"சுந்தரியக்கா வாறா.. இண்டைக்கு கொஞ்ச நேரம் இருத்தி வச்சுக் கதைச்சுப்போட்டுத்தான் அனுப்ப வேணும்" என்றாள் ரேவதி...

"உன்னோட கதைச்சுக்கொண்டிருக்கவே அவா இஞ்ச வாறா... அவாக்கு எவ்வளவு வேலைகள் இருக்கு சொல்லுபாப்பம்.. இஞ்சயிருந்து அங்கயும் அங்கயிருந்து இஞ்சயும் பங்கருகளப் பாக்கப் போறதிலயே அவாக்கு நாள் முடிஞ்சு போகும்" என செல்லமாக ரேவதியைக் கடிந்துகொண்டாள் ஒளிநிலா.

"அது சரி... ஆனா அவாட்டத்தானே நாங்கள் சண்ட தொடர்பா வடிவா அறியலாம்."

"அதெண்டால் உண்ம தான்... அதுக்கு ஒரே வழி நீ அடுப்ப மூட்டி தண்ணியக் கொதிக்க வை... அவாக்குஞ் சேத்து தேத்தண்ணி போடுவம்.. அப்ப கதைப்பம்" வதனி சொல்லி முடிய ரேவதி மெதுவாக கண்ணைச் சிமிட்டினாள். உடனடியாகவே பங்கரை விட்டு பின்புறமாகச் சென்று கல்லடுப்பில் காய்ந்த சுள்ளிகளை அடுக்கத் தொடங்கினாள்.

"என்ன.. என்னைக் கண்டோன்ன தேத்தண்ணி போடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறியளோ?" மெல்லிய சிரிப்புடன் சுந்தரி அந்த பங்கருக்குள் புகுந்தார். அவருடன் இரண்டு பாதுகாவலரும் வந்திருந்தனர்.

"ஓமக்கா... களைச்சுப் போய் வாறாய்.. அதான்.. இப்ப நேரமும் தேத்தண்ணி குடிக்க சரியான நேரந்தானே" வதனி அவர்களை வரவேற்றாள்.

இனி நெளிவதற்கு இடமேயில்லாத பானையில் தண்ணீரைக் கொதிக்க வைத்துவிட்டு ரேவதி அவர்களிடம் வந்தாள்.

"சுந்தரியக்கா.. கிழக்கில இருந்து வரேக்க ஜெயசிக்குறு சண்டைக்கு போறம் எண்டதுதான் தெரிஞ்சுது. ஆனா இந்த சண்டையின்ற மிச்ச விசயங்களபற்றி கதைக்கிறதுக்கு நேரமிருக்கேல்ல. சண்டயப் பற்றி சொல்லுங்கோவன் ?"

தேநீர் வரும்வரை அவர்களுக்கு அந்தச் சண்டையின் மொத்த பரிமாணத்தையும் சுந்தரி விளங்கப்படுத்த முயன்றார்.

"இந்தச் சண்டைய ஆரம்பிக்கேக்க இராணுவத்தின்ற ரெண்டு ரெஜிமென்ட் படையணிகள் இறங்கிச்சு. அதில அம்பத்தஞ்சாவது டிவிசன் படையணி புதுசா உருவாக்கப்பட்ட படையணி. அவங்கள் தான் ஓமந்தையில இருந்து சண்டை பிடிச்சுக்கொண்டு வந்து, இஞ்ச, மாங்குளத்தில் நிக்கிறாங்கள்."

"அப்ப மற்றப் படையணி?" ஒளிநிலா கண்களை காடுகளுக்குள் எறிந்துவிட்டு காதுகளை இங்கே கொடுத்தபடி முகத்தை திருப்பாமலே கேள்வி கேட்டாள்.

"மற்றப்படையணி அம்பத்தி மூண்டாவது டிவிசன். மண்கிண்டிமலை எண்ட எங்கட பூர்வீக பிரதேசம் திருகோணமலையையும் முல்லத்தீவையும் இணைக்கிது. அந்த தமிழ் பூர்வீக வாழ்விடத்தில சிங்கள குடியேற்றஞ் செய்து வெலிஓயா எண்டு பெயர மாத்தி பெரிய பிரதேசத்த பிடிச்சு வச்சிருக்கிறாங்கள். அத பாதுகாக்கிறதுக்காக இருக்கிற படையணி தான் அந்த அம்பத்தி மூண்டாவது டிவிசன். அவங்கள் வெலிஓயாவில இருந்து காட்டுக்குள்ளால வந்து நெடுங்கேணியப் பிடிச்சு அதுக்குப் பிறகு முன்னேறி புளியங்குளம் சந்திவரைக்கும் வந்து ஓமந்தையில இருந்து முன்னேறி வந்த அம்பத்தைஞ்சாவது படையணியோட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்ப ஏற்படுத்தியிருக்கிறாங்கள்.'' சுந்தரி சற்று நிறுத்தினார். தண்ணீர் கொதிப்பதால் ரேவதி தேநீர் தயாரிக்க தொடங்கினாள்.

இராணுவ மேஜர் ஜெனரல் அசோக்க ஜெயவர்த்தன உரிய டிவிசன்கமாண்டர்களுடனான சந்திப்பில் பேசிக்கொண்டிருந்தார். "இரண்டு படையணிகளும் இணைப்பை ஏற்படுத்தியவுடன் ஒப்பரேசன் ஜெயசிக்குவுற்கான இயங்கு தளப்பரப்பு உருவாகிவிடும். இந்த இயங்குதளப் பரப்பு தான் எங்களை எதிரிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கும். அத்துடன் எதிர்த்தாக்குதலை மேற்கொள்ளவும் உதவும். அடுத்த கட்டமாக எங்களுடைய முன்னேறும் படை நடவடிக்கையை மேற்கொள்ள அடித்தளமாகவும் அமையும். ஏ 9 வீதியில் நாம் நகரப் பொவது எதிரிகளுக்கு வெளிப்படையாகத் தெரியும். ஆனால் வெலிஓயாவில் இருந்து காடுகளுக்கூடாக நாம் நகர்வது அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. தெரிய வரும் போது அவர்கள் அதிர்ச்சியடைவார்கள். அதற்கமைய 53 ஆவது டிவிசனில் விசேட படையணியும் கொமாண்டோப் படையணியும் இணைக்கப்பட்டுள்ளது'' என அவர் தெரியப்படுத்தினார்.

திட்டமிட்டவாறு குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவடையாமல் ஜெயசிக்குறு நீண்டகாலத்தை விழுங்கிக்கொண்டிருந்தது. புதிதாகப் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் பாதுகாப்பை உறுதி செய்ய கடற்படை மற்றும் வான்படைகளின் காலாட் படைப்பிரிவுகள், காவல்துறை மற்றும் பயிற்சியில் இருந்த இராணுவத்தினர் ஆகியோரை இணைத்து 56 ஆவது டிவிசன் எனும் படையணி புதிதாக உருவாக்கப்பட்டது. இதன் பிறகே புளியங்குளத்திலிருந்து மாங்குளம் வரை 55 மற்றும் 53 ஆம் படையணிகள் ஏ-9ற்குப் பக்கவாட்டாக முன்னேறி மாங்குளத்தைக் கைப்பற்றிக் கொண்டன. புதிதாகக் கைப்பற்றிய பிரதேசத்தினைப் பாதுகாக்க தேவையான ஆளணி மீண்டும் பற்றாக்குறையானது. இதனை நிவர்த்தி செய்ய கிழக்கு மாகாணத்திலிருந்து படைமுகாம்களை மூடிய இராணுவம் அப் படையணிகள் ஜெயசிக்குறு சமர்நிலப் பரப்பிற்கு அனுப்பிவைத்தது. கிழக்கில் யுத்தமின்றி பெரிய பிரதேசங்கள் புலிகளின் கைகளில் வீழ்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்குளம் வரை முன்னேறிய இராணுவத்திற்கு தற்போது கிளிநொச்சியில் அமைந்திருந்த இராணுவத்துடன் தரை வழித் தொடர்பை ஏற்படுத்த இன்னும் இருபத்தியாறு கிலோமீற்றர்களே இருந்தது. இந்த நிலையில் கிழக்கிலிருந்து தமது படையணிகளை வன்னிக்கு வருமாறு புலிகளின் தலைமை கிழக்கு மாகாணச் சிறப்புத் தளபதி கருணாவிற்கு கட்டளையிட்டது. கிழக்குப்படையணியுடன் சுந்தரி, குமரன், வதனி, ஒளிநிலா, ரேவதி ஆகியோரும் வன்னிக்கு நகர்த்திருந்தனர்.

தேநீரின் இளஞ்சூடு சுந்தரியின் களைப்பை போக்குவதாக இருந்தது. ஒவ்வொரு மிடறையும் அவர் ஒலியெழுப்பி உறிஞ்சிக்குடித்தார்.

"சரி பிள்ளைகள்... ஆமி இப்ப என்ன செய்றான் எண்டால் ஒரு காவலரணை தெரிவு செய்து முன்னேறி வந்து அந்தக் காவலரணுக்குள் இருக்கிற உங்களச்சுட்டுப் போட்டு ஆயுதங்களையும் தகவல்களையும் எடுத்துக்கொண்டு போற சின்னச்சின்ன தாக்குதல்கள செய்றான். அதால கவனமா இருங்கோ. எங்கட பெடியள் கொஞ்சப்பர் முன்னுக்கு இறங்கி நிக்கிறாங்கள். அவங்கள் வோக்கில சொல்லுவாங்கள் எந்த காவலரண நோக்கி ஆமி நகருது எண்டு. உடனே நடவடிக்கை எடுங்கோ... சரியா"

சுந்தரி அங்கிருந்து புறப்பட்டு இரு மணித்தியாலங்களின் பின் வதனியின் வோக்கிடோக்கியின் கரகரத்த குரல் அவர்களது காவலரணை நோக்கி இராணுவக் குழுவொன்று முன்னேறுவதாக எச்சரித்தது.

வதனி தனது இலகு இயந்திர ரைபிளை "லோட்" செய்தாள். இடது கையில் அந்த ரைபிளுக்குரிய சங்கிலி ரவைத்தொடரை பிடித்துக்கொண்டாள். இடது புறம் ரேவதியும் வலது புறம் ஒளிநிலாவும் நிலையெடுத்துக் கொண்டனர். பச்சை மரக்கிளைகளை உடலில் கட்டியபடி மெதுவாக முன்னநகரும் சிலரை அவர்கள் கண்டுகொண்டார்கள். வதனி முந்திக்கொண்டாள்.

முன்நகர்ந்த இருவர் சரிந்து விழ காட்டுக்குள்ளிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரமாரியாக வேட்டொலிகள் இவர்களின் காவலரணைச் சல்லடையிட முயன்றன. இவர்களும் சளைக்காது தமது ரைபிள்களை இயக்கிக்கொண்டிருந்தார்கள்.

"ஆர்பிஜி" என்று ஒளிநிலா கத்தினாள். மூவரும் தமது தலைகளை பங்கருக்குள் தாழ்த்தவும் அந்த உந்துகணை அவர்களது பங்கரின் முகப்பில் பட்டு வெடிக்கவும் சரியாக இருந்தது.

வதனி காயப்பட்டாள். அவளது வலது கையின் சின்னவிரலும் மோதிர விரலும் கையுடன் பொருந்தும் பகுதி சிதைந்திருந்தது. வலதுகாலை கணுக்காலுக்கு மேலாக குத்திக்கிழித்து உலோகத்துண்டொன்று வெளியேறியிருந்தது.

"ஐயோ அம்மா......" என்று அலறிய வதனி இலகு இயந்திரத் துப்பாக்கியின் சுடுபிடியில் இருந்து கையை எடுத்த போது விரல்கள் இரண்டும் தொங்கியதைக் கண்டாள்.

"ஒளிநிலா எல்எம்ஜிய அடிடி.. நான் வதனிக்கு கட்டுப்போடுறன்" கட்டளையிட்ட ரேவதி வதனியின் காயத்துக்கு கட்டு போட ஒளிநிலா இலகு இயந்திர ரைபிளை இயக்கத் தொடங்கினாள்.

"நான் மயக்கமாக கூடாது... மயக்கமானா செத்துப் போயிருவன்" வதனி எண்ணத் தொடங்கினாள். மயக்கமாகவே கூடாது... வதனி மனவலுவும் ஓர்மமும் கொண்ட ஓர்புலிப் போராளி. வலியை முகம் வெளிக்காட்டினாலும் அதனை வார்த்தைகளால் வெளிக்காட்டாமல் அமைதி காத்தாள்.

மருத்துவ பங்கருக்குள் இறக்கப்பட்ட வதனியைப் பரிசோதித்த களமருத்துவர் பின்தளத்திலிருந்த நிரந்தர மருத்துவ முகாமிற்கு அவளை உடனடியாகவே கொண்டு செல்ல முடியும் என கணித்தார்.

"இவாவுக்கு ஒரு சேலைன் போடுங்கோ.. ஆள உடனே பின்னுக்கு அனுப்புங்கோ" தனது உதவியாளருக்கு கட்டளையிட்டபடியே அருகில் கட்டிலில் கிடத்தியிருக்கும் குமரனை நோக்கி வேகமாகச் சென்றார். அங்கு அவனது உடைகள் கத்தரிக்கோலினால் வெட்டியகற்றப்பட்டு சத்திர சிகிச்சைக்குத் தயாராக கிடந்தான் குமரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடன் இருக்கவே வதனி விரும்பினாள். ஆனாலும் அடுத்த ஓரிரு நிமிடங்களில் அவளை பின்தள மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வாகனம் தயாராக நின்றது. 'குமரன்... செத்திராதீங்கோ' அவளது உறுதியான மனம் மென்மையான குரலில் அந்த வேண்டுதலை இந்தப் பிரபஞ்சத்தின் காதுகளில் அழுத்தமாகப் பதிந்தது. அந்த காந்தக்குரல் குமரனுக்கும் கேட்டது. பின்தள மருத்துவ முகாமில் அவளது கையை விறைக்க வைத்து விரல்கள் இரண்டும் வேறு வழியின்றி வெட்டியகற்றப்பட்டு கட்டுக்கள் போடப்பட்ட பின்பு காலுக்கும் தையல் போடப்பட்டது. அதுவரை விழித்து அழுத்தமாக இருந்த அவளை நித்திரை மயக்கிப்போட்டது.

மிக இரம்மியமான உலகத்தில் அவளிருந்தாள். கறுப்பு என்றோ வெள்ளையென்றோ சொல்ல முடியாத வதனியின் நிறத்துக்கு பொருத்தமான மஞ்சள் நிற முழுச்சட்டை அவளுக்கு கனகச்சிதமாகப் பொருந்தியிருந்தது. தலையில் ஒரு வெள்ளை நிற பூவை எடுப்பாகச் செருகியபடி ஓடையில் ஓடும் நீரினை இரசித்துக் கொண்டு இருந்தாள். மிடுக்கான சீருடையுடன் அங்கு வரும் குமரனைக் கண்டவுடன் அவளால் இருப்புக் கொள்ளவே முடியவில்லை. கீழ் உதட்டை மேற்பற்களால் கௌவிக் கொண்டாள். அடிவயிற்றில் இனம்புரியாத ஒரு சிலிர்ப்பு இடதும் வலதுமாக அலைவதை உணர்ந்தாள். நளினமாக எழுந்து நீரோடைக்கு அருகே நடந்து சில்லிடும் அந்த நீரேரியிலே தனது கைவிரல்களை நனைத்தாள்... அந்த நீரை அள்ளி அவனை நோக்கி வீசியெறிந்தாள்.

“வதனி...வதனி” யாரோ அவளது காதுக்கு அருகில் கூப்பிடுவது கேட்டது. “என்ன குமரன்” அவள் சொன்னதை அந்த மருத்துவ முகாமின் மருத்துவ உதவியாளரான போராளி மெல்லிய புன்னகையுடன் குறித்துக் கொண்டாள். வதனியின் முகத்தை தண்ணீரில் நனைத்த துவாலையால் துடைத்த அவள் மீண்டும் “வதனி...வதனி” எனத் தாடையில் மெல்லமாகத் தட்டுவதை வதனி உணர்ந்தாள். “எழும்புங்கோ..” கண் திறக்கச் சிரமமாக இருந்தது. இன்னும் சற்று நேரம் பொறுத்தால் குமரன் அந்த ஓடக்கரைக்கு அருகில் வந்துவிடுவான் என்ற எண்ணம் தந்த இனிமையோடு அவள் காத்திருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது கையை அசைக்க சுள்..சுள் என்ற வலி அவளது மூளைக்குள் வெடித்தது. அவள் முழுவதுமாக சுயநினைவடைந்தாள். மருத்துவ உதவியாளினி அவளைத் தூக்கி இருக்க உதவினாள். "வலது கையை ஆட்டாதீங்கோ வதனி.. எப்படியிருக்கு..." அந்த வைத்தியசாலையின் கட்டில்கள் அனைத்திலும் விழுப்புண்ணடைந்த பெண் போராளிகள் இவளைப் பார்த்தபடி இருந்தார்கள். "எழும்பீட்டாள்... எழும்பீட்டாள்" அனைவருக்கும் அந்தச் செய்தி ஒரு மந்திரமாகப் பரவியது. அவளுடைய உயிரின் மதிப்பை அன்று அவள் உணர்ந்தாள்.

சில நாட்களின் பின் அவள் அங்கு நடந்து திரியத் தொடங்கினாள். விழுப்புண் அடைந்த அனைவரிடமும் சரளமாக அவள் பேசுவாள். அன்றைய மருத்துவ பரிசோதனை ஆரம்பமாகியது. பிரதான மருத்துவப்போராளிக்கு அவளின் வரலாறு முழுவதையும் அவளது மருத்துவ அடையாளக் கோப்பு சொல்லிக் கொடுத்தது.

"வதனி.. நீங்கள் சரியாகீட்டீங்கள். ஆனால் கட்டாயம் கொஞ்சநாளைக்கு ஓய்வு எடுங்கோ.. பழைய மாதிரி எல்எம்ஜி யப் பிடிச்சுச் சுட கொஞ்சம் பயிற்சி எடுகோணும். பயிற்சிக்கெல்லாம் இப்ப எங்க நேரம்.. ஓய்வுக்குப் பிறகு சண்டைல தான் பயிற்சி எடுக்கோணும். ஒரு மாத ஓய்வு எடுக்க பரிந்துரை செய்து உங்கட படையணித் தளபதிக்கு எழுதியிருக்கிறன்" அவர் நிறுத்தி கோப்பில் கண்களை ஓட விட்டார். பின் தொடர்ந்தார். "குமரன் இந்த வைத்தியசாலையில தான் இருக்கிறார். நிறையக் காயப்பட்டிருக்கிறார். ஆனா சேதமொண்டும் இல்ல" அவள் திடுக்கிட்டாள். "என்ன டொக்டர் சொல்றீங்கள்?" "மருந்து மயக்கத்தில குமரன்... குமரன்.. எண்டு தானே சொல்லிக் கொண்டு இருந்தனீங்கள்.. அதான் நாங்கள் தேடிப் பிடிச்சனாங்கள். அவர் எங்க இருக்கிறார்எண்டு" மருத்துவப்போராளி சிரித்தார். அவளது உணர்வுகள் எதுவும் வெளியே தெரியவில்லை. "நீங்கள் இண்டைக்கு மத்தியானம் அவரச் சந்திக்கலாம்.. குமரனும் உங்கள சந்திக்க விருப்பமாத்தான் இருக்கிறார். எண்டாலும் இப்போதைக்கு அவர் எழும்பி நடக்கேலாது. குமரனச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திச்சாப் பிறகு உங்கள உங்கட படையணி முகாமுக்கு கூட்டிக்கொண்டு போக ஏற்பாடு செய்திருக்கிறன். போய்ட்டு வாங்கோ வதனி" அவள் அவரை ஏறெடுத்துப் பார்த்தாள்.

"நன்றி டொக்டர்" எதற்காக நன்றி சொன்னாள் அவள். தன்னைக் காப்பாற்றியதற்கா? குமரனைக் காப்பாற்றியதற்கா? அல்லது குமரனை இன்று சந்திக்க ஏற்பாடு செய்ததற்கா? அல்லது வேறு எதற்காகவுமா?.

தன் நண்பிகளின் ஒவ்வொரு கட்டிலாகச் சென்று அவள் விழுப்புண்ணடைந்த ஒவ்வொரு போராளியுடனும் கதைத்தாள். சிடுமூஞ்சிக்காரப் பெண்கள் கூட அவள் வைத்தியசாலையை விட்டு வெளியேறுவதையே விரும்பினார்கள் போலும். அவர்களும் அவளுடன் அன்று கதைத்தார்கள்.

'மூன்று விரல்களோட இனி வாழப் பழகோணும்..' அவள் தனக்கு வழங்கப்பட்ட பச்சை நீளக்காற்சட்டையைத் தானே போட்டுக்கொண்டாள். எஞ்சிய மூன்று விரல்களையும் மிக்க ஆசையாகப்பார்த்தாள். தன்னுடைய இந்த இருபத்தியேழு வருட வாழ்க்கையில் நினைவு தெரிந்த நாள் முதலாக இவ்வளவு அன்பாகத் தன்விரல்களை அவள் பார்த்ததே இல்லை. மதியம் மெதுவாக நடந்து அந்த வைத்தியசாலையின் ஆண்கள் வளாகத்திற்குச் சென்றாள்.

மதியச்சாப்பாட்டு நேரம் என்பதால் அந்த பிரம்மாண்ட அறையில் ஒரிரு கட்டில்களில் மாத்திரம் நடக்க அனுமதிக்கப்படாத போராளிகள் படுத்திருந்தார்கள். குமரன் தனது தலைக்கு இரண்டு தலையணைகளை வைத்து உயர்த்தியிருந்தான். அவள் அந்த ஆளோடியில் நடக்கத் தொடங்கிய போதே அவன் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவளும் அவனைப் பார்த்தபடியே அவனது கட்டிலை நெருங்கினாள். "எப்பிடி இருக்கிறீங்கள்" இருவருமே ஒரே நேரத்தில் அந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டார்கள். யார் பதில் சொல்வது? ஒரு கணம் அந்த உலகம் அவர்கள் இருவரை மட்டுமே தன்னகத்தே கொண்டிருந்தது. அவன் முந்திக்கொண்டான். "வயிற்றுப்பக்கமாவும் முதுகுப்பக்கமாவும் நிறையத் தையல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிருக்கு. சிலத வெட்டி இழுத்து தச்சிருக்கினம் எண்டு இஞ்ச கிடக்கிற பெடியள் சொன்னாங்கள். எங்கடயாக்கள் வெட்டி இழுத்துத்தைக்கிறதுல விசேசம் எண்டு சொல்லிச் சிரிச்சாங்கள்" அவர்களும் சிரித்தார்கள். "எனக்கு விரல் ரெண்டு எடுத்திட்டாங்கள்" இவ்வளவு நேரமும் இல்லாத வேதனையொன்று அவளுக்குள் புகுந்து அந்த வார்த்தைகளை வெளிப்படுத்த முடியாது குறுங்கச்செய்தது. அவளது வேதனையை அவன் புரிந்துகொண்டான். உடனடியாகவே அந்த வேதனையை நீக்க அவன் சித்தம் கொண்டான். "நான் தளபதிக்கு கடிதம் எழுதீட்டன்.. நீங்கள் விரும்பினால் உங்கள திருமணம் செய்ய நான் விரும்புறன் எண்டு" "கடவுளே.." அவள் உள்ளுக்குள் குலைந்தாள். விரல்களில்லாத தன்னை அவன் விரும்பி ஏற்றுக்கொள்வானா? என்று திடீரென எழுந்த சந்தேகம்தான் விரல்கள் இல்லை என்ற அந்த வார்த்தையை உதிர்க்கும் போது அவளுக்குள் வேதனையை ஏற்படுத்தியது என்பதை இப்போது அவள் கண்டுகொண்டாள்.

அவன் தன் வார்த்தைகளால் அவளது சந்தேகத்தை தீர்த்து தன் மீது அவனுக்கிருக்கும் காதலை அனைத்தையும் வெளிப்படுத்திவிட்டான். அதற்கு மேல் அவள் அங்கிருக்க விரும்பவில்லை. கால்கள் தளரத்தொடங்கின. அவளுக்கு தனிமை தேவைப்பட்டது. "கெதியா களத்துக்கு வாங்கோ... நான் இண்டைக்கு வெளிக்கிடுறன். ஒரு மாச ஓய்வுக்குப் பிறகுதான் என்ன எண்டு தெரியும்" அவள் சொல்லிக் கொண்டே திரும்பினாள். "ஓம் கெதியா வாறன்.. நீங்கள் கவனம்.. ஓய்வெடுங்கோ வடிவா" அவள் நடக்கத் தொடங்கினாள் சில அடிகளின் பின் நின்றாள். "நானும் தளபதிக்கு எழுதுறன்" அதற்குப் பின் அவள் வேகமாக நடந்து வெளியேறினாள். அவனது முகம் கனிந்தது. இப்போது தனிமை அவனுக்கும் தேவையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

அன்பில்லத்தின் வரவேற்பறையில் அம்மா காத்துக் கொண்டிருப்பார் என்று கரன் என்றைக்கும் நினைத்ததேயில்லை. அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவன் நகரத்திற்கு வந்த நாளில் இருந்தே ஊற்றெடுக்கத் தொடங்கியிருந்தது. ஆனாலும் அம்மாவின் அனுமதியில்லாமல் திரும்பி அம்மாவைப் பார்க்கப்போக அவனுக்கு மனம் வரவில்லை. இன்றோ அம்மாவே அவனைப் பார்க்க வந்திருந்தார்.

"அனே..அம்முமா" அவனது வாய் குளறத் தொடங்கியது. அவன் அவளுக்கருகில் ஓட அவள் அவனை உச்சி மோந்தாள். "ராசா...இளைச்சுப் போன மாதிரி இருக்கு"....

தமிழ்த்தேசத்தின் தாய்மாருக்கு இருக்கும் பொதுப்புத்தி இது. தனது கையால் தான் சமைத்த சாப்பாடு சாப்பிடாத மகன் மெலிந்திருப்பதாகவே அவர்களுக்குத் தெரியும். "இல்ல எணே... நல்லா சாப்பிடுறன்.. என்ன ஒரு குறை மச்சமொண்டும் இல்ல" அன்பில்லத்துக்கு வந்தநாளில் இருந்து தனக்கிருக்கும் ஒரே குறையை அம்மாவைக் கண்டவுடன் சற்று சத்தமாகவே சொல்லி விட்டான் கரன். நாக்கைக் கடித்துக் கொண்டான். வரவேற்புப் பகுதியில் இருந்தவர் அவனை நிமிர்ந்து பார்த்து சிரித்தார். "அம்மாவக் கண்டோன்ன தம்பிக்கு அன்பில்லம் குறையாத்தெரியுது என்ன" அவரும் தன் பங்குக்கு சில வார்த்தைகளைப் போட்டார்.. "ஐயா அப்பிடிச் சொல்லேல்ல நான்.." ஒரு மன்னிப்புத்தொனி அவனின் குரலில் இருந்தது. "இதென்னடா தம்பி.. இந்த வயசில மச்சம் சாப்பிடாத சாப்பாடு ஒரு சாப்பாடே... எனக்கும் தெரியும்.. அதப் பெரிசா நாங்கள் எடுக்க மாட்டம்" அவர்களிருவரினதும் கதைகள் எதையும் புவனம் பொருட்படுத்தவேயில்லை. அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தகண் வாங்காமல் கரனைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். “என்ன எனே இப்பிடிப் பாக்கிறாய்..?” அவளது பதில் நீண்ட ஒரு மூச்சாக வெளிவந்தது. “இந்தா இந்தப்பணியாரங்கள எல்லாம் உள்ளுக்க கொண்டு போய் வை...” அவள் தூக்கி வந்த பையை அவனிடம் கொடுத்தாள். கரன் அந்தப் பையை கையில் வாங்கிக் கொண்டான். “எப்பிடி ராசா இஞ்ச எல்லாம்? நீ சந்தோசமா படிக்கிறியேடா?” “ஓம்மா.. நான் படிக்கிறன் அம்மா. ஆனா சந்தோசமா இருக்கிறனா எண்டு தெரியேல்ல” கரனது கண்கள் பனித்தன. உடனடியாகவே அவன் அதனைத் தவிர்த்தான். “அலி அடிச்சது இன்னும் நோகுதோ ராசா?” இவ்வளவு நேரமும் கேட்காமல் தவிர்த்துக்கொண்டேயிருந்த கேள்வி அவளையும் மீறி வீழ்ந்தது. “உனக்கு ஆரன சொன்னது? அது சின்ன விசயமொண்டு.. அவன் வயித்தில குத்தினவன். நான் நோகிற மாதிரி நடிச்சன்” அவன் அதற்கு மேல் சொல்லவில்லை. புவனத்தின் முகத்தில் அவன் சொல்வது பொய் என்பதை காட்டும் குறிகளை அவன் வாசித்தான். “மயங்கிப் போனன் அம்மா.. எதிர்பாக்கேல்ல தானே” புவனம் அந்த நீண்ட இருக்கையில் இருந்து எழுந்து கரனுக்கு முன்பாக வந்து நின்றாள். அவனை இழுத்து தன் மார்போடு அணைத்துக்கொண்டு தலையைத் தடவி விட்டாள். அவனும் தாயை அணைத்துக்கொண்டான். அலி அடித்த வலி அப்போதுதான் உடலில் இருந்து கழன்று விழுந்ததை அவன் உணர்ந்தான். தாயை மெதுவாக விலக்கியபடி “சிவலையம்மா என்ன செய்றா?” என்றான். “அடேய் அவள் உன்னய விருப்பமா விசாரிச்சவள் எண்டு சொல்லச் சொன்னவள். உன்னட்ட வாறதுக்கும் கொஞ்ச காசு அவளிட்டதான் மாறினனான்”

சிவலையைப் பற்றிக் கேட்டவுடனேயே புவனத்திற்கு எல்லாமே மறந்து போய்விட்டது. சிவலையைப் பற்றிப் பேசிக் கொண்டே அவனுக்கு அருகில் அமர்ந்தவள் திடீரென “பரமசிவம் அண்ணா உன்ர சுகசந்தோசங்களக் கேட்டவர்” என்றாள். “பரமசிவம் அண்ணாவோ...ஆரவர்?” “உனக்குத் தெரியாதோ... நீ அவர ஐயா எண்டு தான கூப்பிட வேணும் அவர் எனக்குத்தான் அண்ணர். இண்டைக்கு நடந்து வரேக்க லேசா தலையச் சுத்திச்சு அந்த மனிசன் பக்கத்தில நிண்டு கூட்டிக்கொண்டந்தது. அவர்தான் அலியையும் அடையாளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினவர்... அலி என்னப்பற்றி விசாரிக்க என்ர தங்கச்சிதான் இவா எண்டு சொன்னவர்.. பிறகு கரன்ட அம்மாவோ நீங்கள் எண்டும் கேட்டவர்...'' “வெள்ளவேட்டி.. வெத்தில போடுறவரோ'' “ஓமடா'' ''மேல் பொக்கற்றுக்க சொப்பிங் பையில வெத்திலபாக்கு எல்லாம் சுத்தி வச்சு பவ்வியமா வெளிய எடுத்திருப்பாரே?'' “ஓமடா சரியாச் சொல்றாய் பிறகு தெரியாத மாதிரி கேக்கிறாய்'' “அட அவருக்கு பெயர் பரமசிவமே... சோக்கான ஆள் அம்மா'' “ஓமடா.. உனக்கும் உதவி செய்தவரே?'' “ஓமனே.. படகில வரேக்க நல்ல உதவி.. இறங்கி அந்த மனுசனிட்ட பெயரைக் கேட்டன்.. என்ன பதில் சொன்னவர் தெரியுமே.... நீயாத் தெரிஞ்சுகொள்ளுவாய் எண்டவர்.. அதான் எனக்கு நீ அவரிண்ட பெயரச் சொன்னோன்ன தெரியாம இருந்துது...'' “அப்பிடியே... அவர் உண்மையில ஒரு சோக்கான ஆள்தான்.. பின்னேரம் போகேக்க சந்திப்பன். அப்ப கேக்கிறன்''

“எணே சாப்பிட்டியளே'' அவன் கேட்கும் வரை இந்த பாழாய்போன வயிற்றில் ஏன் பசி கிளம்பவில்லை என்று அவள் யோசித்தாள். ஆனால் அவன் கேட்டவுடன் பசி தன் வயிற்றைக் குடைந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள். “இல்லடா ராசா.. வா.. வெளிய போய் சாப்பிடுவம்.. பக்கத்தில எங்கயும் கடைகளிருக்கோ''

ஐயா தன் முன்னாலிருந்த புத்தகத்துக்குள் தலையைப் புதைத்திருந்தாலும் இவர்கள் கதைப்பதை கேட்டுக்கொண்டே இருந்தார். “அம்மா.. உங்களுக்கும் சாப்பாடு இஞ்ச தான்.. உள்ளுக்க போய் முகத்த கழுவி தயாராகுங்கோ.. சாப்பிட்டுட்டு படகப் பிடிக்க போகவெல்லோ வேணும்.''

அவள் கரனைப் பார்த்தாள். கரன் ஐயாவைப் பார்த்தான். அவரோ “அம்பிகா... அம்பிகா'' என யாரையோ அழைத்தார். தாழ்வாரத்தின் சிறு கதவின் வழியே அம்பிகா ''அறக்கப் பறக்க'' ஓடிவந்தாள்.

“ஐயா...'' ''ஏன்டி பிள்ள இப்பிடி ஓடியாறாய்?'' “இல்ல அய்யா..நீங்கள் கனநேரமாக் கூப்பிட்டுக்கொண்டிருக்கிறியளோ தெரியேல்ல எண்டு யோசன வந்திட்டு அதான்!'' பதிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அவருக்குச் சொன்னாலும் பார்வை புவனத்தை ஆராய்ந்து கொண்டிருந்தது. "அய்யா சொன்ன மாதிரி ரெண்டு நாளைக்குள்ள சமையல் வேலைக்கு ஆள எடுத்துப் போட்டார்போலக் கிடக்கு.. ஆனா அவ ஏன் எங்கட கணித மாஸ்டரோட கதைச்சுக் கொண்டு இருக்கிறா?" அம்பிகாவின் சிந்தனைகளுக்கு ஐயா முற்றுப் புள்ளியிட்டார். "இவா கரனிண்ட அம்மா... உள்ளுக்க கூட்டிக்கொண்டு போய் முகங் கழுவிற இடத்தக் காட்டு. அவா ரெண்டரைக்கு துறைமுக பொலிசடியில நிக்க வேணும். அப்ப தான் படகப் பிடிக்கலாம். அதால இண்டைக்கு அம்மாவும் மகனும் முதலே சாப்பிட்டு வெளிக்கிடட்டும்" அம்பிகா எல்லாவற்றுக்கும் தலையாட்டினாள். கரன் தாயைக் கூட்டிக்கொண்டு உள்ளே சென்றான். "அம்மா.. இதுக்கு அங்கால நாங்கள் வரேலா. இது பெண்கள் பகுதி.. நீங்க போய் முகத்த கழுவிக்கொண்டு வாங்கோ.. நானும் டக்கெண்டு வந்திடுறன்." "தம்பி நானும் உன்னோட வாறனே" அவளுக்கு அவன் எங்கு தங்குகிறான். எங்கு இருந்து படிக்கிறான், எங்கு படுக்கிறான் என்பதை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் போல இருந்தது. "இல்லையனே.. நீ என்ர அம்மாவா இருந்தாலும் இஞ்சால வரேலா" அவன் சிரித்தபடி சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

ஜெயந்தனின் சைக்கிள் உவர்மலைச் சந்தியில் இருந்து நேராகச் சென்று வலது புறமாகத் திரும்பி மரத்தடிச் சந்திவரை சென்று பின் பிரதான வீதியில் மெதுவாக போய்க்கொண்டிருந்தது. எதிரில் வரும் ஒவ்வொருவரையும் அவதானித்தபடி அவன் சைக்கிளின் பாதங்களை மெதுவாக அழுத்திக்கொண்டிருந்தான். தூரத்தே வரும் பழுப்பு நிற வேட்டி, வெள்ளைச் சேட்டை அணிந்த அவரை அவன் கண்கள் குறித்துக் கொண்டன. அது பரமசிவம் ஐயா தான். அவரோ அவனைக் கவனிக்கவேயில்லை. தலையில் இடியாய் இறங்கும் வெய்யில் பரமசிவம் ஐயாவின் கண்களைக் கூசச் செய்தன. அதனால் அவரது கண்கள் பெருந்தெருவின் கறுப்பை மட்டுமே தெளிவாகக் காட்டின. அவர் அருகில் வர சைக்கிளை திடீரென வலது புறமாக செலுத்திய ஜெயந்தன் அவரை மோதுவதைப் போல சைக்கிளை நிறுத்தினான். "ஐயா... என்ன கிழவருக்கு அன்ன நடையெல்லாம் வந்திட்டு"...சற்று சத்தமாக சொல்லிக்கொண்டே சைக்கிளின் பாரில் இறங்கினான் ஜெயந்தன். "போடா.. இளந்தாரி.. உண்ட வயசில நான் ரெண்டு பெட்டைகள சைக்கிள்ள ஏத்திக்கொண்டு திரிஞ்சனான் தெரியுமே... வாறாரவர் வீரங்கதைச்சுக்கொண்டு" என்றவாறே சைக்கிளின் பார்கம்பில் இறங்கி நின்ற ஜெயந்தனை ஆரத்தழுவிக் கொண்டார். வெய்யில் அவரின் உடலில் வியர்வையைப் பெருக்கெடுக்கச் செய்திருந்தது. வெற்றிலை வாய் குமட்டும் நாற்றம் அடித்தது. என்றாலும் ஜெயந்தனும் அவரை இறுக்கிக்கொண்டான். பேரனை நீண்ட நாட்களுக்குப் பின் காணும் பூட்டன் என சிலர் நினைத்துக்கொண்டு அப்பிரதானதெருவில் பயணித்தனர். "காசு எண்பத்தியெட்டாயிரம் எண்ட மேல் பொக்கற்றுக்குள்ள இருக்கு எடு" அவர் அவனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுக்குள் குசுகுசுத்தார். இறுக்கிப் பிடித்தபடியே அவரது பொக்கற்றுக்குள் இருந்து அந்தப்பணத்தை ஜெயந்தன் எடுத்துக்கொண்டான். "புவனம் வந்திருக்கிறா... இண்டைக்கே திரும்பிறா..." "சரி.. நான் அவாவச் சந்திக்கிறன். பொருள் கொண்டுதான் வருவா. கவனம்" அவன் அவருக்குக் குசுகுசுத்தான். இருவரும் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டார்கள். "அடுத்தமுறை சந்திக்கேக்க நானும் ரெண்டு பெண்டுகள உங்களுக்காக கூட்டிக்கொண்டு வாறன். அப்பரயும் அம்மாவயும் கேட்ட எண்டு சொல்லுங்கோ சரியே" என்றவாறு அவன் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான். குலதீபனிடம் இருந்து வாங்கிய எண்பத்தியெட்டாயிரம் ரூபா அவனிடம் கைமாறியிருந்தது. பரமசிவம் அதே வேகத்தில் தனது நடையைத் தொடங்கினார்.

பிரதான வீதியில் மேலும் முன்னே சென்று தனது சைக்கிளை இடது பக்கம் திருப்பி காசுத் தெருவின் ஊடாக மத்திய வீதிக்குச் சென்றான் ஜெயந்தன். மத்தியவீதி ஒருவழிப் பாதையாகும். எனவே சைக்கிளில் இருந்து இறங்கி சைக்கிளை உருட்டிக்கொண்டு அன்பில்லம் நோக்கி நடந்து சென்றான். சைக்கிளை ஸ்டாண்ட் பண்ணி விட்டு உள்ளே சென்றான்.

"ஐயா... வணக்கம் கரனக் கூப்பிடுறீங்களோ" "கரன்ட அம்மா வந்திருக்கிறாதம்பி ரெண்டுபேரும் சாப்பிட்டுக்கொண்டிருக்கினம் இதில இருங்கோ வரட்டும்..." சாதாரணமாக யாரும் உள்வர முடியாத அன்பில்லத்தில் கரனுக்கு இருக்கும் மரியாதையின் நிமித்தம் ஜெயந்தன் வரவேற்பறை வரை வரும் வாய்ப்பைப் பெற்றிருந்தான். வரவேற்பறையில் அவன் காத்திருந்தான். தான் திட்டமிட்டபடி யாவும் நகர்வது அவனுக்கு நிம்மதியாக இருந்தது. கரன் அம்மாவுடன் ஆளோடியில் தென்பட்டான். ஜெயந்தன் உடனேயே எழும்பி புவனத்தை வரவேற்க காத்திருந்தான். "அம்மா வணக்கம்... வந்திருக்கிறீங்கள் எண்டு ஐயா சொன்னவர்" அவன் மனதில் பரமசிவம் ஐயாவை நினைத்துக்கொண்டான். புவனத்திற்கு அவனைத் தெரிந்திருக்க ஞாயமில்லை. அவள் கரனைப் பார்த்தாள். "அம்மா இவன் ஜெயந்தன்" அடுத்த சில வினாடிகளில் ஜெயந்தன் யாரென்பதை அவன் புவனத்திற்கு விளக்கிவிட்டான். "அப்ப நீங்க தானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி இவரையும் ஏத்தி இறக்கிறீங்கள்?" ஜெயந்தன் சிரித்தான். "கவனம் ராசாக்களே... நீங்க ஏன் தனிய இருக்கிறீங்கள்..இஞ்ச வந்து அன்பில்லத்திலயே கரனோட இருக்கலாமே" புவனம் வெகுளியாக கேட்டாள். அங்கிருந்த அன்பில்லத்தின் ஐயாவிற்குத் தூக்கிப் போட்டது. ஜெயந்தன் முந்திக்கொண்டான். "இல்லையம்மா.. நான் தனிய இல்லை..அங்க ஒரு வயசான அம்மா என்ன நம்பி இருக்கிறா? அடுத்த முறை வரேக்க வாங்கோ.. கூட்டிக்கொண்டு போறன்" "ஓம் மோனே வாறன்"..

ஐயா தலையிட்டார்.

"அம்மா படகுக்கு நேரமாகீட்டு...." "அம்மா வாங்கோ நான் சைக்கிள்ள ஏத்திக்கொண்டு போறன்... கரன் நீ என்னட்ட எடுத்த கொப்பிகளக் கொண்டா ஒருக்கா" அவன் உள்ளே ஓடிச்சென்று அந்தக் கொப்பிகளை எடுத்து வந்தான். அதில் ஒரு கொப்பியை ஜெயந்தன் எடுத்துக் கொண்டான். "இது நீ எடுக்கேல்ல ஆனா நான்தான் மாறி வச்சிட்டன். நீ தூக்கிக்கொண்டு வந்திட்டாய்" அவன் அந்தக் கொப்பியை எடுத்துக் காட்டினான். கரனும் தலையை ஆட்டினான். புவனம் கரனை மீண்டும் உச்சி மோந்தாள். "வாரண்டா ராசா... கவனமா இரு.. ஐயா.. என்ர பிள்ளயக் கவனமா பாத்துக்கொள்ளுங்கோ" அவர் எழும்பி நின்று புவனத்தைப் பார்த்து கையைக் கூப்பினார். அவள் தன் மெலிந்த பையை எடுத்துக்கொண்டு அங்கிருந்து இறங்கத் தொடங்கினாள். "எணே...சிவலையம்மாவக் கேட்டன் எண்டு சொல்லுங்கோ இன்னும் ஒரு ஆறு மாசந்தானே வந்திருவன் நான்" புவனம் பையை ஜெயந்தனிடம் கொடுத்தாள். சைக்கிளில் ஏறத் தயாரானாள். "அட மறந்தே போனன். நான் ஒரு சொக்கலேட்கிறீம் பிஸ்கட் வாங்கோணும் தம்பி "அம்மா நில்லுங்கோ நான் வாங்கியாறன்" பதிலுக்கு காத்திராமல் சைக்கிளை ஸ்ராண்ட் செய்து விட்டு பையுடன் பக்கத்திலிருந்த கடைக்கு நடந்து போனான் ஜெயந்தன். பிஸ்கட் பக்கற்றுடன் அவனது கையில் இருந்த கொப்பியும் அந்த பைக்குள் போனது. "அம்மா பைக்குள்ள இருக்கு.. அறுபது ரூபா பிஸ்கட்டுக்கு" என்று சொல்லி அவளைத் தனக்கு காசைத்தரும் அவதிக்குள் செலுத்தினான். அவள் தனது பையைத் திறந்து பார்க்க மறந்து அவனுக்கு காசை எண்ணிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாள். "மச்சான் நான் கொண்டு போய் விட்டிட்டு வாறனே" என்றான் கரன். ஒரு கணம் சிந்தித்தான் ஜெயந்தன் "அதுவும் சரிதான் நான் நடந்து காளி கோயிலடியால வந்துகொண்டிருப்பன் நீ அம்மாவ விட்டிட்டு வா"

துறைமுக வாசலில் தாயை இறக்கி விட்டுவிட்டு உடனடியாகவே திரும்பினான் கரன். நேரம் சரியாக இருந்தது. பொதிகளைப் பரிசீலிக்கும் மேசையில் பையைத் திறந்து கொட்டினாள் புவனம். அந்த கொப்பியும் மேசையில் விழுந்தது."அடடா...அந்தத் தம்பி கொப்பியயுமெல்லோ பிஸ்கட்டோட வச்சிருக்கிறான்...பொறுப்பில்லாத பொடி.. எப்பிடித்தான் படிக்கப் போகுதோ தெரியேல்ல" அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள். பரிசீலனையில் இருந்த காவல்துறை பெண் அந்தக் கொப்பியை திறந்தாள். பல நிறங்களைக் கொண்டு உயிரினங்களின் உடல்கள் வரையப்பட்டு ஆங்கிலச் சொற்பதத்தால் அதன் உறுப்புகள் பெயரிடப்பட்டிருந்தன. "புத்தா (மகன்) படிக்கிறதா?" "ஓம்...." பெருமையாக தலையாட்டினாள் புவனம். காவல்துறையினள் சிரித்தபடி அனைத்தையும் அள்ளி பைக்குள் போட்டாள். "அடுத்தாள் வாங்க" புவனம் படகை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அப்போது தான் பரமசிவம் துறைமுக காவல்துறையின் வாசலுக்கு வந்திருந்தார். படகுக்கு ஏறுவதற்காக புவனம் சென்றுகொண்டிருப்பதை அவர் கண்டார். ஆசுவாசமாகப் பெருமூச்செறிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

"அண்ண... எப்பயண்ண மனிசருக்கு சுதந்திரத்தின்ட அருமை தெரியவரும்?" அந்தப் பெரிய சிறைக்கூடத்தின் மத்தியில் படுத்திருந்த வரதன் தனது சக களவாணியான சுந்தரத்திடம் கேட்டான். சுந்தரம் இடதுபுறமாகத் திரும்பி தனது இடது கையை மடித்து தலையைத் தாங்கிக்கொண்டு வரதனுக்கு பதில் சொல்லத் தயாரானார். "எதுவும் கிடைக்காட்டித் தாண்டா அதுண்ட அருமை தெரியும்..." அவரே தொடர்ந்தார். "நாங்கள் எப்பிடித் திரிஞ்சம் வெளியில அப்ப எப்பவாவது இப்பிடி சுதந்திரத்துக்கு ஆசப்பட்டுக் கிடப்பம் எண்டு யோசிச்சமா?" "அந்தக் களவு செய்யேக்க நான் யோசிச்சன்... ஆனா இப்பிடி சிறையில போடுவாங்கள் எண்டு நினைக்கேல்ல.. பத்து பதினைஞ்சு நாளைக்கு வேலைக்கு வச்சிருந்திட்டு விட்டிருவாங்கள் எண்டு தான் நினச்சம் என்ன அண்ண" "ஓமடா.. முகுந்தன் ஏழு மாசம் தீத்துவிட்டானடா" "பரவாயில்ல அண்ண இன்னும் ஒரு நாலு மாசம் தானே.. போயிரும்" "ஓம் டா... போயிரும்... பங்கர்வெட்ட கொண்டு போகேக்க ஆமி வெடி வச்சானுகள் எண்டா போயிரும்" இரண்டு பேரும் சிரித்துக்கொண்டார்கள். "எங்களிட்ட காசு இல்லையெண்டுறதால இஞ்சகிடக்கிறம்.. லிங்கமண்ண காசு இருந்ததால இஞ்ச வந்து கிடக்கிறார்" வரதன் லிங்கமண்ணையைப் பார்த்தபடி சொன்னான்.

அன்று காலை ஏழு மணிக்கு சிறைச்சாலையின் வெளிப்புறங்களை துப்பரவு செய்யத்தொடங்கி பின் மரக்கறி பயிரிடுவதற்காக காணியைப் பண்படுத்தி விட்டு அவர்கள் சுமார் பத்து மணியளவில் உள்ளே வந்து படுத்திருந்தார்கள். களைப்பால் லிங்கம் அண்ணாந்து படுத்தபடி குறட்டை விட்டுக்கொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓமெண்ண காசு இருந்தாலும் பிரச்சன இல்லாட்டியும் பிரச்சன” சுந்தரம் தத்துவங்களை உதிர்த்தார். “மனிசன் கொஞ்சம் பெரிய இடம் போல... உடம்ப இறுக்கி வேல செய்யக் கஸ்டப்படுறார். ஆனா ஒரு மாசத்துக்கு பிறகு வீட்ட போகேக்க உடம்பு குனிஞ்சு நிமிர நல்லாப் பழகீரும். சீனி, பிரசர் வருத்தங்களும் குறைஞ்சிரும்” வரதன் தொடர்ந்தான் “உவர் முதல்நாள் கக்கூசுக்கிருக்க பட்ட பாட்ட பாத்தம் தானே” “ஓமடா படாத பாடுபட்டு எங்கயோ எல்லாம் இருந்து போட்டு அம்மணமா அந்த மனிசன் நிக்கேக்க கவலயாத்தான் இருந்துது” “ஓமண்ண... இப்ப தான் கொஞ்சமாவது குந்தியிருக்க முடியுது அவருக்கு” “ஆஹ்ஹ... என்ன செய்றது”

சிறைவாழ்வு அவர்களின் மனங்களில் வடுக்களை ஏற்படுத்தியிருந்தது. “அமலனும் குட்டியும் கொஞ்சம் பரவாயில்ல என்ன?” வரதன் ஆரம்பித்தான். “ஓம் முதல் நிண்ட பெடியள் இரவில சென்றி பாத்திட்டு பகல் வாறவங்கள்... வந்தோன்ன படுக்கத்தான் பாப்பாங்களே ஒழிய எங்கள எப்பிடி வெளிய விடுவாங்கள்.. ஆனா இவங்கள் ரெண்டு பேரும் இஞ்சயே நிக்கிறாங்கள்... அமலன் இடைக்கிடை வீட்ட போய்ட்டு வாறவர்.. குட்டி அதப்பற்றி யோசிக்காதவன் தானே.. ஆனா அமலன் கடும் ஆள்.. சேட்ட விட்டா சுடுவார்போலத்தான் இருக்கு...” “ஓம் டா.. அதால தான் நீ அமலன மரியாதையாவும் குட்டிய அவன் இவன் எண்டும் கதைக்கிறாய்” “ஓமண்ண குட்டியோட கதைக்கேக்க ஏதோ ஒரு உரிமையாக்கதைக்க முடியுது.” “அண்டைக்கு அமலன் சொர்ணத்தாரிட்ட அடி வாங்கினாப் பிறகும் எங்கள வேலை செய்றம் எண்ட பேரில பின்னேரத்தில வெளியில விடுறார்தானே” “அண்டையான் பிழை குட்டியில தானே.. அதுக்கேன் அமலனுக்கு அடிச்சவர் சொர்ணத்தார்” “அமலன் தான் பொறுப்பு... பெடியள் பிழை விட்டா பொறுப்பாளருக்கும் தானே தண்டன”

அடிவாங்கிய அன்று மாலை பத்திரிகைகளில் அமலன் மூழ்கியிருந்தான். கைதிகள் அனைவரையும் வெளியே எடுத்து மரத்துக்கடியில் இருத்தி வைத்து சமா வைத்துக்கொண்டிருந்தான் குட்டி. பைவ்பைவ் என்ற சங்கேதப் பெயரால் அழைக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்ட சிறப்புத் தளபதி சொர்ணம் தன் முகாமிலிருந்து வீட்டிற்கு அந்த வழியால் தான் பயணம் செய்வார். அன்று எதேச்சையாக மோட்டார் சைக்கிளொன்றில் பயணித்த அவர் சிறைச்சாலைக்கு வர விரும்பினார். சிறைச்சாலையின் பிரதான படலையின் மாற்றுச்சாவியொன்று அவரிடமிருப்பது யாருக்கும் தெரியாது. அடுத்து அவர் மோட்டார் சைக்கிளில் வருவார் என்று யாரும் அனுமானிக்கவும் முடியாது. ஆனால் அன்று எல்லாம் நடந்தது. பிரதான படலையைத் திறந்து உள்ளே வந்த அவர்குட்டி கைதிகளுடன் சமா வைத்துக்கொண்டிருப்பதைக் கண்டுவிட்டார்.

"டேய்... மயிராண்டி உன்ன இதுக்கா டா இஞ்ச விட்டிருக்கிறன்" என்ற அவரின் குரலில் அந்தப் பிரதேசமே அமைதியாயிற்று. "எங்கடா அமலன்" அமலன் விதிர்த்துப் போய் வெளியே ஓடி வந்தான். குட்டி மாலை நேர வேலைக்காகத்தான் அனைவரையும் வெளியே எடுக்கிறான் என நினைத்திருந்த அமலனுக்கு அவர்கள் இருந்த நிலைமை அனைத்தையும் சொல்லி விட்டது. "தவறு என்னுடையது தான்.... தருவதை வாங்குவோம்" அவன் தயாராகியே சொர்ணம் அண்ணைக்கு அருகில் வந்தான். பளார் என்ற அறை அவனது செவிப்பறையை அதிரச் செய்தது. குட்டி ஏற்கனவே கன்னங்கள் சிவந்திருந்தான். கைதிகள் அனைவரும் 'ஐஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு' இருந்தார்கள். தம் கண்களின் முன்னே தமது சந்தோசத்திற்காக தம்மை நம்பி வெளியே விட்டிருந்த போராளிகள் இருவரும் அடிவாங்கியது அவர்களுக்கு கவலையை தந்தது. "ஓடுங்கடா எல்லாரும் உள்ளுக்க" அவர்கள் ஓடியது மந்தைகளில் மாடுகளை அடைக்கும் உணர்வை ஏற்படுத்தியது. "ஒரு மயிராண்டியையும் வெளிய விடக்கூடா... வெளிய வாராங்கள் எண்டா வேலை செய்யத்தான் வரோணும்" பைவ்பைவ் தன் கோவத்தைக் குறைக்காமலேயே அங்கிருந்து வெளியேறினார். அவர்களுக்குள் லிங்கம் தான் மிகவும் அதிர்ந்து போயிருந்தார். அவருடைய வாழ்நாளில் யாருமே அவரை அப்படி அதிர வைத்ததில்லை.

அதன் பின்னர் நிலைமைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. முழுக் கைதிகளையும் வெளியே விடுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைப்பட்டது. தொகுதி தொகுதியாகவே கைதிகள் வெளியே விடப்பட்டார்கள். எப்போதும் கைச்சங்கிலியுடனேயே வெளியில் தேவைக்கு எடுக்கப்பட்டார்கள். வேலை செய்யும் போது மட்டுமே அவர்களின் கைச்சங்கிலிகள் அகற்றப்பட்டன. அந் நிகழ்விற்கு ஒரு வாரத்தின் பின் மாலை வேளையில் வேலை செய்வதற்காக அனைத்து கைதிகளையும் வெளியே எடுக்க உத்தரவிட்டான் அமலன். அவ்வாறு மாலை வேலை செய்துவிட்டு சாப்பிட்டுவிட்டு அனைவரும் நிம்மதியாக நித்திரை கொள்வார்கள் என்பதை அவன் தன் அவதானிப்பில் அறிந்திருந்தான். லிங்கத்தின் மீது மட்டும் அவன் சற்று குறைவான இறுக்கத்தைக் கடைப்பிடித்தான். இன்னும் ஒரு கிழமை மட்டுமே அவர் அங்கிருப்பார் என்பது காரணமாக இருக்கலாம்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் குலதீபன் தனக்கு விதிக்கப்பட்ட தண்டப்பணத்தைக் கட்ட வந்து சென்றுகொண்டிருந்தான். புலிகளின் முன்னரங்க காவல் நிலையிலேயே பணத்தைச் செலுத்திவிட்டு அவன் திரும்பி வருவான். இரண்டு மாதங்கள் அவ்வாறு செலுத்தி முடிந்திருந்தது. அன்று அவனது மருந்தகத்திற்கு மிக வித்தியாசமான இருவர் மருந்து வாங்க வந்திருந்தார்கள்.

"குலதீபன் நிக்கிறாரோ?" என்று சிரித்தபடி அவனிடமே கேட்டுவிட்டு "உங்களத் தெரியாமக் கேக்க இல்லை ... நாங்கள் ஆரெண்டு நீங்கள் தெரிஞ்சுகொள்ளத்தான் கேட்டம்" குரலில் அதிகாரமும் கட்டளையிடும் தொனியும் ஓங்கி ஒலித்தன... குலதீபன் அவர்களின் வருகையை எதிர்பார்த்திருந்தான். வாராந்தம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்று வரத் தொடங்கியிருப்பதால் தான் அவதானிக்கப்படுவேன் என்பதும் அவனுக்குத் தெரியும்.

"ஒருக்கா பழைய பொலிஸ் ஸ்டேசனுக்கு வரோணும் இப்ப... என்ன மாதிரி எங்கட வான்ல வாறீங்களோ.. இல்லாட்டி எங்கட வானுக்கு முன்னுக்கு நீங்கள் உங்கட மோட்ட சைக்கிள்ல வாறீங்களோ" "நான் எண்ட மோட்டசைக்கிள்ள வாறன்.." "சரி நாங்கள் வெளியில நிக்கிறம் பத்து நிமிசத்தக்குள்ள வரோணும்" குலதீபன் அவர்கள் இருவரையும் வாசல் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து விட்டுவிட்டு வெளியில் நோட்டம் விட்டான். சற்று தள்ளி கருநீலநிற வான் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

உள்ளே சென்று தன்னுடைய நிலையான தொலைபேசியில் சில இலக்கங்களை அழுத்தினான். "யேஸ் ஓ ஐ சி ஸ்பீக்கிங்" "சேர்நான் குலதீபன்" "ஆ.. குலதீபன் எப்பிடி?" "சேர்நல்லம் சேர்.. ஒரு பிரச்சன" "என்ன கியாண்ட (சொல்லுங்கோ)" "ரெண்டுபேர்வந்து பழைய பொலிசுக்கு வரச் சொல்லுகினம்" "ஓ.. நில் பாட்ட வானெக்கத ஆவா(நீல நிற வான்லயா வந்திருக்கிறாங்கள்)" "ஓம் சேர்" "மேயா ரிஐடி கட்டிய (அவர்கள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர்) மம மொக்குத் தந்ந பே (என்னால ஒண்டும் செய்யேலா).. ஓயா கிகில்லா எண்ட (நீ போய்ட்டு வா) பஸ்ஸ கத்தாக்கரமு ஹறித (பிறகு கதைப்பம் சரியா)" "சரி சேர்". தன்னை தேடிவந்தவர்கள் யாரென்பதை குலதீபன் துறைமுக காவல்துறை பொறுப்பதிகாரியிடம் கேட்டுத்தெரிந்துகொண்டான். கடைச்சிப் பந்திகளுக்கு தான் அவசரமாக ஒரு இடத்திற்குச் சென்று வருவதாகச் சொல்லிவிட்டு வெளியேறினான்.

அவர்களுடைய வான் அவனுக்கு பின்பாகப் பயணித்தது.

அப்போது மதியநேரமாக இருந்தபோதிலும் அந்த அறை இருட்டாக இருந்தது. குலதீபன் ஒரு மேசையின் முன்பாக இருத்தப்பட்டான். அறையில் வெளிச்சம் தரும் மின்குமிழ் தன் ஒளிக்கதிர்களில் சொல்லொணா துன்பங்களை அவன் இருந்த பக்கத்திற்கு மட்டும் வடிய விட்டுக்கொண்டிருந்தது. அவனுக்கு முன்புறம் இருட்டாக இருந்தது. அங்கு யார் இருக்கிறார்கள் என்பதையோ எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்பதையோ அந்த அறையின் பரப்பளவு எவ்வளவு என்பதையோ அவனால் தெரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. காற்றுப்புக மறுத்த அந்த அறைக்குள் இயற்கையாக ஒரு மொச்சை மணம் நாசிகளை சுரண்டியது. திடீரென முன்புறமிருந்து இரண்டு கைகள் மேசையில் நீண்டன.

குலதீபனுக்கு இதயம் நின்று நின்று அடித்தது. மேசை ஒளி பெற்றிருந்ததால் அந்த கைகளை குலதீபனால் தெளிவாகப் பார்க்க முடிந்தது. வலதுகை மணிக்கட்டில் நிறையவே கையிறுகள் மந்திரிக்கப்பட்டு கட்டப்பட்டிருந்த அந்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளில் படர்ந்திருந்த உரோமங்களின் அடர்த்தி குலதீபனுக்கு அச்சத்தை அதிகரித்தது. குலதீபனுள் மரணபயம் மெல்ல புகுந்தாடியது. நல்ல தமிழில் அவன் கதைக்கத் தொடங்கினான்.

"கிழமைக்கு கிழமை கொண்டு போய் காசு கட்றாய் போல கிடக்கு" அவன் உண்மைகளை மட்டும் சொல்வதாக உறுதியெடுத்துக் கொண்டான். "ஓம்.. ஐயாயிரம் ரூபா கட்டுறனான்" "புலிக்கு காசு குடுக்கிறது சட்டப்படி குற்றம்.. பயங்கரவாத தடைச்சட்டத்துக்குள்ள உன்னக் கைது செய்தமெண்டால் வாழ்நாளில நீ வெளிய வரேலா தெரியுமா?" "தெரியும் சேர்... ஆனால் அவங்கள் சுடுவம் எண்டு சொல்லிப் போட்டாங்கள்" "அப்பிடியெண்டா எங்களிட்ட பாதுகாப்பக் கேட்டிருக்கலாம் தானே?" "நான் யோசிச்சனான்.. ஆனால் அவங்கள் சுடோனும் எண்டு முடிவெடுத்தால் சுட்டுப் போட்டுத்தான் அடுத்த வேலை என்டுறது ஐயாவுக்கும் தெரியும் தானே... அதோட உங்களிட்ட பாதுகாப்ப எடுத்தா அவங்கள் என்ட குடும்பத்த குறிவைப்பாங்கள்.. அத யோசிச்சுத்தான் சொல்லேல்ல" தான் தப்ப வேண்டும் என்பதால் புலிகள் தன் குடும்பத்தைக் குறிவைப்பார்கள் என்று சொல்வது தனக்கு எல்லாவிதத்திலும் அனுகூலமானது என்பதை குலதீபன் கணக்கிட்டிருந்தான்.

சற்று நேரம் அமைதி நிலவியது. இன்னுமொரு குரல் பேசத் தொடங்கியது. "உனக்கு ரெண்டு வாய்ப்பு மட்டும் தான் இருக்கு...ஒண்டு எங்களிட்ட எல்லா உண்மையையும் சொல்லி நாங்கள் சொல்றத செய்றது. அல்லாட்டி ஜெயிலுக்க போறது. கொஞ்ச நேரம் தாறம்... யோசிச்சு சொல்லு". இரண்டாவது கதைத்தவன் முதலாவதாக கதைத்தவனின் அதிகாரி போல இருந்தது. அவன் கதைக்க தொடங்கியவுடன் முதலாவது கதைத்தவனின் கைகள் இரண்டும் இருட்டுக்குள் காணாமல் போனது. அவர்கள் இருக்கிறார்களா? இல்லையா?. பணத்திற்கு ஆசைப்பட்டுச் செய்த ஒரு தவறு தலைக்கு மேலே தொங்கும் கத்தியுடன் வாழ தன்னை நிர்ப்பந்தித்திருப்பதை அவன் உணர்ந்தான். வாழ்க்கையில் சில தவறுகளைச் செய்யவே கூடாது செய்தால் அதற்கு தண்டனைகள் மட்டுமே காத்திருக்கும். மன்னிப்புகள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இடுகின்ற கட்டளைகளை நிறைவேற்றுவதாக குலதீபன் ஒப்புக்கொண்டான். இராணுவத்திற்கு தகவல்தரும் புலனாய்வாளனாக அவன் செயற்பட வேண்டியிருந்தது. அவர்களிடமிருந்து தப்புவதற்கு வேறு வழியில்லையே. தீர்க்கமான முடிவுகளுடன் குலதீபன் அந்தக் கட்டிடத்தைவிட்டு வெளியேறினான். அன்று மாலையே தனது சகோதரனை அழைத்து அனைத்து விடயங்களையும் ஒப்புவித்தான். புலிகளுக்குச் செலுத்த வேண்டிய எஞ்சிய தண்டப்பணம் முழுவதையும் ஒரு கடித உறையில் இட்டு தனது சகோதரனிடம் கொடுத்தான். "எப்பிடியும் என்னத் தேடி ஒரு ஐயா வருவார். உனக்கு வித்தியாசம் தெரியும். அவரிட்ட இதக் குடு.. இனி எந்தப் பிழையும் செய்யமாட்டன் எண்டு சொன்னன் எண்டும் சொல்லு"

அடுத்தநாள் இரவில் இருந்து குலதீபனை ஸ்ரீலங்காவில் எவரும் காணவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

மூதூர் இறங்குதுறையில் பரிசீலிப்பை முடித்துக்கொண்டு நடக்கத் தொடங்கிய புவனத்தை அந்தப் பரிச்சயமான குரல் திரும்பிப் பார்க்க வைத்தது. "ராசாத்தி.. திரும்பிப் பாக்காம விறுக்கு விறுக்கெண்டு நடந்தா என்னால என்ன ஓடியா பிடிக்கேலும்... எனக்கு எண்பத்தியிரண்டு வயசடி" என்றபடி அருகில் வந்து சேர்ந்தார் பரமசிவத்தார். "நீங்களொரு சோக்கான ஆள் எண்டு சொன்னான் கரன்" "உண்மையாவே...அப்பிடி என்னத்தயடி என்னட்ட கண்டவன்" "எல்லாம் சொன்னவன்... அண்டைக்கு என்ர வீரபத்திரன் தான் உங்கள அனுப்பியிருக்கிறான் அண்ணா" பரமசிவம் வான்மீயை நினைத்துக் கொண்டார். "ஓம் ஓம்...அவன் தான் என்னய அனுப்பீனவன்.. அவன் தான் என்னய இயக்கிக்கொண்ட இருக்கிறான்" அவள் மிக்க நெருக்கமாக பரமசிவம் அண்ணயின் கதையை உணர்ந்தாள். "அய்யா... அப்ப நீயும் வீரபத்திரண்ட ஆளோ" "அதிலெண்ணடியாத்த சந்தேகம்" "நீங்க எங்க இருக்கிறியள்" "நானோ... நான் நல்லூரில இருக்கிறன்... தனியத்தான் ஆருமில்ல.. கடலில இருந்து அடிச்ச பீரங்கிக்குண்டு ஒண்டு என்ர மனிசி, பிள்ளை, மருமகள், பேரன் எல்லாரயும் ஒண்டா கொண்டு போய்ட்டு. நான் அவ்வளவு நேரமும் வீட்டுக்குள்ள படுத்திருந்தனான். கடலில ஏதோ சத்தம் கேக்க வெளியால வந்து பாத்தன். கொஞ்சம் தெளிவில்லாமக்கிடக்க கடக்கரைக்கு ஓட்டமும் நடையுமா போனன். அந்த நேரம் என்ர தலைக்கு மேலால ஒரு நெருப்புக்கோளம் பறந்து போச்சு. எனக்குத் தெரியுமே அது எண்ட குலத்தையே நாசமாக்கப் போகுது எண்டு..." "ஓ அந்தக் குடும்பம் உங்கட தானோ... ஐயோ... நாங்கள் கேள்விப்பட்டனாங்கள்.. அது முல்லைத்தீவு முகாமக்காப்பாத்த போய் கப்பலால இறங்கி அடிவாங்கிக்கொண்டு ஓடி வந்த நேரம் நடந்ததென்ன" "ஓமடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசாத்தி...அங்க போய் நாயடி வாங்கிக்கொண்டு வந்திட்டு எங்களிட்ட தானே வீரத்த காட்டிறவே" "ஓமண்ணா... அப்ப உங்களப் பாக்கிறது ஆர்" "அந்த வீரபத்திரன் தான். வேற ஆர்?" "சும்மா பகிடி விடாமச் சொல்லுங்கோ" "சாப்பாடு அயல் வீட்டில இருந்து தருவினம். காசு குடுப்பன். இஞ்ச இருந்து டவுனுக்குள்ள போயிருக்கிற சொந்தங்களுக்கு, பிள்ளைகளுக்கு ஏதும் சாமான் சக்கட்டுக்கள கொண்டு போய் குடுப்பன். அதுக்கு கொஞ்ச காசு அவயிட்ட இருந்து வாங்கிக் கொள்ளுவன். அதுல சீவியம் போகுது. அதாலதான் கிழமைக்கு ரெண்டு தரமாவது டவுனுக்குப் போய்ட்டு வாறன்." "அட அப்பிடியே... அப்ப கரனுக்கும் ஏதும் அனுப்பலாம் என்ன" "ஓமே.. தா நான் கொண்டு போய்க்குடுத்திட்டு வாறன்.. எனக்கு அதுக்காக நீ காசு தர வேண்டாம்.. ரெண்டு நேரம் சாப்பாடு மட்டும் தா உறவெண்டு சொல்லிக்கொள்ள இப்ப நீ மட்டுந்தானே இருக்கிறாய்" அவள் மிக்க ஆதுரத்துடன் அவரைப்பார்த்தாள். எனக்கொரு அண்ணன் இருந்திருந்தால் அவரைப் போலத்தான் இருந்திருப்பார் என்று திண்ணமாக எண்ணினாள். "ராசாத்தி... என்னடி இப்பிடிப் பாக்கிறாய்" "ஒண்டுமில்லையண்ணா ஏதோ யோசிச்சன்.. அது சரி எண்ட பெயர் ராசாத்தியில்ல...புவனம்.." "ஓ புவனம்..நல்ல பெயர்தான் ஆனா எனக்கு நீ ராசாத்திதான்.. நான் அப்பிடித்தான் உன்னக் கூப்பிடுவன்" அவர் சிரித்தார். அவளும் சிரித்தாள். புலிகளின் கட்டபறிச்சான் முன்னரங்கு அவர்களை வரவேற்றது.

பரிசோதனையத்தாண்டி அவள் வெளியே வரும் போது அவர் அவளுக்காக காத்திருந்தார். அதற்கு காரணமிருந்தது. புவனம் அதை அறிய மாட்டாள். அது திட்டமிடப்பட்டிருந்தது.

"சரி...நான் நளைக்கே திரும்பிப் போறன் ஏதும் குடுக்கோணும் எண்டா சொல்லு" இரையை இலாவகமாக அவர் எறிந்தார். மீனுக்குத் தூண்டில் தெரிவதில்லையே. இரை மட்டும் தானே தெரியும். கௌவிக்கொண்டது. "ஓம் அண்ணா நோட்டுக் கொப்பியொண்ட தவறுதலா கொண்டந்திட்டன்..அதக் கொண்டு போய் குடுத்து விடுறியே" "தா குடுக்கிறன்... அப்ப நாளையண்டைக்கு சாப்பாட்டுக்கு வரலாமோ" "நீ எப்பவும் வா அண்ணா.. இதால திரும்பி அதால திரும்பின உடனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார்கோயில் வரும். அதுல புவனத்தின்ர வீடு எது எண்டு கேள். எல்லாருங் காட்டுவாங்கள்" அவர் நோட்டுக்கொப்பியைப் பெற்றுக்கொண்டார். அவருக்காக ஒரு சைக்கிள்காரர் காத்துக்கொண்டிருந்தார். "சரி சந்திப்பமே... வாறன் ராசாத்தி" அவளைப் பார்த்து சிரித்தபடியே அவர் விடைபெற்றார். ஆனால் மாதங்கள் சில கடந்த போதும் அவர் வரவேயில்லை. இடைக்கிடை அவரது ஞாபகங்கள் புவனத்திற்கு வந்து போகும். சிலபேரிடம் அவரது பெயரைச் சொல்லி அவள் விசாரித்தும் பார்த்தாள். பரமசிவம் என்றவரை யாருக்குமே தெரியவில்லை. "எண்பத்தியிரண்டு வயசெண்டதால கிழவனுக்கு மறந்து போயிருக்கும்".. அவளும் அவரை மறந்து போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

மேகா கல்வி நிலையத்தில் வகுப்புக்களை முடித்துக்கொண்டு வெளியே வந்த கரனும் ஜெயந்தனும் பரமசிவம் ஐயாவை அந்த இடத்தில எதிர் பார்க்கவேயில்லை. கரனுக்கு அவரைக் கண்டதும் மகிழ்ச்சி ததும்பத்தொடங்கியது. படகில் அவரைக் கண்டதன் பிறகு இத்தனை மாதங்களில் அவரை அவன் காணவேயில்லை. அவரைக் காணவேண்டும்.. அவரது பெயரைத் தெரிந்துகொண்டு விட்டேன் என்பதை சொல்ல வேண்டும் அவரைப் பெயர்சொல்லி அழைக்க வேண்டும் என்றெல்லாம் ஆவலாயிருந்தான். எனவே அவரைக் கண்டவுடன் “ஐயா” என்று கத்தினான்.

ஆனால் ஜெயந்தன் நிலைமையைப் புரிந்துகொண்டான். நிலைமை படுபயங்கரம் என்பதாலேயே அவர் நேரடியாக தன்னைத்தேடி வந்திருக்கிறார் என்பது ஜெயந்தனை உசார்ப்படுத்தியது. கடந்த சில நாட்களாக தான் அவதானிக்கப்படுவதாக அவன் உணர்ந்தேயிருந்தான். நீண்ட நாட்களாக நகரப்பகுதிக்குள் இருந்து வேலை செய்வது எப்படியும் தன்னை அடையாளப்படுத்திவிடும் என்பது அவனுக்குத் தெரியும். எனினும் தனக்கிடப்பட்ட பணிகளில் ஒன்று மட்டுமே எஞ்சியிருந்தது. வகுப்புக்கள் முடிய இரண்டு வாரங்களே இருந்ததால் வகுப்புக்களையும் முடித்துக்கொண்டு திட்டத்தையும் நிறைவேற்றிவிட்டு அங்கிருந்து புறப்படுவதாகவே அவன் சிந்தித்திருந்தான்.. நேற்றும் அவனொரு நோட்டுக்கொப்பியை அனுப்பியிருந்தான். அது மாட்டியிருந்தாலும் அதிலிருந்து தகவல்களைப் பிரித்தெடுக்க கூடிய வலுக்கொண்டவர்கள் தமது ஆட்களே தவிர வேற யாராலும் அது முடியாது என்பது அவனுக்குத் தெரியும்.

“ஐயா உங்கட பெயர் பரமசிவம் தானே ...எப்பிடி எனக்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியுமே" கரன் கதைத்துக்கொண்டே அவரை நெருங்கினான். அவரும் அவனைப் பார்த்து சிரித்தார். ஜெயந்தன் அருகில் வந்தான். "நீ உடனே வெளிக்கிடோணும். சைக்கிளக் கொண்டுபோய் சந்தைக்குள்ள விடு. விட்டுட்டு முன் பக்கத்தால பஸ் ஸ்டாண்டுக்கு போ. தம்பலகாமம் பஸ்ல ஏறு. விளாங்குளம் சந்தியில இறங்கு. அங்க ஆள் நிக்குது. இந்தா இதில இருநூறு ரூவா இருக்கு. கனக்க காசு இருந்தாலுஞ் சந்தேகந்தானே" காசைக் கொடுத்து விட்டுத் தனது வெற்றிலைப்பையை கையில் எடுத்து அதே லாவகத்துடன் அதனைத் திறந்தார். அதற்குள்ளிருந்து சயனைட் குப்பியொன்றை எடுத்து ஜெயந்தனின் கையில் வைத்தார். தீர்க்கமாக அவனது கண்களைப் பார்த்தார். அவன் அதற்கு மேல் தாமதிக்கவில்லை. சைக்கிளில் தாவி ஏறினான். கரனுக்கு எதுவுமே முழுதாகப் புரியவில்லை. ஆனாலும் சில விடயங்கள் புரிந்துபோனது. பரமசிவமும் ஜெயந்தனும் புலிகள் என்பதும் தனது உயிருக்கும் ஆபத்து என்பதையும் அவன் தெரிந்துகொண்டான். அவனது வலதுகை மணிக்கட்டை பரமசிவம் இறுக்கிப் பிடித்தார். "கரன் இப்ப எனக்கு முன்னுக்கு நடந்து நீ துறைமுக பொலிஸ் வரைக்கும் போ. உண்ட கொப்பிகள் எல்லாத்தயும் இதுக்குள்ள வை. ஜெயந்தன்ட கொப்பிகள எடுக்காத." அவர் நீட்டிய பைக்குள் அவன் வைத்தான். "இந்தா உனக்கும் இருநூறு ரூவா தாறன். ஒண்டயும் யோசிக்காம போ" "அன்பில்லத்தில இருக்கிற எண்ட சாமான்கள் எல்லாம்?...." "அது வந்து சேரும்... நீ நட" அவன் நடக்கத்தொடங்கினான். தபால் நிலையச் சந்தி தாண்டும் போது திரும்பிப்பார்த்தான் அவரைக் காணவில்லை. தான் செய்தவற்றையெல்லாம் அசைபோட்டுக்கொண்டிருந்தான். நிறையவே செய்திருந்தான் கரன். சில வரைபடங்களை ஜெயந்தன் தயரிக்கும் போது எங்கெங்கு முக்கியமான இடங்கள் உள்ளன என்பதையெல்லாம் மிகத் துல்லியமாகச் சொல்லிக்கொடுத்ததும் அப்போது அவனுக்குப் புரிந்தது. "ஜெயந்தன் சொன்னதெல்லாம் பொய்யா? எவ்வளவு சாதாரணமா சயனைட் வில்லைய அவன் வாங்கினான்.. அவன் சாகிறதுக்கு எப்பவும் தயாராத்தான் இருக்கிறான்...அவனுக்கு நானும் உதவி செய்திருக்கிறனா? அது எனக்கு பெருமையா? இல்லையா? ...ஊருக்குப் போறம் எண்டு நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தருக்கும் சொல்லேல்லயே." அன்பில்லம் ஐயாவை நினைக்கும் போது கவலையாக இருந்தது. ஓர் தகப்பனுக்குரிய அன்பும் ஒரு அதிகாரிக்குரிய கண்டிப்பும் ஒரு இராணுவ வீரனுக்குரிய நேரந்தவறாமையும் அவரிடம் ஒரு சேர இருந்தன. முகத்தை வருடத்தொடங்கியிருந்த காற்றில் அவர்கள் அனைவருக்கும் பிரியாவிடையைச் சொன்னான். படகின் மேல்தளத்தில் பரமசிவம் ஐயாவைத் தேடினான். அவர் எங்கும் இருக்கவில்லை. அவன் பாதுகாப்பாக படகில் ஏறும் வரை அவர் அவனைக் கவனித்துக் கொண்டிருந்ததை அவன் காணவில்லை. "அம்மாவுக்கு என்னத்தைச் சொல்வது" அதுதான் யோசனையாக இருந்தது. "உண்மயச் சொன்னால் மனிசி இனி எந்தக் காலத்திலயும் என்னய டவுனுக்கு அனுப்பாது... ஏதாவது சொல்லுவம்...என்ன சொல்லுவம்?" அவன் மீண்டும் முகத்தில் அறைந்த காற்றில் கேட்டான். என்ன சொல்லுவம்?"

ஊருக்குத் திரும்பிய பின் கரனால் வீட்டில் 'சும்மா குந்திக்கொண்டிருப்பதற்கு' மனம் ஒப்பவில்லை. அவன் ஊருக்கு திரும்பிய அடுத்த நாள் மாலை பரமசிவம் அவனது வீட்டுக்கு வந்தார்.

"ராசாத்தி...ராசாத்தி..." "இண்டைக்கு வருவீங்கள் எண்டு தெரியும்... இண்டக்குதானோ உங்களுக்கு எண்ட வீடு தெரிஞ்சிருக்கு அண்ணா" என்றவாறு புவனம் முன்னே வந்தாள். அவனது எஞ்சிய பொருட்கள் அனைத்தும் இருந்த பையை அவரது கையில் இருந்து வாங்கிக்கொண்டாள். "என்னடியாத்த கிழவனுக்கு கொஞ்சம் மறதியும் தானே. அதான்... நேற்று கரனக் கப்பலில கண்ட உடனே வீடிருக்கிற இடத்தக் கேட்டுத் தெரிஞ்சு கொண்டன். அதோட இவர் பையை கப்பலில விட்டுட்டு இறங்கிப் போவார்எண்டு ஆர்கண்டது. நல்ல காலம் எண்ட கையில கிடைச்சது... சரி சரி எனக்கொரு வெறுந்தேத்தண்ணி தா..சரியான அலுப்பாக்கிடக்கு" அவள் மறுபேச்சுப் பேசாமல் குசினியை நோக்கி நடந்தாள்.

"ஜெயந்தன்" என்று கரன் நிறுத்தினான். "பாதுகாப்பா இருக்கிறான் நீ என்ன சொன்னணி வீட்ட" "வகுப்பு முடிஞ்சுது அதான் வெளிக்கிட்டன் பைய பரமசிவம் ஐயா கொண்டருவார் எண்டன்" "ஓ பொருத்தமாத்தான் கிடக்கு" "நீங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பில்லத்துக்கு என்ன சொன்னீங்கள்.'' ''உன்னயும் ஜெயந்தனயும் டியூசன்ல வந்து தேடினவங்கள். அதால அவங்கள் ரெண்டு பேரும் ஊருக்குப் போய்ட்டாங்கள். இந்த விசயத்த உங்களிட்ட சொல்லி தண்ட சாமான்கள எடுத்துக்கொண்டு வாங்கோ எண்டு என்னயக்கண்டு சொல்லி விட்டவன் கரன். அதான் வந்தனான் எண்டு சொன்னன்'' ''ஐயா ஏதும் கேட்டவரே?'' ''ம்... நல்ல பெடியன்.. நல்லா இருக்கோணும் எண்டவர்'' ''அன்பில்லத்துக்கும் தேடிப்போவாங்களோ?'' ''சொல்லேலாது..'' சற்று நேரங்கழிந்தது. ''நீ புவனத்திட்ட எதுவும் சொன்னனியோ?'' ''இல்ல நீங்களும் சொல்ல வேணாம் அம்மா பயந்திரும்'' புவனம் வருவதை இருவரும் பார்த்தார்கள். ''இந்தாண்ண தேத்தண்ணி'' அவர் அந்தக் கோப்பையை தன்னிரு கைகளினாலும் இறுக்கிப் பிடித்துக்கொண்டார். ஒவ்வொரு மிடறையும் உருசித்துக் குடிக்கத் தொடங்கினார். புவனம் அவர் பருகுவதை ஒரு வாஞ்சையுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். ''வீட்டில இருந்து இனிப்படிக்க வேண்டியது தான்'' பரமசிவம் ஐயா அவனைத் தூண்டினார். ''ஓம் ஐயா.. ஆனா ஒரே படிச்சுக்கொண்டு இருக்கேலாது. அருவி வெட்டத் தொடங்கீட்டாங்கள் தானே.. கொஞ்ச நாளைக்கு வேலையும் செய்வம் எண்டு பாக்கிறன்'' ''ஓம் அதுவும் நல்லம் தான்.. சோம்பேறித்தனம் இருந்தா மூளை நல்லா வேலை செய்யாது.. அதால உடம்புக்கும் கொஞ்சம் வேலயக் குடுக்கலாம்'' புவனம் அந்த உரையாடலுக்குள் புக விருப்பமின்றி இருந்தாள். கரன் வேலைக்குச் செல்ல விரும்புவதை அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. என்றாலும் தோளை விட வளர்ந்த மகன் தான் அண்ணா என்று வரித்துக்கொண்ட பெரியவருடன் பேசுவதில் அவர்களே முடிவெடுக்கட்டும் என்று வாளாவிருந்தாள். ''சரி நான் வெளிக்கிடப் போறன்...வேலை செய்றது நல்லம். ஆனா புவனம் விரும்பின மாதிரி படிக்கவும் வேணும்... எதுக்கும் புவனத்தோட கதைச்சு முடிவெடு'' அவர் கதிரையிலிருந்து எழும்பி தனது வேட்டியைச் சரிப்படுத்திக்கொண்டார். ''அண்ணா இனியாவது இஞ்சாலப் பக்கம் வருவியலோ'' ''நிச்சயமா வருவன்.. எல்லாம் வீரபத்திரன்ட அருள்தான்... வாறன் ராசாத்தி... வாறன்டா மருமோனே'' என்றவாறு அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறினார். வானம் மெல்லத் தன்னை இருளுக்குள் மூழ்கடிக்கத் தொடங்கியது.

அடுத்த நாள் காலையில் களத்து மேட்டுக்குச் செல்வதற்கு புவனம் தயாரானாள். கரன் எதையோ தேடிக்கொண்டிருந்தான். "என்னத்த ராசா தேடுறாய்" "ஒரு பழுப்பு நீல நிற முழுக்கை சேட் வச்சிருந்தனான்.. அத தான் தேடுறன்..." "அத நான் குடுத்துட்டன்" "குடுத்துட்டியோ.. ஆருக்கு ?" "இஞ்ச களத்து மேட்டில வேலை செய்ற எங்கட பெரியண்ணாக்கு" "ஓ... பரோபகாரி" சிரித்தபடியே வெளியே வந்தான். அவன் கைகளில் மற்றொரு மண்நிற சட்டை இருந்தது. "வேலைக்கு நீயும் வரப்போறியே?" அவளுக்கு அதில் விருப்பமில்லை என்பதை தனது கேள்வியில் இழைந்த குரலில் புவனம் கரனுக்கு உணர்த்தினாள். அவன் உடனடியாக பதில் சொல்லவில்லை. "தொடர்ந்து படிச்சிக்கொண்டிருக்க ஏலாம இருக்கு.. அதோட இந்த சீசன்ல அருவி வெட்டும் நடந்துகொண்டிருக்கு.. கொஞ்சம் உழைப்பம் எண்டு பாக்கிறன்" அவள் பதிலெதுவும் சொல்லவில்லை. "என்ன அமைதியா இருந்தா அனுமதி கிடைச்சிட்டு எண்டு அர்த்தமோ" அவன் புவனத்தை சந்தோசப்படுத்த விரும்பினான். தான் முடிவெடுத்துவிட்டாலும் அவள் அனுமதித்தால் தான் வேலைக்கு போவான் என்பது போல ஒரு போக்கை அவளுக்கு காட்டினான். "சரி வா" அவள் சொல்லிவிட்டு நடக்கத் தொடங்கினாள். அவன் வீட்டைப் பூட்டி திறப்புக்களை பொக்கற்றில் போட்டான். அயல் வீட்டிலிருந்து சிவலையும் புவனத்துடன் சேந்துகொண்டாள். நாட்கள் மெல்ல நகர்ந்துகொண்டிருந்தன..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

சிறப்புக்கட்டளைத் தளபதி 'பைவ்பவ்' பதுங்கித் தாக்கும் அணியை தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அவரது ரூ-வன் முகாமில் அமைந்திருந்த பதுங்கித்தாக்கும் அணிக்குரிய குடிலில் கோகுலன் தனக்குக் கிடைத்த அறிக்கைகளைப் படித்துக்கொண்டிருந்தான்.

அவர்கள் அடையாளம் கண்டிருந்த இராணுவ உருமறைப்புக் கண்காணிப்பிடத்தினை அவதானிப்பதற்காக புலிகள் அமைத்திருந்த சென்றியில் இருந்து அந்த அறிக்கைகள் வந்திருந்தன. கடந்த ஒரு மாதத்திற்கான அந்த அறிக்கைளின் சாராம்சமாக இராணுவக் கண்காணிப்பாளர்கள் இரவிலேயே அங்கு வந்துசெல்வது தெளிவாகியிருந்தது. அத்துடன் எழுந்தமானமான நாட்களில் அவர்கள் அங்கு வருவதும் அந்த அறிக்கைகள் வெளிப்படுத்தியிருந்தன. ஆக புலிகளைப் பதுங்கித்தாக்கவென அந்த கண்காணிப்பிடத்தை இராணுவம் உருவாக்கவில்லை என்பதை கோகுலன் கண்டுகொண்டான். வேறு திட்டங்கள் அவன் மனதில் விரிந்தது. அடுத்த மேசையில் வேறு வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த கிட்டு அண்ணயைக் குழப்ப விரும்பினான். "கிட்டண்ண.. வரவா அங்க" "பொறடா..கூப்பிடுறன்.. சுதாசினி குடுத்த அறிக்கைய வாசிச்சுக்கொண்டு இருக்கிறன்.. அனியாயமாக்கிப் போட்டாள்" கிட்டு மீண்டும் சுதாசினியின் அறிக்கைக்குள் தன் தலையைப் புகுத்திக்கொண்டார். கோகுலனுக்கு அன்றே அவருடன் கதைத்து திட்டத்தைப் பூரணப்படுத்த வேண்டும் போல இருந்தது. எனவே அவர் கூப்பிடும் வரை குடிலைவிட்டு வெளியேறி வேப்பமரத்தின் கீழ் போடப்பட்டிருந்த பலகைத் தட்டில் அமர்ந்தான். சுதாசினியின் ஞாபகம் அவனுக்கும் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதாசினி ஒரு குறிசூட்டுப் போராளி.

பதுங்கித்தாக்கும் அணியின் பொறுப்பாளர் கிட்டுவை பைவ்பைவ் அழைத்திருந்தார் "கிட்டு பெண் போராளிகள் சிலர பதுங்கித் தாக்குதல் அணியில் இணைப்பம் எண்டு யோசிக்கிறன்.. நீ என்ன சொல்றாய்?". திருகோணமலை மாவட்டத்தில் பதுங்கித் தாக்கும் அணியில் அதுவரை பெண் போராளிகள் இணைக்கப்பட்டிருக்கவில்லை. "இதில சொல்ல என்ன இருக்கு.. இணைப்பம்" "அப்ப என்ன மாதிரி டீம் போர்மேசன் செய்யப் போறாய்" "பெடியளுக்கு ஒண்டுக்கு ரெண்டு எண்டு சாதாரணமா இருக்கு.. இவயளுக்கு இது ஆரம்பம் தானே அதால ஒண்டுக்கு நாலு அல்லது மூண்டு எண்டு போடலாம்.." "ஒண்டுக்கு மூண்டு எண்டு போடு" ஒன்றுக்கு மூன்று என்பது ஒரு குறிசூட்டுப்போராளியும் ஒரு தொலைநோக்காளனையும் இரு உதவியாளர்களையும் கொண்ட அணியாகும். "ஓம் போடுவம்" "அப்ப சரி...பன்னெண்டு திறமான பெட்டைகள தரச் சொல்லி குமரனுக்கு சொல்றன்... நாளைக்கே வேலையத் தொடங்கு" "திறம் பெட்டைகள்" என்று பைவ்பைவ் சொன்னது சாதாரண பயிற்சியின் போது குறிபார்த்துச் சுடுதலில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டவர்களைத்தான்.

குமரனுக்கு உடனடியாகவே கட்டளை மையத்திலிருந்து தகவல் பறந்தது. "பன்னெண்டு வெள்ளக்கொக்குகள் தேவ.. மீன சரியாக்கொத்தோனும்". அடுத்தநாட்காலையில் பன்னிரெண்டு பெண் போராளிகள் பதுங்கித்தாக்குதல் குடிலில் இருந்தனர். அவர்களுடைய சூட்டுப்பெறுபேறுகளை ஆராய்ந்து கொண்டிருந்தார் கிட்டு. திருப்தியடைந்தவராக தலையை உயர்த்தியவர் "நீங்கள் ஏன் இஞ்ச வந்திருக்கிறியள் எண்டு தெரியுமோ?" அவர்கள் ஒருவரை ஒருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டனர். "இல்லையண்ண.. குமரன் மாஸ்டர் ரேவதி அக்காவோட வந்து எங்களத் தெரிவு செய்தவர். நாளைக்கு நீங்கள் மெயினுக்கு போகோணும் எண்டு மட்டும் தான் சொன்னவர்" "நல்லது.. எண்ட பெயர்கிட்டு. மாவட்டப் பதுங்கித் தாக்குதல் அணிப் பொறுப்பாளர். இவற்ற பெயர் கோகுலன். இவர் பாபு. நீங்கள் பன்னெண்டு பேரும்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்டத்தின்ற முதலாவது மகளிர்பதுங்கித் தாக்குதல் அணி" அவர்களின் முகத்தில் பூரிப்புத் தெரிந்தது. கிட்டு தொடர்ந்தார். "இண்டையில இருந்து விசேட பயிற்சிகள் தொடங்குது. உங்களுக்கெண்டு தனிமுகாம் இருக்கு. அங்கதான் நீங்கள் இருப்பியள். கோகுலனும் பாபுவும் தான் உங்கட ட்ரெயினிங் மாஸ்டர்கள். இண்டைக்குப் பத்து மணிக்கு பயிற்சி தொடங்கும். தோணிக்கல் ட்ரெயினிங் பேசுக்கு போக தயாரா இருங்கோ. வண்டி வரும். பாபு இவயக் கொண்டுபோய் இவேட காம்ப்ல விடுங்கோ."

பெண் போராளிகளுக்கான பதுங்கித் தாக்குதல் பயிற்சிகள் கடுமையாக நடந்து கொண்டிருந்தன. நான்கு பேர்கொண்ட மூன்று அணிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவர்குறிசூட்டாளியாகவும் மற்றொருவர் துணை குறி சூட்டாளியாகவும் தொலைநோக்கராகவும் செயற்படுபவராகவும் ஏனைய இருவரும் குறிசூட்டுத் துப்பாக்கியின் பாதுகாவலர்களாகவும் அதேவேளை தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் குறிசூட்டை நிகழ்த்தக் கூடியவர்களாகவும் பொறுப்பெடுக்க வேண்டும். அனைத்துப் பயிற்சிகளையும் அனைவரும் பெற்றுக்கொண்டிருந்தனர்.

அவ்வாறான ஒரு நாளில்தான் நினைத்துப்பார்க்க முடியாத அந்த விடயம் நடந்தேறியது. அணியின் குறிசூட்டாளி யார் என்பதை தீர்மானிக்கும் சூட்டுப்போட்டி நடந்து கொண்டிருந்தது. ஒரு பெண் போராளியும் சளைப்பதாக இல்லை. முன்னூறு மீற்றரில் முதலாவது சூட்டு இலக்கு வைக்கப்பட்டு தொடங்கிய போட்டி இப்போது அறுநூறு மீற்றரில் நான்கு போட்டியாளர்களுடன் நடந்துகொண்டிருந்தது. சுதாசினி அனைவரிலும் முதலாவதாக தேறிவந்தாள். அறுநூறு மீற்றரில் இலக்கை வைத்து விட்டு பத்தடிகள் தள்ளி நின்றான் பாபு. தனது கையிலிருந்த பச்சை நிறக்கொடியை அசைத்தான். தொலைநோக்கிகளை கிட்டுவும் கோகுலனும் தம் கண்களில் பொருத்திக்கொண்டு இலக்கை தம்பார்வைக்குள் கொண்டு வந்தனர். அப்பச்சை நிறக்கொடியின் அசைவைக் கண்டவுடன் சுதாசினி குறிசூட்டுத்துப்பாக்கியின் தொலைநோக்கியூடாக இலக்கைச் சரியாக அவதானித்தாள். காற்று குறுக்கறுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசுவதைக் கணித்தாள். "காற்று குறுக்கறுத்து வீசினால் தோட்டா மீற்றருக்கு ஒரு இஞ்சு விலத்தும்" மனக் கணிதத்தில் ஆறு அங்குலம் விலத்திச்சுட வேண்டும் என்று கணிப்பிட்டாள். ஆறு அங்குலங்கள் வித்தியாசத்தில் அவள் சூட்டை நிகழ்த்தினாள். பாபுவின் நெஞ்சுக் கூட்டைப் பிளந்தது அந்தத்தோட்டா. பாபு மாவீரனானான்.

என்ன நடந்தது என்று இன்றுவரை விடை பெற முடியாத அந்தக் கேள்விக்கு அன்று நடந்தவற்றை அறிக்கையாக எழுதிக் கொடுத்திருந்தாள் சுதாசினி. அந்த அறிக்கையில்தான் மூழ்கிக்கிடந்தார் கிட்டு. அவரது அனுபவத்தின் படி சுதாசினி சூட்டை நிகழ்த்திய அதே நேரம் காற்றின் வேகம் சடுதியாக அதிகரித்திருக்க வேண்டும் என்பதே கணிப்பாக இருந்தது. என்றாலும் தனது கணிப்பை மட்டும் அவர் முடிவாக ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. எனவே அனைவரிடமிருந்தும் அறிக்கைகளைப் பெற்று ஆய்வு செய்துகொண்டிருந்தார்.

"கோகுலன்..."

குடிலின் வாசலில் நின்று கிட்டு கூப்பிடுவது அவனுக்குக் கேட்டது. "நீ அங்கயே இரு வாறன்" குடிலுக்கு வந்திருந்த தேநீர்க் கோப்பைகளை எடுத்துக்கொண்டு அவர் வருவதை கோகுலன் பார்த்துக்கொண்டிருந்தான். "இந்தா.." கோகிலனிடம் கொடுத்துவிட்டு இடுப்பில் கொழுவியிருந்த வோக்கிடோக்கியை சற்று தள்ளி வைத்துவிட்டு அவரும் அந்த மரப்பலகையில் அமர்ந்தார். இரண்டு மிடறுகளை உறிஞ்சும் வரை அவர்கள் பேசிக் கொள்ளவில்லை. வெறுந்தேத்தண்ணியின் முதல் மிடறுகளை இரசித்துக் குடிப்பதில் கிட்டுவிற்கு அலாதிப் பிரியம். அதனால் அந்த நேரங்களில் கதைப்பதை அவர் விரும்புவதில்லை.

"என்னடா.. சொல்லு" "அண்ண நீங்கள் சொன்னது சரி. அந்த அம்மன்நகர்பொயின்ட்ல ஆமி இரவில தான் வாறாங்கள். கண்காணிப்பச் செய்திட்டு போயிர்ராங்கள். எதோ பெரிசா பிளான் பண்ணுகினம் போல கிடக்கு. கெதியா முடிக்கிறது நல்லம்.. ஆனா இரவில அடிக்கிறதுக்கு எங்களிட்ட சாமான் இல்லயே" "ம்.. அப்ப என்ன செய்யலாம் எண்டு சொல்லு....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அண்ண அவதானிப்புக்கு வாறவன் சும்மா சக்கட்ட சிப்பாய் இல்ல.. நல்ல ராங் ஒபீசராத்தான் இருப்பான்.. அந்த ஒபீசர்ஆர் எண்டு கண்டு பிடிச்சா அவன வேற இடத்தில வச்சுப்போட்டமெண்டா சரி..” “திட்டத்த இன்னும் விளங்கப்படுத்து” “வான்மீட்ட தகவலக் குடுப்பம்.. அவசரமெண்டும் சொல்லுவம். அவன் ஒபீசர் ஆளெண்டு கண்டு பிடிச்சுத் தருவான். அதோட அவற்ற நடமாட்டத்தயும் தருவான். பிறகு மிச்சத்தப் பாப்பம்” “சரி வான்மீக்கு இண்டைக்கே தகவலை அனுப்பிறன்... இப்பயே ஒரு மாசம் போய்ட்டு.. கெதியா அலுவல முடிக்கோணும். இன்னுமொரு விசயம் வந்திருக்கு... மேசைக்கு வா”.

அவர் வோக்கியை இடுப்பில் செருகினார். காலியான கோப்பையின் பிடியை ஒரு கையில் சுற்றிக் கொண்டு நடக்கத் தொடங்கினார். அது அவரின் ஸ்டைல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

ஜீவனுக்கும் சித்திராவுக்குமான காதல் மெல்ல மெல்ல அதன் போக்கில் வளரத் தொடங்கியிருந்தது. காதலைச் சொல்லாமலே ரவிக்குமாரும் வாசுகியும் புரிந்துகொள்ளும் அளவுக்கு அவர்கள் இருவரின் செய்கைகளும் இருந்தன.

எப்போதும் ரவிக்குமாரை சைக்கிள் ஓட்டச்சொல்லி அடம்பிடிப்பான் ஜீவன். சைக்கிளின் பார்க் கம்பில் அமர்ந்திருப்பதே அவனுக்கு விருப்பம். ஆனால் என்று காதலில் வீழ்ந்தானோ அன்றில் இருந்து ஜீவனே சைக்கிளை ஓட்டத் தொடங்கினான். அதேபோல அன்று வரை வாசுகியைப் பின் கெரியலில் இருத்தி தனது சைக்கிளை ஓட்டிப்போகும் சித்திரா அதன் பின் தானே பின் கெரியலில் இருக்க அடம் பிடித்தாள். சித்திரா பின் கெரியலில் இருந்தபடி தமக்குப் பின்னேவரும் ஜீவனை அடிக்கடி திரும்பிப் பார்க்க அவனோ அவர்களைத் தாண்டிச் செல்வதும் பின் தாமதித்து அவர்களுக்கு பின்னே செல்வதும் மீண்டும் தாண்டிச் செல்வதும் அசாத்திய வட்டங்களை அடிப்பதும் என தான் விரும்பியது போல தனது சைக்கிளைச் செலுத்துவான். அன்றும் மாலை நேர வகுப்புக்கள் ஐந்து முப்பதுக்கு நிறைவு பெற அவர்களின் பவனி தொடங்கியது.

"ஐயோ... மர நிழல் வருது.. நிப்பாட்டப் போறான்" ரவிக்குமார் புறுபுறுத்தான். "என்னடா புறுபுறுக்கிறாய்" "சைக்கிள நிப்பாட்டப் போறாய் அதான் புறுபுறுத்தன்" "ஓம் நிப்பாட்டத்தான் போறன்... நீயும் நிக்கத்தான் போறாய்.. அவளும் நிக்கத்தான் போறாள்" சொல்லிக்கொண்டே ஜீவன் சைக்கிளை அந்த மரநிழலில் நிறுத்தினான். சைக்கிளை இவனிடம் சரித்துவிட்டு நிழல் பரவியிருந்த தெருவின் மறுபக்கம் போய் நின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அந்தா இறங்கீட்டான்” வாசுகி இரைந்தாள். சற்று முன்னர் இருமுறை தாண்டிச்சென்ற ஜீவன் சைக்கிளைச் செலுத்தும் இலாவகத்தை இரசித்தபோது முட்டியெழும்பிய காதலை அனுபவித்தபடி தன்னுடைய இரட்டைப்பின்னலில் ஒன்றை முன்பக்கமாக எடுத்து ஏதோ செய்துகொண்டிருந்த சித்திராவுக்கு வாசுகி எழுப்பிய ஓசையில் இருந்த அந்தரம் மெல்லிய புன்னகையை வரச் செய்தது. “இறங்கீட்டானாடி?” எட்டிப்பார்க்க மனசின்றி அவளிடமே கேட்டாள். “ஓம் அவர் இறங்கி நிக்கிறார்.. இப்ப இவா குதிச்சிறங்குவா... நான் அந்தக் குரங்கு ரவியப் பாத்துக்கொண்டு நிக்கோணும்.. கடவுளே என்னக் காப்பாத்து” அவளது புறுபுறுப்பு முடியும்முன்னே சித்திரா சைக்கிளில் இருந்து குதித்து தெருவின் அடுத்த அந்தத்திற்குப் போய் விட்டாள்.

“என்னது இது” “விரிச்சுத்தான் பாருமன்” அழகான பொதியிடும் தாளில் நீட்டுவாக்காக சுற்றப்பட்டிருந்தது அந்தப்பரிசு. அவள் மிக ஆறுதலாக அவதானமாகப் பிரித்தாள். அவள் ஒவ்வொரு இதழ்களாகப் பிரிக்கும் போது அவனது முகம் பூப்போல விரிவதை அவள் அனுபவித்துக்கொண்டே பிரித்தாள். நீல மற்றும் சிவப்புநிற அழகிய பேனைகள் அவை. சாதாரண பேனைகளை விட சற்று வித்தியாசமான பேனைகள். “ஆ... என்ன வடிவான பேனைகள்... உமக்கென்னண்டு தெரியும் எனக்கு பேனைகள் எண்டா கொள்ளை ஆசை எண்டு?” “ம் எனக்கு பிடிக்கும் அதால உமக்கும் பிடிக்கும் எண்டு யோசிச்சன்.” “ஓ ..அப்பிடியோ.. அப்ப உமக்குப் பிடிச்ச எல்லாம் எனக்கும் பிடிக்குமோ... சரி பாப்பம்... உமக்கு இனி இல்லயெண்டு பிடிச்ச ஒரு ஆளச் சொல்லும்” அவள் தூண்டில் எறிந்தாள். அவன் சொல்லப் போகும் பதிலில் அவள் துவண்டு விழுவது நிச்சயம் என்பதும் அவளுக்குத் தெரியும். “எனக்கா... எனக்கு எண்ட அம்மாவத்தான் எல்லாரையும் விட கூட பிடிக்கும் ...அடுத்தது உம்மத்தான்” அவள் அதிர்ந்தாள். தனது பெயரை அவன் உச்சரிக்கும் அந்தக் கணத்துக்காக காத்திருந்தவளுக்கு அவன் சொன்ன உண்மை சுட்டெரித்தது. “இவன் தான் நான் தேடுற ஆண்... அவனுக்கு நான் பொருத்தமா எண்டு எனக்குத் தெரியேல்ல ஆனா எனக்கு இவன் தான் பொருத்தம்..” அவள் மனசினுள் சபதம் செய்தாள். எவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்தது என்றே தெரியவில்லை எட்டி அவனது இடது கையைப் பிடித்தாள். "எனக்கு உங்கள நிறையப் பிடிக்கும் இது சத்தியம்" கையை விடுவித்துவிட்டு எதுவும் பேசாமல் தலை கவிழ்ந்தபடி வாசுகியை நோக்கி நடந்தாள்.

"என்ன அம்மணி ஒண்டும் சொல்லாம வாறியள்.. இல்லாட்டி வளவளத்துக் கொட்டியிருப்பாய்" மேலும் சற்று நேரம் மௌனமாகக் கடந்தது.

"சொல்லால சொல்லேலாம இருக்கடி"

மண் நிரம்பிய சந்தோசபுரத்தின் வீதியில் அந்த சிவப்பு நிற எம்டி-90 ரக மோட்டார்சைக்கிள் புழுதியை விதைத்தபடி வந்துகொண்டிருந்தது.

அருவி வெட்டி கட்டுக்களாக்கப்பட்ட கதிர்களைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு அந்த வீதியைக் கடக்க வந்த கரனுக்கு மோட்டார்சைக்கிள் வருவது தெளிவாகத் தெரிந்தது. 'அது போனாப் பிறகு நான் போறதா? அல்லது நான் அதுக்கு முதலே போறதா' தன்னைத் தானே கேள்வி கேட்டவனுக்கு மோட்டார்சைக்கிளின் பின் சில்லுக்குள்ளால் எழும்பி வரும் புழுதி அருவருப்பைத் தந்தது. 'நிண்டமெண்டால் புழுதில தான் குளிக்கோணும்...முந்தடா கரன்..' தனக்குத்தானே கட்டளையிட்டான். வீதியை வேகமாகக் கடந்தான். அவன் கடப்பது மோட்டார்சைக்கிளை ஓட்டி வந்தவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. "அது கரன் மாதிரிக் கிடக்கு.. யூஜின் வடிவா ஒருக்கா பாரடா" மோட்டார்சைக்கிளில் தனக்குப் பின்னால் இருந்தவனுக்கு கட்டளையிட்டான் சைக்கிளோட்டி. "ஓம் காந்தி அண்ண.. அவன் கரன் தான்.." "இவன் நல்லாப் படிச்ச பெடியனெல்லோ.." "ஓம்...வேலை கிடைக்கேல்ல போலக் கிடக்கு அதான் கூலி வேல செய்றான்" "ஆள ஐங்கரன் கேட்ட வேலைக்குப் போட்டு விடுவமே" "ஓமண்ண நல்ல விசயம்.. நம்பிக்கையான பெடியனும்". கரனைக் கடந்து கனதூரம் போய்விட்ட அந்த மோட்டார்சைக்கிள் ஒரு வட்டமடித்தது. "என்ன புழுதியடா.. முன்னுக்கு ஓடிக்கொண்டிருக்கேக்க தெரியேல்ல.. திரும்பி நாங்களே வரேக்க தானே தெரியுது" அலுத்துக் கொண்டான் காந்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூஜின் கரனைத் தேடுவதில் கண்ணைச் செலுத்திக் கொண்டிருந்தான். "நிப்பாட்டுங்கோ அந்தா நிக்கிறான்" போன மோட்டார்சைக்கிள் ஏன்? திரும்பி வருகின்றது என பார்த்துக்கொண்டிருந்த கரனுக்கு யூஜினைத் மட்டும் தெளிவாகத் தெரிந்தது. "கரன்.. இஞ்ச வா" யூஜின் அழைத்தான். "ஓமண்ணை" மோட்டார்சைக்கிளில் இருந்து அவர்கள் இறங்கவில்லை. "வணக்கம் அண்ணை" என்றபடி அருகில் வந்த கரன் ஓட்டுனர் இருக்கையில் காந்தி இருப்பதைக் கண்டுவிட்டான். "வணக்கம் காந்தி அண்ணை.. எப்பிடி இருக்கிறியள்" "பாக்கிறாய் தானே என்ன நடக்குது எண்டு... நீ என்னடா செய்றாய்..?" "கூலி வேலை தான்" "பேசாம இயக்கத்துக்கு வந்திறன்" கரன் அவரை நிமிர்ந்து பார்த்தான் "மனிசி பெறுமாசமா இருக்கிறாள்.. அம்மாக்கும் ஏலாமப் போய்ட்டு. வீட்டோடதான் இருக்கிறா... எல்லாரையும் விட்டுட்டு வந்தா நல்லாத்தான் இருக்கும்" அந்த இரண்டு வருடங்களுக்குள் அவனுடைய வாழ்வின் மாற்றங்களை மிகச் சாதாரணமாகப் பதிவு செய்தான் கரன். "துணைப்படையில இருக்கிறாய் தானே?" "ஓமண்ணை" "அதானே... துணைப்படையில இல்லாம ஒருத்தரும் இருக்கேலாதுதானே" காந்தி தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டார். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பொதுமக்களின் துணைப்படைப்பணி கட்டாயமாக்கப்பட்டிருந்தது. "இஞ்சே.. ஒரு வேலையொண்டு இருக்கு.. நீ அதுக்குப் போ... படிச்ச பெடியன் உனக்கு அதுதான் பொருத்தமா இருக்கும். இந்தா இந்த நோட்டுக்கொப்பியையும் கொண்டு ஐங்கரனப் போய் சந்தி. சரியா" அவனது பதிலுக்குக் காத்திராமல் யூஜின் கொப்பியை அவன் கையில் திணித்தார். "நாங்கள் வாறம்" மோட்டார்சைக்கிள் திரும்பிய வேகத்தில் அடித்த புழுதி அவனது மன உணர்வுகளை அவர்களுக்கு மறைத்தது. அந்தக் கொப்பியை ஒரு கரையில் வைத்துவிட்டு கரன் களத்து மேட்டில் இருந்து சூடடிக்கும் களத்திற்கு நெற்கட்டுக்களை இடமாற்றும் பணியைத் தொடர்ந்தான். மனம் வேலையில் லயிக்க மறுத்தது. "என்ன வேலையெண்டு முதல்ல பாக்கோணும். எனக்கு பிடிச்சிருந்தா அமுதாவ எப்பிடியாவது சமாளிச்சுப் போடலாம்.... எனக்கு பிடிச்ச வேலையாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கோணும் அதோட சம்பளமும் கட்டுப்படியா இருக்கோணும் பாப்பம்.. ஐங்கரன் அண்ணய அவர்ர அரசில்துறை அலுவலகத்திலதான் சந்திக்கலாம். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்திக்க சொல்லுகினம் எண்டா கொஞ்சம் நல்ல வேலையாத் தான் இருக்கும்" அன்று மாலை ஐங்கரனைச் சந்திக்க கூனித்தீவில் அமைந்திருந்த அரசியல்துறை அலுவலகத்திற்கு கரன் வந்திருந்தான்.

"ஐங்கரன் அண்ணயச் சந்திக்கோணும்" வாசலில் இருந்த போராளியிடம் சொன்னான். உள்ளுக்கத்தான் இருக்கிறார். பொறுங்கோ கேட்டுட்டு சொல்றன் "உள்ளே அவர் பேசுவது கேட்டது.. "ஆர் கரனே வந்திருக்கிறது.. வரச்சொல்லு" "வணக்கம் அண்ண" உள்ளே வந்த கரன் அங்கு மேலும் சிலர் இருப்பதைக் கண்டான். அந்தக் நோட்டுக் கொப்பியை அவரது கைகளில் தந்தான் "வாடா.. ஓ காந்தியே தந்தவன். நேற்றுத்தான் சொன்னனான். இண்டைக்கே ஆள அனுப்பீட்டான்" அந்தக் கொப்பியின் உள்ளடக்கம் எதுவென்பது ஐங்கரனுக்குத் தெரியும். "சரி இஞ்ச சேனையூர் மத்திய கல்லூரியில ஒரு மாணவர் தங்குமிட விடுதி இருக்கு தெரியுந்தானே" "ஹொஸ்டல் தெரியும் அண்ண" "அங்க ஒரு பொறுப்பாளர் தேவை... இப்ப அங்க எட்டுப் பிள்ளைகள் தான் இருக்கு நாங்கள் இன்னும் கொஞ்சம் பிள்ளகள கூட்டப் போறம். மாவீரர், போராளிக் குடும்பங்களிண்ட பிள்ளைகள் ஒரு நூறு பேரக் கொண்டுவந்து வச்சுப் படிப்பிக்கப் போறம். அதால இப்பதான் அங்க ஒரு மனேஜர் தேவையாக் கிடக்கு" கரனுக்கு அந்தப் பணி பிடித்திருந்தது. ஏற்கனவே அன்பில்லம் என்ற விடுதியில் தங்கியிருந்து படித்த அனுபவமும் அந்த விடுதியை அன்பில்லம் ஐயா நிர்வகித்த விதமும் கரனுக்கு இந்த வேலையின் மீது ஒரு பிடிப்பைத் தந்தது. அதேவேளை அந்த வேலை நேரடியாகப் போராட்டக் களத்துடன் தொடர்புடையது அல்ல என்பதால் அமுதாவையும் இலகுவாகச் சம்மதிக்க வைக்க முடியும். "அண்ண மனேஜர் என்றால் எனக்கு கொஞ்சம் விளக்கமா சொல்லுங்கோ" பொறுப்பாளர்என்ற பதத்தை கரன் வேண்டுமென்றே தவிர்த்தான். "நான் அமுதாட்ட போய் பொறுப்பாளர் எண்டு சொன்னா... கிழிஞ்சுபோயிரும் அதால மனேஜர் எண்டே சொல்லிப் பழகவேணும்". "டேய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதான் அங்க எல்லாத்துக்கும் பொறுப்பு. அந்தப் பதவியப் பொறுப்பாளர் எண்டு சொல்ல நீ பயந்திருவாய் எண்டு தான் நான் மனேஜர் எண்டு சொன்னன்.. நீ கெட்டிக்காறன். அதப் பொறுப்பெடு போ" "சரி அண்ண" கரன் தாமதித்தான் "கனியன் இவனுக்கு சம்பளம் எவ்வளவு குடுக்கலாம்?" அருகிலிருந்த அரசியல்துறை நிதிப் பொறுப்பாளரிடம் ஐங்கரனின் கேள்வி பறந்தது. "மாசம் ஐயாயிரம் குடுப்பமே" அவனது பதிலில் கரன் திருப்தியடையவில்லை "எனக்கு சம்பளம் காணாது அண்ண" கரன் மறுத்தான். கடந்தவாரம் அமலன் சிறைச்சாலைக்கு பொறுப்பாக சேர்ந்ததை ரஞ்சி கரனுக்கு சொல்லியிருந்தாள். ரஞ்சி சொன்னவுடன் கரன் அதிர்ந்தான். "திருப்பி போய்ட்டாரே?" அவள் சிரித்தாள் "இல்லையடா... அங்க வேலைக்குதான் இவர் போனவர்.. வீட்டுக்கும் பக்கத்தில.. தேவையெண்டாப் போய் பாத்திட்டு வரலாம்.. மாசம் ஏழாயிரத்து ஐநூறு ரூவா கிடைக்கும்.. அந்தக் காசில இஞ்ச வாழலாம் தானே" ரஞ்சி சொன்ன விடயங்கள் ஒரு பெண்ணின் மனதை அவனுக்கு புரிய வைத்திருந்தது. ஹொஸ்டல் தனது வீட்டுக்குப் பக்கத்திலேயே இருந்தது. சம்பளமும் சரி வந்தால் அமுதா மறுபேச்சு பேச மாட்டாள். "எனக்கு ஐயாயிரம் காணாது அண்ண" கனியன் கரனை இழப்பதற்குத் தயாராக இல்லை. அவன் அன்று ஐங்கரனைச் சந்திக்க வருவான் என்பதும் அவனை அந்த வேலைக்கு எப்படியாவது எடுத்துப் போட வேண்டும் என்றும் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த காந்தி கனியனுடனும் ஐங்கரனுடனும் ஏற்கனவே கதைத்திருந்தான். "சரி.. இப்போதைக்கு ஏழாயிரத்து ஐநூறு குடுப்பம்.. பிறகு பாத்து கூட்டுவம்... என்ன அண்ணை" ஐங்கரனும் தலையை ஆட்டினார்.. கரனும் தலையை ஆட்டினான். அவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி பேசத் தொடங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

தென்னோலையால் வேயப்பட்ட கூரையைக் கொண்ட குடில்கள் விடுதலைப்புலிகளின் முகாம்களுக்குள் அமைக்கப் பட்டிருக்கும். நிரந்தரமான கட்டடங்கள் இல்லாத இடங்களில் இந்த குடில்களுக்குள்ளேயே நிர்வாக நடவடிக்கைகளின் பணிகள் முன்னெடுக்கப்படும். அந்தக் குடில்கள் காற்றோட்டமுள்ளவையாக இருப்பதுடன் தாக்குதல் மற்றும் கண்காணிப்பு விமானங்களால் இலகுவாக கண்டுபிடிக்க முடியாத வான்பார்வைத்தோற்றத்தையும் கொண்டிருந்தன.

கிட்டு முன்னே செல்ல அந்தக் குடிலுக்குள் நுழைந்தான் கோகிலன். நேராக மேசைக்குச் சென்ற கிட்டு தான் சுழற்றிக் கொண்டு வந்த காலி தேநீர்க்கோப்பையை கரையில் வைத்தார். தன் மேசையில் அருகிலிருந்த வரைபடத்தை எடுத்து விரித்தார். மூதூரின் நகரப்பகுதியையும் புலிகளின் முன்னரங்கப் பகுதியையும் மட்டும் அந்த வரைபடம் கொண்டிருந்தது. “கடைசியா வந்திருக்கிற தகவலின் படி ஒரு இராணுவ அணி பின்னேரத்தில ஓட்டப்பயிற்சியச் செய்யினம். பின்னேரம் அஞ்சு மணிக்கு இந்த அணி இறங்குதுறைப் பக்கமிருந்து வந்து மணிக்கூட்டுக்கோபுர சுற்றுவட்டத்தில சுழண்டு திரும்பி இறங்குதுறைக்குப் போகினம். சூனியப் பிரதேசத்தில இருக்கிற வட்டத்தடியில பாழடைஞ்ச வீடுகளுக்க நாங்கள் நிலையெடுத்தால் சுற்றுவட்டச்சந்தி முன்னூறு மீற்றருக்குள்ளதான் இருக்கு. அதாவது எங்கட சினைப்பரின்ட துல்லியமாக் கொல்லும் எல்லைக்குள்ளதான் இருக்கு. ஆனா எங்களுக்கிருக்கிற சவால் தெளிவாத் தெரியிற இடப்பரப்பு ஒரு இருவத்தஞ்சு அடி தான். வரேக்க இருவத்தஞ்சு அடி சுற்றுவட்டத்தால திரும்பி ஓடேக்க இருவத்தஞ்சு அடி எண்டு அம்பது அடி பாக்கலாம். அதுக்குள்ள போடோணும்” கிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கதையை முடித்தார். "அட இதுதானா அந்த வேலை" கோகிலன் உடனடியாகப் புரிந்துகொண்டான். கிட்டு தொடர்ந்தார். "நீ போறாய்... அதோட சுதாசினியயும் அவள்ட டீமயும் கொண்டு போறாய்.. அவளுக்கும் மன விடுதலையா இருக்கும்" "ஓ அப்ப நாலஞ்சு பேர போட பிளான் பண்றியளோ" "ஓமடா..பயப்பிடுத்தோனும்... சாதாரண வாழ்க்கைய வாழ விடக்கூடாது.. எங்கட சனம் இஞ்ச தின்னேலாமக் கிடக்கு அவைக்கு திண்டது செமிக்க ஓட்டம் தேவப்படுது" அவர்கள் இருவரும் சிரித்தார்கள்.

பின்னிரவு இரண்டு மணி... ஆறுபேரைக் கொண்ட அந்தப் பதுங்கித்தாக்கும் அணி விடுதலைப் புலிகளின் முன்னரங்கைத் தாண்டி வட்டத்தடிக்குள் இருக்கும் பாழடைந்த வீடுகளை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. கரிய பச்சைநிற உடைகளை அவர்கள் அணிந்திருந்தார்கள். முகங்களில் உருமறைப்புக் கருங்கோடுகள் கீறப்பட்டிருந்தன. கோகிலன், சுதந்திரன், சுதாசினியுடன் அவளது அணியினரும் மிகக் கவனமாக நகர்ந்துகொண்டிருந்தனர். நேற்றைய நாளில் கோகிலன் சுதந்திரனுடன் வட்டத்தடிக்குள் வந்திருந்தான். எங்கு நிலையெடுத்தால் இலக்கை துல்லியமாக வீழ்த்த முடியும் என ஏற்கனவே அவன் இடத்தைத் தீர்மானித்திருந்தான். முன்னரங்கில் பணியாற்றும் சுதந்திரனுக்கு வட்டதடி மிகவும் பரிச்சயமான பிரதேசம் என்பதால் அவனே வழிகாட்டியாக முதலில் நகர்ந்துகொண்டிருந்தான். பதுங்கித்தாக்கும் இடத்திற்கு வந்தவுடன் கட்டளைகளை பிறப்பித்தான் கோகிலன். "சுதாசினி இந்த வீட்டுக்குள்ள பொருத்தமான இடமாத் தேர்ந்தெடுத்து செட் பண்ணுங்கோ.. சுதந்திரன் நீ வீட்டுக்கு பின்னால நிலையெடு. பின்புல பாதுகாப்புக்குத் தயாரா இரு. நான் அந்த மாமரத்தில கவர் எடுக்கிறன்" கட்டளைகள் பிறந்ததும் சுதாசினியும் அணியினரும் படபடவென வேலைகளை ஆரம்பித்தனர். பொருத்தமான இடமாகத் தெரிவு செய்யப்பட்ட அறையில் மரச் சன்னல் ஒன்று பெயர்த்தெடுக்கப்பட்டிருந்த இடம் குறிசூட்டுத் துப்பாக்கியை நிலைப்படுத்த மிகச் சரியான இடமென சுதாசினி தீர்மானித்தாள். உரப்பைகளை தனது பொதியில் இருந்து எடுத்தாள் ஒருத்தி. அந்த அறையின் ஒரு கரையில் 'பறபறவென' தற்காலிகப் பதுங்குகுழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண்டப்பட்டது. அவ்வாறு தோண்டியெடுக்கப்படும் மண் அந்த உரப்பைகளுள் இடப்பட்டு மண்மூட்டைகள் தயார்செய்யப்பட்டன. "நாலு மண் மூட்டைய இஞ்ச கொண்டாங்கடி" சுதாசினியின் காலுக்கருகில் நான்கு மண் மூட்டைகள் வைக்கப்பட்டன. அவள் அதை ஒவ்வொன்றாக எடுத்து பெயர்த்தெடுக்கப்பட்ட அந்த சாளரத்தின் சீமெந்துத் தளத்தில் வைத்தாள். பின்னர் ஏனையோருடன் இணைந்து கொண்டாள். காலை ஆறு மணி. வெளிச்சம் போதுமாகப் பரவத் தொடங்கிய பின் சுதாசினி தனது குறிசூட்டுத் துப்பாக்கியின் முன்குழலில் பொருத்தப்பட்டிருந்த இருகால்தாங்கியை அந்த மண் மூடைகளில் நிலைப்படுத்தி தோள் மூட்டில் துப்பாக்கியை நிலையாகப் பொருத்தி தொலைநோக்கியூடாக மணிக்கூட்டு சுற்று வட்டத்தை அவதானித்தாள். இடம் மிகப் பொருத்தமாக இருந்தது.

மிக அமைதியாக இருந்த அந்த சூனியப்பிரதேசத்தில் ஒலி மிகவும் குறைக்கப்பட்டிருந்த வோக்கிடோக்கியொன்று உயிர்த்தது. மறுமுனையில் கிட்டு இருப்பதை அவரது சங்கேதச் சொல் விளக்கியது "கூடு கலைஞ்சிட்டு ஓவர்" பதிலளித்தான் கோகிலன். "தேனெடுக்கத் தயார் அவுட்" சுதாசினி தனது நிலைக்கு நகர்ந்தாள். கோகிலனும் மாமரத்தில் நிலை எடுத்தான். பட்டாளமாக ஓட்டப்பயிற்சி செய்யும் இராணுவத்தினர் அந்த சுற்றுவட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தனர். முதல் இருபத்தைந்து அடிகளுக்குள் தாக்குதலை நிகழ்த்திவிடச் சொல்லியிருந்தான் கோகிலன். அதற்கொரு காரணம் இருந்தது. முதல் சூட்டை சுதாசினியே செய்யவும் உத்தரவிட்டான். மூச்சை நன்றாக இழுத்து விட்டு தன்னை ஆசுவாசப்படுத்தி நிலைப்படுத்திக் கொண்டாள் சுதாசினி. இதயத்தின் துடிப்பு சீராகும் போது முதலாவதாக ஓடிக்கொண்டிருந்த சிலர் கூட்டமாக அவளின் கண்களுக்குள் குதித்தனர். அவள் அமானுஷ்யமாக அவளுடனேயே பேசிக்கொண்டிருந்தாள். 'காற்று குறுக்கு வெட்டாக இல்லை.... ஆகவே சுடுவதை இலக்கு நோக்கியே செய்யலாம்... குறி வை சுதாசினி... சரியாகப் பொருந்திவிட்டது சுதாசினி... சு......டு' நிரைகளாக ஓடிக்கொண்டிருந்தவர்களுள் பின்நிரையில் இடதுகோடியில் ஓடிய ஒருவனும் அவனுக்கு முன்நிரையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலதுகோடியில் ஓடிய ஒருவனும் ஒருசேர நிலத்தில் விழுவதை கோகிலன் அவதானித்தான். 'சுப்பர்..' அவனையறியாமலே அவனது வாய் மெதுவாக கத்தியது. ஓடிக்கொண்டிருந்த இருவர் திடீரென விழ இரத்தம் பரவுவதை அவதானித்த பின்னரே தம்மீது தாக்குதல் நடத்தப்படுவதை ஓடியவர்கள் புரிந்து கொண்டார்கள். அந்தக் கணப்பொழுது கோகிலனுக்குப் போதுமாக இருந்தது. அவனது குறிசூட்டுத்த துப்பாக்கியின் தொலைநோக்கியூடாக ஓடிக்கொண்டிருந்தவர்களுள் வித்தியாசமாகத் தெரிந்த ஒருவரை அவன் ஏற்கனவே குறி வைத்திருந்தான். அந்த வித்தியாசமானது அவர்மட்டுமே கட்டைக் காற்சட்டை அணிந்திருந்தார். அவருக்குப் பின்பாக ஓடிக்கொண்டிருந்தவனின் கைகளில் 'பிஸ்டல்' ஒன்று இருந்ததையும் அவன் அவதானித்திருந்தான். ஆகவே அவரையே தனது இலக்காக்கியிருந்தான். திடீரென ஏற்பட்ட ஸ்தம்பிதத்தில் ஓடிக்கொண்டிருந்த அவர் ஒரு கணம் நிற்க அந்த நேரத்தைத் தனக்காக்கிக்கொண்ட கோகிலன் அவரது நெஞ்சுப்பகுதியைத் துளைத்தான். வேகமாக மரத்தில் இருந்து இறங்கி அந்த மரத்தின் கீழ் பாதுகாப்பாக நிலையெடுத்தான் அவன்.

ஒரு சில நிமிடங்களில் சூனியப் பிரதேசமெங்கும் சகட்டு மேனிக்குத் துப்பாக்கிச் சூடும் செல் தாக்குதல்களும் ஆரம்பமாகியது. அடுத்த சில நிமிடங்களின் பின் ஆட்டிலறி செல்கள் கட்டபறிச்சான் பிரதேசத்தை அதிரச் செய்தன.

திடீரெனத் தொடங்கப்பட்ட தாக்குதல்களால் கட்டபறிச்சான் மக்கள் அச்சமடைந்து அந்தந்த இடங்களிலேயே தமக்கான பாதுகாப்பைத் தேடத்தொடங்கினர். பயிற்சி பெற்றிருந்த அவர்களுக்கு பாதுகாப்பு நிலையெடுப்பது ஒன்றும் கடினமானதாக இல்லை. தாங்கள் பாதுகாப்பாக நிலையெடுத்தாலும் தம் உறவுகளின் நிலை எவ்வாறிருக்கும் என்பதை எண்ணி ஒவ்வொருவரின் முகங்களும் பேயறைந்து போயிருந்தது.

என்றும் போல் அன்றும் ஜீவன் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தான். முன்னே செல்லும் தனது பட்டாம்பூச்சியை முந்துவதும் பிந்துவதுமாக அந்த காதல் கிளித்தட்டில் ஒன்றில் இருவரும் வென்றனர். இல்லையேல் இருவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லாதிருந்தனர். ரவிக்குமார் பார்கம்பியில் இருந்தபடி மீண்டும் புறுபுறுத்தான். "என்ன...டா" கொஞ்சம் அலுப்பாகவே சினந்தான் ஜீவன். "உனக்கென்னடா.. உண்ட லவரோட போய் ஒளிஞ்சு நிண்டு கதைக்கத் தொடங்கீட்டாய்.. நானெல்லோ இந்த பசாசு வாசுகீண்ட மூஞ்சிய பாத்துக்கொண்டு இருக்கோணும்... எனக்கேலா" "டேய் என்ர ஆள்ட நண்பிய இப்பிடி தரக்குறைவாப் பேச உன்னநான் அனுமதிக்க மாட்டன்" ஒரு வீராப்புடன் கதைத்தாலும் ஜீவனின் இதழ்கடையில் முறுவல் இருந்தது. "இந்த ஓல் இஞ்ச வேண்டாம்.. உன்ன விட்டுட்டு நான் இண்டைக்குப் போயிருவன்" "டேய்.. டேய் மச்சான் பிளீஸ் டா.. ஒரு அஞ்சு நிமிசம் சமாளியன்டா" அழுதுவிடுவான் போல கெஞ்சினான் ஜீவன்."சரி பிழைச்சுப் போ.. எண்டாலும் நான் அடுத்த மரநிழலுக்க தான் நிப்பன்... நீ கதைச்சு முடிய வந்து ஏத்துறன்.. சரியா" "சரிடா நண்பா". அவர்களின் தரிப்பிடம் வந்தது. இன்று ஒரு பத்து நிமிடமாவது சித்திராவுடன் கதைப்பதற்கு ஜீவன் திட்டமிட்டிருந்தான். ஜீவன் மரநிழலின் மறைவுக்குப் போகும் வரை பார்த்துக்கொண்டு நின்று விட்டு அடுத்த மர நிழலுக்கு சைக்கிளைச் செலுத்தினான் ரவிக்குமார். வாசுகி அங்கேயே நிற்க மரநிழலின் மறைவுக்குள் சித்திரா புகுந்தாள். நேரம் ஐந்து நாற்பத்தைந்தைத் தாண்டியது. 'குபீர்' என்ற அதிர்வுடன் ஆட்டிலறி செல்லொன்று அருகில் விழுந்து வெடித்ததை அந்த நால்வரும் நன்றாக உணர்ந்தனர்.

தாங்கள் மறைந்திருந்து கதைக்கும் மரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த மக்கள் பதுங்குகுழிக்குள் சித்திராவை தள்ளினான் ஜீவன். "நீ இறங்கு நான் ரெண்டு பேரையும் கூப்பிடுறன்" என்பதற்குள் "வாசுகி.. சைக்கிளப் போட்டிட்டு ஓடி வா" என்று சித்திரா கத்தினாள். அந்த நேரத்தில் ஜீவன் ஒரு தவறு செய்தான். வாசுகி ஓடி வருவதைப் பார்த்தவன் மற்றைய மரநிழலில் பாதுகாப்புக்கு ஒதுங்க முயன்ற ரவிக்குமாரை நோக்கிக் கத்தினான்."ரவி இஞ்ச பங்கர் இருக்கு ஓடி வா...". தற்காப்புப் பயிற்சியில் சொல்லித்தந்தபடி தான்நின்ற இடத்திலேயே காப்பெடுக்க முயன்ற ரவிக்குமார் தனது உயிர்நண்பனின் அழைப்பை ஏற்றான். அவனது பாதங்கள் வேகமாகத் தெருவின் கரையோடு ஓடத்தொடங்க அடுத்த செல் நேராக அவன் மீதே பறிந்தது. பெரும்புகை மூட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தகக்காற்று நாற்றத்துடன் மேலெழும்பி அருகிலிருந்த அனைத்தையும் கருக்கிச் சாம்பலாக்கியது. ஜீவனின் கண் முன்னே ரவி காணாமல் போனான். "ஐயோ...ரவி..... ரவி.... நான் கூப்பிடத்தானேடா ஓடியந்தனி... நானே உன்னக் கொண்டுட்டனேடா.... உன்ன விட்டுட்டு இண்டைக்கு நான் போயிருவன் எண்டு இதத்தானாடா சொன்னனி" அந்தத் தெருவில் மக்கள் கூடி நின்றார்கள். ரவியைச் சிதிலஞ்சிதிலமாய்ப் பொறுக்கிச் சேர்த்து, ஒரு இறைச்சிக்கும்பலாக அவன் கிடந்தான். ஜீவனின் அழுகுரல் பெருங்குரலில் இன்னும் இன்னும் மக்களைச் சேர்த்துக் கொண்டிருந்தது. ரவியின் தாய் ஓடி வரும் போதே பெருங்குரலில் கத்திக்கொண்டு வருவதை ஜீவன் கேட்டான். சைக்கிளொன்றில் வந்த ரவியின் தகப்பன் சற்று தூரத்திலேயே தான் ஓட்டிவந்த சைக்கிளில் இருந்து விழுந்து செம்மண்ணை உடலின் மீது அள்ளிக் கொட்டி அழறிக்கொண்டே தவழ்ந்து தவழ்ந்து அந்த இறைச்சிக்குவியலை நோக்கி வந்துகொண்டிருந்தார். ஜீவன் தன் அழுகையை ஒரு கணம் நிறுத்தினான். குற்றஉணர்வொன்று அவனுள் நிரந்தரமாக இறுகியது. மெதுவாக எழுந்து அந்தக் கூட்டத்தைப் பிளந்து வெளியேறித் தன் சைக்கிளுக்குச் சென்றான். சைக்கிளில் ஏறியிருந்து திரும்பிப் பார்த்தான். சித்திரா அவனைப் பார்த்தபடி நிற்பது தெரிந்தது. பின் 'விறுக்கென' அந்த சைக்கிள் அவள் கண்களில் இருந்து மறைந்தது. அவளுக்குப் புரிந்துபோனது. அவள் மனசினுள் சபதம் செய்தாள். "எனக்கு உங்கள நிறையப் பிடிக்கும். உனக்காக காத்திருப்பன் ஜீவன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

சேனையூர் மத்திய கல்லூரியின் பிள்ளைகள் தங்குமிட விடுதியில் நிர்வாக அறைக்கு முன்புச் சுவரில் கரன் ஒரு அறிவித்தல் பலகையொன்றை மாட்டிக் கொண்டிருந்தார். “பெற்றோர் பிள்ளைகளைச் சந்திப்பது தொடர்பான நடைமுறைகள்” என்ற தலைப்பிடப்பட்டிருந்த அந்த அறிவித்தலில் சனி ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் காலை ஒன்பதுமணி முதல் மாலை நான்குமணி வரை மட்டுமே பிள்ளைகளைப் பெற்றோர் சந்திக்க முடியும் என்ற நடைமுறை வகுக்கப்பட்டிருப்பது தெரிவிக்கப் பட்டிருந்தது.

இருபது பிள்ளைகளுடன் கரன் பொறுப்பெடுத்த அந்த விடுதியில் தற்போது நூற்று அறுபது ஆண், பெண் பிள்ளைகள் தங்கிப்படிக்கும் நிலை வந்திருந்தது. அந்த மாணவர் தங்குமிட விடுதியின் நிர்வாகம் ஒரு இணைநிர்வாகமாக நடந்து வந்தது. அரச திட்டத்தின் படி பாடசாலையின் அதிபரே விடுதி நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்தார். மேலும் இரண்டு விடுதி உதவியாளர்கள் அரச சம்பளம் பெறுபவர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். புலிகளின் நிர்வாகத் திட்டத்தின் படி கரன் பொறுப்பாளராகவும் இரண்டு பெண்களில் ஒருவர் பெண் மேற்பார்வையாளராகவும், மற்றையவர் உதவியாளராகவும் மேலும் ஒரு ஆண் உதவியாளரும் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர். நிர்வாகத் திறமையும் சிறந்த கல்விக, கட்டுப்பாடும் கொண்ட விடுதியாக அமைந்ததால் கட்டணம் செலுத்தக் கூடிய பெற்றோர் சிலர் தமது பிள்ளைகளை கட்டணம் செலுத்தி அங்கு தங்க வைத்திருந்தனர். அன்பில்லத்தின் பொறுப்பாளர் ஐயா அவர்கள் ஒரு தொகைப் பணத்தை மாதாந்தம் இந்த விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு வழங்கி வந்தார். எஞ்சிய செலவுகளைப் புலிகளே ஏற்றிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தல் பலகையை மீண்டும் சரிபார்த்து விட்டு தனது பணி மேசைக்கு வந்திருந்தார் கரன். நேரம் மதியம் ஒன்று முப்பத்தைந்தைக் காட்டியது. பாடசாலை முடிந்து விடுதியை நோக்கி பிள்ளைகள் கலகப்பாக வரிசையில் வந்துகொண்டிருந்தார்கள். "சங்கவி நாங்க வெய்ட் பண்றம் நீ வா என்ன" யாரோ ஒரு மாணவியின் குரல் வித்தியாசமாக ஒலித்தது. அந்தக் குரலுக்குரியவள் வனிதை என்பது கரனுக்கு விளங்கியது.

"சேர் வரலாமோ உள்ளுக்கு" தாயொருவரின் குரல் கேட்டது. "வாங்கோ" அவருடன் பதின்மூன்று வயது நிரம்பிய பிள்ளையொருவரும் உள்ளே வந்தாள். "அதிபர் அனுப்பினவர்" "ஓம்...ஓம் நேற்று சொன்னவர் இண்டைக்கு அனுமதி எடுக்க வருவீங்கள் எண்டு" "ஓம் சேர் இவா தான் மகள்.. பெயர் சங்கவி. இவாட வகுப்பில படிக்கிற அஞ்சு பேர் இஞ்ச விடுதியில இருந்துதான் ஸ்கூலுக்கு வருகினமாம். நல்லாப் படிக்கினமாம். தன்னையும் இஞ்ச சேத்துவிடச் சொல்லி ஒரே ஆக்கினை" "அப்பிடியா.. ஆரந்த அஞ்சு பேரும் சங்கவி?" "உமா, ராகவி, வனிதை, கார்த்திகா, அஞ்சனா" "ஓ அந்த கெட்டிக்கார டீம்...அவேட பிரண்ட்ஸ்சே நீங்களும்" "ஓம் சேர்" "வீட்ட இருக்கிற மாதிரி இஞ்ச இருக்கேலாது எண்டது தெரியுமே?" "ஓம் சேர் எல்லாம் தெரியும்" "ஓ.. எல்லாந் தெரியுமே.. அப்ப சொல்லுங்கோ உங்கட டைம்டேபிள?" ஒரு கடவுளிடம் ஒப்புவிக்கும் திருவாசகம் போல சங்கவி ஒப்புவித்தாள்.

"காலையில அஞ்சு மணிக்கு பெல் அடிக்கும். நாங்கள் எழும்பி ஆறுமணிக்கு படிப்பறைக்கு வரோணும். நாப்பத்தஞ்சு நிமிசம் படிப்பு. பிறகு ஆறேமுக்காலுக்கு போய் ஏழேகாலுக்கு சாப்பாட்டறைக்கு வரோணும். சாப்பிட்டுட்டு ஏழு முப்பதுக்கு வரிசையாகோணும். ஏழு நாப்பதுக்கு பாடசாலைக்குள்ள போயிரோணும்" "சரி.. பிறகு" "ஒண்டரைக்கு ஸ்கூலால வந்து ரெண்டு மணிக்கு சாப்பிட வந்திரோணும். சாப்பிட்டு ஓய்வெடுத்திட்டு மூண்டு மணிக்கு படிப்பறைக்கு வரோணும். நாலரை மணிவரைக்கும் படிச்சிட்டு விளையாடப்போன மெண்டால் ஆறு மணிவரைக்கும் விளையாடலாம்." அதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் போது சங்கவியின் முகம் சந்தோசத்தால் மாறுவதை கரன் அவதானித்தார். விளையாட்டுக்காக ஏங்குகின்ற பிள்ளையது.

"மிச்சத்த சங்கவி சொல்றீங்களா இல்லாட்டி நான் சொல்லவா?" "இல்ல நானே சொல்றன்.. ஆறு மணிக்கு விளையாடி முடியும். பிறகு ஏழரைக்கு படிப்பறைக்கு வரோணும். எட்டரைக்குச் சாப்பாடு. சாதாரண தரம் உயர்தரம் படிக்கிறவை மட்டும் பிறகும் இருந்து பத்து மணிவரைக்கும் படிப்பினம். பத்துமணிக்குப் பிறகு அனுமதி எடுத்தவெ மட்டும் இருக்கலாம். மிச்சப் பேரெல்லாம் படுக்க போயிரோணும்" "சா என்ன துல்லியமாச் சொல்றா" "சேர் அவ இத வீட்டயே செய்றவா.. ஆன என்ன பிள்ளைக்கு விளையாடத்தான் ஆரும் கிடைக்கிறதில்ல" "ஓ...அப்பிடியோ.. இஞ்ச எங்கட சாப்பாட்டுத் திட்டத்தில வெள்ளிக்கிழமை மட்டும் தான் மரக்கறி.. மிச்ச நாளில முட்டை, மீன், கோழி இறைச்சி, கருவாடு இதெல்லாம் குடுப்பம்" "சரி சேர்" "மகள் நிக்கிற ஏற்பாட்டோடயா வந்தவா?" "ஓம் சேர்" "சரி..வாங்கோ அவாவ கொண்டு போய் விட்டிட்டு வந்து நீங்கள் விண்ணப்பங்கள பூர்த்தி செய்து தாங்கோ" வனிதையும் ஏனைய நால்வரும் பெண்கள் விடுதியின் வாசலில் சங்கவிக்காக காத்திருந்தனர். தாய் ஏதோ சொல்ல வாயெடுக்கும் முன்பே சங்கவி அவர்களை நோக்கிச் சிட்டாக ஓடினாள் "வந்திட்டேன்" என்று கத்தியபடி... "நீங்களும் உள்ளுக்க போய் அவை எப்பிடி இருக்கினம் எண்டு பாருங்கோ. இதுக்குப் பிறகு நீங்கள் உள்ளுக்க போகேலாது. இவா அனிதா..இவா தான் பொம்பிளப் பிள்ளைகளுக்கு மேற்பார்வையாளர்.. அனிதா கூட்டிக்கொண்டு போங்கோ" கரன் அந்த வாசலுடன் திரும்பி வந்தார். அதற்கு மேல் அவரிற்கும் உட்செல்ல அனுமதியில்லை. அடுத்தநாள் கரன் வன்னியிலுள்ள புளியங்குளத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. மாணவர் விடுதியின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்காக நிறைவடைந்த வருடத்திற்கான கணக்குகளைக் கொண்டு செல்லவேண்டியிருந்தது. தனது அறைக்குள் போகத் தயாரான கரனிற்கு புலிகளின் ஜீப் ஒன்று பாடசாலையின் விளையாட்டுத்திடலின் ஊடாக மெதுவாக ஊர்ந்து உள்ளே வருவதை அவதானித்தார். சற்று நிதானித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீப்பை நிறுத்திவிட்டு இறங்கிவரும் அந்தப்புலி வீரனை கரனுக்கு சற்றேனும் ஞாபகமிருந்தது. எனினும் முழுவதுமாக நினைவுக்கு வரவில்லை. பசிய சாம்பல் நிற முழுக்கை சேட்டை முழங்கை வரை மடித்திருந்தான். பச்சை நிற முழுக் காற்சட்டை. கழுத்திற்குள்ளால் கொழுவிய கோல்சரின் பட்டிகள் கையுக்கும் உடம்புக்குமான இடைவெளியில் ஒட்டப்பட்டிருந்தது. தோளில் ரி ஐம்பத்தாறு ரக ரைபிள். உச்சி பிரிந்து கொஞ்சம் அதிகமாகவே வளர்ந்திருக்கும் தலைமயிர். சாதாரண சப்பாத்து. “என்ன கரன் மாஸ்டர் என்னப் பாத்துக்கொண்டே இருக்கிறியள்.. அடையாளம் தெரியுதில்ல போல”.. “ஓமடா தம்பி.. ஆனா ஏதோவொரு ஞாபகம் இருக்கு” அவன் சிக்கனமாகச் சிரித்தான். “நான் ஜீவன்.. சந்திரசேகரம் மாமான்ட மகன்” “ஓ ஜீவன்.. சின்னப் பொடியனாச் சந்திச்சது.. இப்ப முத்தின மனிசனாப்போய்ட்டாய். அதான் பாக்கேக்க தெரியேல்ல.. வன்னிக்குள்ள நிக்கிறாய் எண்டு தான் கேள்விப்பட்டன்” ஆச்சரியத்தை வார்த்தைகளில் வடியவிட்டார் கரன். “ஓம்.. நான் வன்னிக்குப் போகப்போறன் எண்டு அடம்பிடிச்சுப் போனனான். மூண்டு வருசம் ஆச்சு.. இப்ப ஒரு வேலைக்கு இஞ்ச அனுப்பீட்டினம்”. “ஓ அதா சங்கதி.. அமைப்பில சேந்தோன்ன வன்னிக்கு அனுப்புங்கொ எண்டு அடம்பிடிச்சனி எண்டு நானும் கேள்விப்பட்டன் ... சித்திரா தான் சொன்னவள்” கரனின் வீட்டுக்கு அயல் வீடு சித்திராவினுடையது. சற்று அமைதி இருந்தது. “அதான் உங்களச் சந்திச்சிட்டு போக வந்தனான்.. சித்திரா என்ன செய்றாள்?” அவன் நேரடியாகவே கேட்டான். “அந்த செல்வீச்சுக்குப் பிறகு அவள் கடுமையா அமைதியாப் போய்ட்டாள். நீ ஒரு நாள் தன்னத்தேடி வருவாய் எண்டதுல பெரும் நம்பிக்கையோட வாழுறாள்” அதுவரை கரனின் முகத்தைப் பார்த்துப் பேசிய ஜீவனால் அதற்கு மேல் கரனை நேரடியாகப்பார்க்க முடியவில்லை. “நான் கடந்த ஒரு கிழமையா இஞ்ச தான் நிக்கிறன். சித்திராவையும் ரெண்டு மூண்டு தரம் கண்டனான். அவளால என்னய அடையாளம் பிடிக்க முடியேல்ல. நான் வாகனத்தில போய் வாறது தானே அதான்...” அவன் நிறுத்தினான். அதற்குமேல் அவர்களிடம் பேசுவதற்கு என்ன இருக்கின்றது. என்றாலும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மாஸ்டர்.. நான் வந்தன் எண்டு சொல்ல வேணாம்.. நான் அவளிட்ட வருவன் எண்ட நம்பிக்க எனக்கும் இருக்கு. ஆனா தெரியும் தானே மாஸ்டர். என்ட பெயர் எழுதப்பட்ட தோட்டாவை எப்ப எதிரி சுடுவான் எண்டு எனக்குத் தெரியா. இப்ப நான் மட்டக்களப்புக்கு போறன். அந்த தோட்டா துரோகீட்ட இருக்குதா எண்டும் தெரியா. அந்த தோட்டா சுடப்பட இல்லையெண்டா சந்திப்பம்.. நான் போறன்” அவன் தனது இடது கையில் இருந்த பொக்கட்டுக்குள் சித்திரா தந்த கடிதத்தை பத்திரமாக வைத்திருந்தான். அதைத்தடவியபடியே அமைதியாகத் திரும்பி நடந்தான். அந்த வாகனம் சென்று நெடு நேரமாகியும் கரன் அவ்விடத்திலேயே நின்றார்.

***

காலத்தின வேகத்தை நிறுத்த முடியாது இரவும் பகலும் கனகதியில் மாறிமாறிச் சுழன்றன. யார் நின்றாலும் அது தன்னை நிறுத்த மறுத்தது. வருடங்கள் இறந்து போக அன்றைய நாளும் வந்தது. கட்டபறிச்சான் - சேனையூர் உள்ளக வீதிகளில் விடுதலைப் புலிகளின் அறிவிப்பைத்தாங்கிய ஒலிபெருக்கி வாகனம் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது. நேரம் மதியம் பன்னிரெண்டு முப்பதைத் தாண்டியிருந்தது.

“இன்று மூன்று மணிக்குப் பின் கடுமையான செல் தாக்குதல்களை எதிரி தொடங்கவுள்ளான். பொதுமக்கள் அனைவரும் உங்களது பாதுகாப்பை நீங்களே உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்” என்ற செய்தியை தொடர்ந்து அலற விட்டுக்கொண்டிருந்தது அந்த ஒலிபெருக்கி.

கடந்த சில வருடங்களாக விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசிற்கும் இடையே எட்டப்பட்ட சமாதான உடன்படிக்கை வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப் படாமையால் முறுகிக்கிடந்ததை கொழும்பில் நிகழ்ந்த தற்கொடைக்குண்டு வெடிப்பொன்று பிளந்திருந்தது. அதனையடுத்து நான்காம் ஈழப்போர் ஆரம்பிப்பதற்கான எல்லாச் சூழ்நிலைகளும் கூடி வந்த நாளில் இந்த அறிவிப்பு மக்களுக்குக் கிடைத்தது.

அன்றைய மாலையில் சம்பூர் நோக்கி ஏவப்பட்ட பல்குழல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீரங்கிக்குண்டுகள் ஒரு தமிழ்க் குடும்பத்தை வேரோடு பலியெடுத்தது. மேலும் தெருவிற் பயணம் செய்த ஒரு தனி நபரும் சிதறுண்டு போனார்.

ஸ்ரீலங்காவில் போர் தொடங்கிய செய்தி உலகத்தின் திசையெங்கும் பரவத் தொடங்கியது.

மாலை ஆறுமணி தாண்டிய பொழுதில் முதலாவது செல் குண்டு சேனையூர் மத்திய கல்லூரியின் முன்பள்ளிக்கட்டிடத்தைத் தகர்த்தது. பாடசாலைக்கு முன்னிருந்த அரசியல் துறை அலுவலகத்திற்கு குறிவைத்து ஏவப்பட்ட அக்குண்டு குறி தவறியிருந்தது. கரன் தனது மாணவர் விடுதியின் முகப்பில் நின்றபடி நான்காம் கட்ட ஈழப்போரின் முதலாவது மக்கள் இடம்பெயர்வை பதிவுசெய்யப் போகும் வரலாற்று மானுட சாட்சியாக நின்றார். அவரது வாய் "மஹாகவி" உருத்திரமூர்த்தியின் கவிதை வரிகளை முணுமுணுத்தது.

"சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்

சிலவேளை இதை வந்து கடல் கொண்டு போகும்

ஒரு வேளை முகில் கீறி ஒளி வந்து வீசும்

ஒரு வேளை துயர்மீள உயிர்வெந்து சாகும்"

யூதர்கள் சந்தித்த இனப்படுகொலையின் போது நிகழ்ந்த 'மரணப்பேரணி' யாக தமிழ்த் தேசமெங்கும் தமிழர்களை இனவழிப்புக்கு உள்ளாக்கிய இறுதிப்போரின் முதலாவது மக்கள் இடம்பெயர்வு ஈழத்தின் கிழக்கில், திருகோணமலையில் அன்று தொடங்கியது.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவிற்காக :

1. பிளேன்டி – பால் கலக்காத தேயிலைத் தேநீர்(Plain Tea)

2. பிப்டி கலிபர் – பதினெட்டு கிலோகிராம் எடையுடைய கனரக துப்பாக்கி. கைகளில் வைத்து இயக்க முடியாதது. (Fifty Caliber Gun)

3. ரிஜம்பத்தியாறு, ரிஎண்பத்தியொன்று – படையினர்காவிச்செல்லும் இலகுரக துப்பாக்கி. (T–56 Riffle – Models are – 1 and – 2, T–81 Riffle )

4. வோக்கி அல்லது வோக்கிடோக்கி – படையினர்கைகளில் வைத்து பாவிக்கும் விசேட தொடர்பாடல் சாதனம் (Walkietalkie)

5. துண்டு கொடுத்தல் – விடுதலைப்புலிகளின் அமைப்பில் இருந்து விலகப் போவதாக அதன் போராளியொருவர் எழுதும் கடிதம்

6. காம்ப் / பேஸ் – முகாம் (Camp, Base)

7. சென்றி – சிறிய காவல் நிலைகள். இவை பாரிய முகாம்களுடனோ அல்லது தெருக்கள் போன்ற வேண்டிய இடங்களிலோ உருவாக்கப்பட்டிருக்கும். ஆகக்குறைந்தது இரண்டு தொடக்கம் தேவைக்கேற்ப படையினர் அங்கு நிலைப்படுத்தப்பட்டிருப்பர். (Centre)

8. மகசீன் – ரவைக்கூடு. ரவைகளை நிரப்பி துப்பாக்கியுடன் பொருத்த பயன்படும் கூடு (Magazine)

9. ரவுண்ஸ் – ரவைகள் (Rounds)

10. கோக் – ரவைக்கூட்டில் இருந்து முதலாவது ரவையே சுடுநிலைக்குக்கொண்டு வர துப்பாக்கியில் இருக்கும் விசேட தண்டை இழுப்பது. (Coke / Load)

11. சேவ்டி கட்ச் – துப்பாக்கி கோக் செய்யப்பட்டு சுடுநிலைக்கு தயாராக இருக்கும்போது தவறுதலாக சுடுவிசை அழுத்தப்பட்டாலும் சுடப்படாமல் இருப்பதற்காக இடப்படும் பாதுகாப்புப் பொறி (Safty Catch)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ரோஸ்டர் – குறித்த நேரத்தில் தொழிலாற்றவேண்டியவர்கள் யாரென பிரித்து ஒதுக்கப்படும் அட்டவணை (Roster)

13. ரெக்கி – புலனாய்வு (Rekkie)

14. ட்ரிகர் – துப்பாக்கியின் சுடுவிசை (Triger)

15. பிஸ்டல் – கைத்துப்பாக்கியின் வகைகளில் ஒன்று (Pistol)

16. இலகு இயந்திர ரைபிள் – இலகுரகத் துப்பாக்கியின் வலு (தாக்குதிறன்) கூட்டப்பட்ட வடிவம். (Light Machine Gun – LMG)

17. குசினி – சமையலறை (Kitchen)

18. இருகால்தாங்கி – துப்பாக்கி ஆடாமல் உறுதியாக வைக்கப்படுவதற்காக சுடுகுழாயில் பொருத்தப்பட்டிருக்கும் இரு இரும்புக்கால்கள். (Tripod)

19. சினைப்பர் / குறிசூட்டுத் துப்பாக்கி – குறிவைத்துச் சுடுபவர், அதற்குரிய ரைபிள் (Sniper)

20. கோல்சர் – ரவைக்கூடுகளையும் ஏனைய சிறு ஆயுதங்களையும் கொண்டுசெல்லக்கூடிய உடலில் பொருத்தக்கூடிய பொதி (holser)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழவரலாற்றை, குறிப்பாக முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய இனப்படுகொலையை பேசுபொருளாகக் கொண்டு பல படைப்புகள் வெளியாகியுள்ளன. ஆனால், விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் 2002-ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் 2006-இல் முறிவடைந்து, நான்காம் கட்ட ஈழப்போருக்கு வழிவகுத்த காரணிகள், சூழல் பற்றி வெளியான படைப்புகள் ஒப்பீட்டளவில் மிகக்குறைவு அல்லது இல்லையெனலாம். அந்த வெற்றிடத்தை, மாயனால் எழுதப்பட்ட 'நூறு மின்னல்கள்' என்ற இந்நாவல் ஓரளவு நிரவுகிறது. கிழக்கு மாகாணத்தில் சூல்கொண்ட போர்ப்புயல் பற்றிய குறுக்குவெட்டுச் சித்திரமே இந்நாவலாகும்.

- எழுத்தாளர், கவிஞர் தமிழ்நதி

நாவல்

www.be4books.com

YB00251

www.yaavarum.com

ISBN 978-93-92876-26-4

₹ 290/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org